


அன்பு மலர்ச்
சரம் தொடுத்து
C0454430332


அன்பு மலர்ச்
சரம் தொடுத்
A948
Tamil
சக்தி

# அன்பு மலர்ச் சரம் தொடுத்து..!

## 1

"நல்லபடியா முடிச்சுக் குடுத்தா உங்களுக்கு என்ன வேணுமோ செய்யறேன்" என்றான் இளஞ்செழியன்.

"சார்! நான் இந்தக் கம்பெனியில நல்ல பொஸிஷன்ல இருக்கேன். எனக்கு வேணுங்கற வசதி செஞ்சு குடுக்கறாங்க. அதனால கஸ்டமர்ஸ்கிட்டே நான் எதுவும் எதிர்பார்க்கிறதில்லே. உங்க அன்பு போதும்" என்றார் அந்த நிதி நிறுவனத்தின் மேலாளர்.

"தட்ஸ் ரியலி குட்!" என்றான் இளஞ்செழியன். வேலு விசித்திரமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த இளஞ்செழியன் லேசாகக் கண்ணைச் சிமிட்டிச் சிரித்தான்.

வேலுவும் சிரித்தான்.

ரிசீவரை வைத்தபின் வேலு சொன்னான். ''வேலு கமிஷன் கிமிஷன் கேட்பானோன்னு பாத்தேன். எப்பவும் எந்த வியாபாரத்திலும் கமிஷன் கேட்கறதுக்கு ஒரு ஆள் இருந்தா பொருளோட தரம் பத்தி யோசிக்கணும்'' என்றான்.

வேலு ஆழ்ந்து கேட்டுக் கொண்டான். பிறகு சொன்னான்.

''சார் அந்தக் கம்பெனி பிரைவேட் லிமிடெட் கம்பெனி. அது மட்டுமல்ல எல்லாமே கம்ப்யூட்டரைஸ் பண்ணி வச்சிருக்காங்க. எந்த இண்டிவிஜுவலும் எந்தத் தில்லுமுல்லும் பண்ண முடியாது.''

இளஞ்செழியனுக்கு இதெல்லாம் தெரிந்த போதும் வேலு சொல்வதை புதிதாகக் கேட்பது போல் கேட்டுக் கொண்டான்.

வேலு தொடர்ந்தான்.

''சார் அது மட்டுமல்ல. இந்த மாதிரிப் பெரிய டீலிங்கெல்லாம் முடிக்கும்போது முதல்ல மேனேஜர் பேசுவாரு. அப்புறம் ஜி.எம்.பேசுவாரு. அப்புறம் மேனேஜிங் டைரக்டர் பேசுவாரு. அது மட்டுமல்லாம பைனான்ஷியல் அட்வைஸரா ஒரு லேடி இருக்காங்களாம். அந்தம்மா இல்லல்ல. ஒரு பொண்ணு பொண்ணுன்னுதான் சொல்லணும். அந்த மேடம் ஸ்குரூட்டினைஸ் பண்ணி ஓ.கே. செஞ்சாத்தான் சேங்ஷனாகும்'' என்றான் முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டு.

இளஞ்செழியன் சிரித்தபடி சொன்னான். ''அது சரி! ஆனா இந்த மடம் ஆகாட்டி அந்த மடம். பெரிய அளவிலே டெபாசிட் குடுக்கப் போறோம். அட் எ டைம் ஐநூறு பேருக்கு வீடு கட்டப் போறோம். பெரிய ஸ்கீம்ப்பா... அப்புறம் பைனான்ஸ் பண்றதுக்கு அவங்களுக்குக் கசக்குதாக்கும்'' என்றான்.



''அதேதான்! நானும் அதைத்தான் சொன்னேன். அதெல்லம் விவரமாப் புரிஞ்சுகிட்டாங்க. அதனாலதான் இன்னைக்கே ஒரே சிட்டிங்ல உட்கார்ந்து பேசி முடிங்க. எங்க பாஸ் நாளைக்கே வெளிநாடு போறார். போனா திரும்பி வர ஒரு மாசமாகும்னு சொன்னேன்'' என்றான்.

''அப்படிப் போடு!'' என்று சிரித்தான் இளஞ்செழியன்.

அதே நேரம்!

மறுபடியும் போன் ஒலித்தது!

அந்த ஹவுசிங் பைனான்ஸின் மேனேஜர் பேசினார். வேலுதான் எடுத்தான்.

''சார்! எங்க சார் மீட்டிங்ல இருக்கார். நான் போய்க் கேட்டுப் பாக்கறேன். பேசுவாரோ என்னமோ தெரியலை. இருங்க கேட்டுட்டு வரேன்'' என்று ரிசீவரை சற்று நேரம் வைத்தான். பிறகு ரிசீவரை எடுத்து இளஞ்செழியன் கையில் கொடுத்தான்.

வேலு இடத்தைப் பொறுத்து இந்த மாதிரி நாடகம் எல்லாம் செய்வான் என்பதால் இளஞ்செழியனுக்கு ஒன்றும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

''ஹலோ! சொல்லுங்க!'' என்றான்.

''சார்! நாளைக்கே நீங்க சிங்கப்பூர் போறதா வேலு சொன்னாரு. எங்க ஜி.எம்மும் மேடமும் இன்னைக்கே உங்களோட பர்ஸ்ட் ரவுண்ட் டாக்ஸ் முடிச்சர்லாம்கறாங்க.''

''ம்..!''

''உங்க டைம் சொன்னா.. பரவாயில்லை!'' என்றார் மேனேஜர்.

''ம்..!'' என்று இழுத்த இளஞ்செழியன்.. ''ஓகே! இன்னைக்கு ஏழு மணிக்கு எங்க கெஸ்ட் ஹவுஸுல வச்சுக்கலாம்'' என்றான்.

''ஓ.கே... சார்! ரொம்ப சந்தோஷம்!''

''தட்ஸ் ஓ.கே. நான் எங்க கார் அனுப்பறேன். எத்தனை கார் வேணும்?'' என்றான்.

''இல்ல.. சார்! நாங்க எங்க வண்டியில வந்துடுவோம். அதிலயும் மேடம் வேற யாரோட கார்லயும் வரமாட்டாங்க'' என்றார்.

''ஐ.ஸீ! அது யார் மேடம்?'' என்றான்.

''சார்! அவங்கதான் எங்க பைனான்ஷியல் அட்வைஸர்.''

''பேரு?''

''சித்ரலேகா.. சார்!''

ஒரு நிமிடம் அந்தப் பெயரைக் கேட்டவுடன் இளஞ்செழியனுக்குள் மின்னல் வெட்டியது. கொஞ்சம் தடுமாறிப் போனான். பிறகு சமாளித்துக் கொண்டான்.

''ஓ.கே.! ஹவ் ஓல்ட் இஸ் ஷி!''

''ஒரு இருபத்தாறு.. இருபத்தேழு இருக்கும். சார் சின்ன வயசுன்னு நினைக்காதீங்க. ரொம்ப கேப்பபிள் லேடி.''

''ஓ! என்றான். பிறகு வெட்டுவது போல.

''சரி..! வாங்க! டின்னர் அரேன்ஜ் பண்ணிடறேன்!'' என்றான் ரிசீவரை வைத்தான்.

''வேலு!'' என்றான்.



''சார்!'' என்றான் பவ்யமாக.

''கெஸ்ட் ஹவுஸ்ல டின்னருக்கு ஏற்பாடு செஞ்சுரு. ஒரு மணி நேரம் என்னை டிஸ்டர்ப் பண்ணாதே'' என்றான்.

கணக்கு வழக்கு பார்க்கிறேன் என்று கம்ப்யூட்டர் முன் அமர்ந்து கொண்டான். ஆனால், மனம் மட்டும் அடங்க மறுத்தது.

நினைவுகள் எங்கெங்கோ பறந்தன. கட்டுக்கடங்க மறுத்தது.

எத்தனை ஆண்டுகள் ஆன பின்னும் கூட அந்தப் பெயர் தன்னைத் துன்புறுத்துகிறதே என்று மனத்தோடு கோபித்துக் கொண்டான்.

எட்டாண்டுகளில் எத்தனை வெற்றிகள்! வெறும் அக்கவுண்டன்ட் ஆக ஆரம்பித்த வாழ்க்கை. இப்போது சி.எல்.கே. டிராவல்ஸ் என்ற பெயரில் நூற்றுக் கணக்கான பஸ்கள் மாநிலம் முழுதும் ஓடிக் கொண்டிருந்தது.

உழைப்பதற்கு இருபத்தி நாலு மணி நேரம் போதாமல் இருந்தது.

நிறுவனத்தை வளர்ப்பதிலும் வேலையாட்களுக்கு நிறைவான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதுமே தன்னுடைய வாழ்க்கை என்பது முடிவு செய்து கொண்டான்.

இப்போது முப்பது வயதை எட்டியிருந்தான். அம்மா எப்போதாவது கல்யாணப் பேச்சை ஆரம்பித்தால் போதும். அவன் முகம் கடுகடுவென்று மாறிவிடும்.

இரண்டு மூன்று நாட்களுக்கு நேரம் கெட்ட நேரத்தில் வருவான். நெருங்க முடியாத அளவுக்கு ஒரு இறுக்கம் காட்டுவான்.

அப்பா தண்டபாணி அம்மா ராஜாத்தியிடம் சொன்னார்.

''ராஜாத்தி! விட்டுடு. அவனா மனம் தெளிஞ்சு எனக்கு ஒரு பொண்ணைப் பாருங்க... என்று சொன்னாப் பாக்கலாம்'' என்றார்.

தாய் மனது சமாதானமாக மறுத்தது. ஆனாலும் வேறு வழி இருக்கவில்லை.

கோயில் கோயிலென்று போய் வருவார். விரதம் இருப்பார். ஒரு மண்டல காலம் துர்க்கைக்கு விளக்கேற்றி வைப்பார்.

அம்மாவைப் பார்த்தால் பாவமாக இருக்கும். மனம் நெகிழ்ந்து போய் ஒரு நாள் அம்மாவின் அருகில் அமர்ந்து கொள்வான். இரண்டு கன்னங்களையும் தடவிக் கொஞ்சுவான்.

''ஒரு நாள்!

''அம்மா இன்னும் நான் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கு. எனக்குன்னு ஒரு குடும்பம் இல்லேன்னா என்ன? எத்தனை குடும்பங்களை வாழ வைக்கிறேன்'' என்றான் ஆறுதலாக.

அம்மா வெடித்து அழுதார்.

''தம்பி! எனக்கு ஒரு சத்தியம் செய்து குடு. நான் சாகற துக்குள்ளே உனக்குன்னு ஒரு குடும்பம் அமைச்சுக் கணும். இல்லேன்னா என் கட்டை வேகாது'' என்றார்.

அந்த நிமிடம் மகன் தாயின் மடியில் முகம் புதைத் தான். மௌனக் கண்ணீர் வடித்தான்.

''அம்மா உங்க வேதனை எனக்குப் புரியுது. ஆனா, எம் மனசு ஒத்து வரமாட்டேங்குதே. கொஞ்சம் டைம் குடும்மா! முயற்சி பண்றேன்'' என்றான். சற்று நேரம் கழித்து தழு தழுத்த குரலில்.



அம்மா பெரியதொரு பெருமூச்செறிந்தார்.

''புரியுதுப்பா! சாதாரணமா பொம்பளைங்கதான் இப்படி இருப்பாங்க. ஆனா, நீ..!''

''அம்மா! இது ஆண், பெண் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லே! மனசு சம்பந்தப்பட்ட விஷயம். என் மனசு கல்லா மாறிடுச்சம்மா. உன்னோட ஆசைக்காக ஒரு பொண்ணைக் கொண்டு வந்தா அவ வாழ்க்கை வீணாகிப் போயிடும்மா.''

''அது சரிப்பா! ஆனா, எங்களுக்கு நீயும் குடும்பம், குழந்தை குட்டின்னு வாழணும்னு ஆசையிருக்காதா?''

மறுபடியும் அவன் பெருமூச்செறிந்தான்.

''சரிம்மா! ஒரு ரெண்டு வருஷம் டைம் குடுங்க. மனசைத் தயார் பண்ணிக்கறேன். அதுக்கப்புறம் நீங்க சொல்ற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறேன்'' என்றான்.

அதற்கப்புறம்தான் ராஜாத்தியம்மாள் மனசு சமாதான மாகி நடமாடிக் கொண்டிருந்தார்.

'அப்பாடா! எப்படியோ நாமளும் ரெண்டு வருஷம் ப்ரீ' என்று எண்ணிக் கொண்டான் இளஞ்செழியன்.

இது நடந்தது போன மாதம்!

இன்னும் தனது டிராவல்ஸ் கம்பெனியிலும், அது சார்ந்த பார்சல் ஆபீஸ் என்று இணைத் தொழில்களையும் ஓரளவுக்கு நிலையான இடத்துக்குக் கொண்டு வந்து விடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அது தொடர்பாகத்தான் இப்போது ஒரு புதிய திட்டம் போட்டிருந்தான்.

டிராவல்ஸ் கம்பெனி ஆரம்பித்த நாட்களிலிருந்து தன்னோடு இருந்த தொழிலாளர்களைப் பொறுக்கி யெடுத்து அவர்களுக்காக ஒரு காலனி உருவாக்க திட்டம் செய்திருந்தான். இப்போது வாடகை கொடுத்துக் குடி யிருப்போர்களுக்கெல்லாம் அது ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். அவரவர்கள் வருமானத்துக் கேற்ப சிறியதாக இருந்தாலும் சொந்த வீட்டில் இருக் கலாம் என்ற கருத்து தொழிலாளர்களுக்கும் பிடித் திருந்தது.

எல்லாரும் ஆர்வமாக இருந்தார்கள்!

ஈரோட்டுக்கு வெளியே உள்ளடங்கிய ஒரு கிராமத் தையே வளைத்துப் போடுகிற முயற்சியில் வெற்றியும் பெற்றுவிட்டான்.

திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் மட்டுமே அவனுக்குக் கொஞ்சம் செலவிருக்கும். பிறகு அந்தப் பணத்தை மீட்டு விடலாம் என்பதால் தெளிவாக இருந்தான்.

எப்போதும் ஒரு காரியம் முடித்து விட்டால் அடுத்தது என்ன என்று அவன் மனம் திட்டம் போட்டுக் கொண்டே இருக்கும்.

லாப் டாப் ஒன்று வைத்துக் கொண்டு எல்லா நிறுவனங் களையும் தனது மேற்பார்வையில் வைத்துக் கொண்டு இருப்பான்.

உற்சாகமாக இருப்பான். கண்டிப்பாக இருப்பான்.

கண்டிப்பான மனிதன்!

**வெளியே தெரிவது**
**முள்ளெனினும்**
**உள்ளே இருப்பது**



**பலாச் சுளைகள்.**
**கருணை உள்ளே**
**கனிந்த மனம்!**

என்பது போல் இருப்பான். அவனை தொழிலாளர்களும் புரிந்து கொண்டிருந்தார்கள்.

இளஞ்செழியனுடைய வேகத்துக்கு ஈடு கொடுப்பவர் கள் மட்டுமே அவன் நிறுவனத்தில் இருக்க முடியும். அதனால் நிறுவனமும் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது.

ஒரு வழியாக பழசையெல்லாம் மறந்து இப்போது தான் பழைய உற்சாகத்தை எட்டிக் கொண்டிருந்தான்.

உள்ளே மனத்தில் ஒரு பக்கத்தில் இருந்த வெறு மையை தொடர் வெற்றிகளால் இட்டு நிரப்ப முயற்சி செய்து ஓரளவு வெற்றியும் பெற்று விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். தெளிந்த நீரோடை போல் மனம் இப்போது இருக்கிறது. இதில் திடீரென்று விழுந்த அந்தப் பெயர் ஒரு நிமிடம் அவனை ஆட்டம் காணச் செய்து விட்டது.

எப்போதெல்லாம் அவன் தனிமை நாடுகிறானோ அப்போதெல்லாம் அவனைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பது வேலு அனுபவத்தில் அறிந்த பாடம்!

யாரையும் அனுமதிக்கவில்லை!

அரை மணி நேரத்தில் முகம் தெளிந்து எழுந்து வந் தான்.

வேலுவை அழைத்தான். பைனான்ஸ் சம்பந்தமான அலுவலர்களை வரவழைத்தான்.

இப்போது எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிற தென்றும் இன்னும் எவ்வளவு தேவையிருக்கும். எப்

போது அந்தப் பணத்தை நிறுவனம் திரும்ப எடுத்துக் கொள்ள முடியும் என்பதையெல்லாம் முழுமையாக அறிந்து கேட்டுக் கொண்டான்.

பிறகு எழுந்தான்.

''சரி! நான் சரியா ஆறே முக்காலுக்குள் கெஸ்ட் ஹவுஸில் இருப்பேன்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

வெளியே இரண்டு மூன்று நண்பர்களைப் பார்த்து விட்டு சரியாக ஆறே முக்காலுக்குக் கெஸ்ட் ஹவுஸுக்கு வந்தான்.

கலகலப்பான நண்பர்களைப் பார்த்து விட்டு வந்தது கொஞ்ச நேரம் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் திரும்பவும் மனம் அதே புள்ளிக்கே வந்து நின்றது.

அந்தப் பெரிய விபத்து ஏற்பட்ட காலத்தில் இருந்து அதன் தாக்கத்திலே இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக அவன் பட்ட பாடுகள் ஏராளம்.

இப்போது எதற்காக இந்தப் பெயர் வந்து தன்னைத் தொல்லைப் படுத்த வேண்டும்.

உண்மை என்னவென்றால் அடிக்கடி அந்தப் பெயரைத் தான் கேட்க நேரவில்லை. அதிலும் இந்தப் பெண்ணின் வயது கிட்டத்தட்ட ஒத்துப் போகிறது.

கட்டாயப்படுத்தி மனதை அந்தச் சிந்தனையிலிருந்து விடுவித்துக் கொண்டான்.

ஏற்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

''சார்! கடைசியில ஐஸ்கிரீம் வச்சர்லாமா?'' என்று கேட்டார் சமையற்காரர்.

''வொய்... நாட்?'' என்றான்.



அப்போது கூட அவனுக்குத் தோன்றியது அவளுக்கு ஐஸ்கிரீம் பிடிக்கும் என்று. மேலாளர் வேணுகோபாலும் ஜி.எம்.மிஸ்டர் தவேயும் வந்தார்கள். வரவேற்றான்.

''சார்! ஏன் உங்க நிறுவனம் இப்படி சக்ஸஸ்ஃபுல்லா ஓடுதுன்னு இப்பப் புரியுது. நீங்க தொழிலாளர்கள்கிட்டே வேலை வாங்கறதுல எவ்வளவு ஸ்ட்ரிக்ட்டா இருக்கீங்களோ அவ்வளவுக்கவ்வளவு அவங்களுக்கு வசதிகள் செய்து குடுக்கறதுலயும் ஆர்வமா இருக்கீங்க'' என்று பாராட்டினார் மிஸ்டர் தவே.

புன்னகையுடன் நன்றி சொல்லிக் கொண்டான்!

கான்ஃபரன்ஸ் ஹால் மாதிரி ஒரு சின்ன ஹால் வைத்திருந்தான்!

''டாக்ஸ் ஆரம்பிக்கலாமா?'' என்றான் இளஞ்செழியன்.

''மேடம் வந்துடுவாங்க!'' என்றார் மானேஜர் வேணுகோபால்.

''ஓ!'' என்று கடிகாரம் பார்த்தான். ஏழு மணிக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தது.

இரண்டு நிமிடங்கள் போயிருக்கும்.

அந்த மாருதி கார் உள்ளே நுழைந்தது. அதை அந்தப் பெண்ணே ஓட்டிக் கொண்டு வந்தாள்.

ஜன்னலுக்கு சற்றுத் தள்ளி நின்றிருந்தான் இளஞ்செழியன்.

வெளிர் நிறத்தில் முழுக்கை சட்டை அணிந்து டையுடன் ஆழ்ந்த நிறத்தில் பாண்ட் அணிந்து கம்பீரமாக நின்றிருந்தான்.

ஐந்தே முக்கால் அடிக்கும் சற்றே அதிகம்! ஏ.சி.யில் இருப்பதனாலோ என்னவோ முகத்தில் ஒரு பளபளப்பு. மேனேஜர் வேணுகோபால்.

''சார். குறைந்தது இரண்டு மணி நேரமாவது பேசு வோம்னு நினைக்கிறேன்'' என்றான்.

''ஒன்றும் பிராப்ளமில்லை! அத்தனை நேரம் பேசிக் கொண்டே சாப்பிடுவதற்குத் தேவையான அளவு ஐட் டம்ஸ் இருக்கு'' என்று சிரித்துக் கொண்டே திரும்பிய இளஞ்செழியன் அந்த அறை வாயிலின் நின்ற உரு வத்தைக் கண்டு திகைத்துப் போனான்!

'அவளாக இருக்கக் கூடாது' என்று உள்ளே பிரார்த் தித்துக் கொண்டே இருந்ததெல்லாம் பொய்த்துப் போனது. வேண்டிக் கொண்ட தெய்வங்களெல்லாம் அவன் பிரார்த்தனைக்கு செவி சாய்க்கவில்லை. அவளேதான்!

எதிரில் வந்தால் கொலையே செய்து விட வேண்டும் என்று யார் மேல் கோபத்தில் இருந்தானோ அதே சித்ர லேகா! ஆனால் இப்போது இன்னும் மெருகுடன்..! கம்பீரத்துடன்! அறிவின் தீட்சண்யம் வீசும் கண்களுடன்! இளமைப் பொலிவுடன்.

அதே சித்ரலேகா!

## 2



எத்தனை வேலைகளுக்கு நடுவிலும் தங்களுக்காக ஒரு அரை மணி நேரமாவது ஒதுக்குகிற மகன் நேற்று முழுவதும் தங்க ளோடு நேரம் செலவழிக்கவில்லை என்பது புரிய அப்பா யோசனையில் ஆழ்ந்தார். எட்டாண்டுகள்!



அந்த வேதனைக்குரிய நிகழ்வுகளுக்குப் பிறகு அவன் கடந்து வந்த பாதையை நினைவுபடுத்திக் கொண்டார்.

எத்தனையோ பேர் எத்தனையோ தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதையும், பிரிவதையும் ஏதோ ஒரு சட்டையை மாற்றிக் கொள்வது போல் செய்கையில் தன் மகன் படுகிற வேதனை அவருக்கு ஒரு புறம் வருத் தத்தை ஏற்படுத்தினாலும் மற்றொரு புறத்தில் பெருமை யாகவும் இருந்தது.

கடந்த இரண்டாண்டுகளாக ஓரளவு அந்தத் துயரத்தில் இருந்து அவன் விடுபட்டு விட்டான் என்றுதான் நினைக்க ஆரம்பித்திருந்தார். ஆனால் இதென்ன இப் போது வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுகிறாற் போல் தெரிகிறதே என்று எண்ணம் தோன்றியது.

''சே! சே! இருக்காது! தொடர்ந்து அலைவதனால் ஏற்படுகிற களைப்போ என்னவோ! அதான். ரெஸ்ட் எடுப்பா னாயிருக்கும்'' என்று சமாதானம் செய்து கொண்டார்.

மெல்ல அவன் அறைக்குள் எட்டிப் பார்த்தார்!

''செழியா!'' என்று அழைத்தார்!

சோபாவில் கைப்பிடியில் தலை வைத்து கூரையைப் பார்த்தாற்போல் தலை சாய்த்துக் கொண்டிருந்த இளஞ் செழியன் திடுக்கிட்டாற்போல் எழுந்து அமர்ந்தான்.

''என்னப்பா! உடம்புக்கு சரியில்லையா?'' என்றார்.

''இளஞ்செழியன் களைப்பாகப் புன்னகைத்தான்.

''இல்லப்பா! மனசுக்குத்தான் கொஞ்சம் களைப்பு!'' என்றான்.

''தம்பீ! உன்னைப் பற்றி எனக்கொரு பெருமை. என்னன்னா, எத்தனையோ பேர் பணம் வந்தவுடன்

பழசை மறந்தர்றாங்க. உறவுகளை எடுத்தெறிஞ்சர்றாங்க. ஆனா, நீ எப்பவும் ஒரே மாதிரி இருக்கே. எந்த உறவுலயும் ஆழமா இருக்க வேண்டியதுதான். ஆனா, அதுக்காக எந்த உறவும் நம்மைத் திங்கறதுக்கு அனுமதிக்கக் கூடாதுப்பா!'' என்றார்.

இளஞ்செழியன் அப்பாவை ஒரு கையாலாகாத்தனத்துடன் பார்த்தான்.

பல நாட்களுக்குப் பிறகு அந்தப் பார்வையைப் பார்த்த அப்பா துணுக்குற்றார்.

''என்னப்பா விஷயம்?'' என்றார்.

''அப்பா.. அவளைப் பார்த்தேன்!''

''யாரை?''

''சித்ரலேகாவை!'' என்றான்.

அடிபட்டாற் போல் பார்க்கிற மகனுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்றே புரியவில்லை. ஆனாலும் சொன்னார்.

''தம்பீ! வாழ்க்கையில இழப்புக்கள் ஏற்படலேன்னா.. இருப்புக்களோட அருமையே புரியாது. ஆனா இழப்புக்களை நினைச்சு, நினைச்சுப் பார்க்கற அளவுக்கு அந்த இழப்பு அருகதையுள்ளதுதானான்னு தெளிவா முடிவெடுக்கணும்.''

இளஞ்செழியன் அமைதியாக இருந்தான்.

''அப்பா! நான் என் சிங்கப்பூர் டிரிப்பைக் கான்சல் பண்ணிட்டேன். ஒரே மாசத்துக்குள்ள இந்த டீலிங்கை நான் முடிச்சாகணும். முடிச்சாத்தான் அதுக்கப்புறம் சித்ரலேகாவை நான் பாக்க வேண்டிய அவசியம் இருக்காது'' என்றான்.



அப்பா சற்று நேரம் மௌனம் சாதித்தார். பிறகு கேட்டார்.

''ஏம்ப்பா! நீ கவலைப்படற அளவுக்கு இழப்பைப் பற்றிய கவலை அந்தப்புறம் இருக்கா?''

''தெரியலேப்பா! இன்னைக்கு நடந்தது பிஸினஸ் மீட்டிங். அதுக்கு மேல நானும் பேசல.. அவளும் பேசல.. ஆனா, அதிர்ச்சி ரெண்டு பக்கமும் இருந்துச்சுன்னு நினைக்கறேன்.''

''சரிப்பா! ஆள் எப்படி இருக்காப்ல?''

அவன் குரலில் கடுப்புத் தெரிந்தது.

''ஆளுக்கென்ன.. ஜம்னு இருக்காப்ல..!'' என்றான்.

மறுபடியும் மௌனம் நிலவியது.

''லா படிச்சிருக்காப்ல..! எம்.பி.ஏ. முடிச்சிருக்காப்ல.. இப்பக் கம்பீரம்..'' என்றான்.

''ஓ! ஏப்பா.. கல்யாணம் கில்யாணம் ஆயிடுச்சா?''

''தெரியலேப்பா.. நான் கேட்கலே!'' என்றான். மறுபடியும் மௌனம் நிலவியது.

''அது சரி போ! மனசுக்குள்ள எத்தனையோ சங்கடம் இருந்த போதும்.. நீ வெள்ளை சொள்ளையா உலாத்தலையா?'' என்றார்.

இளஞ்செழியன் உச்சுக் கொட்டினான்.

''சரிப்பா! ரெஸ்ட் எடு!'' என்று எழுந்த தந்தை மறுபடியும் உள்ளே வந்தார்.

''தம்பீ! முதற்கட்ட அதிர்ச்சி தெளிவானவுடனே.. ஒரு நிதானம் வரும். பார்த்ததும் நல்லதுக்குத்தான்..! ஒரு தெளிவு கிடைக்கும்..'' என்றார்.

தனது துக்கத்தைத் தானே சுமந்து அவன் ஒரு முடிவுக்கு வரட்டும் என்பது போல் போய்விட்டார்.

இளஞ்செழியன் எழுந்து அமர்ந்தான். டி.வி.யைப் போட்டுப் பார்த்தான்.

உறக்கம் வரவில்லை. வேண்டாம் வேண்டாம் என்று குப்பையில் தூக்கிப் போட்ட எண்ணங்கள்தான் படையெடுக்கத் தொடங்கின.

* * *

கைப்பையை வீசியெறிந்த மகளைப் பார்த்தார் அம்மா!

''ஏண்டி சித்ரா! இந்த நைட் டயத்து மீட்டிங் எல்லாம் வேண்டாம்னு சொன்னாக் கேக்கறியா'' என்றார் ரேணுகா.

''அம்மா! ஒரு தொழில்னு போனா எல்லாம்தான் இருக்கும். இவ்வளவு பெரிய போஸ்ட்ல இருந்துகிட்டு அப்படியெல்லாம் கண்டிஷன் போட முடியாது'' என்றாள் சித்ரலேகா எரிச்சலாக.

''அவளுக்கும் தெரியும்மா! சும்மா உன்னை மிரட்டிப் பாக்கறது?'' என்றார் சௌந்தரராஜன் சித்ரலேகாவின் அப்பா. ஆனாலும் மகளின் முகத்தைப் பார்த்தவர் கொஞ்சம் திகைத்துத்தான் போனார். இன்றைக்கு ஒரு பீதி தெரிந்தது!

தனது தத்துவப் பேச்சை விட்டு மகளின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார்.

''என்னம்மா.. விஷயம்?''

''அப்பா! அவரைப் பார்த்தேன்!''

''யாரை?!''

''இளஞ்செழியனை!''

''ஓ! எங்கே?''



''எங்க கம்பெனியில ஒரு சைட்டிற்கான பிஸினஸ் மீட்டிங்க்ல... வச்சு.''

''ஓ..! எப்படியிருக்காரு?''

''எப்படி இருக்காரு? பிஸினஸ் மேனா கொடிகட்டிப் பறக்கறாரு.. சி.எல்.கே டிராவல்ஸ் அவரோடதுதான்.''

''ரியலி!''

''ஆமப்பா! அசுர வளர்ச்சி. நூறு பஸ் ஓடுது. ஐம்பது கார் ஓடுது. இன்னும் வேற என்னென்ன இருக்குன்னு தெரியலே!''

எப்படி? எப்படி இதெல்லாம்! என்ற மலைப்புத்தான் தோன்றியது.

தன்னோட கன்ஸர்ன்ல தொழிலாளர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் குடுக்கறாரு. அஃப்கோர்ஸ் ஹவுசிங் லோன் போட்டுத்தான்.. சி.டைப். பி டைப் ஏ டைப்ன்னு வீடுங்க...'' என்றாள்.

அப்பா ஆழ்ந்த சிந்தனையுடனும் ஆச்சர்யத்துடனும் கேட்டுக் கொண்டார். சற்று நேரம் சி.எல்.கே டிராவல்ஸ் பற்றி மகள் விவரிக்கவும் கேட்டுக் கொண்ட சௌந்திர ராஜன் மிக மெதுவாகக் கேட்டார்.

''ஆள்.. எப்படி இருக்காரு?''

''ஆளுக்கென்னப்பா..! டையும், கோட்டுமா.. ஒரு எம்.டி.க்கு உள்ள எல்லா லட்சணங்களோடவும் இருக்காரு'' என்றாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தனது அறைக்குப் புறப்பட்ட மகளிடம் கேட்டார்.

''ஏம்மா! உன்னைப் பத்தி விசாரிச்சாரா?'' என்று கேட்டதும் அவள் முகம் இருண்டது!

''இல்லப்பா! பர்ஸனல் டாக் எதுவும் இருக்கலே!'' என்றாள்.

''ம்மா! ஜாக்கிரதைம்மா...! நீயா எதுவும் ஆரம்பிக்காதே'' என்றார்.

''சரிப்பா!'' என்றாள்.

மறுபடியும் அழைத்தார்.

''ம்மா!'' பிரசாத் போன் செஞ்சான்'' என்றார்.

''ஓ! நானே டைம் இருக்கும்போது கூப்பிடறேன்னு சொல்லுங்க..!''

''அம்மா! ரொம்ப வருத்தப்பட்டான்! சித்ரா முன்னை மாதிரி என்கிட்ட பேச மாட்டேங்குதுன்னு கூழ் கூழ்ன்னு அழுகறாங்க..''

சித்ரலேகா கல்லைப் போல் நின்று கேட்டுக் கொண்டாள்.

''உன்கிட்டே பேசியே இரண்டு மாசமாச்சுங்கறான்'' என்றார்.

''நா என்னப்பா செய்யட்டும்! எனக்கு டைம் இல்ல!'' என்றாள். இதில் எதுவும் தலையிடாமல் ரேணுகா பார்த்துக் கொண்டிருந்தார்.

சித்ரலேகா மறுபடியும் சொன்னாள்.

''அப்பா! தயவு செய்து பிரசாத்கிட்டே சொல்லுங்க.. அநாவசியமா சீன் கிரியேட் பண்ண வேண்டாம்னு சொல்லுங்க.. எப்பெப்ப எனக்கு டைம் கிடைக்குதோ அப்ப நானே காண்டாக்ட் பண்ணுவேன்னு சொல்லுங்க'' என்றாள்.

பேச்சை வளர்க்க விரும்பாதவள் போல் அறைக்குப் போய் விட்டாள்.



சௌந்தரராஜன் கவலையுடன் மனைவியைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

''ரேணுகா! மறுபடியும் ஒரு புயல் ஆரம்பம்னு நினைக்கறேன்.''

''ஆமாங்க! எனக்கும் அடிவயித்தைக் கலக்குது. எனக்குத் தோணுது சித்ரா நம்ம யாரையுமே மன்னிக்கலே. அதிலயும் பிரசாத்தை ரொம்ப வெறுத்துட்டா...'' என்றார் ஆற்றாமை நிறைந்த குரலில்.

அப்பா பெருமூச்சு விட்டார்.

''அதுக்குக் காரணம் இருக்குது ரேணுகா! பிரசாத் ரொம்ப ஆட்டம் போட்டுட்டான். நான் அப்பவே சொன்னேன். வேண்டாம்ப்பான்னு கேட்கலை. பய அனுபவிக்கறான்.''

''அவன் பலனை அனுபவிக்கறது ஒருபுறம் இருக்கட்டும். சித்ரா இல்ல அக்கினியில கருகற மாதிரி கருகறா. நாம யாருக்குன்னு பேசுவது.''

''இவங்க ரெண்டு பேர் பிரச்சினையை விடு. செழியன் இப்ப ரொம்ப ஹை லெவல்ல இருக்கானாம். அவனோட ரியாக்ஷன் எப்படி இருக்குமோ? இனிமேல் கொண்டு என்னென்ன பூகம்பம் வரப்போகுதோ.''

அப்போதுதான் ரேணுகா அழுத்தம் திருத்தமாக ஒன்றைச் சொன்னார்.

''பாருங்க! அப்படி ஏதாவது பிரச்சினை இந்த முறை வந்தா அதை அவளே சமாளிக்கட்டும். அவளே முடிவெடுக்கட்டும். அவளும் குழந்தையில்லே. இனிமே அவளுக்கு டார்ச்சர் குடுத்தா நான் சும்மா இருக்க மாட்டேன். பிரசாத்கிட்டே சொல்லிடுங்க'' என்றார்.

சௌந்தரராஜன் மௌனமாக ஏற்றுக் கொண்டார்.

சித்ரலேகாவின் காதுகளில் அவர்கள் பேசுவதெல்லாம் விழுந்தது.

சோபாவில் சுருண்டு அமர்ந்து கொண்டாள். கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

எந்த விஷயம் அவள் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டதோ, எந்த விஷயம் இன்று வரைக்கும் அவள் வயிற்றில் அக்கினி மூட்டுகிறதோ அது மீண்டும் கிளம்புகிறதே!

நீறு பூத்த நெருப்பு போல உள்ளே அடங்கியிருந்த நெருப்பு.. இப்போது கொழுந்து விட்டு எரிகிறது.

அந்தத் தீயில் யார் யார் கருகப் போகிறார்களோ, மீண்டு வருவோமா? என்று எத்தனையோ கவலைகள் அவளுக்கும். இந்தக் குடும்பத்திற்காகவும், அதன் கட்டுப்பாடுகளுக்காகவும் அவள் இழந்தது எத்தனை!

இன்றைக்குப் பார்க்கிற இளஞ்செழியனுக்கு எத்தனை வேறுபாடு! டை என்ன? கோட் என்ன? அமர்த்தலான முக பாவம் என்ன? சுருக்கமான பேச்சு என்ன? இது எப்படி எட்டாண்டுகளில் சாத்தியமானது.

ஒன்று லாட்டரி அடித்திருக்க வேண்டும். இல்லையென்றால் வேறு வகையில் அதிர்ஷ்டம் அடித்திருக்க வேண்டும். ஆனால், அவருடைய பி.ஏ. வேறு மாதிரி சொல்கிறார் எல்லாம் அவருடைய உழைப்பு. கூர்மையான கணக்கீடுகள், திட்டமிடுதல் இவற்றினால் வந்த விளைவு என்று.

இருக்கலாம்!



எட்டாண்டுகளுக்கு முன்னேயே அவன் திறமையானவன்தான். அஞ்சாத மனம் படைத்தவன்தான். இப்போது பண பலம் வேறு!

தான் மட்டும் என்ன? அறிந்த மாதிரிக் காட்டிக் கொண்டோமா?

தவறு யார் பக்கம்! கண்டிப்பாக அவள் பக்கமிருந்து யோசித்து யோசித்து மண்டையே வெடித்து விடும் போல இருந்தது.

அதே சமயம்!

ஹாலில் போன் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. அவள் எடுக்கப் போகவில்லை!

அப்பாவே எடுத்தார் போலும்!

''ஹலோ! பிரசாத்தா? சித்ரா வந்தாச்சே!'' என்றபடி மகளைத் திரும்பிப் பார்த்தார்.

மகள் வெறுமையாகப் பார்ப்பதைக் கண்டவுடனே அவளுக்குப் பேச விருப்பமில்லை என்று புரிந்து கொண்டார்.

''பிரசாத்! சித்ரா ரொம்ப டயர்டா இருக்கா போல இருக்கு. இன்னைக்கு ஏதோ பெரிய டீலிங்காம். வரும் போதே ரொம்ப டயர்டா வந்தாப்ல. நாளைக்கு பேசினாப் போச்சு...''

அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ தெரியவில்லை.

''உனக்குத் தெரியாதாப்பா. அவளை யாரும் கம்பெல் பண்ணி எதுவும் செய்ய வைக்க முடியாது. ஷி நோஸ் பெட்டர்.''

மறுபடியும் அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ தெரியவில்லை. அப்பா இந்தப் பக்கம் பொறுமையிழப்பது தெரிந்தது.

''சரிப்பா! எதுக்கும் தலை போகிற அளவுக்கு ஒண்ணும் வந்துடலை. மெதுமெதுவாப் பார்க்கலாம்'' என்றார்.

சலிப்புடன் போனை வைத்தார்.

சித்ரலேகா முழுவதுமாக இந்த விஷயத்தைக் கண்டு கொள்ளவேயில்லை.

திடீரென்று என்ன தோன்றியதோ எழுந்து கண்ணாடி முன் நின்றாள்.

தன்னைத் தானே அலசிக் கொண்டாள்!

பழைய சித்ரலேகா அல்ல இவள்!

இப்போது அழகு கூடியிருந்தது. அழகைப் பராமரிப்பது எப்படி என்பது தெரிந்து விட்டது.

அறிவின் தீட்சண்யம் தெரிந்தது! கல்வியினால் ஏற்பட்ட இறுமாப்பு கொஞ்சம் தெரிந்தது. ஆனால் அவளுக்கு மட்டும்தானே தெரியும் இத்தனை வெளிக்கவசத்துக்கு உள்ளேயும் எப்போதும் இருக்கிற அவள் அவளாகத் தான் இருக்கிறாள் என்பது.

நேர்மாறாக அவன் மாறியிருந்தான்!

நிற்கிற தோரணையில், நடக்கிற வேகத்தில் பேச்சில், பாவனையில் எத்தனை மாற்றம்.

லேசாகக் கண்ணசைத்தாலும் போதும். காரியங்கள் நிறைவேறின.

ஒற்றை விரலை அசைக்கிறான். பட் பட்டென்று காரியங்கள் நடைபெறுகின்றன.



எந்த உயரத்திலிருந்து எந்த உயரத்துக்கு வந்திருக்கிறான். தான் படித்த இத்தனை படிப்புக்கும் மீறி இப்போது அவளுக்கு ஒரு பயம் தோன்றியது. இந்த இளஞ்செழியன் ஒரு காலத்தில் எவ்வளவு நெருக்கம் என்பதை இன்று சொன்னால் யார் ஏற்றுக் கொள்வார்கள். தன் குடும்ப வாழ்க்கை என்ன ஆகும்?

சித்ரலேகா தளர்ந்தாற் போல் அமர்ந்து விட்டாள். திடீரென்று முடிவெடுத்தாற் போல் தனது ஜி.எம்மிடம் பேசினாள்.

''சார்! நான் நாளையிலிருந்து ஒரு மாசம் லீவ் போடறேன் சார்! எப்படியாவது என்னை விடுங்க... சார்!''

அந்தப் பக்கம் இருந்து உத்தரவாதமான பதில் எதுவும் வரவில்லை போலும்.

சோர்ந்து போய் படுக்கையில் சரிந்தாள்.

சரஞ்சரமாய்க் கண்ணீரும் அலையலையாய் பழைய நினைவுகளும் ஒரே சமயத்தில் பொங்கிப் பிரவகித்தன.

## 3

''இப்ப எதுக்குக் கம்ப்யூட்டர் சென்டர் போகணுங்கறே! உனக்கு என்ன கத்துக்கணுமோ அதை இங்கயே ஒரு கம்ப்யூட்டர் மாஸ்டரை வச்சுப் பாடம் கத்துக்கிட்டாப் போச்சு! எதுக்கு வெளியே போகணுங்கறே!'' என்றான் பிரசாத் கடுகடுத்த முகத்துடன்.

''இங்க பார். அண்ணா! நான் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லே! நீ இப்படி என்னைக் கிண்டிகிட்டே இருந்தீங்கன்னாத்தான் எனக்குத் தப்பு பண்ணணும்ன்னு தோணும்'' என்றாள் சித்ரலேகா.

அப்பாவைத் திரும்பிப் பார்த்து முறைத்தாள் சித்ரலேகா. "நீங்க சொல்ல மாட்டீங்களாப்பா?" என்று கேட்டாள்.

அப்பா புன்னகைத்தார்.

"அம்மா! பிரசாத்தோட கவலையும் நியாயம்தான். உன்னோட கோபமும் நியாயம்தான்."

"ப்ளீஸ் அப்பா! இப்படி நான் கமிட்டலாப் பேசாதீங்க. ஏதாவது சொல்லுங்க..!" என்றாள் சித்ரலேகா.

"ஏய்.. சும்மா வாய் பேசாதடி!" என்றான் பிரசாத்.

"பாரு.. பிரசாத்! நான் ஒண்ணும் சின்னக் குழந்தையில்ல எய்ட்டீன் இயர்ஸ் ஓல்ட். எனக்கும் வெளியுலக அனுபவம் வேணும். நாலு பேரோட பழகணும். நாலு விஷயம் தெரிஞ்சுக்கணும்" என்றாள்.

"என்னமோ செய்" என்று கடித்து விட்டு வெளியே போனான் பிரசாத்.

அவன் அந்தப்புறம் போனவுடன் அப்பாவை முறைத்தாள். "என்னப்பா.. நீங்க.. அண்ணன் எப்பப் பாரு என்னைக் கட்டுப்படுத்தறதுலயே இருக்கான். நீங்க ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்க!" என்றாள், மனத் தாங்கலுடன்.

"அம்மா... அவனுக்கு என்னென்னவோ பயம். உன்னை மாதிரி வசதியான பொண்ணுங்கன்னு தெரிஞ்சா.. பசங்க மனசைக் கெடுத்தர்றாங்க. அவன் பிரண்டோட சிஸ்டர் ஒண்ணு அந்த மாதிரிப் பண்ணிடுச்சுன்னு அவனுக்குக் கவலை" என்றார்.

"அப்பா.. இது நியாயமேயில்லை. யாரோ தப்பு செஞ்சாங்கறதுக்காக எல்லாரும் அதே மாதிரி நடப்பாங்களா? இப்படியெல்லாம் கெடுபிடி செஞ்சாத்தான் மனசுக்குக் கஷ்டமாயிருக்கு" என்றாள்.



"சரி... விடும்மா! நான் அவன்கிட்டே பேசறேன். ஆனா, நீ ஜாக்கிரதையாப் போயிட்டு வாம்மா" என்றார்.

கல்லூரிப் படிப்பில் மூன்றாமாண்டில் இருந்தாள். கூடவே பி.ஜி.டி.சி.ஏ. மாதிரி ஏதாவது முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தாள். அதற்குத்தான் வீட்டில் இப்படி எதிர்ப்பு. பிரசாத்துக்குத் தங்கை மேல் மிகவும் அன்பு. ஆனால், அதைக் காட்டுகிற விதத்தில்தான் வித்தியாசம். அவளைப் பாதுகாப்பதாக நினைத்துக் கொண்டு மிகவும் கட்டுப்படுத்துவான். அது சித்ரலேகாவுக்குப் பிடிக்காது. இருவருக்கும் சண்டை பிளக்கும். இருவருக்கும் இடையில் சிக்கிக் கொண்டு விழித்தார்கள். பிடிவாதம் பிடித்துப் போய் சோர்ந்தே விட்டாள். சண்டை பிடித்துப் போய் சோர்ந்ததாலோ என்னவோ அனுபவம் ஆசையாக இருந்தது.

* * *

"மேடம்! இங்க கொஞ்சம் கவனிச்சீங்கன்னா தேவலை!" என்றான் இளஞ்செழியன்.

சித்ரலேகாவும், அவள் தோழி ராணியும் களுக்கென்று சிரித்தார்கள்.

இளஞ்செழியனும் ஒன்றும் வயதானவன் இல்லை. அவனுக்கும் இருபத்தோரு வயதுதான் ஆகியிருந்தது.

ஐ.டி. தொடர்பான படிப்பு ஒன்றைப் படித்துக் கொண்டே அந்த ஐ.டி. நிறுவனத்தில் பார்ட் டைமாக பாடம் எடுத்துக் கொண்டிருந்தான்.

மிக நாகரீகமாக நடந்து கொள்வான்.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென்ற வேகம் அவனிடம் இருந்தது.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய தாயாரும் தந்தையும் ஒரு கிராமத்தில் இருந்தார்கள்.

இருப்பதற்கு அளவான ஓட்டு வீடு. ஏதோ கொஞ்சம் புஞ்சை நிலம்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கென்றும் அவன் அனுப்பி வைக்கிற பணம்தான் செலவுக்கு. வேறு எந்த வருமானமும் கிடையாது. இருந்தாலும் கைச்செலவுக்கும் பணம் கிடைக்கும் என்பதற்காக அவர்கள் வீட்டுக்கு முன்னாலே இருந்த இடத்திலேயே ஒரு பெட்டிக்கடை வைத்துக் கொடுத்திருந்தான்.

தன்னுடைய குடும்பத்தின் வறுமை மனதில் இருந்ததாலோ என்னவோ எப்போதும் பெண்களிடம் அளவாகவே பழகுவான்.

அவன் எடுக்கும் வகுப்பு கலகலப்பாக இருக்கும். நல்ல உதாரணங்கள் சொல்வான். பெண்கள் எல்லாரும் அப்புறம்கூட நினைத்துக் கொண்டு சிரிக்கிற மாதிரியான ஜோக்குகள் சொல்வான்.

''இளஞ்செழியன் கிளாஸ் நல்லாயிருக்கும்டி'' என்று சொல்வதனாலோ என்னமோ அவன் பாட்சில் நிறையப் பேர் சேர்ந்தார்கள்.

சதவீத அடிப்படையில் வருமானம் என்பதால் அவன் தேவைகள் போக ஊருக்கு அனுப்புகிற அளவுக்குப் பணம் சேர்க்க முடிந்தது.

பெரிய நோக்கங்கள் வைத்திருந்தான். அதனால் எந்த விதமான டீவியேஷனும் கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

எல்லாப் பெண்களிடமும் அன்பாகவே பேசுவான். ஒரு நாள் சித்ரலேகா ஏதோ சந்தேகம் கேட்டாள்.

''என்னம்மா... சித்ரா... சொல்லுங்க..!'' என்று இயல்பாகப் பேசுவான்.



பெண்கள் கல்லூரியில் படித்தாள் சித்ரலேகா. ஆண்களிடம் பழக்கம் குறைவு. அதிலும் பிரசாத்தின் கெடுபிடிகளையே சந்தித்துப் பழகியதால் இந்த வயதில் இவ்வளவு பிரியமாகவும், அன்பாகவும் பேசுகிற இளைஞனை பார்ப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அதைக் காட்டிலும் அவள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவன் பொறுமையாகப் பதில் சொன்னது இன்னும் ஆச்சரியம்.

''சார்! உங்க ஏஜில இருக்கற எல்லா ஆண்களுமே பொதுவா படபடன்னு இருப்பாங்கன்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்'' என்று அவள் சொன்னபோது அவன் இடைமறித்தான்.

''என்ன மேடம்! கன்னி மாடத்துல இருக்கிற இளவரசி மாதிரி பேசறீங்க..!'' என்றான்.

''ஐயோ! கிட்டத்தட்ட என் நிலைமை அப்படித்தான். கொஞ்சம் வசதியிருக்கிற காரணத்துனால எங்கண்ணன் எப்பப் பாரு என்னைக் கண்கொத்திப் பாம்பாட்டம் கவனிச்சுட்டேயிருப்பான். ஒரு சுதந்திரமே கிடையாது'' என்றாள் முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு.

''மேடம்! அதுக்கு பேரு அக்கறை. அதை ஏன் தப்பா எடுத்துக்கறீங்க..!'' என்றான் இளஞ்செழியன்.

''சார்! இது சொல்றதுக்கு நல்லா இருக்கும். ஆனா, எப்பவும் இப்படி ஒரு கண் வாட்ச்ஃபுல்லா உங்களைக் கவனிச்சுட்டே இருந்தா நீங்க லைக் பண்ணுவீங்களா?'' என்றாள் சித்ரலேகா.

''ஆமா! அது கொஞ்சம் கஷ்டம்தான். ஆனா, எப்பவுமே கோபம்தான் வேற ஏதோட வெளிப்பாடாத்தான் இருக்

கும். மாசக் கடைசியில ஒரு மகன் வந்து ஏதோ வந்து கேட்கறான். அப்பா கோபப் படறாங்கன்னா அதுக்குக் காரணம் குழந்தை கேட்கறதை வாங்கிக் குடுக்க முடிய லேங்கற வருத்தம்தான். அது மாதிரி உங்க அண்ணனுக்கு உங்க மேல அக்கறைன்னு எடுத்துக்குங்க'' என்றான்.

''ம்.. எங்கப்பா.. கூட இப்படித்தான் சொன்னாரு'' என்றாள்.

இளஞ்செழியன் மெதுவாகப் பேச்சை மாற்றி அவளுக் கும் பாடத்தில் இருந்த சந்தேகத்தை விளக்கி அனுப்பி வைத்தான்.

இளஞ்செழியனின் பொறுமையான பேச்சும் அறிவான பேச்சும், பிரச்சினையும், கலாட்டாவுமாக இருக்கிற மாணவர்களை அவர்கள் போக்கில் போய் சமாளிக்கிற திறமையும் ஆக எல்லாமே எல்லா மாணவர்களையும் கவர்ந்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

எல்லாரும் அவனிடம் ஆர்வமாகப் பழகினார்கள். தன்னுடைய வசதிக் குறைவைக் காட்டிக் கொள்ளாத விதத்தில் அவனும் தனது எளிமையான உடைகளைக் கூட அயர்ன் செய்து கம்பீரமாக உடுத்திக் கொள்கிற கலையையும் அறிந்து வைத்திருந்தான்.

அந்த கம்ப்யூட்டர் சென்டரிலேயே மேல் மாடியில் அவனுக்கு என்று ஒரு அறையும் கொடுத்திருந்தார்கள். அந்த நிறுவனத்தை மேற்பார்வை செய்வதற்காக இலவசமாக அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஏற்பாடு அது.

காலையில் எழுந்து அந்தக் கம்ப்யூட்டர் சென்டரை சுத்தம் செய்வதற்கு வருகிற ஆட்களிடம் வேலை வாங்கி அவனும் எட்டு மணிக்குத் தயாராகி காலை எட்டு



மணிக்கு ஒரு வகுப்பு எடுத்துவிட்டு ஒன்பது மணிக்கு கம்ப்யூட்டர் சென்டர் நடத்துபவர் வந்தவுடன் அவரிடம் பொறுப்பை கொடுத்து விட்டுத் தனது டி.வி.எஸ். பிஃப்டியில் கல்லூரிக்குப் போய் விடுவான்.

கல்லூரியில் இருந்து மாலை ஐந்து மணிக்கு வந்தால் ஒரு மணி நேர ஓய்வு. அதற்குப்பின் இரவு ஒன்பது மணி வரை வகுப்பு என்று மும்முரமாக இருப்பான்.

ஒன்பது மணிக்கு மேல் கல்லூரி தொடர்பான பணிகள் செய்வான். அவனுடைய உழைப்பும், நேர்மையும் பிடித்துப் போனதாலோ என்னவோ கம்ப்யூட்டர் சென்டரின் உரிமையாளருக்கு அவனை மிகவும் பிடித்தது. அவ னுக்கு உதவி செய்த மாதிரியும் ஆனது. சென்டரைப் பார்த்துக் கொள்ள நம்பிக்கையான ஆளும் என்றுதான் அவனுக்கு சில சலுகைகள் செய்து கொடுத்தார்.

ஒரு நாள்!

பக்கத்தில் இருக்கிற ஒட்டலில் ஏதாவது டிபன் வாங்கிக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்தில் வெளியே வந்தான் இளஞ்செழியன்.

அதே நேரம்!

தனது வகுப்பை முடித்து விட்டு வெளியே வந்து தனது கார் வருவதற்காக நின்றாள் சித்ரலேகா.

''என்ன மேடம்! கிளாஸ் முடிஞ்சுதா?'' என்றான் இளஞ் செழியன் இயல்பாக.

''ஆமா... சார்!'' என்றாள் சித்ரலேகா.

''மேடம்! அதென்ன... உங்க குரூப்பே இன்னைக்கு வெடிச் சிரிப்பு சிரிச்சுகிட்டிருந்தீங்க'' என்றான் இளஞ் செழியன்.

''இல்ல... சார்! இன்னைக்குக் காலேஜ்ல ஒரு ஜோக் நடந்துச்சு.. என் பிரண்ட் ஒருத்தி கண்ணுல கண்ணாடியை போட்டுகிட்டே கண்ணாடியைத் துழாவிகிட்டிருந்தா...'' என்றாள் சித்ரலேகா.

''உங்க பிரண்டுதானே! வேறெப்படி இருப்பாங்க!'' என்று அவன் கேலியில் இறங்கினான்.

''சார்! என்ன சார் நீங்க இப்படிச் சொல்லிட்டீங்க!'' என்று சோகமானாள் சித்ரலேகா.

''ஏன்.. நான் சொல்லக் கூடாதா?''

''என்ன சார்! நீங்க ரொம்ப ஐடியல்ங்கறாங்க உங்க ளோட மனசுல எங்களுக்குக் கௌரவமான இடம் இருக் கணுமில்லே!'' என்றாள் சித்ரலேகா.

''சே.. சே! நான் சும்மா ஜாலிக்குச் சொன்னேன். நீங்க... எங்க காலேஜுக்கு வந்து பாக்கணும்.. பொண்ணுங்க என்ன கலாட்டாவா இருக்காங்க. அதைக் கம்பேர் பண்ணினா.. நீங்கள்ளாம் ரொம்ப சாஃப்ட்'' என்றான் இளஞ் செழியன்.

''ரியலி?'' என்றாள் சித்ரலேகா.

''ஆமா! நேத்து ஒரு பொண்ணு குடுமி பிடிச் சண்டைதான்'' என்றான்.

''ஐயோ! அப்படியெல்லாமா... பொண்ணுங்க.. செய்வாங்க!''

''இல்லல்லே! அவங்களைத் தப்பு சொல்றதுக்காகச் சொல்லலே. ஆண்கள்லயும் எல்லா விதமும் இருப்பாங்க... அது மாதிரி.. பொண்ணுங்கள்லயும் எல்லா விதமாவும் இருப்பாங்க... அதுக்குச் சொல்றேன்'' என்றான்.



இரண்டு பேரும் இயல்பாகச் சிரித்துக் கொண்டு நிற்கையில் சித்ரலேகாவுக்காகக் கார் வந்து சர்ரென்று நின்றது.

வழக்கமாக வருகிற டிரைவரைக் காணவில்லை. இன்றைக்கு என்னவோ பிரசாத்தே காரை ஓட்டிக் கொண்டு வந்தான்.

''வரேன்! சார்!'' என்று சிரித்தபடி கையாட்டி விட்டுக் காரில் ஏறினாள். அவனும் இரண்டு பாக்கெட்டுகளிலும் கையை விட்டபடி நின்று கொண்டிருந்தவன் சிரித்தபடி தலையை ஆட்டினான்.

கார் விலுக்கென்று நகர்ந்தது.

''அது யாரு?'' என்றான் பிரசாத்.

''அவரு எங்களுக்குக் கிளாஸ் எடுக்கறாரு.'' என்றாள் சித்ரலேகா.

''பார்த்தா... சின்ன வயசா இருக்கான்!'' என்றான் பிரசாத்.

''காலேஜ்ல படிச்சகிட்டு... பார்ட் டைமா கிளாஸ் எடுக்கறாரு..'' என்றாள்.

''ஓ... இந்த கம்ப்யூட்டர் சென்டர்ல ஸ்டூடன்ட்ஸை வச்சுகிட்டுத்தான் கிளாஸ் எடுக்கச் சொல்றாங்களா'' என்றான்.

''ஆமா!'' என்றாள்.

''அது சரியில்லையே!'' என்றான்.

சித்ரலேகா ஒன்றும் பேசவில்லை. ''ஆரம்பிச்சாச்சு'' என்று மட்டும் கடுப்புடன் நினைத்துக் கொண்டாள் சித்ரலேகா.

''ம்..! எல்லா சென்டர்லயும் இப்படித்தானா?''

''ஆமா'' என்றாள் சித்ரலேகா.

''இப்ப எதுக்குத்தான் இந்தக் கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக் கணுங்கறேன்னே புரியலே!'' என்றான்.

சித்ரலேகா ஒன்றும் பேசவில்லை.

''நம்ம கன்ஸர்ன் பாத்துகிட்டாலே போதும்'' என்றான் மறுபடியும்.

''நம்ம கன்ஸர்ன் பாத்துக்கறதுன்னாலும் அடிப்படை அறிவு வேணும் இல்லை அதுக்குத்தான்'' என்றாள்.

அந்த பதிலால் பிரசாத் சமாதானம் ஆகிவிட்டான். என்றாலும் சித்ரலேகா காயப்பட்டாள் போல் உணர்ந்தாள்.

வீட்டுக்குப் போனவுடன் அம்மாவிடம் சண்டை பிடித்தாள்.

''யாருகிட்டயும் பேசவே கூடாதா? எங்க சார் கிட்டே பேசினாக் கூட தப்பர்த்தம் தானா...'' என்றாள்.

''தெரியலடி.. இப்ப வந்து சொல்லிட்டுப் போறான். அந்தப் பையன் என்னமோ பார்க்கறதுக்கு சின்ன வயசா இருந்தானாம். அழகா வேற இருந்தானாம்'' என்று அம்மா முணுமுணுத்தார்.

''அடப் போம்மா! இனிமே அப்பாகிட்டே சொல்லிடு பிரசாத் எனக்குக் கார் எடுத்துட்டு வர வேண்டாம். அப்படி டிரைவர் வரலேன்னா எனக்கு போன் பண்ணுங்க. என் பிரண்டு கார்ல வந்தர்றேன்'' என்றாள்.

அறைக்குப் போனவுடன் கைப்பையைத் தூக்கி வீசினாள். அழுகையாக வந்தது. கொஞ்ச நேரம் அழுதாள்.

பணம் இருக்கிறது என்பதும். வசதியுமே அவளது சுதந் திரத்துக்குத் தடையாக இருந்தன என்பதால் இப்படிப் பட்ட வாழ்க்கைதான் எதற்கு என்ற கோபம் எழுந்தது.



இப்போதுதான் அவளுக்கு அந்த உண்மையும் உறைத்தது. ''ஆமாம் இளஞ்செழியன் அழகாகத்தான் இருக்கிறார்'' என்று.

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி'' என்கிற மாதிரித் தேவையில்லாமல் தன் சகோதரன் தன்னைக் கிளறிவிட்டு விட்டான் என்பது புரிந்தது.

* * *

சுறுசுறுப்பாகப் பாடம் எடுத்துக் கொண்டிருந்தான் இளஞ்செழியன். சித்ரலேகா அப்போது எதிர் வகுப்பில் அமர்ந்திருந்தாள்.

அங்கேயிருந்து பார்த்தால் இளஞ்செழியன் பாடம் எடுப்பது நன்றாகத் தெரியும். ஏதோ ஊமைப் படம் பார்ப்பது போல் இருந்தது.

'சும்மா... சொல்லக்கூடாது! இளஞ்செழியன் கம்பீரம் தான்' என்று எண்ணிக் கொண்டாள்.

இளஞ்செழியன் அவளுக்கு நிறையப் பாடங்கள் எடுப்ப தில்லை. மாறாக ஒரு பேப்பரில் ஒன்றிரண்டு பகுதிகள் மட்டும்தான் எடுப்பான். அதனால் எல்லா நாட்களும் வர மாட்டான்.

பிராக்டிகல் வகுப்புக்குப் போனால் வழிகாட்டுவான். இன்றைக்கெல்லாம் சித்ரலேகாவின் கண்கள் அவன் இருக்குமிடத்தையே தேடிக் கொண்டிருந்தன.

அடுத்த வகுப்பு எடுத்தாலும் அவன் தெரிகிற மாதிரி யான இடத்தில் அமர்ந்து கொள்வாள்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு மேல் இது நடந்து கொண்டிருந்தது.

யாரும் கவனிக்கவில்லை. மெது மெதுவாக அவளது தோழிகள் இதைக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

''லேகா! என்னடி... இது?''

''எது?''

''உன் கண்ணு எங்கேயோ அலை பாயற மாதிரித் தெரியுது?'' என்றாள் தோழி.

''அப்படியெல்லாம் இல்லடி. சார் ரொம்ப ஸ்மார்ட் இல்லே!'' என்றாள் சித்ரலேகா.

''ஓ.. அட்மிரேஷனா?''

''ஆமாடி! சிம்பிள் அட்மிரேஷன்தான்!'' என்றாள் சித்ரலேகா.

''சரி.. அதோட நின்னாச் சரி!'' என்றாள் தோழி சுமிதா.

''அவ்வளவுதான்!'' என்றாள் சித்ரலேகா. ஆனா, தான் சொன்னது பொய் என்பது அவளுக்கே புரிந்தது.

அதற்கேற்றாற்போல் அன்றைக்கு ஒரு கவிதை படித்தாள். அலமாரியில் புத்தகக்கட்டுகளைப் புரட்டிக் கொண்டிருக்கையில் அந்தக் கவிதை கண்ணில் பட்டது. ஆர்.நீலா என்பவர் எழுதியிருந்த கவிதை.

**தாவணியின் தலைப்பை**
**விளையாட்டாய் முறுக்கும்போதும்,**
**கோயிலுக்குப் போகும்போது**
**கூடுதலாய் அலங்கரிக்கும்போதும்**
**தனியாய் அமர்ந்து**
**பாடங்களை மனனம்**
**செய்யும் போதும்**
**அவனை நினைத்தே**



**அவ்வளவும் செய்வதாய்**
**அடித்து விட்ட தந்தையே..**
**நீ அடித்த பிறகுதானப்பா**
**அவனை நினைத்தேன்.**

சிந்தனையில் ஆழ்ந்தாள். அப்பா என்பதற்கு பதிலாக அண்ணா எனப் போட்டிருக்கலாம் எனத் தோன்றியது.

## 4

''என்ன ஸ்வேதா.. மேடம்! நான்தான் நீங்க உங்க அசைன்மென்ட் கரெக்டாத்தான் செஞ்சிருக்கீங்கன்னு செல்லிட்டேன் அப்புறம் என்ன?'' என்றான் இளஞ்செழியன்.

சுவேதா ஒரு விதமாகச் சிரித்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''ப்ளீஸ்! இந்த சிரிப்புக்கு அர்த்தம்.. என்ன? அடிக்கடி இந்த மாதிரி சிரிக்கிறீங்க. நிஜம்மாவே உங்களுக்குப் புரியலியா...'' என்றாள். மறுபடியும் சிரித்தாள்.

''ப்ளீஸ்! எதுவானாலும் ஸ்ட்ரெயிட்டா பேசுங்க'' என்றான் லேசான கடுப்புடன். ஸ்வேதாவின் முகம் வாடியது.

''சார்! சித்ரலேகா.. எப்பவும் உங்களையே கவனிச்சுகிட்டிருக்காப்ல... அது தெரியலியா..?'' என்றாள்.

அவன் மேஜை மேல் ஏதோ தாள்களை அடுக்கினாற் போல் நின்று கொண்டிருந்தவன் சட்டென்று அதை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான். முகத்தில் குழப்பம் தோன்றியது.

''மேடம்! இது எனக்கு வேண்டாத தலைவலி!'' என்றான்.

''சார் அவளையும் தப்பு சொல்லக் கூடாது. சும்மாயிருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம்.. ஆண்டிங்கற மாதிரி.. ஏதோ ஒரு நாள் உங்ககிட்ட பேசிகிட்டு காருக்காக வெயிட் பண்ணிகிட்டிருந்தானாம். அதைப் பார்த்து அவங்க அண்ணன் அது யாரு.. ரொம்ப ஸ்மார்ட்டா.. எதுக்கு சிரிச்சுப் பேசிட்டிருக்கறேன்னெல்லாம் கேட்கப் போய் அப்புறம்மாத்தான் உங்களைக் கவனிக்க ஆரம் பிச்சிருக்கா...'' என்றாள்.

இளஞ்செழியன் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

''மேடம்! சித்ரலேகா கிட்டே சொல்லுங்க! இதெல் லாம் இந்த வயசுல உண்டாகிற சலனங்கள். இதெல்லாம் நடக்கற விஷயமும் இல்லே! அவங்க... ஸ்டேட்ட ஸுக்குத் தகுந்த மாதிரி வாழ்க்கை அமைச்சுக்கறதுதான் நல்லதுன்னு...'' என்றான்.

மிகவும் கண்டிப்புடன் சொல்லி விட்டு அதோடு அதை மறந்தாற்போல் இருக்க முயற்சித்தான். ஆனால் நிலைமை வேறு விதமாக மாறியது.

சித்ரலேகாவைப் பற்றி இதுவரையிலும் பெரிதாக எதுவும் எண்ணியதில்லை. ஆனால் ஸ்வேதா வந்து கிளப்பி விட்டுப் போனதற்குப் பிறகுதான் அவன் அவளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

சித்ரலேகா அப்படியொன்றும் ஆர்ப்பாட்டமான பெண் ணாகத் தெரியவில்லை. அமைதியாக இருந்தாள். கவனித் தான். தன் வேலையுண்டு தானுண்டு என்றுதான் இருந் தாள். ஆனால், அவளையும் மீறி அவளது கண்கள் தன் மீது பாய்வது அவனுக்குப் புரிந்தது.



மெல்ல மெல்ல தன் மனமும் அந்தப் பெண்ணின் பக்கம் சாய்வதை உணர்ந்தான். திகிலடித்தாற்போல் உணர்ந்தான்.

அதற்குப் பிறகு!

இருவருக்குள்ளும் ஒரு சுவாரசியமான போராட்டம் நடந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

பாடம் நடத்தி விட்டு வெளியே வரும்போது எதிர் வகுப்பில் அமர்ந்திருக்கும் சித்ரலேகாவின் மீது அவன் பார்வை பாயும். அதே நேரம் சட்டென்று அவன் பார் வையைத் திருப்பிக் கொள்வான்.

அதுவரையிலும் அவள் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

உடம்பெல்லாம் மின்சாரம் பாய்ந்தாற்போல் உணர்ந் தான். அவன் உள்மனது சொன்னது.

'டேய்! போனாப் போகுதுன்னு.. தங்கறதுக்கு இடம் குடுத்து உட்கார வச்சா.. அதுக்கு.. நீ காட்டற நன்றியா. இது.. கடைசியில இன்ஸ்ட்டியூட்டோட பேரைக் கெடுத் துடுவியோ' என்ற எண்ணம் தோன்றவும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டான்.

மனதுக்கு ஆணை போட்டுக் கொண்டான்.

ஒரு வழியாக ஆறு மாதம் படிப்பை முடித்து விட்டு சித்ரலேகா சான்றிதழ் வாங்கிக் கொண்டு போக வந்த போது அவனைச் சந்தித்தாள்.

நாகரீகமாகத்தான் விடை பெற்றுக் கொண்டாள்.

''அப்பாடா! பிரச்சினை முடிந்தது'' என்று சொல்லிக் கொண்டான். ஆனால் ஒரு பக்கம் காலியானாற் போன்று உணர்ந்தான்.

பத்திருபது நாட்கள் வரை அந்த வெறுமை அவனைச் சூழ்ந்திருந்தது.

"நல்லவேளை! பேசிப் பழகவில்லை!" என்று கருதிக் கொண்டான்.

மெல்ல மெல்ல மறந்தும் விட்டான். எம்.எஸ்.சி. சாஃப்ட்வேர் படிப்பை முடித்தான். தேர்வுகள் எழுதி முடித்தான்.

ஊருக்குப் போய்த்தான் என்ன செய்யப் போகிறோம். இங்கேயே இன்னும் பகல் நேரத்தில் ரெண்டு பேட்ச் எடுக்கலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது முளைத்தது மறுபடியும் பிரச்சினை. அடுத்த நிலையில் ஒரு ஆறு மாதம் கோர்ஸுக்கு வந்து சேர்ந்தாள் சித்ரலேகா.

நல்லவேளையாக அவனிடம் படிக்க நேரமில்லை. ஆனால் இப்போது சென்டர் சொந்தக்காரர்.

"ஏம்ப்பா... நீதான் பகல்ல.. சும்மாயிருக்கியே! ஆபீஸும் பாத்துக்க.. நம்ம தினகரன் ரிலீப் ஆகறேங்கறாரு. அந்த வேலைக்கு ஒரு சம்பளம் தர்றேன். அது போக வழக்கம் போல நீ எடுக்கற கிளாஸுக்கு ஒரு ஸ்டூடன்ட்டுக்கு இவ்வளவுன்னு ஷேர் குடுத்தர்றேன்.." என்றார்.

அது நல்ல விதமான "ஆஃபர்" என்று தோன்றியது. அதனால் தொடர்ந்து தங்கினான்.

சித்ரலேகாவை வலுக்கட்டாயமாகத் தனது மனத்திலிருந்து எடுத்து விட்டதாகத்தான் நம்பிக் கொண்டான் இளஞ்செழியன். ஆனால் உண்மை அவன் மனதுக்கே தெரிந்திருக்கவில்லை. இப்போது மறுபடியும் சித்ரலேகா கண் முன்னே நடமாடுவதைப் பார்க்க நேர்ந்த போது



அவனுடைய பழைய உணர்வுகள் எல்லாம் மேலே எழுந்தன. அவனது இன்னொரு மனம் சொன்னது.

எத்தனை பெண்கள் இந்த சென்டரில் வந்து படிக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாரையும் பற்றி நமக்கு இப்படி சலனம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் இந்த சித்ரலேகாவைப் பார்த்தவுடனே மட்டும் ஏன் இப்படி சலனம் ஏற்படுகிறது என்று கேட்டது.

தன் மனதின் ரகசியத்தைத் தனக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொள்வது என்று முடிவு செய்து கொண்டான். ஆனால் நிலைமை வேறு விதமாக மாறிப் போனது.

* * *

சித்ரலேகாவின் கையில் புத்தகம் இருந்தது. ஆனால் மனம் எங்கோ இருந்தது.

'ஆறு மாதங்கள் கழித்து எதற்காக மறுபடியும் ஒரு கோர்ஸில் போய் அதே சென்டரில் சேர்ந்தோம். இது எல்லாம் எங்கே போய் முடியும்? ஏன் என்னோட மனமே எனக்குக் கட்டுப்பட மாட்டேங்குது' என்றெல்லாம் மனதோடு போராடிக் கொண்டிருந்தாள்.

தெளிவாகப் புரிந்தது இளஞ்செழியன் மேல் தனக்கு ஈடுபாடு என்று. ஆனால், அவரைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? அவருடைய குடும்பம் பற்றி நமக்கு என்ன தெரியும்? எங்கேயும் வெளியே போக வேண்டுமென்றால் காரில்தான் போக வேண்டும் என்று கட்டளையிடுகிற அண்ணன், தன்னைப் பொன்னைப் போல பாதுகாக்கிற தாய் தந்தை இவர்களுக்கெல்லாம் இந்த மாதிரி உறவு பிடிக்குமா இல்லையா? முதலில் இளஞ்செழியனின் நடத்தை பற்றி விசாரிப்போம்' என்று முடிவெடுத்துக் கொண்டாள்.

சித்ரலேகாவின் தோழிகள் சொன்னார்கள். ''ரொம்ப டீசன்ட் டைப்பு. அந்த மாதிரி பெண்கள்கிட்டே வழிவது இதெல்லாம் கிடையாது தெரியுமா?'' என்றார்கள். அதெல்லாம் மனதுக்குப் பிடித்துத்தான் இருக்கிறது. ஆனால் அன்றைக்கு சுவேதாவிடம் என்ன சொல்லி அனுப்பினான்.

''நமக்கு இதெல்லாம் ஒத்து வராது?'' என்று தானே அப்படியிருக்கும்போது நாம் எதற்காக மேலே போய் விழ வேண்டும். ஆனால் அப்படி மேலே போய் விழ வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

ஒரு நாள்!

ஏதோ ராங் கால் வர தான் தனது செல்போனில் பதிலளித்தாள். ஆனால் தொடர்ந்து அந்த வாரத்தில் நாளைக்கு இரண்டு முறையாவது ராங்கால் வர பயமாகிப் போய் விட்டது.

சகோதரனிடம் சொன்னால் பெரிய ரகளை செய்து பிரச்சினை செய்வான். உடனே அவள் மனம் இளஞ்செழியனிடம் சொல்வோம் என்று நினைத்தது. தயங்கிக் கொண்டே அவனது அறைக்குப் போனாள்.

ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்த அவன் அவள் வருகையைப் பயந்து நிமிர்ந்து பார்த்தான்.

''வாங்க.. லேகா!'' என்றான். அவள் தயங்கியபடி எதிரில் அமர்ந்தாள்.

''சார்! எனக்கு ஒரு பிராப்ளம்!'' என்றாள்.

''சொல்லுங்க!'' என்றான்.

''சார்! யாரோ தெரியல! முதல்ல லைன்ல வரப்ப ராங் கால்ன்னு பதில் சொன்னேன். அதுக்கப்புறம் அடிக்கடி அதே நம்பரில் இருந்து கால் வருது. எனக்கு என்ன



செய்வதுன்னே தெரியலை. எங்க அண்ணன்கிட்டே சொன்னா பெரிய பிராப்ளம் செய்வான். எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை'' என்றாள் மறுபடியும்.

இளஞ்செழியன் அவள் சொல்வதைத் தீவிர முகபாவத்துடன் கேட்டுக் கொள்வதே அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

''சரி.. சரி! ஒண்ணும் வொரி பண்ணிக்க வேண்டாம். அந்த நம்பரைக் குடுங்க. நான் பேசிக்கறேன்'' என்றான்.

உடனே தனது செல்போனில் இருந்து அழைத்தான். ஆனால் அந்தப்புறம் ஆஃப் செய்து விட்டார்கள். மீண்டும் சித்ரலேகாவின் எண்ணில் இருந்து போன் செய்தார்கள்.

''ஹல்லோ! மேடம்!'' என்றார்கள் உற்சாகமாக.

''ஹல்லோ.. யாருப்பா.. நீ? ராங் கால்ல ஒரு வாய்ஸ் கிடைச்சா.. உடனே டார்ச்சர் குடுப்பீங்களா? ஐ.ஜி. கிட்டத் தகவல் குடுக்கட்டா.. நீ யாருக்குத் தொல்லை குடுக்கறேன்னு தெரியுமா? மினிஸ்டர் ஃபாமிலிக்கு ரொம்ப வேண்டியவங்க...'' என்றான்.

''சார்! சார்! நான் வேணும்னு செய்யலை!''

''என்னய்யா.. வேணும்னு செய்யலை. பகல்ல கூப்பிடறே! நைட்ல கூப்பிடறே! இனிமே ரிபீட் பண்ணாதே!'' என்றான்.

''சாரி.. சார்!'' என்று ஆஃப் செய்தார்கள்.

சித்ரலேகாவின் முகம் மலர்ந்தது.

''லேகா! இதுக்கு எதுக்கு இப்படி முகம் வேர்த்துப் போயிடுச்சு. நீயே தைரியமா பதில் சொல்ல வேண்டியது தானே!''

''இல்லைங்க... சார்! எங்க வீட்ல எப்படிப் போனாலும்.. பிரச்சினைதான். எங்க அண்ணன் ரொம்ப கவனிக்கிற மாதிரி நினைச்சுகிட்டு எனக்கு விலங்கு போடாத குறையா வச்சிருக்கான்'' என்றாள் முகம் வாடி விட்டது.

''லேகா! உங்கண்ணன் கொஞ்சம் ஓவரா ப்ரொடக்ட் பண்றாரு. ஆனா, அதுக்கு பின்னால இருக்கற அன்பைப் புரிஞ்சுக்குங்க.. உட்கார்ந்து பேசுங்க..!'' என்றான்.

''நீங்க வேற.. அப்படியெல்லாம் உட்கார்ந்து பேசவே மாட்டானே!'' என்றாள்.

''ஓ.கே.! ஓ.கே.! வாட் கெனாட் பி கியூர்ட் ஹேஸ் டு பி எண்ட்யூர்ட்'' என்றான் இளஞ்செழியன்.

''சார்! தாங்க்ஸ்...!'' என்றாள்.

''சாரி! ஆனா பிரச்சினை இதோட முடியாதுன்னு நினைக்கறேன். வேற வேற நம்பர்ல இருந்து காண்டாக்ட் செய்வாங்க. அப்படி ஏதாவது வந்தா எனக்குத் தெரிவிச் சுருங்க. நான் டீல் பண்ணிக்கிறேன்'' என்றான்.

சித்ரலேகா நிம்மதியாகப் பேசுவதைப் பார்த்தவுடன் அவனும் ஏதோ சாதித்து விட்டவன் போல உணர்ந்தான். ஆனால், விஷயம் அதோடு முடியவில்லை.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து மறுபடியும் கால் வந்தது. உடனே சித்ரலேகா இளஞ்செழியனுக்குத் தகவல் தெரிவித்தாள்.

இந்த முறை இளஞ்செழியன் அந்தப்புறம் பேசிய நபரிடம் சமாதானமாகவும், கோபம் காட்டாமலும் விளக்கிச் சொன்னான்.

அதற்குப் பிறகு அந்த மாதிரி கால் வருவது நின்று விட்டது. ஆனால், சித்ரலேகாவுக்கும், இளஞ்செழியனுக் கும் பேசிக் கொள்வதற்கு அது வாய்ப்பாக ஆகி விட்டது.



ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது இளஞ்செழியன் அவளை போனில் அழைத்து,

''ஒண்ணும் பிரச்சினையில்லையே!'' என்று கேட்பது வும் அவளும் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு பேசுவதும் வழக்கமாகிப் போனது.

ஐந்து நிமிடப் பேச்சு மெது மெதுவாக வளர்ந்து பதினைந்து நிமிடம் அரை மணி நேரம் என்றானது.

ஏதோ தோழிகளிடம் பேசுகிறாள் என்றுதான் வீட்டிலும் நினைத்துக் கொண்டார்கள். ஒரு நாள்!

பிரசாத் அவளுடைய செல்போன் எடுத்துப் பார்த்தான். எப்போதும் அவன் கைக்குக் கிடைக்காத வண்ணம்தான் சித்ரலேகா செல்போனை வைத்திருப்பாள். அன்றைக்கு!

அகஸ்மாத்தாய் அவள் அறைக்கு வந்தான் பிரசாத். ''கம்பெனியிலிருந்து முக்கியமான பைல்களை அனுப்பு கிறேன். கையெழுத்துப் போட்டு அனுப்பு'' என்று சொல் வதற்கு வந்தபோது உள்ளே அவள் பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் முன்னறையில் காத்துக் கொண்டிருந் தவன் விளையாட்டாகத்தான் எடுத்துப் பார்த்தான்.

செல்போனுக்கு வந்திருந்த அழைப்புக்களையும், சித்ரலேகா செய்திருந்த அழைப்புக்களையும் பார்த்துக் கொண்டே வந்தவனின் நெற்றியில் முடிச்சுக்கள் விழுந்தன.

ஒரு குறிப்பிட்ட எண்ணுக்கு நிறைய அழைப்புக்கள் போயிருந்தன. அதே குறிப்பிட்ட எண்ணில் இருந்து நிறைய அழைப்புக்கள் வந்திருக்கவும் செய்தன. யோசனை யில் ஆழ்ந்தான்.

இப்போதெல்லாம் நேரடியாக சித்ரலேகாவை மிரட்டுவதை விட்டிருந்தான். ஒரு நாள் அப்பா வெகுவாகக் கண்டித்து விட்டார்.

''பாருப்பா! பிரசாத் அவ உனக்கு சிஸ்டர்தான். ஆனா, உன் அடிமையில்லை. வளர்ந்த குழந்தைகளுக்கு ஓரளவுக்காவது சுதந்திரம் குடுக்கணும். நீ பாட்டுக்கு சும்மா கண்டிஷன் பண்ணினா. அந்தக் குழந்தை ரொம்ப ஃபீல் பண்ணுது. வயசுப் பொண்ணு ஏதாவது ஏடாகூடமாப் பண்ணிகிட்டா எங்களுக்கு முதலுக்கே மோசமாயிடும்'' என்றவுடன் அவனுக்கும் 'சுருக்'கென்று பட்டு விட்டது.

''என்னப்பா.. இப்படிச் சொல்றீங்க..! எனக்கும் அவ மேல அக்கறையிருக்காதா?''

''இருக்குப்பா! அதை நீ காட்டற விதம் சரியில்லை'' என்றார்.

அதற்குப் பிறகு அவளை வெகுவாகக் கண்டிப்பதை விட்டு விட்டான்.

சித்ரலேகாவும் நிம்மதியாக இருந்தாள். அவளும் பகுத்தறிவு ரீதியாக யோசித்துத்தான் பார்த்தாள். தங்கள் குடும்பத்தின் பணத்தகுதிக்கும் இளஞ்செழியனின் குடும்பத்தின் பணத்தகுதிக்கும் மலைக்கும் மடுவுக்கும் போல் வித்தியாசம் இருக்கத்தான் செய்தது. ஆனால், இளஞ்செழியனின் நெறி சார்ந்த வாழ்க்கை முறை அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது.

''ஐயோ! வசதியில்லை. எனக்கு செய்யறதுக்கு யாருமில்லை'' என்று புலம்பாமல் நகரத்திற்கு வந்து வேலை செய்து கொண்டே படித்தது. எப்போதும் உற்சாகமாக இருப்பது. இதெல்லாம் அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது.



தங்கள் உறவினர் வீட்டு விசேஷங்களில் பார்த்திருக்கிறாள். கல்யாண வீடானாலும் சரி, இழவு வீடானாலும் சரி.. இரவு குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு இளைஞர்கள் காணாமல் போய் விடுவார்கள். பிறகு பார்த்தால் தள்ளாடியபடி நடமாடிக் கொண்டிருப்பார்கள். அவளுக்குக் கோபமாக வரும். அப்படி என்னதான் இருக்கிறது மனுஷன் சுயசிந்தனையையும், சுய உணர்வையும் மழுங்கடிக்கிற இந்த மாதிரி விஷயங்களுக்கு ஏன் இளைஞர்கள் தங்களைக் காவு கொடுக்கிறார்கள் என்று அப்பாவிடம் கூட சொல்லி வருத்தப்படுவாள்.

இளஞ்செழியனுக்கு அந்த மாதிரி எந்தப் பழக்கங்களும் இல்லை என்பது அவன் மேல் அவளுக்குப் பெருத்த மரியாதையை ஏற்படுத்தி இருந்தது.

பணமும் வசதியும், தகுதியும் இருந்தும் அந்தக் கட்டுப்பாடுகளிலேயே தன் சுதந்திரம் பறிக்கப்படுவது போல் கடுப்பில் இருந்தபோதும் தனக்கென்று ஒழுக்க நியதிகளை வைத்துக் கொண்டு அவன் படிப்படியாக முன்னேறுவது ஆச்சரியமாக இருந்தது. அதையெல்லாம் அவனிடம் சொல்லி சொல்லித்தான் அவன் மனதை ஜெயிக்கிற முடிவில்கூட இருந்தாள்.

'எதிர்த் துருவங்கள் ஒன்றையொன்றை இழுக்கிற ஈர்ப்புடையவை' என்பது போல் அவன்மேல் அவளுக்கு நாட்டம் விழுந்தது. ஆனாலும் இதுவரை நட்பு ரீதியாகவே பழகி வந்தார்கள். இதையெல்லாம் அறியாத பிரசாத் வழக்கம்போல் தனது உதவியாளர்களை விட்டு விசாரித்தான். பதிலளித்தது ஆண்குரல் என்றவுடன் மேலும் விசாரிக்கச் சொன்னான்.

''நண்பர்களாக இருக்கிறார்கள் என்பது தெரிந்தவுடனே நேரடியாக சித்ராவிடம் பேசக்கூடாது. சட்டென்று ஒரு

மாப்பிள்ளையைப் பார்த்து முடித்துவிட வேண்டும் என்று மும்முரமாக இறங்கினான்.

''சித்ராவிடம் சொல்லாதீங்க.. திடீர்னு மாப்பிள் ளையைக் கொண்டாந்து இறக்கிர்றேன்'' என்றுதான் பெற்றோரிடம் சொல்லியிருந்தான். ஆனால், பெற்றோர் அப்படி நினைக்காமல் அவளுடைய கருத்தையும் அறிய விரும்பினார்கள்.

''சித்ரா! உங்கண்ணன் உனக்காக மாப்பிள்ளை பாக்கப் போயிருக்கான். என்னவோ சர்ப்ரைஸா வச்சிருக்கானாம். ஆனா, எதுக்கும் உனக்குத் தெரிஞ்சிருக்கணும் இல்லே!'' என்றார் அம்மா.

சித்ரலேகா அதிர்ந்து போனாள். அப்போதுதான் அந்த முடிவைச் செய்தாள்.

## 5

தட தடவென்று கதவு தட்டும் சத்தம் கேட்டது.

இளஞ்செழியன் தூக்கக் கலக்கத்துடன் எழுந்து கதவைத் திறந்தான்.

சித்ரலேகா நின்று கொண்டிருந்தாள்.

''லேகா!'' என்றான் ஆச்சரியமாக.

அவள் அவனது ஆச்சரியத்தை கவனிக்கிற நிலைமை யில் இருக்கவில்லை. அவள் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

இளஞ்செழியன் உண்மையாகவே திணறிப் போனான். ஏனென்றால் இதுநாள் வரை நேரம் போனது தெரியாமல் இருவரும் பேசிக் கொண்டார்கள். இளஞ்செழியனுக்கு



தான் சித்ரலேகாவை நேசிக்கிறோம் என்பது தெரிந் திருந்தது. சித்ரலேகாவுக்கும் தான் இளஞ்செழியனை நேசிக்கிறோம் என்பது புரிந்திருந்தது. ஆனால் இருவரும் அதை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. அதற்கான நேரம் இன்னும் வரவில்லை என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான் இளஞ்செழியன். ஆனால் இப்போது திடீரென்று அதிகாலை ஆறு மணிக்கு வந்து தனது அறைக் கதவைத் தட்டியதோடு இப்படிக் கதறி அழு கிறாளே என்ற எண்ணம் தோன்றியவுடன் கொஞ்சம் திணறிப் போனான்.

''லேகா! ப்ளீஸ் அழாதீங்க..'' என்று தேற்றினான்.

''அழாம... சொல்லுங்க! வாட்ஸ் தி மேட்டர்'' என்றான் ஆறுதலாக.

கொஞ்ச நேரம் அழவிட்டான்.

அழுது முடித்த பின்பும் சற்று நேரம் தேம்பினாள். இளஞ்செழியன் ஆசுவாசப்படுத்தினான்.

''ப்ளீஸ்! முகம் கழுவுங்க'' என்றான். அங்கே இருந்த வாஷ்பேசினில் முகம் கழுவினாள்.

அவனும் முகம் கழுவி விட்டு வாட்ச்மேனை அழைத்து காபி கொண்டு வரச் சொன்னான். எனக்குக் காபியெல்லாம் ஒண்ணும் வேண்டாம்'' என்று முறுக்கிக் கொண்டாள்.

அவன் முகத்தில் புன்னகை படர்ந்தது ''உட்காருங்க'' என்றான்.

சித்ரலேகா அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். நிஜமாவே உங்களுக்குப் புரியவில்லையா என்பது போல் பார்த்தாள்.

அவன் முகத்தில் தர்ம சங்கடமான ஒரு முக பாவம் தோன்றியது.

''என்ன பிராப்ளம்?'' என்றான்.

''எனக்கு.. எனக்கு.. அங்க.. அங்க இருக்கப் பிடிக்கலை!''

''எங்கே?''

''எங்க வீட்டுல...?''

''ஹலோ! என்ன இப்படிச் சொல்றீங்க?''

''என்ன.. பேசறீங்க? எப்பப் பாரு உங்களையும் என்னையும் இணைச்சுப் பேசிகிட்டே இருந்தா..''

''சரி..! அதுல உண்மை இல்லைன்னு சொல்ல வேண்டியதுதானே!''

சித்ரலேகா மௌனமாக சற்று நேரம் தலை குனிந்து அமர்ந்திருந்தாள். பிறகு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னைப் பொறுத்தவரை அதுல உண்மை இருக்கும்.. போது..'' என்று நிறுத்தினாள்.

இளஞ்செழியன் முகம் மலர்ந்தது; புன்னகை விரிவடைந்தது.

''ஓஹ்!'' என்றான். லேசான சிரிப்புடன் சொன்னான்.

''இந்தப் பக்கமும் அதே நிலைமைதான் ஆனா எதிர் பார்ட்டி நிலவரம் என்னன்னு தெரியணுமில்லே!'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

''எனக்குத் தெரியும். அதனாலதான் தைரியமா வந்தேன்'' என்றாள்.

''லேகா! நாம ரெண்டு பேரும் படிச்சவங்க.. முரட்டுத் தனமா எதுவும் செய்ய முடியாது. புரியுதா?'' என்றான்.

''முரட்டுத் தனமா செய்ய வேண்டாம். முறையா செய்யலாமில்லே!'' என்றாள்.



''முறையா? இப்ப எந்தத் தகுதியில வந்து நான் பொண்ணு கேட்கறது. உங்க ஸ்டேட்டஸ் என்ன? வளர்ப்பு முறை என்ன? நீங்க என் கூட வந்து இருக்கற அளவுக்கு குறைந்த பட்ச வசதிகளாவது நான் குடுக்கணுமில்லே!''

''என்ன பெரிய வசதி? இருக்கறதுக்கு ரெண்டு ரூம் இருந்தாப் பத்தாதா? உடுத்தத் துணி வேணும். என்ன வசதி இருக்கோ.. அதை வச்சுகிட்டு வாழ என்னால முடியும்!''

''லேகா! இதெல்லாம் சொல்றதுக்கு நல்லா இருக்கும். ஆனா.. நிதர்சன வாழ்க்கைக்கு ஒத்து வராது.''

''இத பாருங்க! இது ஒண்ணும் சினிமாக் காதல் இல்லே! உங்களோட பொறுப்புணர்ச்சி. டீசன்டான நடத்தை இதெல்லாம் உங்களைக் கவனிக்க வச்சுது.''

''லேகா! அதை நான் தப்பு சொல்லலே! எனக்கும் உன் மேல ஆர்வம் இருந்ததுதான். ஆனா, என் நிலைமை கருதி நான் மனசுல அடக்கி வச்சுகிட்டேன்'' என்றான்.

அதற்குள் காபி வந்தது.

வாட்ச்மேன் போகும் வரை மௌனமாக இருந்தார்கள். பிறகு கேட்டான்.

''அது சரி! இப்ப எதுக்குக் காலையில் இப்படி வந்து ஒரு அழுகை! ம்!'' என்று கேட்டான்.

''நேத்து எங்கண்ணன் என் கல்யாணப் பேச்சை ஆரம்பிச்சுட்டான். ரொம்ப வேகமா இருக்கான்'' என்றாள்.

''ஓஹ்! லேகா! எனக்குக் கொஞ்சம் டைம் குடு. நான் ஏதாவது ஏற்பாடு பண்றேன்!'' என்றான்.

''செழியன்! நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்குங்க. எங்கண்ணன் ஒரு பிடிவாதக்காரன். தான் நினைச்சதை

சாதிச்சே ஆகணும்பான். இப்ப வெளியூர் போயிருக்கான். அங்க மாமா ஒருத்தர் வெளியூர்ல இருக்காங்க. அவங்க நிறைய கல்யாணங்க.. பண்ணி வச்சிருக்காங்க.. குறைந்தது ஒரு நாலைஞ்சு ஜாதகம் போட்டோவாவது வாங்கிகிட்டு வருவான்.''

''நீ இப்ப வேண்டாம்னு சொல்லு!'' என்றான்.

''அதெல்லாம் முடியாது!''

''அம்மா அப்பாகிட்டே பேசிப் பாரு.''

''அவங்க எங்கே புரிஞ்சுக்கறாங்க? பத்தொன்பது வயசாச்சு. கல்யாண வயசுதானேன்னு அவங்களும் அவனுக்கு சாதகமாத்தான் பேசறாங்க'' என்றாள்.

''ஆமா.. லேகா! அவங்க பாயிண்ட்ல அது நியாயம் தானே?''

சித்ரலேகா முறைத்தாள்.

''என்ன இப்படிப் பேசறீங்க..?'' என்றாள் கோபமாக.

''கோபிச்சுக்காதம்மா! அவங்க கடமையை அவங்க செய்யறாங்க..ன்னேன். உங்க அண்ணன் கூட உன் மேல் அக்கறையினாலதான் இப்படி நடந்துக்கறாருன்னு நான் நினைக்கறேன். நான் வேண்ணா அவருகிட்டே பேசட்டுமா?''

''வேற வினையே வேண்டாம். ஆளை வைச்சி அடிப் பான்'' என்றாள்.

''என் தேவதைக்காக அடி வாங்கிட்டாப் போச்சு'' என்றான்.

அவன் கேலியாகவே பேசுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட சித்ரலேகா.



''ப்ளீஸ்! நிலைமையோட சீரியஸ்னெஸ் புரிஞ்சு பேசுங்க..'' என்றாள். அவன் முகபாவத்தை மாற்றிக் கொண்டான்.

''அப்ப.. என்ன? நாளைக்கே ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்னு சொல்றியா?'' என்றான்.

சித்ரலேகா அழுத்தமாக அவன் முகத்தைப் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''ஆமா!'' என்றாள்.

இளஞ்செழியன் கிட்டத்தட்ட மயக்கம் போடாத குறைதான்.

''லேகா!'' என்றான் கவலை நிறைந்த குரலில்.

''ஆமா! செழியன் இந்த வாரத்துல நாம ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிறோம். ஏன்னா எங்கண்ணன் பிஸினஸ் விஷயமா நாலைஞ்சு நாள் வெளியூர் போகப் போறான். அவன் திரும்ப வரும்போது நிலைமை அவன் கைக்கு மீறினதா இருக்கணும்'' என்றாள்.

''லேகா! விளையாடறியா?'' என்றான்.

''விளையாடலே! உண்மையைச் சொல்றேன். அப்படி எதுவும் ஏற்பாடு செய்யலேன்னா.. நான் தற்கொலை பண்ணிக்குவேன்'' என்றாள்.

''இங்க.. பார்! விளையாட்டுக்குக் கூட நான் தற் கொலை பண்ணிக்குவேன்கிற வார்த்தையை நீ சொல்லக் கூடாது. அப்படீன்னு எனக்கு சத்தியம் பண்ணினாத்தான் நான் தொடர்ந்து உன்கிட்டப் பேசுவேன்'' என்றான் சற்றே வேகமாக.

''செழியன்! நான் கேக்கறதுக்கு நீங்க ஒத்துக்குங்க... நான் சத்தியம் செய்யறேன்'' என்றாள்.

''செழியன்! நீங்க படிச்சிருக்கற படிப்புக்கும், நான் படிச்சிருக்கற படிப்புக்கும் எங்கயாவது வேலை கிடைக் காமலா போயிடும்.''

அவள் முகத்தை அழுத்தத் துடைத்துக் கொண்டான். ''லேகா! சாப்பாட்டுக்கு வழியில்லாமப் போயிடப் போறதில்லே. எங்களுக்கும் நாலைஞ்சு ஏக்கர் நிலம் இருக்கு. புஞ்சை நிலம். ஆனா, வித்துட்டு நாமளே எங்க ஊருக்குப் பக்கத்திலே இருக்கற டவுன்ல ஒரு கம்ப் யூட்டர் சென்டர் போட்டர்லாம்'' என்றான்.

''அப்புறம்.. என்ன?''

''உங்க அம்மா... அப்பா...''

''செழியன்! கல்யாணம்னு ஒண்ணு ஆயிட்டா.. அவங்களைக் கன்வின்ஸ் பண்ணிரலாம்.''

''ம்... ரொம்பத் துணிச்சலா இருக்கே!'' என்று சிரித்தான்.

''ஆமா பின்னே! வாழ்க்கைப் பிரச்னை!'' என்றாள்.

இளஞ்செழியன் சொன்னான். ''லேகா! ஒரு ரெண்டு நாள் டைம் குடு. சென்டர் ஓனர்கிட்டே சொல்லி ஏதாவது மாத்து ஏற்பாடு செய்யணும்'' என்றான்.

''சரி..'' என்றாள்.

''அப்பா... எதுக்கு.. அந்த அழுகை!''

''உங்களுக்கென்ன தெரியும். ரெண்டு நாளா எனக்குத் தூக்கமே இருக்கலை. எந்தத் தடியனோட போட்டோவை யாவது கொண்டு வந்து குடுத்து நீ இவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொன்னா.. நான் என்ன செய்வேன்?''

''ஏதோ ஒரு தடியனைக் காட்டிலும் இந்த தடியன் பரவாயில்லை.. இல்லே!'' அவள் பளிச்சென்று சிரித்தாள்.



''நீங்க ஒண்ணும் தடியன் இல்லே! ரொம்ப ஸ்மார்ட்'' என்றாள்.

''ரியலி!'' என்றான். அவள் கண்களைப் பார்த்தான். ''ஹேய்! நீ செழியன்னு கூப்பிடறது.. ரொம்ப அழகா.. இருக்கு..!'' என்றான்.

அவள் முகம் சிவந்தது!

''நீங்க கூட லேகா..ன்னு கூப்பிடறது ரொம்ப நல்லா இருக்கு. எங்க வீட்ல.. எல்லாரும் என்னை சித்ரான்னு கூப்பிடுவாங்க.. நீங்க ஒருத்தர்தான் என்னை லேகான்னு கூப்பிடறீங்க.. அது பிடிச்சிருக்கு..'' என்றாள்.

லேசாக மார்பை நீவிக் கொண்டான்.

''காலையில வந்து அதிரடித் தாக்குதல் நடத்தி.. இன்ப அதிர்ச்சி.. குடுத்துட்டீங்கப்பா..'' என்றான். சற்றே நெருங்கி நின்றான். அவளும் மெல்ல அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவன் குபீரென்று சிரித்தான். கிறக்கமான குரலில் சொன்னான்.

''லேகா! இப்ப ஓனர் வந்தாருன்னு வைய்! ஏம்ப்பா.. இருக்க இடம் குடுத்து.. படிக்க வழியும் செஞ்சு குடுத்தா.. நீ வேற பாடம் படிக்கிறியா..ன்னு காய்ச்சிருவாரு..'' என்றான்.

''அது உங்க தலைவலி!'' என்றாள்.

''சரிங்க.. தலைவி..!'' என்றான்.

''சரி! நான் கிளம்பறேன்'' என்றாள்.

''லேகா! நீ எவ்வளவு பெரிய பாரத்தை என் நெஞ்சில ஏத்தி வச்சிட்டுப் போறேன்னு உனக்குத் தெரியாது'' என்றான்.

''ஓஹோ! நாங்க உங்களுக்கு பாரமா?'' என்றாள்.

''நீ பாரமில்லே! எப்பவுமே நீ எனக்கு சுகமான சுமை தான். ஆனா நீ போட்டிருக்கிற ஆர்டரையெல்லாம் எக்ஸ் க்யட் பண்ணி முடிக்கறதுக்குள்ளே பெரிய போராட்டமே நடத்தணும்.''

''ஆமா!'' என்றாள்.

''நீ கிளம்பு! இனி ஸ்டூடன்ட்ஸ் வர ஆரம்பிச்சுருவாங்க. நானும் ஸெவன் தர்ட்டிக்கு ஆபீஸ் ஓப்பன் பண்ணணும்'' என்றான்.

வழியனுப்பி வைத்துவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

அன்று மாலை

வெளிப்படையாக தன்னுடைய பிரச்சினையைச் சொல்ல ஆரம்பித்தவுடனேயே சென்டர் ஓனர் அதிர்ந்து போனார்.

''பெரிய இடம்ப்பா!'' என்றார்.

''பிரச்சினையை சந்திச்சுத்தான் ஆகணும்'' என்றான்.

''நான் பேசிப் பாக்கறேன்'' என்றார். சித்ரலேகாவிடம் பேசினார். அவள் உறுதியாக இருப்பதைப் புரிந்து கொண்டார். பிறகு பெருமூச்சுடன் சொன்னார்.

''தம்பி! இங்க வேலையில இருந்துகிட்டு எதுவும் செஞ்சின்னா.. எனக்குப் பெரிய பிரச்சினையாயிடும். நீ ரிசைன் பண்ணின மாதிரிப் பண்ணிடு. பேசாம உங்க ஊர்ப்பக்கம் போய் எதுவும் செஞ்சுக்கோ'' என்றான்.

அப்படித்தான் செய்தார்கள்!

தங்கள் கிராமத்துக்கு அருகில் இருந்த டவுனில் வைத்து ரெஜிஸ்டர் செய்தார்கள். தங்களது வீட்டில்



இல்லாமல் ஒரு குக்கிராமத்தில் இருந்த உறவினர் வீட்டில் தங்கினார்கள். பத்து நாட்கள்!

உலகம் மறந்து கழித்தார்கள்!

திரும்ப ஊருக்கு வந்தார்கள்!

'அம்மா, அப்பாவுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு வந்தோமே. எப்படி எடுத்துக் கொண்டார்களோ கவலை யாய் இருப்பார்களோ' என்று கவலைப்பட்டாள்.

''பொறு.. லேகா! கோபம் ஆறட்டும்!'' என்று தேற்றிக் கொண்டிருந்தான்.

ஒரு மாதம் போயிருக்கும்!

திடீரென்று ஒரு நாள்!

அவர்கள் வீட்டு வாயிலின் முன்னால் பிரசாத் வந்து நின்றான்.

''வாங்க!'' என்று வரவேற்றான் இளஞ்செழியன்.

''டேய்! தள்றா.. நீ! எங்க வீட்டுப் புள்ளையைக் கொண்டு வந்து வச்சுகிட்டு.. எனக்கு வரவேற்புக் குடுக்கறியா?'' என்றான்.

இளஞ்செழியன் முகம் கடுமையாக மாறியது. ''மிஸ்டர். பாத்துப் பேசுங்க. இப்ப லேகா என் மனைவி!'' என்று பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சித்ரலேகா உள்ளே யிருந்து வந்தாள்.

''ப்ளீஸ்! அண்ணா சீன் கிரியேட் செய்யாதே'' என்றாள்.

''நீ வாயை மூடுடி!'' என்றான்.

''அண்ணா! அவரு சொன்னதுதான் நிஜம். நாங்க ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிகிட்டோம்'' என்றாள்.

பிரசாத் அடிபட்டாற்போல் பார்த்தான்.

"சரி! நான் உன்கிட்டப் பேசணும்" என்றான்.

"சரி பேசுங்க!" என்று தனிமை கொடுத்தார்கள்.

பிரசாத் என்ன சொன்னானோ தெரியவில்லை. வெளிறிய முகத்தோடு வெளியே வந்தாள் சித்ரலேகா. செழியனைத் தனியே அழைத்தாள்.

"அத்தான்! அம்மாவுக்கு ரொம்ப முடியாமப் போச்சாம். நான் இப்ப அண்ணா கூட போறேன். போகலேன்னா சரி வராது. நீங்க ஒண்ணும் யோசிக்க வேண்டாம். நாம ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணியிருக்கோம். யாரும் என்னை எதுவும் செய்ய முடியாது. நான் பாத்துட்டு வந்துர்றேன்" என்றாள்.

செழியன் சம்மதித்தான்.

அவள் அண்ணனோடு கிளம்பிப் போனதை அழுத்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

போனவள் போனவள்தான்!

தொடர்ந்து தொடர்பு கொள்ள முடியவில்லை. வருவாள், வருவாள் என்று இலவு காத்த கிளி போல் காத்துக் கிடந்ததுதான் மிச்சம்.

அவள் வரவேயில்லை!

## 6

கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான்!

மணி நான்கு!

இரவு முழுவதும் உறங்கவேயில்லை. பழைய நினைவுகள் படையெடுத்து வந்தன. அன்றைக்கும் பார்த்தவன்தான் அதற்குப் பிறகு நேற்றுத்தான் பார்த்தான்.



பத்தொன்பது வயதில் இருந்த கள்ளமில்லாத தோற்றம் மாறியிருந்தது. இப்போது அறிவின் ஒளி கண்களில் தெரிந்தது. அதற்குப் பிறகு படித்திருக்கிறாள். வேறு திருமணம் ஆகியிருக்குமோ? ஆகியிருக்கும்.

பிரசாத் அதிலெல்லாம் கெட்டிக்காரன். தங்கை வெளியூருக்கு ட்ரெயினிங் போயிருக்கிறாள் என்று பொய் சொல்லியிருப்பான். தங்கள் தகுதிக்கேற்ப ஒரு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் செய்திருப்பார்கள். நன்றாகத் தளதள வென்றுதான் இருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டான்.

பெருமூச்சு விட்டான்!

ஒரு மாதம் வாழ்ந்த வாழ்க்கை மனதுக்குள் ஓடியது! எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தோம் எடுத்ததற்கெல்லாம் சிரித்துக் கொண்டும் உரசிக் கொண்டும், குழைந்து கொண்டும் வாழ்க்கையை அனுபவித்த காலம். இனி எப்போதும் அந்த நாட்கள் திரும்பி வராது. அன்றைக்குத் தன் கைப்பிடியில் இருந்தவள், தன் ஒவ்வொரு வார்த்தைக்கும் புளகாங்கிதம் அடைந்தவள், தன் தோள்களில் சாய்ந்திருக்கும்போது எல்லையில்லாத நிம்மதியை உணர்ந்தவள் நிறைவடைந்ததாய் சொல்லிக் கொண்டவள் இன்று மூன்றாவது மனுஷியைப் போல எதிரிலே நிற்கிறாள்.

நெஞ்சுக்குள்ளே வலி தோன்றியது!

எழுந்தான்.

பல் துலக்கும்போதும், மற்ற வேலைகளைச் செய்யும் போதும் மீண்டும் பழைய நினைவுகள் மலர்ந்தன.

தனது மனைவி திரும்பி வருவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்தான்!

இரண்டு மூன்று நாட்கள் வரை தகவல் வரவேயில்லை. போன் செய்து பார்த்தான்.

எடுக்கவேயில்லை! அங்கேயே சென்று பார்க்கலாமா என்று நினைத்தான். பெற்றோர்கள் கெஞ்சினார்கள்.

அப்பா சொன்னார்!

"தம்பி! நான் உன்கிட்டே இதுவரைக்கும் சொல்லலை! நம்ம வீட்டுக்கு அடுத்த தெருவில் ஒரு பத்து காருக்கு மேல நின்னுகிட்டிருந்ததாம். உள்ளே இருந்த ஆட்கள் எல்லாரையும் பாத்தா... ஒண்ணும் நல்லவங்க மாதிரித் தெரியலே. அதைப் பாத்திட்டு நம்ம ஊர்க்காரவங்களும் கொஞ்சம் தயாராத்தான் இருந்துருக்காங்க... வேண்டாம்ப்பா! நீ எங்களுக்கு முழுசா மிஞ்சினாப் போதும்ப்பா..."

"அப்பா! அவளை எப்படி நான் விட்டுக் கொடுக்கறது?"

"தம்பி! நான் உலகம் தெரிஞ்சவன். எனக்கு நாலும் தெரியும் வேண்டாம். இது உயிர் விளையாட்டு மாதிரித் தெரியுது.

"இல்லப்பா! நான் போய்ப் பார்க்கறேன்" என்று போனான்.

வீடு பூட்டியிருந்தது!

மொத்தக் குடும்பமும் எங்கேயோ போயிருந்தார்கள் என்றார்கள். எங்கே என்று யாருக்கும் தெரியவில்லை. மெல்ல விசாரிக்கும்போதுதான் அவர்கள் எவ்வளவு பெரிய பணக்காரர்கள் என்பதும் பிரசாத் நினைத்தால் தனது ஊரையே அழித்து விட முடியும் என்பதும் புரிந்தது.

மலையுடன் மோதி விட்டோமோ என்ற உணர்வுடன் திரும்பி ஊர் வந்து சேர்ந்தான்.

அப்பாவிடம் பகிர்ந்து கொண்டான்.



அப்பா சொன்னார்!

"தம்பி! நீ இனிமே செய்யறதுக்கு ஒண்ணுமே இல்லே! அந்தப் பொண்ணு என்ன சொல்லிட்டுப் போச்சு... நானே வர்றேன்னு. வரும். அந்தப் பொண்ணா வந்தா இனிமே அதோட வாழலாம்; இல்லையா ஒரு கெட்ட கனவா மறந்துடு. அடுத்த வேலையைப் பாரு" என்றார்.

அப்பாவின் அனுபவம் அவ்வளவு இலகுவாக விஷயத்துக்கு முடிவு சொன்னது. ஆனால், அந்தக் கால கட்டத்தைக் கடப்பதற்குள்ளாக அவன் பட்ட வேதனையை மறக்கவே முடியாமல் போனது மட்டுமல்ல. இன்றுவரை வேறொரு பெண்ணை அவளது இடத்தில் வைத்துப் பார்க்கவும் அவனது மனம் இடம் தரவில்லை.

ஒரு மாதம்!

இரண்டு மாதம்! ஏன் மூன்று மாதம் கூட காத்திருந்து பார்த்தார்கள். அவள் வரவேயில்லை.

ஒரு நாள் திடீரென்று முடிவெடுத்தான்.

"அப்பா.. நான் இனிமே இங்க இருக்க முடியாது. நான் வேற ஏதாவது ஊருக்குப் போறேன்" என்றான்.

மகனின் வேதனை புரிந்து அப்பா ஒத்துக் கொண்டார்.

ஈரோட்டில் தெரிந்த நண்பர் ஒருவர் பஸ் கம்பெனி வைத்திருந்தார். அங்கே ஆபீஸ் நிர்வாகக் கணக்கு வழக்குகள் பார்ப்பதற்கு ஒரு நல்ல ஆள் தேவை என்று சொல்லியிருந்தார்.

"போறியாப்பா!" என்றார்.

"போறேன்!" என்று கிளம்பினான்.

அவன் வாழ்க்கையில் நடந்த விஷயங்களையெல்லாம் தனது நண்பருக்குக் கோடி காட்டியிருந்தார் தந்தை.

அதனாலோ என்னவோ இளஞ்செழியனை உள்ளார்ந்த அனுதாபத்தோடும், அன்போடும் நடத்தினார்.

மூன்றாண்டுகள் கடுமையாக உழைத்தான். அவன் போகும்போது வெறும் இரண்டு பஸ் மட்டுமே இருந்த நிலை மாறி பத்து பஸ்களுக்கு மேல் ஆனது. அலுவலகத்தில் நிறையப் பேர் வேண்டாமென்று சொல்லி விட்டு அவனே வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான்.

''வேதனைக்கு வேலையே மருந்து'' என்று வைத்துக் கொண்டான். தொழில் தொடர்பான விஷயங்கள் எல்லாம் அத்துபடியாகி இருந்தது.

நான்காவது ஆண்டில் ஒரு திருப்பம் நேர்ந்தது!

பஸ் கம்பெனி முதலாளியின் மகன்கள் இருவரும் அமெரிக்காவில் செட்டில் ஆவது என்று முடிவெடுத்தார்கள். அதனால் பஸ் கம்பெனியை விற்பது என்று முடிவெடுத்தார்கள்.

அப்போதுதான் முதலாளி கருணாகரன் அந்த யோசனையை மகன்களிடம் சொன்னார்.

''டேய்! தம்பிகளா! இளஞ்செழியன் மட்டும் இல்லேன்னா இந்த அளவுக்கு வந்திருக்காது. ஒரு வேதனையான நேரத்துல இங்க வந்தவன் தன்னோட வேதனையை மறக்கறதுக்காகவோ என்னவோ அப்படி உழைச்சான். ஒரு வேலைக்காரன் மாதிரியே டைம் பார்த்து உழைக்கலை. அதனால நியாயப்படி அவனுக்கு ஒரு பார்ட்னர்ஷிப் குடுக்கணும். ஒரு நாப்பது பர்செண்ட் அவனுக்குப் பார்ட்னர்ஷிப் தொகையா ஒதுக்கிட்டு மீதியை அவனையே கொஞ்சம் கொஞ்சமாக் குடுக்கச் சொல்லலாம்'' என்றார்.



மகன்கள் இருவருக்கும் இளஞ்செழியனைத் தெரியும் ஒரு சகோதரனாகத்தான் கருதினார்கள். அமெரிக்காவில் நல்ல வேலை கிடைத்திருக்கிறது. அதனால் இதிலிருந்து வருகிற பணத்தை வைத்துக் கொண்டு பிழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் அப்பாவின் விருப்பப்படியே செய்யலாம் என்றார்கள்.

கருணாகரன் மேலும் சொன்னார். ''தம்பி! பிரியமாய் ஒரு கட்டிடம் கட்டறவனுக்குத் தெரியும். ஒவ்வொரு செங்கல்லும் எங்கே இருக்குது. எப்படி உருவாக்கறதுன்னு அது மாதிரி ஆபீஸ்ல இருக்கிற மாடர்ன் கட்டிடம் எல்லாமே அவன் பாத்துப் பாத்து செஞ்சது. அது மட்டுமில்ல இதையெல்லாம் அவன் ரொம்ப நேசிக்கிறான். அவன் கிட்டே இருந்து இந்தக் கம்பெனியைப் பறிக்கறதுங்கறது கர்ணன்கிட்டேயிருந்து கவச குண்டலங்களைப் பிரித்தெடுக்கிற மாதிரி.

''சரிப்பா! சரிப்பா! எதுக்கு இத்தனை விளக்கம் அவரு கிட்டே இருந்தாலும் கம்பெனி நம்ம கிட்டே இருக்கற மாதிரித்தான்'' என்றார்கள்.

அவனுக்கு உதவியாக வங்கிக் கடன் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். அவர்களே பிணைக்கையெழுத்தும் போட்டார்கள்.

எம்.டி. என்ற பெயரில் எப்போது இளஞ்செழியன் அமர்ந்தானோ அப்போது எடுத்த வேகம்தான்.

எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பான். ஆறே மாதத்தில் மேலும் இரண்டு பஸ்கள் வாங்கினார்கள். திடீரென்று வழியில் எங்காவது பஸ்ஸில் ஏறி அமர்வான்.

பயணிகளிடம் பேச்சுக் கொடுத்து வசதிகள். வசதியின்மைகள் பற்றி அறிந்து கொள்வான். மாற்றங்கள் செய்வான்.

மற்ற வண்டிகளில் போலல்லாமல் கண்டக்டருக்கும் டிரைவருக்கும் வேண்டிய தரமில்லாத சின்னச் சின்ன ஹோட்டல்களில் டிபன் சாப்பிட வேண்டிய கட்டாயம் என்றில்லாமல் கிராமங்களில் நல்ல மெஸ்கள் நகரங்களில் நல்ல உணவகங்களோடு 'டை அப்' வைத்துக் கொண்டு வண்டியில் ஏறி அமர்ந்தவுடன் ஆர்டர் செய்தால் உணவுக்கு நிற்கும் இடத்தில் நல்ல தரமான உணவு வகைகள் கிடைக்கச் செய்தான்.

குறிப்பிட்ட இடங்களில் நல்ல அறை வசதிகள் ஏற்படுத்தி வைத்தான். மற்ற டிராவல்ஸ் கவனிக்காத சில சின்னச் சின்ன விஷயங்கள் ஆனால், மக்களின் அத்தியாவசியமான தேவைகள் பற்றியெல்லாம் அக்கறை எடுத்தான். எதிர்பார்த்ததற்கு மேலாகவே வளர்ந்தது.

''சி.எல்.கே. டிராவல்ஸ்க்கு வெறும் கையை வீசிட்டுப் போலாம். எல்லா வசதிகளும் ஏற்பாடு பண்ணித் தருவாங்க,'' என்ற பரவலான பேச்சு எழுந்தது.

இரண்டே வருடங்களில் பஸ்கள் ஐம்பதாகி விட்டன. அதற்குள்ளாக இன்னொரு ஏற்பாடும் செய்தான். பஸ்கள் மட்டுமேயல்லாமல் கார்களும் ஏற்பாடு செய்தான். முதலில் கோயமுத்தூரில் ஆரம்பித்தான். அவன் கம்பெனியின் தரம் உயர்ந்தது என்ற முறையில் சொந்த வண்டிக்கார இளைஞர்கள் அவனோடு இணைந்து கொண்டார்கள்.

அவர்களை தவிர்த்திடுவதற்காக இளஞ்செழியன் ஏதேதோ விதி முறைகள் வைத்தான். ஆனாலும் வந்தார்கள். அவர்களுடன் ஊதியத்தில் பத்து சதவீதம் கம்பெனிக்கு வந்து விடும் என்று நிபந்தனை விதித்தான். பராமரிப்பு செலவும் அவர்களைச் சார்ந்தது என்று சொன்னான். ஆனாலும் ஒத்துக் கொண்டார்கள். அதுவும் இப்போது நூறு கார்களுக்கு மேல் இருந்தது.



தமிழ்நாடு முழுவதும் வெளி மாநிலங்களிலும் பெங்களூர் மாதிரியான சில குறிப்பிட்ட நகரங்களுக்கு இரவு நேரங்களில் அவனது டிராவல்ஸ் வண்டிகள் போய்க் கொண்டிருந்தன.

தனக்கென்று ஒரு காரவான் வைத்துக் கொண்டிருந்தான். அதனால் முதலாளி எப்போது வேண்டுமானாலும் வருவார் என்ற பயம் எல்லா இடங்களிலும் இருந்தது.

தரமான வாகனங்கள், சௌகரியமான பயணம் நியாயமான கட்டணம் என்பதால் தங்கு தடையில்லாமல் வளர்ந்து கொண்டிருந்தது.

அந்த சமயத்தில்தான் அப்பா ஒரு நாள் கல்யாணப் பேச்சை எடுத்தார்.

தெளிவாகச் சொன்னான்.

''அப்பா! இந்தப் பிறவியில் எனக்கு சித்ரலேகாதான் மனைவி'' என்று.

''தம்பி! அந்தப் பொண்ணுக்கு அனேகமா வேற கல்யாணம் பண்ணியிருப்பாங்க.''

''இருக்கட்டும்! நானாத் தேடிப் போக மாட்டேன். அவளை ஒரு தடவையாவது சந்திச்சதுக்கப்புறம் முடிவெடுத்துக்கறேன்'' என்றான்.

''தம்பி! இது சினிமா இல்லை. நிஜ வாழ்க்கை. நீ நினைக்கிறதெல்லாம் நடக்காது. நீ வேற எங்கயும் வெளி இடங்களுக்கெல்லாம் போறதில்லை. எந்தப் பத்திரிகையிலயும் உன் படம் வர்றதை விரும்பறதில்லை. நீ இப்படி நல்ல நிலைமையில இருக்கேன்னு அந்தப் பொண்ணுக்கு எப்படித் தெரியும்?''

''வேண்டாம்.. தெரிய வேண்டாம். நம்மை மீறின சக்தி மேல எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கு. அது எங்கயாவது

அவளை என் கண்ணுக்குக் காட்டும். நான் இப்ப நினைச்சன்னா பத்தே நாள்ல அவ எங்க இருக்கான்னு கண்டு பிடிச்சுடுவேன். ஆனா, அதுல எனக்கு இஷ்டம் இல்லே.. அவளா என் பார்வைக்குத் தட்டுப்படணும். அப்ப அவளுக்குக் கல்யாணம் ஆகி அமைதியான வாழ்க்கையில இருந்தா நான் அவளைத் தொல்லை செய்ய மாட்டேன். நான் ஒதுங்கிக்குவேன்'' என்றான்.

அப்பா பெருமூச்சு விட்டார்!

''என்னமோ... நீ சொல்றதெல்லாம் ஒண்ணும் நடக்கற மாதிரி தெரியலே!'' என்றார்.

கல்யாணம் வேண்டாம் என்று சொல்வதற்கு பதிலாக மகன் இப்படியெல்லாம் சொல்கிறான் என்று தோன்றியது. ஆனாலும் சுய முயற்சியால் ஒரு தொழிலதிபராக வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவனை எந்த விதத்திலும் கட்டாயப்படுத்த முடியாது என்பதும் அவருக்குப் புரிந்தது. ''விதிப்படி ஆகட்டும்'' என்று விட்டு விட்டார். ஆனால், அவனது தாய் மட்டும் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருப்பார்.

அவன் கவனம் தொழிலில் ஆழ்ந்தால் பொழுது ஓடிவிடும். ஆனால், தனிமையான நேரங்களில் கண்டிப்பாக சித்ரலேகா அவன் மனத்தில் உள்ளே இருந்து கேள்விகள் எழுப்பிக் கொண்டுதான் இருந்தாள்.

ஒரு மெல்லிய மௌனப் போராட்டம் அவனுக்குள்ளே இருந்து கொண்டுதான் இருந்தது.

இன்று அது வெடித்துக் கொண்டு கிளம்பியது. எட்டு மணி இருக்கும்!

வேலு போன் செய்தான்!



''சார்! என்ன ஆச்சுன்னு தெரியலை. அந்த பைனான்ஸ் கம்பெனி அட்வைசர் சித்ரலேகா மேடம் லீவில் போறதாப் பேசிக்கிறாங்க'' என்றான்.

''வேலு! நான் என் ஃபாரின் டிரிப்பைக் கான்சல் செய்யறேன். அதை நெக்ஸ்ட் மன்த்க்கு மாத்திக்கலாம். நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்குங்க. அந்த லேடி லீவுல போகக் கூடாது இந்த டீலிங் முடிச்சுக் குடுத்துட்டுதான் போகணும். புரியுதா! அதுக்கு என்ன செய்யணுமோ.. செய்!'' என்றான்.

''சார்!'' என்றான் வேலு வியப்பாய்.

''வேலு! நான் என் பர்ஸனல் லைஃப் பத்தி யார் கிட்டயும் பேசறதில்லே. உனக்குத் தெரியும். ஆனா, அந்த லேடிக்கும் எனக்கும் ஒரு பழைய கணக்கு இருக்கு, அதைத் தீர்க்கற வரைக்கும் அந்த லேடியை விட்டறக் கூடாது.. புரியுதா..?'' என்றான்.

''சார்! அது என்னன்னு?''

''நோ! நீ அதைத் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்லே! ஆனா, நான் சொல்றதை மட்டும் அப்பப்ப செய்.. போதும்!''

''சரிங்க... சார்!'' என்றான்.

''மேடம்! நீங்க அப்படி ஜஸ்ட் லைக் தட் என்று உள்ளே நுழையறதுக்கும், பெரிய காயத்தைப் பண்ணி விட்டுட்டு ஒண்ணுமே நடக்காத மாதிரி வெளியேறுவதற்கும், என் வாழ்க்கைதானா உங்களுக்கு விளையாட்டு மைதானம்... நோ... நாட் அட் ஆல்!'' என்று நழுவிக் கொண்டான்.

அதே நேரம்!

சித்ரலேகாவிற்கு போன் அடித்தது அலுவலகத்தில் இருந்து..!

''மேடம்! மேனேஜர் அவசரமா லீவுல போறாராம் சித்ர லேகாவை லீவைக் கான்சல் பண்ணிட்டு, இருந்து இந்தப் பெரிய டலிங்கை முடிச்சுக் குடுத்துட்டு அப்புறமா லீவில போகச் சொல்லுங்கறார் சேர்மன்'' என்றார்கள்.

சித்ரலேகாவிற்கு வேறு வழியிருக்கவில்லை! தொய்ந்து போய் அமர்ந்தாள்!

இப்போது இளஞ்செழியன் இருக்கிற வசதியைப் பார்த்தால் கண்டிப்பாகக் கல்யாணம் ஆகியிருக்கும். என்ன தான் தானும் வாழ்க்கையில் செட்டில் ஆகி இருந்தாலும் அவனை இன்னொரு பெண்ணின் கணவராகப் பார்க்கும் போது மனம் வாடி விடும். ஆனால் நாம ஏன் பயப்படணும்? தவறு பூராவும் அவரோடதுதானே! அவர் செஞ்சதுதானே துரோகம். பார்க்கலாம் என்ன நடக்கிறதென்று துணிந்தாள்!

முடிவெடுத்தாள்!

அலுவலகத்துக்கு போன் செய்தாள்.

''ஓ.கே.! நான் லீவைக் கான்சல் செய்யறேன். இந்த டலிங்கை சக்ஸஸ்ஃபுல்லா முடிச்சுக் குடுத்துட்டே லீவில் போறேன்'' என்றாள்.

உறுதியோடும் துணிவோடும் எழுந்தாள்.

குட்டைக்கை இரவிக்கை அணிந்து கைத்தறிப் புடவை அணிந்து தனது காரை ஓட்டிக் கொண்டு அவள் இளஞ் செழியன் அலுவலகத்தை அடைந்தபோது அவனே அலுவலக வாசலில் நின்று கொண்டிருந்தான்.

அவனது கண்களில் பாராட்டுத் தெரிந்தது. அதற்கு மேல் அந்த முகத்தில் இருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் இரண்டு பேர் அவளது அலு வலர்கள் வந்து சேரும் முன்னே,



''யூ ஆர் லுக்கிங் வெரி ஸ்மார்ட்'' என்றான் இளஞ் செழியன்.

அலட்டிக் கொள்ளாமல் அவனைப் பார்த்துப் புன்னகைத் தாள்.

''தாங்க்.. யூ! நீங்களும் தான்'' என்றாள்.

இளஞ்செழியன் அக்கறையுடன் உடை உடுத்தி வந்திருந்தது பார்க்கும்போது தெளிவாகவே தெரிந்தது.

''ஆரம்பிச்சர்லாமா?'' என்றார்கள்.

அதற்குப் பிறகு இளஞ்செழியன் அவர்கள் பார்வைக் காக கொடுத்த ஆவணங்களை சரி பார்க்கிற வேலை பேச்சு வார்த்தை என்று நேரம் ஓடியது.

இடையிடையே தேவைகள் என்னவென்று பட்டிய லிட்டுக் கொண்டே வேலை ஓடியது.

பிற்பகல் உணவுக்குப் பின்னும், மாலையாகியும் கூட வேலை இருந்தது.

ஐந்தரை மணிக்கு மற்றவர்களை அனுப்பி விட்டு அவர்கள் இருவருக்குமே கொஞ்சம் விவாதிக்க வேண்டி யிருந்தது.

ஆறு மணிக்கு அவள் புறப்படும்போது கார் வரை வந்தவன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

சித்ரலேகா அதற்கொரு பதிலும் சொன்னாள்.

அவள் பதில் அவனது அன்றைய தூக்கத்தையும் கெடுத்தது மட்டுமல்லாமல் அவனது வாழ்க்கையையே புரட்டிப் போட்டது.

# 7

உடம்பெல்லாம் கொதிக்கிறாற்போல் உணர்ந்தான் இளஞ்செழியன்.

''ஹஸ்பெண்ட் என்ன பண்றாரு?'' என்று கேட்டான். அதுவும் சித்ரலேகா காரில் ஏறுவதற்காகப் போன சமயம் வழியனுப்புவதற்காகச் சென்றவன் உடன் நின்றபடி கேட்டான்.

சித்ரலேகா அவன் முகத்தைப் பார்க்காமல் நிலம் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''அவரும் உங்களைப் போலத்தான். பிஸினஸ்'' என்றாள்.

''ஓ!'' என்றான். அவனையும் மீறி அவன் முகம் வேர்த்தது.

''குழந்தை..!''

''ம்.. ஒரு குழந்தை.. பெண் குழந்தை'' என்றாள்.

''ம்..?''

''பேரு.. பூங்குழலி..!'' என்றாள். அதைச் சொன்ன போதும் அவனை நேராகப் பார்க்கவில்லை.

எங்கோ பார்த்தபடிதான் சொன்னாள்.

இளஞ்செழியன் ஒரு நிமிடம் ஆடிப் போனான்.

அவர்கள் ஒன்றாக இருந்த ஒரு மாதத்தில் அவர்களின் கனவாக இருந்த ஒன்று தங்களுக்குப் பிறக்கப் போகும் பெண் குழந்தைக்குப் பூங்குழலி என்று பெயர் வைப்பது என்பது.

இப்போது அதைத் தன்னிடமே வந்து சொல்கிறாள். முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொள்வதற்குள் படாதபாடு பட்டு விட்டான்.



வழியனுப்பி விட்டு உள்ளே வந்தவுடனேயே அவனுக்குள் எரிமலை வெடித்தாற்போல் இருந்தது.

''சார்! அந்த பைல்'' என்று அவசரமாக வந்த வேலுவிடம்,

''எந்த எழவும் இப்ப வேண்டாம்! எல்லாம் அப்புறம்.. பார்க்கறேன்'' என்று எரிந்து விழுந்தான்.

வேலு அதிர்ச்சியடைந்தான். அவன் முகம் போன விதம் பார்த்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'''ஐ'ம் சாரி! வேலு..! வேற ஏதோ டென்ஷன்'' என்றான் சமாதானப்படுத்துவது போல.

''பரவால்லை.. சார்!'' என்றான். ஆனால் அவன் தன்னறைக்குப் போகும் போது பின்னால் நின்றபடி அவன் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

தனது உதவியாளரின் பார்வை தன் முதுகைத் துளைப்பது தெரிந்ததும் அதைப் பற்றிச் சட்டை செய்யாமல் உள்ளே போனான் இளஞ்செழியன்.

''எப்படி அழித்தெழுத முடிந்தது. எவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாள்.'' என்று நொந்து போனான்.

எட்டு ஆண்டுகள்!

எட்டு ஆண்டுகளாக அந்த ஒரு மாத நினைவு! வாழ்க்கை வாழ்க்கை! ஓடிய ஓட்டம். சாதாரண ஓட்டமா.. வெறி பிடித்த ஓட்டம்..! எவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாள்.

ஒரு மாதம்..!

இரவு பகல் பாராமல் சிரித்து மகிழ்ந்த காலம்!

''எனக்கு பஸ்ஸுல போகணும்னு ஆசை! ஆனா எங்க வீட்ல விட மாட்டாங்க. ஆனா.. என் பிரண்ட்ஸ்

எல்லாம் சொல்லுவாங்க. வரிசையாக நின்னுக்குவாங்களாம் ஒரே பக்கமா கையைக் கோத்துகிட்டு.. நின்னுகிட்டு ஒன்டு.. த்ரின்னு சொல்லிகிட்டு.. முன்னாலயும் பின்னாலயும் ஒரு மாதிரி அசைவாங்களாம். கண்டக்டர் கண்டபடி திட்டுவாராம். ஆனா கண்டுக்கவே மாட்டாங்களாம். சொல்லிகிட்டு சிரிப்பாங்க.." என்று அவளும் சிரித்தாள்.

இளஞ்செழியன் மார்பில் சாய்ந்தபடி அவள் இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க அவனும் சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தான்.

இளமை ததும்பும் முகம்! இன்னமும் கள்ளமில்லாத தன்மை அந்த முகத்திலே தெரிந்தது.

"ம்.. அப்புறம்!" என்றான். அவள் தொடர்ந்தாள்.

"அப்புறம் என்ன? ஒரு நாள் எனக்கு ரொம்ப ஆசையா இருந்தது. எங்க டிரைவர்கிட்டே சொல்லிட்டு ரெண்டு நாள் பஸ்ல போனேன்."

"அப்பக் கார்?!"

"கார். பஸ்ஸுக்குப் பின்னாலேயே வரும். வீட்ல ஸ்பெஷல் கிளாஸ் அதனால லேட்னு சொல்லிடுவேன்."

"ம்..!" என்றான் சுவாரசியமாக.

"நாங்க இந்த மாதிரி சிரிக்கறதையும், கலாட்டா செய்யறதையும் எங்கண்ணன்கிட்டே போய் யாரோ சொல்லிக் குடுத்துட்டாங்க.. கரெக்டா.. நான் பஸ்ஸை விட்டு இறங்கற நேரம் பார்த்து அவன் ஸ்டாண்டில நிக்கறான்."

"அப்புறம்?" என்றான் கவலையோடு.

"அப்புறம்.. என்ன? மொத்துதான். ஏகப்பட்ட கெடுபிடி செஞ்சு மூணு நாளைக்குத் திட்டிகிட்டே திரிஞ்சான்.



கடைசியா எங்கப்பாவுக்கே வெறுத்துப் போய் "விடுடா! இப்ப அவ என்ன தப்பு செஞ்சா.. பஸ்ல வர்றதுக்கு ஆசையா இருந்துச்சு.. பஸ்ல வந்தா.. அவ்வளவுதானே விடு." என்று கடிந்து கொள்ளவும்தான் பேசுவதை விட்டான்."

அவளுக்கு அப்போது அம்மா, அப்பாவின் நினைவு வந்தது போலும். முகம் வாடியது.

"என்னடா! அம்மா.. அப்பா.. ஞாபகம் வந்துருச்சா?" என்றான்.

"ஆமா! அவங்களுக்குத்தான் ரொம்ப அதிர்ச்சியா இருக்கும்.. என்றான்.

"ஆமா! என்ன செய்யறது? நான்தான் அவங்ககிட்டே பேசி.. சம்மதம் வாங்கலாம்னு சொன்னேன். நீ ஒத்துக் கலை."

"அதெல்லாம் நடக்கவே நடக்காது. எனக்கென்ன கோபம்னா.. எங்கண்ணன் என்னை அந்த விரட்டு விரட்டுவான். எங்கம்மாவும், அப்பாவும் அவனுக்கு பயந்துடுவாங்க. கண்டிக்கவே மாட்டாங்க" என்றாள்.

"லேகா! நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோ! நீ வசதியான வீட்டுப் பொண்ணு உன்னைப் பாதுகாக்க வேண்டிய பயம் அவர்களுக்கு இருக்கும். உன்னை மாதிரிப் பணக்காரப் பொண்ணு என்ன மாதிரி ஏழைப் பையன்கிட்டே மாட்டினா.. என்ன ஆகறதுங்கற கவலை அவர்களுக்கு. அவங்க பயந்த மாதிரித்தானே நடத்துனே" என்றான்.

"இப்படி நடந்ததுக்கு அவர்களும் ஒரு வகையில காரணம். நான் பாட்டுக்குப் பேசாம இருந்தேன். நானும் நீங்களும் பேசிகிட்டிருந்ததைப் பார்த்து எங்கண்ணன் கேட்கப் போய்த்தான் நான் உங்களைக் கவனிக்க

ஆரம்பிச்சேன். சொல்லப் போனா அதுக்கு எங்கண்ண னுக்கு தேங்க்ஸ் சொல்லணும்'' என்றாள்.

குழந்தையாய்த் தன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந் தவள். சந்தோஷங்களும் சிரிப்புமாய் கழித்த காலம்.. அந்த ஒரு மாதம்.

சித்ரலேகாவைப் பிரிந்த பின்பு எத்தனை பெண்களோடு பழகி விட்டான். ஆனால் யாரிடமும் நட்புக் கொள்ளக் கூடப் பிடிக்கவில்லை. அளவாகவே பழகினான்.

சி.எல்.கே. டிராவல்ஸ் அவனது ஆளுமை வளர்த்தது. சிந்தனைகள் வேறு திசையில் ஓடின. கொஞ்சம் கொஞ்சமாக மறக்கத் தொடங்கினான். ஆனால், எப்போது திருமணம் என்று பேச்சு வந்தாலும் உடனே சித்ரலேகா வின் நினைவுகள் அந்த ஒரு மாத கால வாழ்க்கையும் நினைவுக்கு வரும். வேறு எந்தப் பெண்ணையும் நினைத்துப் பார்க்கவே பிடிக்காமல் போய்விடும்.

இரவும் பகலும் ஒரு வெறுமையில் வருத்தத்தில் தான் மட்டும் உழன்று கொண்டிருக்கையில் அவள் வேறு ஒருவனை மணந்து கொண்டு நிம்மதியாக இருந்திருக் கிறாள்.

குழந்தை வேறு ஒன்று பிறந்திருக்கிறது. அந்தக் குழந்தைக்குத் தான் சொன்ன பெயரையே சூட்டியிருக் கிறாள் எப்படி முடிந்தது?

ஒவ்வொரு முறை அந்தக் குழந்தையின் பெயர் சொல்லி அழைக்கும்போதும் தனது நினைவு வந்திருக் காதா? மனசு உறுத்திருக்காதா?

சும்மாவா... சொன்னார்கள்.. பெண்களை நம்பாதே.. என்று..



ஒரு பக்கம் கோபம் வந்தது. 'தான் வாழ்க்கையில் நுழைந்து ஒரு வெட்டுக் காயத்தின் தழும்பைப் போல பெரிய தழும்பொன்றைத் தன் மனத்தில் பதிய வைத்து விட்டுப் போயிருக்கிறாள். இவளை எப்படிச் சும்மா விடுவது?'' என்று கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

சோபாவின் கைப்பிடியில் முஷ்டியை ஓங்கி ஓங்கிக் குத்தினான்.

சத்தம் கேட்டு வேலு எட்டிப் பார்த்தான்.

''சார்!'' என்றான் கேள்விக் குறியாக.

பிறகுதான் நிதானத்துக்கு வந்தான்.

''இல்லே! இந்தக் கைப்பிடியில ஏதோ குத்திகிட் டிருந்த மாதிரி இருந்தது. அதான்'' என்றான் இளஞ் செழியன் விளக்கம் சொல்வது போல.

''சரிங்க.. சார்!'' என்று வேலு வெளியே போனான். ஆனால் பார்த்து விட்டுப் போன பார்வையிலேயே அவன் அதை நம்பவில்லை என்பது தெரிந்தது.

இளஞ்செழியன் எதையும் கவனிக்கிற நிலைமையில் இல்லை.

* * *

சி.எல்.கே. டிராவல்ஸ் பஸ் கரூரில் நின்றது. அப் போது நள்ளிரவு பன்னிரண்டு மணி.

எடுப்பாக உடையணிந்த உருவம் ஒன்று பஸ்ஸில் ஏறியது.

ரிசர்வ் செய்யப்பட்டிருந்த ஒரு சீட்டில் அமர்ந்து கொண் டது.

இளைஞன்! யாரிடமும் எதுவும் பேசவில்லை. கையில் லக்கேஜ் எதுவும் இருக்கவில்லை.

சாதாரண பயணி ஒருவர் போல் அமர்ந்து கொண்டிருந் தான். பஸ் நிறுத்தத்தில் பத்து நிமிஷங்களுக்கு மேல் வண்டி நின்றது.

பயணி ஒருவர் ''என்ன சார்..! எத்தனை மணிக்கு கிளம் பும்?'' என்றார்.

''இன்னும் அஞ்சு நிமிஷம்'' என்றான்.

டிரைவர் பஸ்ஸில் அந்தப்புறம் நின்று சிகரெட் ஊதிக் கொண்டிருந்தார்.

கண்டக்டர் உள்ளே வண்டிக்குள் ஏறி வந்தவன் கடைசி வரைக்கும் ஒரு நடை வந்தவனின் பார்வை நிலை குத்தியது.

முதலாளி இளஞ்செழியன் அமர்ந்திருப்பதைப் பார்த் தார்.

''சார்!'' என்று திகைத்தார்.

அவசரமாகத் திரும்பி டிரைவரைக் கூப்பிடப் போனான்.

''வேண்டாம்! கண்ணப்பன்! டிரைவர் எப்ப ஏர்றாருன்னு நான் பாக்கணும். நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம்'' என்றான்.

* * *

மறுபடியும் ஐந்து நிமிடம் கழித்துதான் டிரைவர் ஏறினார். முதலாளி உள்ளே இருக்கிறார் என்ற தகவலைச் சொல்வதற்காகக் கண்டக்டர் தவித்த தவிப்பை சுவாரசிய மாகப் பார்த்துக் கொண்டிருந்தான் இளஞ்செழியன்.

ஐந்து நிமிடம் பயணிகளுக்கு நடுவில் அமர்ந்திருந் தவன் எழுந்து முன்னால கண்டக்டர் சீட்டில் போய் அமர்ந் தான்.

டிரைவர் அப்போதுதான் கவனித்தார்! தடுமாறினார்.



''வண்டியை நிறுத்துங்க..!'' என்று சொல்லிவிட்டு அவனே சற்று தூரம் ஓட்டினான்.

டிரைவர் பவ்யமாக கண்டக்டரின் எதிர் சீட்டில் அமர்ந்து கொண்டிருந்தான்.

திருச்சி வரைக்குமே வண்டிக்குள் அமர்ந்திருந்தான். அதற்குப் பிறகு நிற்க வேண்டிய இடங்களில் சரியாக நிறுத்தி.. சரியான நேரத்தில் பஸ் திருச்சிக்குள் நுழைந்தது.

கரூரில் தேவைக்கு மேல் நிறுத்திய காரணத்தால் நடுவில் வேகமாகப் போக வேண்டி வந்தது.

இறுக்கமான முகத்துடன் முன்னால் அமர்ந்திருக்க.. டிரைவர் கொஞ்சம் பார்த்துத்தான் ஓட்டினார். வேகமாகப் போவதற்கு அவன் தடை சொல்லவில்லை. ஆனால் திருச்சியில் இறங்கிய பிறகு பஸ்ஸில் வைத்து விசா ரணை நடந்தது.

''கரூர்ல எத்தனை நேரம் நிக்கணும்?''

''பத்து நிமிஷம் சார்!''

''அப்புறம் எதுக்கு.. இருபது இருபத்தைந்து நிமிஷம்னு தினம் நிக்குது?''

''அது... அது..'' என்று மென்று விழுங்கினான் டிரைவர்.

''இப்படி டைம்.. பாஸ் பண்ணிட்டு.. அப்புறம் டைமை சரிக்கட்டறதுக்கு.. வேகமா ஓட்ட வேண்டியது. நாம வரும்போது.. ஒரு ஆக்ஸிடென்ட் மயிரிழையில மிஸ் ஆச்சு.. இல்லே!''

''ஆமா சார்!''

''ஒவ்வொரு வண்டியிலயும் ஐம்பது அறுபது பாஸஞ் சர்ஸ் நம்பளை நம்பி... ஏர்றாங்க.. அவங்களை பத்திரமா

கொண்டு போய் சேர்க்க வேண்டிய பொறுப்பு.. நம்ம ளோடது..'' என்றான்.

''இல்லை.. சார்! கொஞ்சம் தூக்கம் வந்த மாதிரி இருந்துச்சு. ஒரு சிகரெட்..'' என்றான்.

''சரி.. சரி! உங்களுக்கும் வேணுங்கற அளவுக்கு டைம்.. கிடைக்கிற மாதிரித்தான்.. டிராவல் டைம் ஃபிக்ஸ் பண்ணியிருக்கு. பாத்து.. இவ்வளவு ஸ்பீட்ல ஒட்ட வேண்டிய சூழ்நிலை இல்லாம பாத்துக்குங்க'' என்றான்.

இறங்கினான்.

தயாராக நின்ற காரில் ஏறிப் போய் விட்டான்.

எந்த இடத்தில் முதலாளி ஏறுவார் எப்போது போவார் என்று சொல்ல முடியாத அளவுக்கு மேற்பார்வை செய்தான்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை தொடர்ந்து ஏற்பட்டால் அதற்கான காரணங்களை ஆராய்வான்.

ஒரு முறை பயணிகள் இருவர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டான்.

''எங்கயோ... கண்ட இடத்துல டிபன் சாப்பிடறதுக்கு நிறுத்தறாங்க.. இந்த மாதிரிக் கடைகள்ல சாப்பிட்டா.. உடம்பு என்னத்துக்கு ஆகறது? எல்லா டேபிள்லயும் ஒரே ஈயும் எறும்புன்னு மொய்க்குது. பக்கத்துலயே பிராந்திக் கடை டாஸ்மாக்ன்னு இருக்கிற இடத்துல நிறுத்தறாங்க'' என்று.

யோசனையில் ஆழ்ந்தான்.

தனது மேனேஜர்களைக் கலந்து ஆலோசித்தான். அப்போதுதான் அந்த யோசனை தோன்றியது.

மாவட்டக் கலெக்டரோடு தொடர்பு கொண்டான். சுய உதவிக் குழுக்களின் மூலமாக வழியில் முக்கியமான இடங்களில் உணவு நேரத்துக்கு, உணவு கிடைக்கிற மாதிரி மெஸ்கள் அமைத்தார்கள்.



முதல் முதலாக திருச்சி ரோட்டில் ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக ஒரே மாதத்தில் எல்லா முக்கியப் புள்ளிகளிலும் மெஸ்கள் திறக்கப்பட்டிருந்தன.

அந்த மெஸ்களிலும் இளஞ்செழியன் எந்த நேரத்திலும் நுழைவான். அவனும் சாப்பிடுவான்.

சி.எல்.கே. டிராவல்ஸ் என்ற பெயர் தமிழ்நாடு முழுவதும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் சி.எல்.கே. டிராவல்ஸ் என்ற அமைப்பின் முதலாளி தன்னை முன்னிறுத்திக் கொள்ளவேயில்லை.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் தனது நூறாவது வண்டியை வாங்கினான். தனது அப்பாவை வைத்து அதன் ஒட்டத்தைத் துவக்கினான்.

எப்போதும் தனது நிறுவனம் பற்றி அவன் விளம்பரம் செய்வதேயில்லை. கேட்டால்,

''எதற்காக விளம்பரம்? எனது சர்வீஸ் நன்றாக இருந்தால் தானாகப் பெயர் பரவி விடும்'' என்பான்.

அப்படித்தான் ஆனது!

சி.எல்.கே. டிராவல்ஸில் கையை வீசிக் கொண்டு ஏறலாம் எல்லா வசதிகளும் செய்து கொடுப்பார்கள் என்ற பெயர் பரவியது.

நூறாவது வண்டி ஓட ஆரம்பித்த அன்றைக்கு அப்பா அவனது அறைக்கு வந்தார்.

''தம்பி! இவ்வளவு தூரம் வந்தது பெருசில்லை. இதைக் கட்டிக் காப்பாத்தறதுதான்.. முக்கியம்'' என்றார்.

''ஆமாப்பா! அதை விட்டா.. எனக்கு வாழ்க்கையில வேற என்ன வேலை?'' என்றான்.

அப்பா பார்த்தார். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. மகனின் பிடிவாதம் போக்கு அவருக்குள் கவலையை

கொண்டு போய் சேர்க்க வேண்டிய பொறுப்பு.. நம்ம ளோடது..'' என்றான்.

''இல்லை.. சார்! கொஞ்சம் தூக்கம் வந்த மாதிரி இருந்துச்சு. ஒரு சிகரெட்..'' என்றான்.

''சரி.. சரி! உங்களுக்கும் வேணுங்கற அளவுக்கு டைம்.. கிடைக்கிற மாதிரித்தான்.. டிராவல் டைம் ஃபிக்ஸ் பண்ணியிருக்கு. பாத்து.. இவ்வளவு ஸ்பீட்ல ஒட்ட வேண்டிய சூழ்நிலை இல்லாம பாத்துக்குங்க'' என்றான்.

இறங்கினான்.

தயாராக நின்ற காரில் ஏறிப் போய் விட்டான்.

எந்த இடத்தில் முதலாளி ஏறுவார் எப்போது போவார் என்று சொல்ல முடியாத அளவுக்கு மேற்பார்வை செய்தான்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட பிரச் சினை தொடர்ந்து ஏற்பட்டால் அதற்கான காரணங்களை ஆராய்வான்.

ஒரு முறை பயணிகள் இருவர் பேசிக் கொண்டிருந் ததைக் கேட்டான்.

''எங்கயோ... கண்ட இடத்துல டிபன் சாப்பிடறதுக்கு நிறுத்தறாங்க.. இந்த மாதிரிக் கடைகள்ல சாப்பிட்டா.. உடம்பு என்னத்துக்கு ஆகறது? எல்லா டேபிள்லயும் ஒரே ஈயும் எறும்புன்னு மொய்க்குது. பக்கத்துலயே பிராந்திக் கடை டாஸ்மாக்ன்னு இருக்கிற இடத்துல நிறுத்தறாங்க'' என்று.

யோசனையில் ஆழ்ந்தான்.

தனது மேனேஜர்களைக் கலந்து ஆலோசித்தான். அப்போதுதான் அந்த யோசனை தோன்றியது.

மாவட்டக் கலெக்டரோடு தொடர்பு கொண்டான். சுய உதவிக் குழுக்களின் மூலமாக வழியில் முக்கியமான இடங்களில் உணவு நேரத்துக்கு, உணவு கிடைக்கிற மாதிரி மெஸ்கள் அமைத்தார்கள்.



முதல் முதலாக திருச்சி ரோட்டில் ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகு திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக ஒரே மாதத்தில் எல்லா முக்கியப் புள்ளிகளிலும் மெஸ்கள் திறக்கப்பட்டிருந்தன.

அந்த மெஸ்களிலும் இளஞ்செழியன் எந்த நேரத்திலும் நுழைவான். அவனும் சாப்பிடுவான்.

சி.எல்.கே. டிராவல்ஸ் என்ற பெயர் தமிழ்நாடு முழு வதும் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் சி.எல்.கே. டிராவல்ஸ் என்ற அமைப்பின் முதலாளி தன்னை முன் னிறுத்திக் கொள்ளவேயில்லை.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் தனது நூறாவது வண்டியை வாங்கினான். தனது அப்பாவை வைத்து அதன் ஓட்டத்தைத் துவக்கினான்.

எப்போதும் தனது நிறுவனம் பற்றி அவன் விளம்பரம் செய்வதேயில்லை. கேட்டால்,

''எதற்காக விளம்பரம்? எனது சர்வீஸ் நன்றாக இருந் தால் தானாகப் பெயர் பரவி விடும்'' என்பான்.

அப்படித்தான் ஆனது!

சி.எல்.கே. டிராவல்ஸில் கையை வீசிக் கொண்டு ஏறலாம் எல்லா வசதிகளும் செய்து கொடுப்பார்கள் என்ற பெயர் பரவியது.

நூறாவது வண்டி ஓட ஆரம்பித்த அன்றைக்கு அப்பா அவனது அறைக்கு வந்தார்.

''தம்பி! இவ்வளவு தூரம் வந்தது பெருசில்லை. இதைக் கட்டிக் காப்பாத்தறதுதான்.. முக்கியம்'' என்றார்.

''ஆமாப்பா! அதை விட்டா.. எனக்கு வாழ்க்கையில வேற என்ன வேலை?'' என்றான்.

அப்பா பார்த்தார். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. மகனின் பிடிவாதம் போக்கு அவருக்குள் கவலையை

ஏற்படுத்தியது. ஆனால், அவன் போக்கில் போய்த்தான் ஆக வேண்டும்.

முப்பது முப்பத்திரண்டு வயதில் திருமணம் செய்து கொண்டால் கூடப் போதுமானது.

எப்படியும் தங்களுக்காகவாவது ஒத்துக் கொள்வான் என்ற நம்பிக்கை ஒரு ஓரத்தில் இழையோடிக் கொண்டே இருந்தது.

ஒரு விஷயத்தில் அவருக்கு மகிழ்ச்சி ஏதோ மற்ற இளைஞர்களைப் போல தோல்வியைக் கண்டு துவளாமல் அதைக் காரணமாகக் கொண்டு வேறு பழக்கங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் வெறி கொண்டு உழைப்பதும், அதனால் தொழிலில் முன்னேறுவதும் அவருக்குப் புரிந்திருந்தது. ஆனாலும் அவனது வேதனை புரிந்தவர்களாய் அவரும், அவரது மனைவியும் கையைப் பிசைந்து கொண்டிருந்தார்கள் என்பதும் உண்மைதான்.

## 8

தொண்ணூறாவது பஸ் தனது ஓட்டத்தைத் துவங்கிவிட்டது.

சிறிய விழாவாகவே கொண்டாடினார்கள். அன்றைக்கு அவனது சி.எல்.கே. டிராவல்ஸின் அனைத்துப் பணியாளர்களுக்கும் விருந்து.

முதல் பந்தியில் அவர்களோடொன்றாக அமர்ந்து உணவருந்தினான். எப்போதும் எந்த புது பஸ் புறப்படுவதற்கும் துவக்கி வைப்பது அப்பா... தான் இன்றைக்கும் அப்படியே!



அப்பாவும் அம்மாவும் நேர் எதிரே அமர்ந்து சாப்பிட்டார்கள். இந்த மாதிரி சமயங்களில் தொழிலாளர்கள் அவனிடமும் சுதந்திரமாகப் பேசுவார்கள்.

''என்ன சார்! எப்பவுமே புது வண்டிக்காகவே விழா எடுக்கறீங்க..! எப்ப.. சார்! கல்யாண விருந்து..!'' என்று கேட்டார்கள்.

''கல்யாண விருந்து.. மெதுவாகக் குடுக்கறதுதான். உங்களுக்கு.. நல்லது. பார்க்கலாம். எவ்வளவுக்கெவ்வளவு கம்பெனியை வளர்க்கறோமோ அவ்வளவுக்கவ்வளவு அப்புறம் ப்ரீயாயிக்கலாம்.. இல்லே!'' என்று அவனும் எளிமையாகவே பதில் சொல்வான்.

அப்போதுதன் அவனது கம்பெனியில் ஆரம்பத்தில் இருந்தே இருக்கிற ஒரு மூத்த டிரைவர் சொன்னார்.

''சார்.. நான் இன்னொரு ஐடியா சொல்றேன். டிராவல்ஸ் தவிர கால்டாக்ஸி சென்டர் ஒண்ணு ஆரம்பிங்க.. சார்... நல்லா ஓடும்'' என்றார்.

''யோசிக்கலாம்..'' என்றான்.

அடுத்த வாரத்திலேயே வேறொருவர் வந்து சொன்னார். ''சார்.. கிட்டத்தட்ட பத்து டாக்ஸி ஓனர்ஸ் உங்களோட டைஅப் வச்சிகிட்டு ஓட்டறதுக்குத் தயாரா இருக்காங்க'' என்று.

தொண்ணூறு வண்டிகள் ஓட ஆரம்பித்தவுடன் அவனுக்குத் தோன்றியது.

''இன்னும் எவ்வளவு தூரம்தான் வாழ்க்கையில் ஓடினாலும் ஒரு நிறைவு ஏற்படவே போவதில்லை'' என்று தோன்றியது.

இன்னும் என்னென்ன விஷயங்களை நோக்கி ஓடிக் கொண்டேயிருக்கப் போகிறோம் என்ற கேள்வியும் அவன் மனதுக்குள் ஓடியது.

மனதுக்கு நிறைவளிக்கிற ஒரு உறவு தன்னை விட்டு விலகிப் போன நாளிலிருந்து எதைத் தொட்டபோதும் எத்தனை வெற்றியடைந்த போதும் தனக்கு நிறைவே ஏற்படப் போவதில்லை என்பதை உணர்ந்தான்.

மிகவும் உயிராக மதித்த உறவின் பிரிவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக பிரம்மப் பிரயத்தனம் செய்து பார்த்தான்.. ஆனால் அந்த வெற்றிடம் அப்படியே தான் இருந்தது.

இப்போது புதிதாக ஒரு முயற்சி செய்து பார்க்கலாம் என்கிறார்கள்.

'சரி.. அதையும்தான் செய்தால்.. என்ன..' என்று எண்ணிக் கொண்டான்.

அதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தான்.

* * *

''இந்த டீலிங்கிலிருந்தே விலகி விடலாமா..?'' என்று தோன்றிக் கொண்டிருந்தது சித்ரேலகாவுக்கு. அதனால் தான் மருத்துவ விடுப்பு போட்டு விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

''என்ன காரணமோ மேனேஜர் விடுமுறை வேண்டும் என்று கேட்டிருக்கிறார். நீங்கள்தான் பார்க்க வேண்டும்'' என்கிறார்கள் என்று வருத்தத்துடன்தான் போனாள். இன்றைக்கு மறுபடியும் இளஞ்செழியன் அலுவலகத்தில் பேச்சு வார்த்தை உண்டு என்றார்கள்.

ஒரு வித பரபரப்பும் படபடப்புமாகத்தான் புறப்பட்டுப் போனாள்.

காரை ஓட்டிக் கொண்டு போகும்போது இரண்டு நாட்களுக்கு முன் வீட்டில் நடந்த நிகழ்ந்தது நினைவுக்கு வந்தது.



பிரசாத் வந்திருந்தான்!

''டேய்.. லேகா! எப்படிடா இருக்கே?'' என்று அன்பாகக் கேட்டுக் கொண்டு வந்தான்.

''ம்.. நல்லா.. இருக்கேன்!'' என்றாள் எழுந்து போய் விட்டாள்.

பிரசாத் வருத்தத்துடன் அப்பாவைத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெரிய பிரச்சனைகளுக்குப் பிறகு அம்மாவும் அப்பாவையும் கூட அவள் வெறுத்து விட்டாள்தான் என்று தோன்றியது. ஆனால் சகித்துக் கொண்டான்.

பிரசாத் அதற்குப் பிறகு அவன் தன்னுடைய பழைய தங்கையைப் பார்ப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுத்தான். நடக்காமல் போனது.

''அப்பா..!'' என்றான்.

அப்பா நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''தம்பி! அவ அந்த இளஞ்செழியனைப் பாத்துட்டு வந்திருக்கா...'' என்றார்.

''ஓ!''

''ஆமா! சி.எல்.கே. டிராவல்ஸ்ன்னு அடிக்கடி பேப்பர்ல பாக்கறமே...! அந்தக் கம்பெனியோட ஓனரே அவன் தானாம்.''

பிரசாத் சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்து போனான்.

''ஓ!''

''நம்ம லேகாதான் ஒரு மாதிரி செட்டிலாயிட்டாளே'' என்றான் கவலையோடு.

''ஆனாலும், அவனைப் பார்த்தவுடனே பழைய நினைப்பெல்லாம் வந்திருக்கும் இல்லே!'' என்றார்.

பிரசாத் கவலையுடன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

சித்ரலேகா தன்னுடைய அறைக்குப் போனவள் திரும்பவும் வருவாள் என்று பத்து நிமிடங்களுக்கு மேல் காத்திருந்தான்.

அவள் வரவேயில்லை!

எழுந்து மீண்டும் அவளுடைய அறைக்குப் போனான்.

அறை வாசலிலேயே தயங்கி நின்றான்.

''சித்ரா'' என்றான் இளகிய குரலில்.

''என்ன?'' என்றாள். முகம் இறுக்கமாகவே இருந்தது.

''என்னடா நடந்துச்சு?'' என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். டிரஸ்ஸிங் டேபிளில் முன் அமர்ந்திருந்தவள் எழுந்து வந்தாள்.

''என்ன நடக்கணும்!''

''இல்லே! அந்த.. அந்த.. இளஞ்செழியன்.. அவன்தான்.. சி.எல்.கே. டிராவல்ஸோட ப்ரொப்ரைட்ராமே'' என்றான்.

''ஆமா..!''

''நீ என்ன விஷயமா அவனைச் சந்திச்சே!''

''இப்ப எதுக்கு இந்த விசாரணை?''

''விசாரணையில்லம்மா... தெரிஞ்சுக்கக் கூட எனக்கு உரிமையில்லையா?''

''உரிமை..யா? அது உனக்குக் குடுக்கணுமா.. என்ன? நீங்களே எடுத்துக்குவீங்கதானே!'' என்றாள்.

பிரசாத் நொந்து போனான்.

''யே..! சித்து..! இன்னும் நீ என்னை மன்னிக்கலையா?'' என்றான் ஆழ்ந்த வருத்தத்துடன்.



''நான் எதுக்கு உன்னை மன்னிக்கணும். நான் யாரு உனக்கு?'' என்றாள். அவளும் அதே வருத்தம் தோய்ந்த குரலில்.

''ப்ளீஸ்! சித்து!''

''அண்ணா.. என்ன சொல்றே? எனக்கு எப்பவும் உன் மேல வருத்தம்.. இல்லே. எதுக்காக வருத்தப் படணும்? என் தலை விதி எதுவோ அது நடந்தது! என் வேதனை களை நான்தானே அனுபவிக்கறேன். பிடிக்காத வாழ்க் கைக்கு என்ன தள்ளி விட்டீங்க.. எட்டு வருஷம்.. நான் என்ன வேதனைப்பட்டிருப்பேன்.. உங்களுக்குத் தெரி யுமா?'' என்றாள்.

பிரசாத் தளர்ந்து போய் சோபாவில் அமர்ந்தான்.

ஒரு வாழ்க்கை.. பொருளில்லாத ஒரு வாழ்க்கை.. வாழ்ந்திருக்கிறாள் தன் தங்கை.

இவ்வளவு ஆழமான உணர்வுகளை உடையவளாக இருப்பாள் என்பதைத் தான் புரிந்து கொள்ளாமல் போனோமே என்று நொந்து கொண்டான்.

இப்போது வருத்தப்பட்டு என்ன பயன்?

''உனக்குத் தெரியுமில்லடா? என்னைக்கு அண்ணா... நான் சந்தோஷமாத்தான் இருக்கேன்னு.. நீ சொல்றியோ.. அன்னைக்குத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன்..'' என்றான்.

அவள் குரலில் உண்மையாகவே தெரிந்த பாசம் கண்டு அவளுக்கு ஒரு நிமிடம் நெகிழ்ந்துதான் போனாள். ஆனால் உடனே பட்ட வேதனைகளின் நினைவு வர மீண்டும் மனம் பாறையாக இறுகிக் கொண்டது.

கனத்த மனத்தோடு மெல்லிய குரலில் சொன்னாள்.

''அண்ணா! உனக்கு என்ன வேணுமோ.. அது நடந்தது. உன் கௌரவம் காப்பாத்தப்பட்டது. உன்னோட அந்தஸ்த் துக்கேத்த முறையில விஷயங்கள் நடந்தது. உனக்கு எல்லா விதத்திலும் திருப்தி கிடைச்சது..? அப்புறம்.. என்ன?'' என்றாள்.

குரலே ஒரு விதமான சில்லிட்ட தன்மையுடன் இருந்தது.

'நீ நினைத்த எல்லாமும் நடந்தது. ஆனால் என் ஆத்மா செத்துப் போனது.' என்று தங்கை சொல்லாமல் சொல்கிறாள் என்பது புரிய விக்கித்துப் போனவனாய் அமர்ந்திருந்தான்.

''ஏம்மா! மேற்கொண்டு பேசறதுக்கு ஒண்ணுமே.. இல்லையா?''

''இல்லை!''

''இனிமேலாவது.. உன் லைஃப்ல சந்தோஷமா?''

அவள் முகம் சிவக்கக் கோபத்துடன் அவனை உறுத்துப் பார்த்தாள்.

''இனிமேலாவது.. என் லைஃபை வாழறதுக்கு எனக்கு உரிமை குடுங்க..! என் பிரச்சினைகளை நான் தீத்துக் கறேன்'' என்றாள்.

பிரசாத் எழுந்தான்.

''சரிம்மா! வினை விதைச்சவன் வினை அறுத்துத் தான் ஆகணும். அறுக்கறேன். ஆனால், என் அன்பை மட்டும் சந்தேகிக்காதே.''

''அண்ணா! உன்னோடது அன்பு இல்லை! விலங்கு!'' என்றாள்.

அந்த வார்த்தைகளினால் அடி வாங்கியது போல் உணர்ந்த பிரசாத் இனிமேலும் தங்கையிடம் பேசிப் பிரயோஜனமில்லை என்று நினைத்தான்.



எழுந்தான்!

மறுபடியும் அப்பாவின் அறையை எட்டிப் பார்த்தான். தங்கையோடு வந்து விட்ட அப்பாவும், அம்மாவும் அவனுக்கு ஆறுதல் சொல்ல முயன்றார்கள்.

''அப்பா! இன்னும் சித்ரா... என்னை மன்னிக்கவே மாட்டேங்கறா..!'' என்றான்.

தன்னையும் மீறிக் குலுங்கி அழுது விட்டான்.

சோபாவில் அமர்ந்தபடி குலுங்கிக் குலுங்கி அழுகிற மகனை அப்பா ஆதரவுடன் அணைத்துக் கொண்டார்.

''என்னப்பா.. செய்றது? அவளுக்குக் கோபம் தீரவே யில்லை. இனிமே வாழ்க்கையை மாத்த முடியுமா?'' என்றார் அப்பா இறங்கிப் போன குரலில்.

''இல்லப்பா.. எப்படியாவது அவள் சந்தோஷமான வாழ்க்கை வாழணும்..''

''எனக்கென்னமோ.. அவ மனசு ரொம்ப இறுகிப் போன மாதிரித்தான் தோணுது. நீ இனிமே அவளுக்கு அட்வைஸ் செய்யவோ.. வருத்தப்படவோ.. செய்யாதே! உன் வழியைப் பாரு...'' என்றார்.

அதை ஏற்றுக் கொண்டானோ இல்லையோ.. ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகி விட்டான்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். கிளம்பி விட்டான்.

பிரசாத் கிளம்பிச் செல்வது தெரிந்திருந்தும் சித்ரலேகா எழுந்து வரவில்லை.

அப்பா வருத்தத்தோடு அவளைப் போய்ப் பார்த்தார்.

''எப்ப... இருந்தும்மா... உன் மனசு இப்படிக் கல்லாப் போச்சு...'' என்று கேட்டார்.

மறுபடியும் அவள் அதே இறுக்கமான முகபாவத்துடன் தந்தையைப் பார்த்தாள்.

''அப்பா... பரவாயில்லை! இப்பவாவது எனக்கு மன சுன்னு ஒண்ணு இருந்ததுன்னு ஒத்துக்கறீங்களே'' என்றாள்.

''சித்ரா..! எவ்வளவு மென்மையான பொண்ணா இருந்தே!'' என்றார்.

''தட் இஸ்.. கரெக்ட்..! இருந்தேன்..! எனக்கும் மன சுன்னு ஒண்ணு இருந்தது. ஆனா, அது செத்துப் போய் ரொம்ப நாளாச்சு'' என்றாள்.

''அம்மா.. இப்பத்த வாழ்க்கைக்கு அது நல்லதில்லே!'' என்றார் அப்பா.

''கவலைப் படாதீங்கப்பா! எனக்கு போராடி என் உரிமைகளை நிலை நாட்டிக்கத் தெரியலேன்னாலும் நடிக்கத் தெரிஞ்சிருக்கு. என் மனசும், ஆத்மாவும் அழுது கிட்டே இருந்தாலும்.. சிரிச்சுகிட்டே வாழறதுக்குப் பழகி யிருக்கேன்...'' என்றாள்.

அப்பா... உச்சுக் கொட்டினார். ரேணுகாவும் கவலை யோடு பார்த்தாள்.

''இனிப் பேசிப் பிரயோஜனமில்லை'' என்றார் மனைவி யிடம்.

எப்போதும் போலவே அம்மா மௌனமாகவே நின்றார்.

மறுபடியும் அப்பா உச்சுக் கொட்டினார்.

''என்னைக்கு நீ பேசியிருக்கே?'' என்றார். இந்த முறை அம்மா வாயைத் திறந்தார்.

''என்னைக்கு இந்த வீட்ல லேடீஸ் பேச்சுக்கு மதிப்புக் குடுத்திருக்கீங்க?'' என்றார்.

அப்பா கொஞ்சம் திடுக்கிட்டுத்தான் போனார். பிறகு பேச்சை மாற்றி.



''சரிம்மா.. நீ ரெஸ்ட்.. எடு?'' என்று சொல்லி விட்டு.. அறையை விட்டு வெளியேறினார்கள்.

* * *

காரை ஓட்டிக் கொண்டே பிரசாத் யோசனையில் ஆழ்ந்தான்.

நிலைமை மேலும்.. மேலும்.. சிக்கலாகிக் கொண்டே போகிறது. இளஞ்செழியன் இத்தனை நாட்களுக்குப் பிறகு.. திரும்பவும் வரவேண்டுமா? அதுவும் இத்தனை வசதியோடு..?''

மீண்டும் குழப்பம் ஏற்படும்.

தங்கை இப்போதைய வாழ்வில் இருந்து வெளியே வந்தால் என்ன செய்ய முடியும்?

என்ன செய்ய முடியும்?

ஒன்றும் செய்வதற்கில்லை. இவள் பழைய சித்ரலேகா அல்ல. படித்தவள். அதிலும் சட்டம் படித்தவள்.

தன் வாழ்க்கையை என்ன செய்ய வேண்டுமென்று அவளுக்குத் தெரியும். அதைத் தெளிவாகவே சொல்லி விட்டாள்.

இன்னும் குழப்பம் நேராமல் இருக்க வேண்டும் என்றால் என்ன செய்வது?

திடீரென்று மாற்றங்கள் நிகழ்ந்தால் உறவுக்காரர்களுக்கு என்ன பதில் சொல்வது?

என்ன சொல்ல முடியும் சொன்னால் மட்டும் எடு பட்டுப் போய் விடுமா?

யோசிக்க யோசிக்கத் தலைதான் வலித்தது. அப்போது தான் அந்த யோசனை தோன்றியது.

சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்று தோன்றியது.

ஆமாம்!

அதுதான் நல்லது!

செல்போனை எடுத்தான். தனது உதவியாளரிடம் சொன்னான்.

''ரகு! சி.எல்.கே. டிராவல்ஸின் ஓனர்கிட்டே பேசணும். அவரோட நம்பர் பிடிச்சுக் குடு'' என்றான்.

இரண்டே நிமிஷத்தில் நம்பர் கிடைத்தது.

''ஹல்லோ! நான் பிரசாத் பேசறேன்...''

''எந்த பிரசாத்?''

''சித்ரலேகாவோட பிரதர்..!'

''ஓ!''

''நான் உங்களைப் பாக்கணும்?''

''எதுக்கு..?''

''ப்ளீஸ். ஒரு பத்து நிமிஷம்...''

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது..

''சரி.. வாங்க!'' என்று குரல்.

இளஞ்செழியன் குப்பென்று எழுகிற கோபத்துடன் புருவங்களை நெறித்துக் கொண்டு செல்போனை ஆஃப் செய்கையில் பூங்குழலியின் படத்தை மார்போடு சேர்த்துக் கொண்டு சித்ரலேகா நெஞ்சு வெடிக்க அழுது கொண்டிருந்தாள்.

## 9

''சார்! மிஸ்டர் பிரசாத்தாம். உங்களைப் பார்க்க வந்திருக்காரு..'' என்றான் வேலு அறைக்கு வெளியில் இருந்த ரிசப்ஷனிஸ் டின் சீட்டில் அமர்ந்தபடி.



''ஏன்.. நீ பேசறே? ரிசப்ஷனிஸ்ட் எங்கே?'' என்ற கேள்விதான் பதிலாக வந்தது.

''சார்! மணி எட்டாச்சு.. நான்தான் ஏழு மணிக்கு அனுப்பி வச்சேன்.''

''ஈவினிங்.. டைம்க்கு வருமே அந்தப் பொண்ணு வர்லையா?''

''இல்லை.. சார்! அந்தப் பொண்ணோட குழந்தைக்கு உடம்பு சரியில்லையாம். அதான் நானே பாத்துக்கறேன்.. சார்.. மிஸ்டர்.. பிரசாத்..'' என்று மறுபடியும் இழுத்தான்.

''நான் போர்ட் மீட்டிங்ல இருக்கேன். கொஞ்ச நேரம் வெயிட் பண்ணச் சொல்லு..'' என்றான்.

பிரசாத்துக்கு அவமானமாக இருந்தது. ஆனாலும் பொறுத்துக் கொண்டு காத்திருந்தான்.

காபி வந்தது!

மறுக்காமல் வாங்கிக் குடித்தான். எழுந்து சற்று அலுவலகத்தின் வெளியில் நின்று சுற்றிலும் பார்த்தான்.

அலுவலகத்தின் முன்னாலே சிறிய உருண்டையான பாறைகளால் ஆன ஒரு செயற்கை மலை குட்டியாக இருந்தது. அதன் உச்சியில் இருந்து ஒரு பவுண்டன் கிளம்பியது.

சிவபெருமான் தலையிலிருந்து விழுகிற கங்கையைப் போல அது விழுகின்ற காட்சி பார்ப்பதற்கு அதற்கான விளக்குகளின் ஒளியில் அழகாக இருந்தது.

அந்த செயற்கை மலையைச் சுற்றிலும் பச்சைப் பசே லென்ற புல்வெளி ''லான்'' என்பார்களே அது போல.. அது ஒரு வட்ட வடிவத்திற்குள்.

வட்டத்திற்கு முன்னாலேயே வந்து முடிந்த நடை பாதை வட்டத்தின் இரண்டு புறமும் பிரிந்து.. அலுவல கத்தை நோக்கி வந்தது.

எல்லா.. இடங்களிலும் அவனது ரசனையின் மேம்பாடு தெரியுது.

தங்கை சித்ரலேகா கூட ரசனை உணர்வு அதிகம் உள்ளவள். எதைக் கண்டாலும் ரசிப்பாள். அடுப்படியில் அம்மா சமைக்கும்போது உதவிக்கு வந்தால் குனிந்து காஸ் ஸ்டவ்வின் நெருப்பைப் பார்ப்பாள்.

''அண்ணா.. இந்த நீல நிறம் எவ்வளவு அழகா.. இருக்கு பாரேன்..'' என்பாள்.

நெருப்புக் கங்குகளை சாம்பிராணிக் கரண்டியில் போட்டு சாம்பிராணி போடுவதற்கு அம்மா தயார் செய்கையில் அந்த சாம்பிராணிக் கரண்டியைக் கீழே வைத்து மண்டியிட்டு அமர்ந்து ஊதி ஊதிச் சிவந்து நிற்கிற நெருப்புக் கங்குகளை ரசிப்பாள். கலகலவென சிரித்து மகிழ்வாள்.

கை வேலை, பின்னல் வேலை என்று எதையாவது செய்து கொண்டிருப்பாள். படிப்பிலும் சுட்டி. எளிமையாக இருப்பாள். அனாவசிய ஆடம்பரம் காட்ட மாட்டாள். ஆனாலும் நல்ல அழகு. அதனால் பிரசாத்துக்கு எப் போதும் பயம்.

அழகு, அறிவு, பணம் மூன்றும் இருக்கிற பெண் என்பதால் வளைத்து விடுவார்களோ என்ற பயம். அவள் என்ன கேட்டாலும் கிடைக்கும். பதினாறு, பதினேழு வயதை எட்டும் வரை அவளுடன் சரிக்குச் சரியாக விளையாடிக் கொண்டிருப்பான்.

''போடி...'பப்பளிமாஸ்!'' என்று அவளும் ''போடா.. கொழுக்கட்டை!'' என்று 'அன்பாக' அழைத்துக் கொள் வார்கள்.

திடீரென்று அது நிகழ்ந்தது.

அவர்களது உறவினர்களில் ஒரு குடும்பத்தில் அவள் வயதொத்த பெண் திடீரென்று காதல் திருமணம் செய்து



கொண்டு போனாள். அது ஒரு பரபரப்பான செய்தியாகப் பேசப்பட்டு அதற்கப்புறம் அடங்கியது. ஆனால் ஆறு மாதம் கழித்து வேறொரு செய்தி வந்தது.

அந்தப் பெண்ணும், அந்தப் பையனும் ஏதோ ஒரு சுற்றுலாத் தளத்தில் தற்கொலை செய்துகொண்டு கிடந் ததைக் கண்டு பிடித்தார்கள்.

இரண்டு குடும்பத்தாரும் கதறியதைப் பார்த்த அன் றைக்கு பிரசாத் முடிவு செய்தான்.

தங்கையைக் கண்காணித்துப் பார்க்க வேண்டும். ''எதனால் ரெண்டு பேரும் செத்தார்கள்?'' என்று விசாரித் தான்.

வசதியாக வாழ்ந்து பழகிய குழந்தைகள். இரண்டு பக்கமும் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததால் வாழ வழியில்லாமல் கஷ்டங்களை பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மை இல்லாமல் பயந்து போய்த் தற்கொலை செய்து கொண்டார்கள்.

அந்தப் பையன் அவர்களுக்கு உறவினன், விளையாட் டாய்த் திரிந்து கொண்டிருந்த பையன் ஏதோ சாகசம் செய்கிறாற் போல் காதலில் இறங்கினான். கடைசியில் பையனே இல்லாமல் போனானே என்ற ஆதங்கம் பிரசாத்தின் மனதை ஆக்கிரமித்துக் கொண்டது.

அப்போதும் அவனுக்கு சின்ன வயது. இருபத்து மூன்று வயதுதான் ஆகியிருந்தது. ஆனால் அப்பாவின் தொழிலில் உடனிருந்த அனுபவத்தால் பிரச்சினையைக் கையாளும் வழி முறைகளை அறிந்திருந்தான். அச்சம் என்பது சிறிதும் கூட இல்லாமல் நடந்து கொள்வான்.

'முரட்டுப் பயல்' 'சண்டியர்' என்றெல்லாம்தான் அப்பா அவனைப் பற்றிச் சொல்லுவார்.

''நேத்திக்கு ஆபீஸ்ல வந்த கஸ்டமரு என்னமோ சொன்னாரு.. ஓங்கி அறைஞ்சு போட்டான்'' என்று சிரிப்பார்.

''ஆமா அவர் திரும்ப அறைஞ்சா.. என்ன செய்வீங்க?'' என்று முணுமுணுப்பாள் சித்ரலேகா.

''அப்புறம்.. கொஞ்சம் கஷ்டம்தான்'' என்பார் அப்பா.

''ஓஹோ! அப்படி அறைஞ்சுடுவானா?'' என்று பாய்ச்சல் காட்டுவான் பிரசாத்.

''இளவயசு அப்படித்தான் இருப்பான். சரியான அனுபவம் கிடைச்சா.. பக்குவம் வந்துரும்'' என்பார் அப்பா.

அவனுடைய அந்த மாதிரி நடத்தைகள் எப்போதும் சித்ரலேகாவுக்குப் பிடிப்பதில்லை. அதற்கு நேர் மாறாக சொந்த முயற்சியில் முன்னேறி ஆனாலும் மிகுந்த பக்குவத்துடன் நடந்து கொள்கிற ஒரு ஆண்மகனைப் பார்த்தவுடன் தங்கைக்குப் பிடித்துப் போயிற்று என்பது பிரசாத்துக்கு அப்போது புரியவில்லை.

அது மட்டுமல்லாமல் ஏதோ தங்கை இளஞ்செழியனின் தோற்றத்தில் மயங்கிப் போனாள் என்பதுதான் அவனது எண்ணமாக இருந்தது.

இப்போது நினைக்கையில் இளஞ்செழியன் இப்போது வளர்ந்து நிற்கிற உயரம் பார்த்து உண்மையாகவே அவனுக்கு அதிர்ச்சியே ஏற்பட்டிருந்தது.

அன்றைக்கு!

தடதடவென்று ஆட்களோடு போய் தங்கையை அழைத்து வந்த அந்த நாள்!

கிட்டத்தட்ட பச்சிளம் பாலகனைப் போன்ற கள்ளமில்லாத முகத்துடன் முகத்தில் லேசான அதிர்ச்சி. குழப்பம் தோன்ற இளஞ்செழியன் என்ற தோற்றம் இப்போது நினைவுக்கு வந்தது.



இப்போது...

குரலிலேயே ஒரு கம்பீரம் தெரிகிறது

அவனைப் பார்ப்பதற்காக. இப்போது தான் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

மீண்டும் சித்ரலேகாவின் வாழ்க்கையில் அவன்!

இதனால் நேரப் போகிற குழப்பங்களை நினைத்தால் அவனுக்கு பயமாக இருந்தது. ஆனால், ஏதாவது ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது.

ஒன்று மட்டும் பிரசாத்துக்குத் தெளிவாக தெரிந்தது. இந்த முறை எடுக்கப் போகிற முடிவுகளில் தனக்கு எந்த விதமான அதிகாரமும் இருக்காது.

இரண்டு பேருமே வளர்ந்து நிற்கிறார்கள். எல்லா வகைகளிலும் படிப்பில், தொழிலில், சொந்தக் காலில் நிற்பதில் என்று.

இனி என்ன ஆகுமோ.. என்ற அச்சம் இப்போது முதன் முதலாகத் தோன்றியது.

எவ்வளவுக்கெவ்வளவு அச்சம் இல்லாதவனாக இருந்தானோ அந்த அளவுக்கு இப்போது அவன் உள்ளத்திலும் அச்சம் தோன்ற ஆரம்பித்திருந்தது.

அதற்குக் காரணம் தங்கை காட்டிய வெறுப்பு! என்னதான் வாழ்க்கையில் செட்டிலாகி இருந்தாலும் தங்கை தன்னை வெறுத்து விட்டாள் என்று புரிந்தது.

தன்னிடம் உள்ள வெறுப்பை அவள் வெளிப்படையாகக் காட்டியிருந்தால் அவன் ஆறுதலடைந்திருப்பான்.

அவனிடம் பேசுவதையே விட்டு விட்டாள். அப்படியே வலிந்து சென்று கேட்டால்,

''எனக்கு எதற்கு உன் மேல் வெறுப்பு? வெறுப்பே இல்லையே!'' என்று ஒரேயடியாக அடித்துப் பேசுவாள்.

இந்த மாதிரி அணுகுமுறை அவனை மிகவும் நோகடித்து விட்டது.

தங்கையின் வாழ்க்கையில் தான் அளவுக்கு மேல் விளையாடி விட்டோம் என்பது புரிந்தது. ஆனால் அத்தனைக்கும் காரணம் அவள் மேல் உள்ள அக்கறை தான் என்பதை எப்படிப் புரிய வைப்பது என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

பேசலாம் என்று போனாலே வெறுமையான அவள் பார்வையின் முன்னே அவன் வெலவெலத்துப் போய் வந்து விடுவான்.

இந்த முறையாவது மறுபடியும் அவள் வாழ்வில் குழப்பம் நேராமல் சரியான தீர்வைக் காண வேண்டும் என்று நினைத்தான். ஆனால் அதுவும் இளஞ்செழியன் கையில்தான் இருக்கிறது என்று புரிந்தது.

சிந்தனையில் ஆழ்ந்து விட்டவன் அப்போது தான் கவனித்தான். மணி எட்டரையாகி இருந்தது.

அப்போது அலுவலக உதவியாளர் வந்து,

''சார்! எம்.டி. உங்களுக்கு டிபன் கொடுக்கச் சொன்னாரு'' என்று பக்கத்து அறைக்கு அழைத்துப் போனான்.

''டிபனா... இப்போது முக்கியம்?'' என்று கோபம் வந்தது. ஆனால், காரியம் ஆக வேண்டுமே? என்று பொய்யாகப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு.

''அப்படியா..?'' என்று சாப்பிடப் போனான்.

சுவையான, தரமான உணவு. ஆனால், அதில் அவன் மனம் செல்லவில்லை.

இப்படிக் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறதே என்ற கோபம்தான் மிஞ்சியது. காட்டிக் கொள்ளவும் வழியில்லாமல் போனது.



சாப்பிட்டு முடித்தான். பிறகும் காத்திருக்க வேண்டியிருந்தது. அவர்கள் கொண்டு போட்டிருந்த அத்தனை மேகஸின்களையும் படித்து முடித்தான்.

நேரம் பார்த்தான்.

மணி பத்தாகியிருந்தது!

ரிசப்ஷனில் அமர்ந்திருந்த வேலுவிடம் கேட்டான்.
''சார்.. போர்ட் மீட்டிங் முடிந்தது.. சார்! இன்னும் டிஸ்கஷனில்தான் இருக்காரு'' என்றான் வேலு.

''சரி.. அப்ப.. நாளைக்கு வந்து பாக்கறேன்னு.. சொல்லுங்க..'' என்றான்.

திரும்பியவன் வேலு சற்றும் எதிர்பாராத விதமாகத் திரும்பித் தள்ளு கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான்.

உண்மையாகவே இளஞ்செழியனின் முன்னால் இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள்.

இளஞ்செழியனின் பார்வை ஒரு கணம் அவன் மேல் படிந்து மீண்டது.

''ஓ.. சாரி!'' என்று வெளியே வந்து விட்டான் பிரசாத்.

ஐந்து நிமிடங்கள் சோபாவில் அமராமல் என்ன செய்யலாம் என்று தெரியாதவனாய் நின்று கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடங்கள் பிறகு கதவு திறந்தது. வேலு அவனை உள்ளே அழைத்துப் போனான்.

இப்போது இளஞ்செழியனைப் பார்த்து பிரசாத் கொஞ்சம் அரண்டுதான் போனான்.

ஜன்னலைப் பார்த்தாற்போல் நின்று கொண்டிருந்தான். திரும்பினான்!

நல்ல உயரம்! இப்போது அறிவின் ஒளியும் முதலாளிக்குரிய தோரணையும் அவனிடத்திலே தெரிந்தது.

ஒன்றும் பேசவில்லை!

மௌனமாக எதிர் சீட்டைக் காட்டினான்.

"லேகாவை நீங்க... பார்த்ததாகக் கேள்விப்பட்டேன்" என்றான் பிரசாத்.

"ஆமா! ரெண்டு பேரோட பிஸினஸ் விஷயமாய் சந்திச்சோம்..." என்றான். படக்கென்று நிறுத்திக் கொண்டான்.

"நடந்து போன விஷயங்களில் இருந்து தெளிவாகி இப்போது சித்ரலேகா.. இப்பத்தான் கொஞ்சம்.. தெம்பாகி இருக்கா.."

"மிஸ்டர். பிரசாத்! இது ஆபீஸ். இங்கே நான் பர்ஸனல் விஷயங்களைப் பேசறதா இல்லை. அதிலயும் என்னோட எந்தப் பர்ஸனல் விஷயங்களையும் உங்ககிட்டே பேசறதா இல்லை."

"நீங்க கோபமா இருக்கீங்க..?"

"பின்னே? சந்தோஷமா உங்களை வரவேற்பேனா? யு ஹேவ் டன் எ கிரேட் டேமேஜ் டு மை லைஃப். என்னோட வாழ்க்கையோட விளையாடி இருக்கீங்க.. அப்புறம்.. சந்தோஷமா உங்ககிட்டே பேச முடியுமா.."

"ப்ளீஸ்! உங்க கோபம் நியாயமானது. ஆனா.. எதுவானாலும் என்கிட்டே பேசுங்க.. இன்ஃபாக்ட்... உங்ககிட்டே மனசு விட்டுப் பேச அப்பாய்ன்மெண்ட் கேக்கத்தான் வந்திருக்கேன்."

"மனசே.. விட்டுப் போனதுக்கப்புறம்.. உங்ககிட்டே என்னத்தை மனசு விட்டுப் பேசறது.."

"ப்ளீஸ்!"

"நான் சொல்லறதை முழுமையாக் கேட்டுக்குங்க.. லேகா.. எனக்கு பதில் சொல்லியே ஆகணும். விட மாட்டேன்.." என்றான்.



"சார்..! அது விஷயமாப் பேசத்தான் நான் வந்திருக்கேன்."

"வேண்டாம்..! இது என் விஷயம்.. எனக்கும் என் மாஜி மனைவிக்குமான விஷயம்.." என்றான்.

"சார்! இதுல சித்ரலேகா தப்பு எதுவுமே.. இல்லே!"

அவன் கப்பென்று வாயை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தான்.

"ப்ளீஸ்! இப்ப நீங்க.. கோபமா.. இருக்கீங்க.. நான் இன்னொரு தடவை வரேன். லேகாவோட வாழ்க்கைக்குப் பாதிப்பில்லாம ஏதாவது ஒரு முடிவு எடுப்போம்."

இளஞ்செழியன் வெறி பிடித்தாற்போல் சிரித்தான்.

"இப்பவும்.. உங்க தங்கை மேல இருக்கற அன்புதான். என்னை ஒரு பொருட்டாவே நினைக்கத் தோணலே. இல்லே கேளுங்க.. மிஸ்டர். பிரசாத் அப்ப இல்லாத பணம், பதவி.. கௌரவம். இன்ஃப்ளுயன்ஸ் எல்லாம் என்கிட்டே இருக்கு. இப்ப நான் உங்களுக்கு ஈக்வலா இருக்கேன். ஏன்... ஒரு பத்தடி உயரத்தில் கூட இருக்கேன். இப்ப மோதுங்க.. என் பலம் என்னன்னு காட்டறேன்."

"ப்ளீஸ்! இளஞ்செழியன்..!"

"பேரைச் சொல்லிக் கூப்பிடாதீங்க..!"

"ஓ.கே...! சார்! இப்ப மோதறதுக்கு அவசியமே இல்லே.."

மறுபடியும் இளஞ்செழியன் சிரித்தான்.

"அதானே! இப்ப மோத வேண்டிய அவசியம்.. என்ன? நான் எட்டு வருஷமாக் கவாகவான்னு காத்திருக்கேன். அவ பாட்டுக்கு மறுபடியும் கல்யாணம் பண்ணிகிட்டு.. வீட்டுக்காரர் உங்களாட்டந்தான் பிஸினஸ் மேன்ங்கறா.. குழந்தை இருக்குங்கிறா.. குழந்தைக்குப் பேரு.. பூங்குழலிங்கறா.. எந்தப் பேரு..? நானும் அவளும் சேர்ந்து

எங்க குழந்தைக்கு வக்கறதாக் கனவு கண்ட பேரு. என்னை எவ்வளவு மடையனா நினைச்சுகிட்டிருக்கா..?"

பிரசாத்.. இடிந்து போனான்.

"இப்படியெல்லாம்.. எப்ப சொன்னா?"

"அதான்.. அந்த அழகான பிஸினஸ் மீட்டிங்கிலதான்!"

"இனி.. என்ன செய்யப் போறீங்க?"

"இனி.. நான்.. என்ன செய்யணுன்னு நான் எதுக்கு உங்ககிட்டே டிஸ்கஸ் செய்யணும். நான் என்ன செய்யணும்னு நான் பாத்துக்கறேன். நீங்க கிளம்பினாத் தேவலை..." என்றான்.

பிரசாத்தின் முகம் அவமானத்தால் சிவந்து போனது. ஆனால் உள்ளுக்குள்ளே குழப்பமும் இருந்தது.

எழுந்தான்!

இளஞ்செழியன் கிண்டலாகப் பார்த்தான்.

"என்ன பாக்கறீங்க! பணம் கௌரவம்.. அந்தஸ்து.. எல்லாம் வந்திருக்கு.. ஐ.. மேக் இட்.. வெரி.. கிளியர்.. அன்பு, பாசம், காதல் எல்லாம் இப்ப எனக்குள்ளே செத்துப் போயாச்சு. அவ்வளவு ஏன்? கருணைன்றது துளிக்கூட இல்லே!" என்றான்.

பிரசாத் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு வெளியேறினான்.

அவன் வெளியேறிய அடுத்த கணம் இளஞ்செழியன் முற்றிலும் தளர்ந்து போய் அமர்ந்தான். கண்களில் கண்ணீர் கரை கட்டினாற் போல் நின்றது.

## 10

வேலு புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். இன்று வந்து விட்டுப் போன மனிதரை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று யோசித்தான்.



சமீப காலத்தில் பார்த்த ஏதோ ஒரு முகத்தின் சாயல் என்று தோன்றியது.

பிரசாத் கிளம்பிப் போன பின் தனது முதலாளியை எட்டிப் பார்த்தான்.

தீவிர சிந்தனையில் அமர்ந்திருந்தான். அது மட்டு மல்ல இத்தனை நாள் பார்த்திராத அளவுக்குக் கோபமும், இளக்கமான மனோபாவமும் மாறி மாறிப் பின்னிக் கொண்ட மாதிரி ஒரு தோற்றத்தில் அமர்ந்திருந்தான்.

எப்போதும் இளஞ்செழியனின் நிர்வாகத் திறமை பற்றி அவனுக்கு ஆச்சரியம். மனதுக்குள் என்ன இருக்கிற தென்று காட்ட மாட்டான். ஆனால் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வான். எங்கே கருணை காட்ட வேண்டுமோ அங்கே கருணை காட்டுவான். எங்கே கண்டு கொள்ளாமல் போக வேண்டுமோ அங்கே கண்டு கொள்ளாமல் போய் விடுவான்.

கால் டாக்ஸி, மற்றும் டாக்ஸி சர்வீஸ் ஏற்பாடு செய்த புதிது. அவன் பத்து கார்களை மொத்தமாக வாங்கினான். அந்த செய்தி பரவிய உடனே ஒரே ஒரு கார் வைத்துக் கொண்டிருக்கிற டிரைவர்கள் பலர் அவனிடம் வந்து "டைஅப்" வைத்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

இளஞ்செழியனுக்கு எப்படிக் கழற்றி விடுவதென்பது தெரியவில்லை.

"பத்தாயிரம் ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும். ஓட்டுகிற அளவுக்கு வருகிற வருமானத்தில் பத்து பர்சன்ட் கட்ட வேண்டும்" என்று என்னென்னவோ சொல்லிப் பார்த்தான். எல்லா நிபந்தனைக்கும் ஒத்துக் கொண்டார்கள். அவர்கள் டெபாசிட்டாகக் கொடுத்த தொகைகளிலேயே இரண்டு கார்கள் வாங்கி விட்டான்.

அந்த இரண்டு கார்களிலும் வருகிற வருமானத்தை ஒதுக்கி வைத்து விடுவான். வருடத்தில் நான்கு முறை ஈரோட்டைச் சுற்றியிருக்கிற அனாதை இல்லங்களில் வயிறார விருந்தளிப்பான்.

வேலுவுக்குத் தெரியும். அதில் ஒன்று அவனது பிறந்த நாள் மற்ற இரண்டு நாட்கள் அவனது அம்மாவும், அப்பாவும் பிறந்த நாட்கள். ஆனால் மற்றொரு பிறந்த நாள் யாருடையது என்று இதுவரை அவனுக்குத் தெரிந்திருக்க வில்லை. அவனும் சொல்வதில்லை. வேலுவும் துணிந்து கேட்கவில்லை.

கார் சர்வீஸுக்கு.. உள்ளூர் வண்டிகளுக்கு மட்டும் வயர்லெஸ் கனெக்ஷன் இருந்தது. தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படும்.

அந்த மாதிரிப் பேச்சுக்கள் சில சமயம் சுவாரசியமாக இருக்கும்.

''மேடம்! டிராப் பண்ணியாச்சு..! அடுத்த பிக்கப் எங்கே?'' என்று கேட்பார் டிரைவர்.

''பத்து நிமஷம் அதே ஏரியாவில இருங்க.. சொல்றோம்..'' என்று அலுவலகப் பெண்கள் பதில் சொல்வார்கள்.

அதில் இரண்டு மூன்று பேர்கள் இடக்கு மடக்காகவே பேசுவார்கள்.

''மேடம்! டிராப் பண்ணியாச்சு. இன்னும் அரைமணி நேரத்துக்குப் பிக்கப் கிடையாது.''

''ஹல்லோ! அதை நாங்க சொல்லணும்.''

''நீங்க சொன்னாலும் சரி.. சொல்லாட்டாலும் சரி..''

''சரி.. எதுக்கு அரை மணி நேரம்..''

''ம். டீ குடிக்கறதுக்குத்தான்..!''

''டீ குடிக்கறதுக்கு அரை மணி நேரமா?''



''ஆத்தி.. ஆத்தி.. ஊத்தி உறிஞ்சிக் குடிக்க வேண டாமா?''

''ஒரு நாளைக்கு.. எம்.டி. கிட்ட மாட்டப் போறீங்க.. பாருங்க..''

''இதென்னடா.. எளவு.. அநியாயமா இருக்கு.. டீ குடிச்சா.. எம்.டி.கிட்ட மாட்டி விடுவீங்களா?''

''டீ குடிக்கறதுக்காக மாட்டி விட மாட்டோம். அந்த இடக்குப் பேச்சு.. அதான் ஊத்தி ஆத்தி.. உறிஞ்சி..'' என்று சொல்லிக் கொண்டிருந்த பெண்ணின் குரல் பாதியிலேயே தடை படும்.

நிஜமாகவே பின்னால் இளஞ்செழியன் நின்று கொண் டிருப்பான்.

''ஐயோ.. நம்ம.. எம்.டி. திடீர்னு லைன்ல வந்தாலும் வருவார். அதுவும் காத்தாட்டமா.. வருவாரு.. புயலாட் டமா.. பேசுவாரு..'' என்று அவன் மேலும் பேசுகையில் அந்த அலுவலகப் பெண் குறுக்கிட்டாள்.

''இப்ப.. இங்கதான் இருக்காரு..'' என்று.

அந்தப் பக்கம் டிரைவருக்கு உதறல் எடுத்து விட்டது இளஞ்செழியனே லைனில் என்று.

''அது.. யாரு.. ராகவனா..?''

''ஆமா.. ஆமா.. சர்.. சார்.''

''சரி.. அரைமணி நேரம் டீ சாப்பிடக் கேட்டீங்க. அதுல பத்து நிமிஷம்... இப்படி அரட்டையாகவே போயிருச்சே..''

''அது.. வந்து..''

''பரவால்லே.. பரவால்லே! வரவேண்டாம்.. அங்கயே டீ குடிச்சுட்டு அடுத்த ஆர்டர் வரவரைக்கும் இருங்க..''

''சார்..!'' என்று அவன் மேலே பேசுமுன் இளஞ் செழியன் புன்னகையுடன் எழுந்து போய்விட்டான்.

அரை மணி நேரத்தில் அலுவலகப் பெண்ணுக்கு அழைப்பு.''

''ஏம்மா... அந்த ராகவன்.. என்ன? வெறும் தமாஷ் மட்டும்தானா?''

''ஆமா.. சார்! சும்மா கொஞ்சம் தமாஷ் பேசுவாரு.. மத்தபடி டீசன்ட்..''

''ஓ.கே.! கொஞ்சம் கலாட்டாவும் வேணும்தான். ஆனா.. அது எங்கயும் எல்லை மீறிடாம.''

''சார் ராகவனுக்குக் கல்யாணமாகி குழந்தை இருக்கு.. நல்லவர்தான்.''

''ஓ.கே.!'' என்று அனுப்பினான். ஆனால் அந்தப் பெண் தள்ளு கதவைத் தள்ளுவதற்கு முன் ''ம்மா! இந்த மாதிரி இன்ட்ரஸ்டிங்காப் பேச்சு நடக்கும்போது எனக்கும் லைன் குடுங்க. நல்லா சுவாரசியமாய்த்தான் இருக்கும் போல இருக்கு..'' என்றான்.

சட்டென்று சிரித்தான்!

அவன் முகம் மலர்ந்து சிரிப்பதை சற்றே வியப்போடு பார்த்துவிட்டு,

''அது... வந்து... சார்... சரிங்க.. சார்'' என்று உளறிக் கொட்டிவிட்டு வெளியேறினாள்.

அதற்குப் பிறகு!

எப்போது வேண்டுமானாலும் லைனில் வருவார் என்பது புரிந்தது.

வேடிக்கைப் பேச்சுக்களை ரசிக்கிறார் என்பதால் எல்லாரும் இயல்பாகக் கலாட்டாக்கள் செய்வார்கள். ஆனால், எப்போது வேண்டுமானாலும் எம்.டி. லைனில் வருவார் என்பதால் தேவையற்ற பேச்சுக்களும், ரசனைக் குறைவான பேச்சுக்களும் தவிர்க்கப்பட்டன.



இதுபோல நிர்வாக முறைகளில் அவன் செய்த புதுமைகளைப் பார்த்து வேலு கிட்டத்தட்ட அவனது ரசிகனே யாகிப் போனான். ஆனால் இப்போது முதன் முறையாக எம்.டி.யின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்று தோன்றியது.

'ஆஹா..! இப்போது புரிகிறது..' என்று எண்ணிக் கொண்டான்.

'பிரசாத்துக்கும், சித்ரலேகா மேடத்துக்கும் ஜாடை ஒரே மாதிரி இருக்கிறது. அநேகமாக பிரசாத் சித்ரலேகாவின் சகோதரனாக இருக்க வேண்டும்.'

'அடடா! இப்போது விஷயம் புரிகிறது. இந்தச் சித்ரலேகா மேடத்தைத் தரிசித்த பின்புதான் எம்.டி. அடிக்கடி மூடு மாறி விடுகிறார்.' யோசிக்க ஆரம்பித்தான்.

அடுத்த நாள்!

அவன் தொடர்பு கொண்ட ஆள் யாரென்பது இளஞ்செழியனுக்கு மட்டும் தெரிந்திருந்தால் அவனைக் கடித்தே குதறியிருப்பான்.

* * *

''ஏப்பா.. நீ எதுக்கு அவனைப் போய்ப் பார்த்தே!'' என்றார் சௌந்தரராஜன். ஆனா அதுக்கு முன்னதாகவே ''வேணும் கற மட்டும் ரெண்டு பேரும் பேசியாச்சு'' என்றான்.

என்ன பேசினார்கள் என்பதையும் சொன்னான். சௌந்தர ராஜனின் நெற்றியில் குழப்ப முடிச்சுக்கள் விழுந்தன.

''ம்ஹூம்! சித்ராவே இதையெல்லாம் அந்தத் தம்பி கிட்டே சொல்லியிருக்காளாமா?'' என்றார்.

முகத்தில் கவலை தோன்றியது.

''என்கிட்டே அப்படியெல்லாம் பேசினதாவெல்லாம் சொல்லலியே'' என்றார் அப்பா.

''என்னத்தைப் பேசினாங்களோ.. இனி என்ன ஆகப் போகுதோ.. தெரியலையே..'' என்று புலம்புகிற மகனிடம் அப்பா சொன்னார்.

''தம்பி! எது எப்படிப் போனாலும் சரி.. முடிவுகளை அவங்களே எடுக்கட்டும். விட்ரு. முடிவுகளும் சரி. அதோட விளைவுகளையும் சரி.. அவர்களே பாத்துக்கட்டும். உதவி கேட்டா மட்டும் செஞ்சாப் போதும்'' என்றார்.

''அப்படித்தான் செய்யணும்'' என்று போகிற மகனைப் பார்த்தார்.

பழைய வேகம் இல்லாதவனாய் முற்றிலும் தளர்ந்தவனாய்ப் போகிற மகனைப் பார்த்தார் சௌந்திரராஜன்.

அவருக்கும் மனம் உருகியது.

இளமை வேகத்தில் சகோதரி மேல் அன்பை அதிகாரமாய்ச் செலுத்திய மகன் அதற்காக வேண்டுமட்டும் வருத்தப்பட்டு விட்டான். வருத்தப்படுகிறான் என்பது புரிய அவரும் கலக்கத்தோடுதான் நின்றார்.

மகளின் வாழ்க்கையில் இனி எப்படிப்பட்ட புயல்கள் வீசப் போகிறதோ என்ற எண்ணம் அவருக்கும்தான் இருந்தது. நெஞ்சில் கவலையும் குழப்பமும் தோன்றியது.

* * *

''மேடம்.. இப்ப வந்துருவாரு சார்!'' என்றான் வேலு.

''வரட்டும்.. நான் சைட்டில இருக்கேன்'' அவங்க டீமை அங்கே வரச் சொல்லுங்க..'' என்றாள்.

வீட்டு வசதி வங்கியின் குழுவே வந்து இறங்கியது. அங்கேயே போடப்பட்டிருந்த டென்டில் அமர்ந்து மேலும் சற்று நேரம் ஆலோசனை செய்தார்கள்.

''மேடம்! மூணு ஃபேஸ்ல பண்றோம். முதல்ல இந்தப் பக்கம் ஐம்பது கட்டிடம் ஆரம்பிக்கிறோம்'' என்றார்கள்.



ஆரம்ப கட்ட முதலீடாக.. தொழிலாளர்களின் சேமிப்பு தொகை கொஞ்சம் எடுத்துக் கொள்ளலாம் என்று திட்ட மிட்டிருந்தார்கள். அதை சொல்லத் தேவையில்லை யென்று முடிவு செய்திருந்தான்.

''இனிஷியல் அமௌன்ட் நாங்க அரேன்ஜ் செஞ்சு கறோம். காண்டிராக்டர்ஸ் எங்களுக்கு ஹெல்ப் பண் றாங்க... இந்த ஐம்பது கட்டிடமும் மேல வரும்போது அடுத்த ஐம்பது கட்டிடம் ஆரம்பிக்கிறோம். இப்படியே இந்த ஆறு மாசத்துக்குள்ள மொத்த வீடுகளும் கட்ட ஆர பிச்சுடுவோம். ஒரே சமயத்துல வேலை நடக்கறதுனா அனேகமா ஒன்றரை வருஷத்துக்குள்ள வேலை மு யும்னு எதிர்பார்க்கறோம்.''

''செய்ங்க..! ஆனா க்யூரிங்குக்கு வேணும்கற அ வுக்கு டைம் குடுங்க..''

''அதெல்லாம்.. நல்ல காண்ட்ராக்டர்தான். அவங் கிட்டே ஸ்பெஸிஃபிகேஷன்ஸ் எல்லாம் தெளிவா குடுத்துருக்கு..'' என்றான் இளஞ்செழியன் கம்பெனியின் மேனேஜர்.

''சரி.. உங்களோடது பெரிய ப்ராஜக்ட்டா இருக்கறது னால.. நான் மேலே பேசறேன். ஒரு மாசத்துக்குள்ளவே ஒரு அமௌன்ட் உங்களுக்கு சேங்ஷன் பண்றோம் அதுவுமில்லாம.. நீங்க.. பெரிய அளவுல டெபாசிட் வே செஞ்சிருக்கீங்க..'' என்றாள் சித்ரலேகா.

''தாங்க்ஸ்.. மேடம்!'' என்றான்.

முழுவதுமாகப் பேச்சு வார்த்தை முடிய பிற்பகல் ஆகி விட்டது.

உணவும் ஏற்பாடு செய்திருந்தான்.

உணவுண்டதற்குப் பின் கிடைத்த இடைவெளியில் எல்லாருடனும் நின்று அளவளாவினான்.

பின்னும் அவள் விடைபெற்றுச் செல்கையில் அவனும் கார் வரை சென்றான்.

''மேடம்! நேத்து உங்க பிரதர் என்னைப் பார்க்க வந்திருந்தார்.''

சித்ரலேகா நின்றாள்.

''யார் பிரசாத்தா?'' என்றாள். கண்களில் கவலை தோன்றியது.

''ஆமாம்.. மேடம்!'' என்றான்.

''ஓ..!'' என்றாள். சற்று நேரம் செயலற்றவள் போல் நின்றாள்.

''ஏதாவது ஹார்ஷா.. பேசினாரா?''

''ஹார்ஷா..?'' கசப்பாகச் சிரித்தான்.

''அவரு பேசலே.. மேடம்! நான்தான் பேசினேன்'' என்றான்.

சித்ரலேகா மௌனமாக நின்றாள்.

தாங்கள் இரண்டாம் முறையாகச் சந்தித்த இந்தக் கால கட்டத்துக்குள் முதன் முறையாக அவன் கண்களில் கோபம் தெரிவதைக் கண்டாள்.

''மேடம்! நான் நியாயமாத்தான் கேட்டேன். இப்ப என்கிட்டே பணம், அந்தஸ்து, கௌரவம் இன்ஃப்ளுயன்ஸ் எல்லாமே இருக்கு. ஆனா, எனக்குக் கடந்த காலத்தைக் குடுக்க முடியுமான்னு கேட்டேன். அவரால பதில் சொல்ல முடியலே.. எனக்கு சொந்தமான ஒன்றை நான் இழந்தேன். எட்டு வருஷம்.. எட்டு வருஷம்..'' என்று பல்லைக் கடித்தவன் சட்டென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''மேடம்! பெட்டர் நீங்க புறப்படுங்க.. இப்ப எது பேசினாலும் சரியாகாது. ஆனா, ஒரு நாள்.. ஒரு நாள் நீங்க நடந்ததைப் பத்தியெல்லாம் என்கிட்டே பேசியே



ஆகணும். என் கேள்விகளுக்குப் பதில் சொல்லியே ஆகணும்'' என்றான்.

குரலை உயர்த்தவில்லை முகத்தில் சிரித்த பாவம். ஆனால், வார்த்தைகள் சம்மட்டி அடியாக விழுந்தன.

சித்ரலேகாவின் நெஞ்சுக்குள் கத்தி பாய்ந்தாற்போல உணர்ந்தாள்.

பயம் தொண்டைக்குள் ஏறியது.

''நானும் சந்தோஷமா இல்லே!'' என்றாள் முணுமுணுப்பாக.

''எப்படி இருக்க முடியும்?'' என்றான் உறுமலாக.

''பேசாமல் இருந்த என் மேல வந்து விழுந்து பிடுங்கினாற்போல விஷயங்களை நடத்திட்டு அவங்கவங்க.. எதுவுமே நடக்காதது மாதிரி... போயிட்டிருந்தா....'' என்றான்.

சித்ரலேகா பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள். அழுகையை அடக்க வேண்டி இருந்தது.

சட்டென்று தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டான்.

''ஓ.கே. மேடம்! அது நம்ம பர்ஸனல் விஷயம்! அது பத்தியும் பேசத்தான் வேணும். ஆனா, இப்போதைக்கு ப்ராஜக்ட்ல கான்ஸன்ட்ரேட் பண்ணுவோம்'' என்றான்.

அதே சமயம் பின்னால் வந்த வேலுவின் காதில் ''நம்ம பர்ஸனல் மேட்டர்'' என்ற வார்த்தைகள் மட்டும் காதில் விழுந்தது..

இருவருக்கும் நடுவில் ஏதோ இருக்கிறது என்ற எண்ணம் மேலும் வலுப்பட்டது.

சித்ரலேகாவின் குடும்பமும், தனது குடும்பமும் மறுபடியும் கவலையில் ஆழ்ந்து விட்டார்கள் என்பது தெரியாமல் இளஞ்செழியன் சில திட்டங்கள் போட ஆரம்பித்தான்.

அந்தத் திட்டங்களினால் சித்ரலேகாவின் வாழ்க்கையில் ஏற்படப் போகிற விபரீதங்கள் அவனுக்குப் புரிந்தே இருந்தது. ஆனால், பிரசாத்தின் வருகையாலும், அவள் பேச்சாலும் அவனுக்குள் கோபம்தான் ஏற்பட்டது.

எல்லாரும் அவளுடைய வாழ்க்கை சிதைந்து போகக் கூடாது என்றுதான் கவலைப்படுகிறார்கள். ஏன்.. தன்னுடைய பெற்றோரும் கூட.

இந்தப் பிரச்சினைகளினால் தன்னுடைய வாழ்வில் இழந்த எட்டாண்டுகள். பட்ட வேதனைகள் ஏங்கிய ஏக்கங்கள் இதற்கெல்லாம் மதிப்பே இல்லையா? அதைப் பற்றி யாரும் யோசிக்க மாட்டேன் என்கிறார்களே என்று கோபம்.. எல்லார் மேலும்.. எழுந்தது. அத்தனை கோபமும் அதற்குக் காரணமான சித்ரலேகாவின் மேல் திரும்பியது.

கம்பீரமாக நடமாடுகிறாள். அழகாக உடை உடுத்திக் கொண்டு தனது கல்வியின் பெருமையை எல்லாம் வெளிக் காட்டுகிற மாதிரி பேசிக் கொண்டு..!

'சே! கொஞ்சமாவது முகத்தில் வருத்தம் காட்டுகிறாளா?'

கோபம் குமிழியிட்டுப் பொங்கியது. ஆனால் அவனது பஞ்சு போன்ற அன்பு மனம் ஒரு ஓரத்தில் சொன்னது.

'வேண்டாம்.. அவளும் சூழ்நிலைக்கு பலியானவள்தான். நீயும்தான் கம்பீரமாக நடமாடுகிறாய் ஒரு தொழிலையே தூக்கி நிறுத்தியிருக்கிறாய். ஆனால் உன் துக்கத்தை வெளிக்காட்டியிருக்கிறாயா? அது போலத்தான் அவளுக்கும் உள்ளே ரணம் இருக்கும். வெளியே சிரித்துக் கொண்டு நடமாடுவாளாயிருக்கும்' என்று வாதாடியது.

கடைசியில் அவன் மனமே ஜெயித்தது.



## 11

அதிகாலை.இரண்டு மணிக்கே விழித்து விட்டான். அதற்கு மேல் உறக்கம் வரவில்லை.

எழுந்தான் இளஞ்செழியன் அப்போதே குளித்தான். வெளியே புறப்பட்டான்.

அவனது பெற்றோருக்கு அவன் எந்த நேரம் வேண்டுமானாலும் கிளம்புவது, வருவது என்று வழக்கமாகிப் போனதால் எதுவும் கேட்கவில்லை.

காரை அவிநாசிக்கு ஓட்டினான். அவிநாசி அருகில் போகும்போது விடியற்காலமாகி விட்டது.

தமிழ்நாடு முழுவதும் அவனது பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தமையால் ஓரிடத்தில் காரை நிறுத்தச் சொல்லி விட்டு வந்து கொண்டிருந்த ஏதோ ஒரு வண்டியில் அமர்ந்தான்.

அந்த வண்டியும் ஈரோடு போய்க் கொண்டிருந்தது. முதலாளி ஏறியதால் டிரைவரும், கண்டக்டரும் வணக்கம் சொன்னார்கள். எந்தவிதமான வித்தியாசமும் காட்டாமல் அமைதியாக ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டான். அது கடைசி வரிசைக்கு முன் இருக்கை.

முன்னாலே ஒரு கணவனும், மனைவியும் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

மனைவி கணவனிடம் கேட்டுக் கொண்டிருந்தாள்:

''ஏங்க... நல்லதா.. ஒரு காபி குடிக்கணும்'' என்று.

"பொறு! சி.எல்.கே. டிராவல்ஸ்காரங்க நடத்தற ஓட்டல்களே வரிசையா இருக்கு. அங்க போனா கண்டிப்பா காபி குடிக்கலாம்'' என்றார்.

இளஞ்செழியன் ஒரு தினப்பத்திரிகை எடுத்து பிரித்தபடி அமர்ந்து கொண்டான்.

''ஆமான்னா! எல்லாருமே பேசிக்கறா... இவாளோட சர்வீஸ் நன்னா இருக்கு. அங்கங்கே சுத்தமான ஃபுட் கிடைக்கறதுக்கு ஏற்பாடு செஞ்சிருக்கான்னு.. ஆனா, சில சில சின்னச் சின்ன விஷயங்களை எல்லாரும் மறந்தா்றா..'' என்றாள்.

''சித்த சும்மாற்றி..! நேக்கு இப்பத்தான் தூக்கம் நன்னா வா்றது'' என்று எரிந்து விழுந்தார் கணவன்.

இளஞ்செழியன் சிரித்துக் கொண்டான்.

ஈரோடு பஸ் ஸ்டாண்டின் நுழைவாயில் முன்பாகவே அவர்கள் கம்பெனிக்கென்று இடம் இருந்தது. அங்கே தான் அவர்களது ஹோட்டல் இருக்கிறது. வீட்டு முறையில் தயாரிக்கப்படும் உணவு என்பதால் பயணிகள் விரும்பி உண்பார்கள்.

'இப்போது இன்னும் கூட ஏதோ தேவைகள் இருக்கிற மாதிரி இருக்கிறதே' என்று எண்ணிக் கொண்டான்.

பல பயணிகள் அந்த நிறுத்தத்தில் இறங்கி பால், காபி என்று சாப்பிடுவார்கள்.

அவனும் இறங்கி ஹோட்டலுக்குள் நுழைந்தான். இளஞ்செழியன் நுழைந்தவுடன் கொஞ்சம் சலசலப்பு ஏற்பட்டது.

''ப்ளீஸ்! ப்ளீஸ்!'' என்று எல்லாரையும் அமர்த்தி விட்டு அவன் அந்தத் தம்பதியர் அமர்ந்திருந்த டேபிளுக்கு அருகில் போய் அமர்ந்தான்.

மெதுவாகப் பேச்சு கொடுத்தான்.

''மேடம்! எங்க பஸ்ல எல்லா வசதிகளும் இருக்கா...?'' என்றான்.

''ரொம்ப நல்லா இருக்கு. டிராவலிங் ரொம்ப வசதியா இருக்கு. இந்த மாதிரி சுத்தமான ஹோட்டல் ஃபுட்



எல்லாம் வசதியா இருக்கு. ஆனா, இன்னும் கொஞ்சம்..'' என்று சொல்ல ஆரம்பித்தவுடனே அவள் கணவன் தோளில் இடித்தான்.

''ஹேய்.. சும்மாயிரு'' என்பது போல் கண்காட்டினான்.

''ப்ளீஸ்! சார் அவங்க சொல்லட்டும். அதை நான் தப்பா எடுத்துக்க மாட்டேன். கண்டிப்பா.. அதை இம்ப்ரூவ்மென்டுக்கு ஏற்ற மாதிரி ஒரு சஜ்ஜஷன் மாதிரி எடுத்துக்குவேன்'' என்றான்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தாற் போல் அந்தப் பெண் படபடவென்று பேசினாள்.

''சார்! மனுஷங்களோட தேவைகள் என்னென்னன்னு நல்லா யோசிச்சு.. யோசிச்சு.. ஏற்பாடுகள் செய்யறீங்க.. அதுல இன்னொரு விஷயமும் ஏற்பாடு செஞ்சீங்கன்னா பரவாயில்லை.''

''சொல்லுங்க.. மேடம்!'' என்று சிறியதாக ஒரு குறிப்புகள் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டான்.

''சார்! ஒவ்வொரு மூணு மணி நேரம் பயணத்துக்கு இடையிலயும் ஒரு சின்ன ஹோட்டல் இருக்கற மாதிரி ஏற்பாடு செஞ்சிருக்கீங்க.. ஆனா, அதுல இன்னொரு சின்ன விஷயமும் ஏற்பாடு செய்யணும்'' என்றாள்.

''சொல்லுங்க.. மேடம்! வித் பிளஷர்'' என்றான் இளஞ்செழியன்.

''மெஸ் இருக்கிற இடங்கள்ல எல்லாம் கூடவே டாய்லெட் வசதியும் ஏற்பாடு பண்ணிக் குடுங்க.. சார்.''

''ஓ..! மேடம்.. அதான்! இந்த மாதிரி மெயினான இடங்கள்ல.. இருக்கே!''

''இல்ல சார்! வயசானவங்க.. வருவாங்க! சுகர்.. பி.பி. பேஷன்ட்ஸ் வரலாம்.. பெண்கள் வரலாம்.. கர்ப்பிணிப்

பெண்கள் வர்றாங்க..! அவுங்க எல்லாருக்குமே யூஸ் பண்ணிக்கறதுக்கு வசதிகள் இருக்கணும்'' என்றாள் அந்தப் பெண்.

இளஞ்செழியன் புன்னகைத்தான். ''ஆமா.. நீங்க சொல்ற பாயிண்ட் கரெக்ட்தான்..'' என்று ஏற்றுக் கொண்டான்.

அன்றைக்கு அவன் வீட்டுக்கு பிற்பகல் உணவுக்கு வந்தான். பெற்றோர்களுக்கு சற்று நேரம் ஒதுக்கியவன் உடனடியாக அந்தப் பெண் சொன்ன யோசனைகளைப் பற்றிப் பேசுவதற்காகத் தனது போர்ட் ஆஃப் டைரக்டர்களை அழைத்தான். பேசினான்.

எல்லாருமே அந்த யோசனைக்குப் பின்னே இருந்த நியாயமான கருத்தை ஆதரித்தார்கள்.

இரண்டு நாட்கள் அது குறித்துத் திட்டமிட்டான். தனது வழக்கமான கட்டிட காண்ட்ராக்டர்களைத் தொடர்பு கொண்டான்.

தங்கள் கம்பெனிக்கு சொந்தமான பஸ் நிறுத்தங்கள் இருக்கிற இடங்களில் எல்லாம் அதுபோலக் கழிப்பறைகள். தேவைப்பட்டால் சற்றே அமர்ந்து கொள்கிற மாதிரி ஓய்வறைகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதற்கான முதல் கட்ட ஏற்பாடுகள் முடித்து விட்டு நிமிர்ந்தான்.

அவனைச் சுற்றி இருக்கிற எல்லாருக்குமே இரண்டு மூன்று நாட்களுக்குச் சரியாக வேலை இருந்தது. அதற்குப் பிறகுதான் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்தினான். அன்றைக்கு!

தனது அறைக்கு வந்தான் இளஞ்செழியன்.

வேலு அப்போதுதான் சொன்னான்.

''சார்! சித்ரலேகா மேடம் போன் பண்ணினாங்க.''

''ஓ.. எப்ப?''



''காலையில இருந்து ரெண்டு மூணு தரம் போன் பண்ணிட்டாங்க.''

''சரி.. கனெக்ட்.. பண்ணு..!'' என்றான். சித்ரலேகாவை அழைத்தான் வேலு.

''மேடம்! எங்க சார்.. லைன்ல இருக்காரு..'' என்றான்.

''ஓ.. சரி.. குடுங்க!''

''குட் மார்னிங்..!'' என்றாள்.

''குட் மார்னிங்.. சொல்லுங்க..'' என்றான் இளஞ்செழியன் சுருக்கமாக.

''சார்! மற்ற பார்ட்டிகளுக்கு மாதிரியில்லாமல் உங்களுக்கு இனிஷியலாவே ஒரு பெரிய தொகை அலாட் பண்ணியிருக்காங்க..'' என்றாள்.

அவள் குரலில் தெரிந்த உற்சாகத்தை அவன் கண்டு கொள்ளவே இல்லை.

''தாங்க்ஸ்! எப்ப டிஸ்பர்ஸ் செய்யறீங்க..!''

''இம்மீடியட்டா! உங்களோட டாகுமெண்ட்ஸ் வெரிஃபிகேஷன் எல்லாம் முடிஞ்சுது.. நாளைக்கே உங்களுக்கு அந்தப் பணம் செக்காக் குடுத்தர்றோம்'' என்றாள்.

''தட்ஸ்... நைஸ்...'' என்றான்.

''சார்... அதுக்காக சில ஃபார்மாலிட்டீஸ் இருக்கு.. நீங்க.. கொஞ்சம் எங்க ஆபீஸுக்கு வர வேண்டியிருக்கும்'' என்றாள்.

''பை ஆல் மீன்ஸ்'' என்றான்.

''எப்ப வரணும்?''

''சார்! இப்ப.. உங்களால வர முடியுமா?''

''ஓ..! நான் வேற ஒரு பிளான்ல இருக்கேன். அந்த வேலைகள் முடிக்கறதுக்கே எனக்கு நேரம் சரியா இருந்தது. இப்பதான் ஆபீஸுக்குள்ளயே நுழையறேன்.''

"சார்! ஜஸ்ட் ஒரு ஒன் அவர் ஸ்பேர் பண்ணுங்க. நான் உங்க பி.ஏ. வேலு சார் கிட்டே காண்டாக்ட் பண்ணி இனிஷியலா ரெடி பண்ண வேண்டிய டாகுமென்ட்ஸை யெல்லாம் தயார் பண்ணச் சொல்லிட்டேன். அவரும் தயார் பண்ணிட்டார். இனி ஃபைனல் ஸ்டேஜில உங்க கையெழுத்து மட்டும்தான் தேவையிருக்கு...'' என்றாள்.

''ஓ.கே...! நான் இன்னும் ஒன் அவர்ல வரேன்'' என்றான்.

புறப்பட்டு வந்தான்!

காரில் இருந்து இறங்கி கம்பீரமாக நடந்து வருகிற அவனைத் தன் அறையில் இருந்து கவனித்துக் கொண் டிருந்தாள் சித்ரலேகா.

எட்டாண்டுகளில் எத்தனை மாற்றம்.

பால் மனம் மாறாது முகம் என்பது போய் முகத்தில் தோள்களில் எல்லாம் இப்போது தசைப் பிடிப்பு இருந்தது.

நடந்து வருகிற போதே ஒரு வேகம் இருந்தது. உள்ளே நுழையும் போதே ஒரே பார்வையில் அலுவலகம் முழுவதையும் அளந்து விட்டான் என்பது தெரிந்தது.

தங்களது தனிப்பட்ட வாழ்க்கை காலம் பற்றி அன் றைக்கு உறுமலாகப் பேசினானே அன்றைக்கு இரவில் அவளுக்கு உறக்கம் வரவில்லை.

இதயத்துக்குள்ளே பயம் ஏற்பட்டது.

எதற்காக அண்ணன் போய்ப் பார்த்தான் என்பது தெரியவில்லை. அண்ணனை எதற்காக அவர் அவமானப்



படுத்தி அனுப்ப வேண்டும் என்று அவளுக்கு அச்சமாக இருந்தது.

தன்னைப் பார்த்ததில் இருந்து தங்கள் சொந்த வாழ்க் கையைப் பற்றி அவன் ஏதும் கேட்கவில்லை என்ற அச்சம் அவளுக்குள் இருந்தது.

எப்போது கேட்கப் போகிறானோ என்ற எண்ணமும் இருந்தது. ஆனால், கடுமையான முக பாவத்துடன் ''எனக் கும் கணக்குத் தீர்க்க வேண்டியிருக்கிறது'' என்று அவன் சொன்னதைக் கேட்டு அவளுக்குள்ளே பெரும் அச்சம் தோன்றியது.

இரண்டு மூன்று நாட்களுக்கு அது குறித்த அச்சமும் உள்ளே ஓடிக் கொண்டேதான் இருந்தது. ஆனால், ஒரு கட்டத்தில் தெளிவு ஏற்பட்டது.

எப்படியும் இந்த மாதிரி ஒரு சூழ்நிலை வரும் என்பதும், எங்கேயாவது அவனை சந்திக்க வேண்டி வரும் என்பதும் அவள் நினைத்ததுதான். ஆனால், எதிர்பாராத விஷயம் எட்டாண்டு காலத்தில் அவன் இந்த அளவு வளர்ச்சி யடைந்திருக்கக் கூடும் என்பதுதான்.

எப்போது இளஞ்செழியனைச் சந்தித்தோமோ அப்போதே தன் வாழ்க்கை தன் வசம் இல்லாமல் போய் விட்டது. இப்போதும் புயல் வீசத்தான் போகிறது. வீசட்டும் வீசிய தற்குப் பிறகு ஒன்று அதன் விளைவாகத் தான் அழிய வேண்டும் அல்லது அதற்கு நேர் மாறாகத் தனக்கு நிம்மதி கிடைக்க வேண்டும். எதுவானால் என்ன? நிகழட்டும்..! தானும் தயார்தான் என்று முடிவெடுத்தாள்.

அதுபோல் முடிவெடுத்தவுடன் அவளுக்கு மனம் தெளிவாகி விட்டது.

எதையும் சந்திப்பதற்குத் தயாராகி விட்டாள். அதற்குப் பிறகுதான் தொடர்ந்து அவனது பிராஜக்ட்டுக்கு முக்கியத் துவம் அளித்து தனது மேலதிகாரிகளிடம் பேசினாள்.

மேலதிகாரிகளைப் பொறுத்தவரை இத்தனை பெரிய திட்டத்தை இவ்வளவு சுமுகமாகப் பேசி முடித்ததில் அவளைப் பற்றிய மதிப்பு கூடியிருந்தது. அதனால் உட னடியாக இந்தப் பேச்சு வார்த்தைகளை முடித்து செயல் வடிவத்துக்குக் கொண்டு வந்து விட்டால் அவளுக்கும் நிம்மதி என்று தோன்றியது.

தயாரானாள்!

இளஞ்செழியன் தாக்குதல் எதுவாக இருந்தாலும் அதைத் தாங்கிக் கொள்வதற்குத் தயாரானாள்.

* * *

''ஹலோ!'' என்றான் பிரசாத்.

''ஹலோ!'' என்றது அந்தப்புறம் குரல். தான் யார் என்பதையும் தெரிவித்தது.

பிரசாத் ஒரு நிமிஷம் ஆச்சரியமடைந்தாலும் கூடவே இது ஏதோ விதமான வலைவீச்சோ என்றும் பார்த்தான்.

''சொல்லுங்க..!'' என்றான்.

''சொல்றதில்லீங்க... உங்களைச் சந்திக்கணும்..'' என்றது குரல்.

சந்தித்தார்கள்!

வெகு நேரம் பேசினார்கள்!

ஒரு செயல் திட்டம் தீட்டினார்கள்! முடிவில்..!

''அப்பாடா! ஏற்கனவே செஞ்ச தப்பையே நான் இப்ப வும் செஞ்சுரக் கூடாதில்லே. வாழ்க்கை பாதிக்காமல்



இருக்க.. நாம என்னவாவது செய்யணும்னு யோசிச்சேன்.. ரொம்பத் தாங்க்ஸ்'' என்று தன்னுடன் பேசிக் கொண் டிருந்தவரின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

இளஞ்செழியனும், சித்ரலேகாவும் சந்தித்துக் கொண் டார்கள் என்று கேள்விப்பட்டதில் இன்னும், இளஞ் செழியனைச் சந்தித்து விட்டு வந்ததில் இருந்தும் உறக்கம் இல்லாமல் தவித்தவள் அன்றைக்குத்தான் நிம்மதியாக உறங்கினாள்.

* * *

முதல் செக்கை வாங்கிக் கொண்டான் இளஞ்செழியன். ஜி.எம். அந்த முதல் செக்கைக் கொடுக்கையில் தனது குழு சூழ வந்திருந்தான் இளஞ்செழியன்.

எதிரே ஜி.எம். அருகில் சித்ரலேகா நின்று கொண்டிருந் தாள்.

சூழ்நிலையில் மகிழ்ச்சி கலந்திருந்தது. அன்று பிற் பகல் ஒரு பெரிய ஹோட்டலில் விருந்து கொடுத்தான் இளஞ்செழியன்.

விளையாட்டாயும், வேடிக்கையாகவும் அவன் பேசுவதை எல்லாரும் ரசித்தார்கள்.

அந்த மாலை விருந்துக்கு அழகான இளமஞ்சள் கலர் பிரவுன் கலர் பார்டர் உள்ள புடவை அணிந்து வந்திருந் தாள் சித்ரலேகா.

அந்த ஹோட்டலின் ஹாலில் உள்ள மங்கலான விளக்கொளியில் ஏதோ கனவுலகில் இருப்பது போன்ற தோற்றத்தில் தேவதை போல் இருந்தாள்.

தன்னையும் மீறி தனது கண்கள் சித்ரலேகா மீது படிந்து மீள்வதை அவனால் தடுக்கவே முடியவில்லை.

சித்ரலேகாவுக்கும் தன்னால் அவனிடம் ஏற்படுகிற பாதிப்பு புரிந்திருந்தாற்போல் இருந்தது. உள்ளூர அதில் அவளுக்கு ஒரு பெருமிதம் தோன்றினாற் போலவும் இருந்தது.

அந்தப் பெருமிதம் அவன் கண்களில் தோன்றிய வினாடியிலேயே அவன் முகத்தில் மீண்டும் கோபம் தோன்றியது.

விருந்து முடிகிற நேரத்தில் இளஞ்செழியன் ஒரு அறிவிப்பும் செய்தான்.

''சார்! உங்க ஹவுசிங் மேன்சில் வேலை செய்யும் எல்லாருக்கும்.. எங்கள் சி.எல்.கே. டிராவல்ஸில் வி.ஐ.பி. கோட்டாவில் முன் பதிவு செய்யற வாய்ப்பு இனிமேல் குடுக்கறோம்'' என்றான்.

அவர்கள் எல்லாரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

விருந்து முடிந்து எல்லாரும் மகிழ்ச்சியாகக் கலைந் தார்கள். அந்த ஹவுசிங் பாங்கின் முக்கியமான அதி காரிகளுக்கெல்லாம் ஒரு பொக்கேயும், நினைவுப் பரிசும் கொடுத்திருந்தான்.

பொக்கேயைக் கையிலெடுத்துக் கொண்டு கிளம்பிய சித்ரலேகா அதைக் காருக்குள் வைத்தாள். அதற்குள் வேலு மறுபடியும் அவளை அழைத்தான்.

"மேடம்! எங்க ரெக்கார்டுக்கு.. இதுல ஒரு கையெழுத்துப் போடுங்க'' என்று அழைத்தான்.

போய் அது என்ன ரெக்கார்ட் என்பதைப் படித்துப் பார்த்து விட்டு அவள் கையெழுத்துப் போட்டு விட்டு வருவதற்குள் மற்றவர்கள் கிளம்பிவிட்டார்கள்.

அவளும் வெளியே வந்தாள்!



அதே நேரம் இளஞ்செழியனும் வெளியே வந்தான்.

காரைக் கிளப்பினாள்! கார் கிளம்பவில்லை! இறங்கி மறுபடியும் சுற்று முற்றும் பார்க்கையில் அவன் நின்றான்.

''என்ன மேடம்!'' என்றான்.

''கார்.. கிளம்ப மாட்டேங்குது..'' என்றாள்.

இளஞ்செழியன் சுற்று முற்றும் காரை நோட்டம் போட்டான்.

''ஓ... டயர் பஞ்சர்!'' என்றான்.

''மேடம்! ஐ வில் டிராப் யூ...!'' என்றான். அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை. ஏறிக் கொண்டாள்.

அட்ரஸ் சொன்னாள். பெருந்துறை ரோட்டில் இருந்தது பங்களா.

பங்களாவில் நுழையும் முன்பாக அவன் திரும்பி அவளிடம் சொன்னான்.

''லேகா! அப்ப விட உங்ககிட்டே கூடுதலா.. ஒரு அழகு தெரியுது யூ லுக் வெரி ஸ்மார்ட்'' என்றான்.

''தாங்க்ஸ்!'' என்றாள். முகம் சிவந்து விட்டது. நிலம் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

''லேகா!'' என்றான். அவளையும் மீறி அவள் குரல் குழைந்தது.

''ம்..!''

''உங்க குழந்தை யாரோட ஜாடை! அவரோட ஜாடையா.. உங்களோட ஜாடையா?''

''என்னோட ஜாடைதான்...'' என்றாள்.

''ம்..!'' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''லேகா.. ஒரு விஷயம்.. தெரியுமா? நான் இப்ப பிரச்சினை கிளப்பினேன்னா.. கூட உங்க கல்யாணம் சட்டப்படி செல்லாது..'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

கார் பங்களாவுக்குள் சென்று நின்றது. மறுபடியும் அவன் முகம் இறுகியது.

"லேகா! இப்படி மௌனம் சாதிச்சே விஷயங்களை முடிச்சற முடியாது. ஒரு மாசம் டைம் தரேன்.. இந்த விஷயங்கள் பத்தி நீ பேசியே ஆகணும்" என்றான்.

கார் குலுக்கலோடு நின்றது.

## 12

வேலு யோசனையிலேயே இருந்தான்.

வேலுவின் முழுப்பெயர் வேல்முருகன். அவன் இந்த ஆபீஸுக்கு வேலைக்கு வந்து மூன்று வருடங்களாகி இருந்தன.

அவனுடைய தந்தையும் இளஞ்செழியனின் தாய் ராசாத்தியும் அம்மாவும் தூரத்து உறவினர்கள். ஏதோ ஒரு திருமணத்தில் பார்த்து வேலுவின் அம்மா ராசாத்தி அம்மாவிடம் "ஒரு வேலை போட்டுக் குடுங்க" என்று கேட்டார்.

அம்மாவின் உறவுக்காரன் என்பதாலும், பி.காம். படித்திருந்ததாலும் தனது அலுவலகத்தில் ஒரு கிளார்க் போல வேலை கொடுத்தான். ஆனால், வேலு தனது சுட்டிப்பாலும் சுறுசுறுப்பாலும், நேரத்திற்கேற்றாற் போல நடந்து கொள்கிற தன்மையாலும் இளஞ்செழியன் மனத்தில் இடம் பிடித்தான். அப்படியொரு ஆள் தனக்குப் பி.ஏ.வாக அருகில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அப்படித் தேர்ந்தெடுக்கும்போதே சொன்னான்.

"வேலு..! உனக்கு முன்னால வந்தவங்க எல்லாரும் இங்க இருக்காங்க... திடீர்னு உன்னோட சம்பளத்தை



உசத்துனா... நல்லா இருக்காது உனக்கு வேற விதமா ஆலவன்ஸ் மாதிரிக் குடுத்தர்றேன்... சரியா?" என்றான்.

"சரிங்க... சார்!" என்றான் வேலு.

அலுவலகப் பணிகளில் எந்த நேரமும் உடன் இருப் பான். எந்த நேரம் அழைத்தாலும் வருவான். இதற்காக அவனுக்கு அலுவலக வளாகத்துக்குள்ளேயே ஒரு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்து விட்டான் இளஞ் செழியன்.

திடீரென்று வேலுவைத் தனது பி.ஏ. என்கிற அளவுக்கு உயர்த்தியபோது கொஞ்சம் பொறாமைப் பட்ட அக்கவுண டன்ட், மேனேஜர் எல்லாரும் கூட இப்போது தெளிவாகி விட்டார்கள்.

இளஞ்செழியனின் பி.ஏ.வாக இருப்பது என்பது கிட்டத்தட்ட இருபத்து நாலு மணி நேர வேலை என்பதும் இளஞ்செழியன் கேட்கிற கேள்விகளுக்கு உடனடியாக விவரங்கள் கொடுப்பதும் கடினமான வேலை என்று புரிந்து கொண்டதாலோ என்னவோ இப்போது வேலுவுக்குச் சம்பளம் அதிகம் என்று பேசுவதை விட்டு விட்டார்கள்.

இளஞ்செழியனும் வேலுவின் வேலைப் பளுவை உணர்ந்தவனாக அவ்வப்போது வெளியூர்ப் பயணம் அனுப்பி விடுவான். இரண்டு மூன்று நாட்கள்.

"எல்லாத்தையும் மறந்துட்டு... என்ஜாய் பண்ணிட்டு வாப்பா" என்று அனுப்புவான்.

அந்த இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே மற்ற வர்கள் இளஞ்செழியனின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறுவார்கள்.

வேலுவுக்கு எவ்வளவுக்கெவ்வளவு இளஞ்செழிய னிடமும் பயமும் மரியாதையும் இருந்ததோ அந்த அளவுக்கு அவனை நேசிக்க ஆரம்பித்து விட்டான்.

புதிய புதிய சிந்தனைகள், நினைக்கற எதையும் திட்ட மிட்டு செய்து முடிக்கிற திறமை என்று அவனிடத்தில் பாராட்டுவதற்கும், ரசிப்பதற்கும் எத்தனையோ விஷ யங்கள் இருந்தது வேலுவுக்குப் புரிந்தது.

வேலுவும் மிகவும் பணிவாக இருப்பான். அன்பாக இருப்பான். லேசான அசைவில் இளஞ்செழியனின் தேவை என்ன என்று புரிந்து கொண்டு எள் என்னும் முன்னே எண்ணெயாக நிற்பான். ஆனால், எப்போதும் வேல்முருகனுக்குத் தோன்றும். தனது முதலாளிக்குள் ஆழமாக ஏதோ ஒரு காயம் இருக்கிறது என்று.

உடனே தன் தலையில் தானே தட்டிக் கொள்வான். 'இவ்வளவு வசதியும், திறமையும், கம்பீரமும், அழகும் முதலாளிக்கு மனதுக்குள் காயமா! நமக்குத்தான் இல்லாத கற்பனையெல்லாம் செய்கிற அளவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது' என்று. ஆனால், கடந்த பத்து நாட்களாக நடக்கிற நிகழ்ச்சிகளெல்லாம் அவனுக்குள்ளும் ஒரு பரிதவிப்பை ஏற்படுத்தி இருந்தது.

'அடிக்கடி தனிமை நாடுகிறார். ஏதோ ஒரு வேதனை அவரை அரித்துத் தின்கிறது' என்ற எண்ணம் திரும்பத் திரும்பத் தன் மனதில் ஓடுவது குறித்து அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

நேரடியாகக் கேட்பதற்கு பயமாக இருந்தது. அவனாகச் சொல்கிற வரையிலும் வேல்முருகன் எதிலும் அப்படி கேட்டுப் பழக்கம் இல்லை.



இரண்டு தினங்களுக்கு முன் பார்த்தான்.

இளஞ்செழியன் தங்கள் அலுவலகத்தின் முன்னா லிருக்கிற சிட் அவுட்டில் சேரைப் போட்டுக் கொண்டு செடி கொடிகளைப் பார்த்த மாதிரி அமர்ந்திருந்தான். முகத்தில் சொல்லவொன்னாத சோகம் தெரிந்தது.

பார்க்கும்போது வேல்முருகனுக்கே வயிற்றைப் பிசைகிறாற் போல் இருந்தது. 'ஹீரோ வொர்ஷிப்' என் பார்களே அதுபோல் இளஞ்செழியனைத் தனது கனவுக் கதாநாயகனாகப் போற்றிக் கொண்டிருந்தவன் என்பதால் அவனது வேதனையைக் காணச் சகிக்காமல் தவித்துப் போனான்.

என்ன செய்வது என்று தெரியவில்லை.

திடீரென்று ஒரு நாள் 'சர்ப்ரைஸ் விஸிட்' செய்வதற்காக காரை எடுத்துக் கொண்டு தனியாகப் போய்விட்ட போது இளஞ்செழியனின் பெற்றோரைச் சந்தித்தான்.

''வாடா!'' என்று வரவேற்றார் ராசாத்தி. ''வேலை கிடைச்சதுக்கப்புறம் ஆளே எட்டிப் பார்க்கலை'' என்றார்.

''அத்தை! உங்களுக்குத் தெரியுமா? ஓனர் கூடவே இருக்க வேண்டியிருக்கு. எப்ப எவ்வளவு வேலை இருக்குன்னு சொல்லவே முடியாது'' என்றான்.

''ஆமா! அவனுக்கும். வேலைதான்! நம்ம தம்பியும் கூடச் சொல்வான் வேலு இருக்கறது எவ்வளவோ உதவியா இருக்குதுப்பான்னு'' என்றார் தண்டபாணி.

வேலு கொஞ்ச நேரம் அளவளாவிவிட்டு மெதுவாகத் தான் கேட்க வேண்டிய விஷயத்தைக் கேட்டான்.

நீண்ட பெருமூச்சுடனும், அளவு கடந்த வேதனை யுடனும் தண்டபாணி சொன்ன விஷயங்களையெல்லாம் கேட்டான். நொறுங்கிப் போனான்.

'இத்தனை வேதனையை உள்ளே வைத்துக் கொண்டு ஒரு மனிதன் இத்தனை வெற்றிகளைச் சாதிக்க முடியுமா?' என்ற பிரமிப்பு எழுந்தது.

அவனும் வெகுவாக வேதனைப் பட்டான். அத்தை வீட்டிலேயே சாப்பிட்டு விட்டுத் தனது பைக்கில் வீட்டுக்கு வந்த போதும் சரி.. வேலு வேலைகளைச் செய்து கொண்டிருந்த போதும் சரி.. இதே நினைவு மனதுக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டிருக்கிறோம் என்ற நினைவில் நிறைவோடிருக்கிற ஒரு புதுமணப் பெண்ணைப் போல வேலுவும் நிறைவான உணர்வோடு இருந்தான். இளஞ்செழியனின் கீழே வேலை செய்வதைப் பளு நிறைந்த ஒரு விஷயமாக இருந்தாலும் அதற்கேற்ற விதத்தில் வசதிகள் செய்து தந்தான்.

எல்லாருக்கும் பார்த்ததும் பார்த்துச் செய்கிற அவன் வாழ்க்கையில் இத்தனை பெரிய சுழலா என்று கவலை தோன்றியது. ஆனால் இன்னொன்றும் அவன் மனதுக்குள் தோன்றியது.

இளஞ்செழியன் சார்... மட்டும் நினைத்திருந்தால் அவர் மட்டும் நுணுகிப் பார்த்திருந்தால் இந்த விஷயத்தை அவர் எப்படி வேண்டுமானாலும் கையாண்டிருக்க முடியும்? ஆனால், இப்போதும் ஏன் தயக்கத்தில் இருக்கிறார்.

ஆழ்ந்து யோசித்ததில் அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது? தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

'அடடா! இந்த ஒரு விஷயம்தான் மனிதனை எவ்வளவு பாடாய்ப் படுத்துகிறது' என்று எண்ணிக் கொண்டான்.



யாருடைய உணர்வுகளுக்கும் காயமில்லாமல் சிதில மடையாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடியாது என்பதும் அவனுக்குப் புரிந்தது.

காயமடைய வேண்டியவர்கள் யார்? தண்டனை பெற வேண்டியவர்கள் யார்? என்பதுதான் இனித் தீர்மானிக்கப் பட வேண்டிய விஷயம் என்பதும் புரிந்தது. தன் பங்குக்குத் தானும் யோசிக்க ஆரம்பித்தான்.

* * *

''ஹல்லோ..!'' என்றாள் சித்ரலேகா.

''லேகா..!'' என்றது குரல் இளஞ்செழியன்.

''ஹலோ.. சொல்லுங்க..!'' என்றாள் சித்ரலேகா.

''லேகா! எங்க.. கம்பெனி டீலிங்கை முடிச்சுக் குடுத்துக்காக நான் உனக்கு.. சாரி உங்களுக்கு ஒரு விருந்து குடுக்கணும்னு நினைக்கறேன்..''

''ஓ..!'' என்றாள் சித்ரலேகா.

இரண்டு விதமான உணர்வுகளும் தோன்றின. 'வேண்டாம்.. சித்ரலேகா.. இது தேவையில்லை' என்று ஒரு உணர்வு.

மற்றொரு மனசு.

'வேண்டாம்.. பிரச்சினைகளிலிருந்து விலகாதே. சந்திக்கப் பழகு..' என்றது.

ஒரு நிமிடம் யோசித்தாள்.

அதற்குள்ளாக இளஞ்செழியன் யோசித்தான்.

'ஒரு காலத்தில் தன் அருகாமைக்காக அலைந்தவள், தன்னோடு வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்துக் கொண்டதாகச் சொல்லிக் கொண்டவள்..!'

கசப்புடன் புன்னகைத்துக் கொண்டான்.

''வேண்டாம்.. ரொம்பத் தயக்கமா இருந்தா.. வேண்டாம்'' என்றான் சற்று புண்பட்டவனாகவே.

அதற்குள் சித்ரலேகா இடைமறித்தாள்.

''இல்லல்ல... எந்த டைம் சௌகரியப்படும்னு யோசிக்கறேன்'' என்றாள்.

''ஓ..! ஒரு வேளை உங்க ஹஸ்பெண்ட்கிட்டே பர்மிஷன் வாங்கணுமா?''

''இல்லை.. அவர் ஒண்ணும் சொல்ல மாட்டார். அதுவுமில்லாம.. இப்ப.. அவர் என்கூட இல்லை.''

''ஓ..!''

''ஆமா! பிஸினஸ்ல பிஸியா இருக்கார்.''

''வெளிநாடு.. கிளிநாடுன்னு..''

''ம்..!''

''சரி.. அப்ப டைம் நீங்களே சொல்லுங்க..''

''இன்னைக்கு.. ஏழு மணிக்கு..'' என்று ஒரு ஹோட்டல் பெயரைச் சொன்னாள் சித்ரலேகா.

''வேண்டாம்.. லேகா! வெளிய எங்கயும் வேண்டாம். என்னோட கெஸ்ட் ஹவுஸ்ல ஏற்பாடு செய்யறேன்.''

''......!''

''அப்புறம்.. என்னை நம்பி வர்லாம். எந்த சேதமும் இல்லாம.. திருப்பி அனுப்புவேன்..''

அவள் அதைக் கண்டு கொள்ளாதவள் போல் ''ஓ.கே.. ஏழு மணிக்கு..'' என்று கட் செய்யப் போனபோது அவன் இடைமறித்தான்.



''லேகா! இன்னொரு ரிக்வெஸ்ட்..''

''சொல்லுங்க..''

''பூங்குழலியைக் கூட்டிட்டு.. வாங்க! ஐ லைக் டு சீ ஹர்..''

''ஓ..! இப்ப அவங்க.. தாத்தா... பாட்டிகிட்ட இருக்கா.''

''ஓ..! அட்லீஸ்ட் போட்டோவாவது.''

''கொண்டு வரேன்.'' என்றாள்.

போனை வைக்கும்போது குழப்பத்துடனேதான் வைத்தாள் சித்ரலேகா.

ஒரு பக்கம் சித்ரலேகாவைத் தனியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி இருந்தாலும் இன்னொரு பக்கம் தன்னுடைய எல்லாக் கேள்விகளுக்கும் அவள் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொல்வது குறித்துக் கோபமும் அடைந்தான்.

''வரட்டும்'' என்று இரை தேடும் புலியைப் போல் காத்திருந்தான்.

* * *

போட்டோவைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். வழக்கமான புகைப்படங்களைப் போல அல்லாமல் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

அவனது சந்தேகம் புரிந்து கொண்டவள் போல் சித்ரலேகா சொன்னாள்.

''பேக் கிரவுண்ட் மட்டும் கம்ப்யூட்டர்ல அட்ஜஸ்ட் செஞ்சது'' என்று.

''ஓ!'' என்று சமாதானமானான்.

''உங்க அவரு..'' என்று அவன் ஆரம்பிக்க அவள் கையுயர்த்தி,

''ப்ளீஸ்'' அவரைப் பத்தி நாம பேச வேண்டாமே?'' என்றாள்.

''ஓ.கே..! ஓ.கே.!'' என்றான் இளஞ்செழியனும் கையுயர்த்தி.

பொதுப்படையாகப் பேசினார்கள் கவனமாக. அந்தக் கடந்த காலத்தைப் பற்றிப் பேசுவதை மட்டும் தவிர்த் தார்கள்.

சாப்பிட்டு முடிக்கும்வரை இந்த நாடகம் தொடர்ந்தது. அவளுக்குப் பிடித்த ஐட்டங்களாக ஆர்டர் செய்திருந்தான்.

சுணங்காமல், எந்தவித வருத்தமும் இல்லாமல் அவள் நடந்து கொள்வது உள்ளூர அவனுக்குக் கொதிப்பை ஏற்படுத்தியது.

'பார்க்கலாம்! எவ்வளவு தூரம் இப்படியே நடந்து கொள்கிறாள்' என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் எதையும் கண்டு கொள்ளாதவளாக மகிழ்ச்சி யாகவே இருந்தாள்.

சாப்பிட்டு முடித்ததற்குப் பிறகு அவன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''ஏன்.. சித்ரலேகா, உன் மனசுல கொஞ்சம் கூட உறுத்தலே ஏற்படலையா?'' என்று.

''எதுக்காக?'' என்றாள்.

''இல்லே! ஒரு மாசம்.. ஒரு மாசம் மனசொப்பி வாழ்ந் தோமே.. இப்ப.. ஏதோ.. அது போன பிறவி மாதிரி நடந்துக்கறியே.. அதுக்காக..'' என்றான்.

சித்ரலேகா ஒரு நிமிடம் மௌனம் சாதித்தாள். பிறகு முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள். அதன் பிறகு சொன்னாள்.



''அதையெல்லாம் நான் மறந்தாச்சு..'' அவனுக்குக் கோபம் தலைக்கேறியது.

''எப்படி மறப்பே? உன் புருஷனை வேன்னா அப்படி ஏமாத்தலாம். ஊரை ஏமாத்தலாம். உன்னை நீ ஏமாத்திக் கவே முடியாது..''

''என் ஹஸ்பென்ட் ஒண்ணும் பொறுப்புகளில் இருந்து தப்பிக்கிறவர் இல்லே.''

''வாட் டு யூ மீன் பை தட்?''

''ஐ மீன் வாட் ஐ சே!''

''நான் கேட்ட கேள்வி... என்ன மறந்துட்டதா ஏன் பொய் சொல்லிகிட்டுத் திரியறேங்கறதுதான்?''

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

''என்ன மனுஷன் உன் ஹஸ்பென்ட்? தான் ஒரு பகடைக்காயாய்ப் பயன்படுத்தப்படறோம்னு கூட புரிஞ் சுக்க முடியாத ஒரு கல்லுளி மங்கன்...! அவனோட வாழறேங்கறே. ஆனா, நானும், நீயும் நமக்குப் பொறக்கப் போற குழந்தைக்கு என்ன பேரு.. வைக்கலாம்னு நினைச்சமோ அந்தப் பேரை குழந்தைக்கு வச்சிருக்கே! அசிங்கமாயில்லே!''

''அசிங்கத்தைப் பத்தி நீங்க பேசாதீங்க.''

''நான் பேசாமே.. வேற எவன் பேசுவான்?'' கிட்டத் தட்ட அவளைக் குதறி விடுபவனைப் போல் முறைத்தான்.

''ஆமா.. பொறுப்புகள்லேயிருந்து.. தப்பிச்சு ஓடறவங்க யாரும் அந்த மாதிரியெல்லாம் பேசறதுக்கு அதிகாரம் படைச்சவங்க இல்லே..''

"பொறுப்புக்ள்லேயிருந்து தப்பிச்சு.. ஓடறவன்.. யார்.. நானா? நீதானே என் வீட்லயிருந்து வெளியேறிப் போனே? கொஞ்சம் பொறுங்க.. நான் எப்படியாவது திரும்பி வருவேன்னுட்டுப் போனே.. ஆனா.. எட்டு வருஷம் கழிச்சு.. குழந்தையை வேறொருத்தனுக்கு.. சே..'' என்றான் அதற்கு மேல் பேச முடியாமல். கோபத்தால் அவன் முகமும் சிவந்தது.

''இளஞ்செழியன்.. ஒண்ணு நல்லாப் புரிஞ்சுக்குங்க.. ஓடிப் போனது நீங்க.. அந்த ஊர்லயே இருக்காம ஓடிப் போனது.. நான்தான் சொன்ன மாதிரி வந்தேன். அதுக்குக் கொஞ்சம் டைம் பிடிச்சது. ஆனா.. அதுக்குள்ளே.. வேற கல்யாணம் பண்ணிக்கறேன்னுட்டு ஊரையே காலி பண்ணிட்டு.. ஓடிப் போனவர் நீங்க..'' என்றாள்.

அவன் புருவங்கள் நெறிந்தன. ஆனால் சட்டென்று உள்ளுக்குள் நெருடியது.

ஊரை விட்டு விட்டு வெளியேறியது தான்தான். ஆனால்..! ஆனால்..!

திடீரென்று உள்ளுக்குள் அவனுக்கு மின்னல் தாக்கினாற் போல் இருந்தது. சிந்தனையில் ஆழ்ந்தான்.

முற்றிலும் தன் பாவத்தை மாற்றிக் கொண்டான்.

''நீ ஊருக்கு.. வந்தியா? எப்ப?'' என்றான்.

சொன்னாள்.

''ஓ..!''

''என்ன ஓ சும்மா.. சும்மா! வேதனையோட வந்தேன்'' என்றவள் மேலும் சில விவரங்கள் சொன்னாள். இல்லை யில்லை. குற்றம் சாட்டினாள் கடைசியில் கேட்டாள்.



''அப்புறம்.. ஏன்? ஊருக்காக நாடகமாடிக்கிட்டிருக்கீங்க?'' என்றாள்.

இளஞ்செழியன் குழப்பத்தில் ஆழ்ந்தான். ஆனாலும் மீட்டுக் கொண்டான். பிறகு கேட்டான்.

''சரி.. இப்ப.. உண்மை தெரிஞ்சுதில்லே! அப்பக் காம்பன்ஸேஷன் செய்..!'' என்றான்.

''என்ன செய்யணும்?'' என்றாள்.

''உன் ஹஸ்பென்டை டைவர்ஸ்.. செஞ்சுட்டு.. வா.. பூங்குழலியை என் குழந்தையாவே பாத்துக்கறேன்.. இனி.. உன்னை விட்டுக் குடுக்க மாட்டேன்.. லேகா..'' என்றான்.

அவள் அவனை வெறுப்புடன் பார்த்தாள்.

''சே! என் ஹஸ்பென்டுக்கும்.. உங்களுக்கும்.. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். அவரை டைவர்ஸ் பண்ணிட்டு.. உங்களையா? நெவர் போதும்.. என் வாழ்க்கையில.. நான் பண்ணின ஒரு தப்பே.. போதும்..'' என்றாள்.

எழுந்து கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

''வேண்டாம்..! சித்ரலேகா.. என்னை மிருகமாக்காதே..'' என்றான்.

அவள் நின்றாள். அவனைப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தாள். அலட்டிக் கொள்ளாமல் வெளியேறினாள்.

அவன் வெறி கொண்ட மிருகம் போலானான்.

## 13

''டேய்.. உன் பொண்டாட்டியை சித்த அந்தப்புறம்.. கூப்பிடுடா..'' என்றார் ராசாத்தி பாதி கோபமும் பாதி சிரிப்புமாக.

சித்ரலேகா கீழே அமர்ந்து ஊதாங் குழலை வாயில் வைத்துக் கொண்டு ஊதி ஊதி அடுப்பு நெருப்பை எரிய வைக்க குனிந்து கொண்டிருந்தாள். அது எரிவேனா என்றது.

தரையில் அமர்ந்து வேலை செய்கிறாற்போல் அடுப்பு அமைக்கப்பட்டிருந்தது. மண் அடுப்பு. தன் வீட்டில் காஸ் அடுப்பு பார்த்துப் பழகியவளுக்கு இந்த அடுப்பு சமாச் சாரமே ஒரு காட்சிப் பொருளாக இருந்தது.

மண் அடுப்பிலே சாமர்த்தியமாகச் சமைக்கிற இளஞ் செழியனின் அம்மா இன்னொரு ஆச்சரியமாகத் தெரிந்தார்.

வீட்டுக்குப் பின்னாலே இருந்த காம்பவுண்டில் மறை வான பகுதியில் வறட்டி தட்டிக் காய வைத்திருந்தார். அதில் ஒன்றிரண்டு துண்டைப் போட்டுக் கொஞ்சம் மண்ணெண்ணெயை ஊற்றி ஊதாங்குழலை ஊதினால் அடுப்புப் பற்றிக் கொண்டது.

அடுப்புக்கு முன்னாலே ஒரு குட்டிப் பலகை போட்டு அமர்ந்து கொண்டே அவர் காய்கறி நறுக்குவதை சமை யல் செய்வதை ஆசையாகப் பார்த்தாள்.

ஒரு நாள் காய்கறி நறுக்குகிறேன் பேர்வழி என்று நச்சரித்தாளே என்று ''இந்தா இந்த முருங்கைக்காயை நறுக்கு'' என்று கொடுத்தார்.

இரண்டாவது துண்டு அறுப்பதற்குள்ளாகவே ''ஷ்'' என்று விரலைப் பிடித்துக் கொண்டாள். வெட்டிக் கொண்டு விட்டாள்.



ரத்தம் குபுகுபுவென்று பொங்கியது.

''பார்த்தியா. இதுக்குத்தான் சொன்னேன்'' என்று கடிந்து கொண்ட ராசாத்தி சட்டென்று விரலை அழுத்திப் பிடித்தார். கட்டுப் போட்டு விட்டார்.

''ஏன் ராசாத்தி! அந்தப் புள்ளைக்கு எதுக்கு வேலை குடுக்கறே'' என்று கடிந்து கொண்டார்.

''நான் எங்க வேலை குடுத்தேன். அவளாத்தான் வந்து ''குடுங்கத்தே, குடுங்கத்தே''ன்னு பிடுங்கியெடுத்தா இப்பக் கையை அறுத்துகிட்டு நிக்கறா..'' என்றார். ஆனால் குரலில் கவலை தெரிந்தது. அதற்குள் சித்ரலேகாவே திரும்பி,

''இல்ல மாமா! அத்தை வேண்டாம்னுதான் சொன் னாங்க. நான்தான்.. வேலை பழகறேன்னு..'' என்று இழுத் தாள். அவர் புன்னகைத்தார்.

''ஏந்தாயி. இப்ப வேலை பழகலேன்னா என்ன தாயி! எல்லாம் மெதுவா பழகிகிட்டாப் போச்சு. போ சாமி! போய் ரெஸ்ட் எடு.'' என்றார்.

''ஏண்டா சாமி வலிக்குதா'' என்று ராசாத்தி கவலைப் படுவதைப் பார்த்து விட்டு,

''இல்லைங்கத்தை கொஞ்சம் வலியிருக்கு. சரியாய்ப் போயிடும். போன மாசம்தான் டிடி. இன்ஜக்ஷன் போட் டிருக்கு. அதனால வொரி பண்றதுக்கு ஒண்ணுமில்லே!'' என்று அவள் புன்னகைப்பதைப் பார்த்துவிட்டு,

''புள்ளையக் கூட்டிட்டுப் போடா! ரெஸ்ட் எடுக் கட்டும்'' என்றார்.

கூடத்தின் ஓரத்தில் இருந்த அந்த சிறிய அறைக்கு அழைத்துப் போனான்.

''என்னடா வலிக்குதா?'' என்றான்.

மெதுவாக நீவிக் கொடுத்தான்.

அவள் கண்கள் கலங்கத் தலையாட்டினாள்.

அவன் பதறிப் போனான். அவள் சட்டென்று "இல்லே, அத்தையும் மாமாவும் எவ்வளவு பிரியமா இருக்காங்க..." என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

"அப்பாடா! என்னமோன்னு பயந்துட்டேன்" என்றான். கூர்ந்து அவள் முகம் பார்த்தான்.

"என்னடா! அம்மா அப்பா ஞாபகம் வந்துடுச்சா?" என்றான்.

அவள் பல்லைக் கடித்துக் கொண்டாள்.

"ம்!" என்றாள்.

"கொஞ்சம் பொறு!.. போய்ப் பார்க்கலாம்.. என்ன?" என்றான்.

"சரி.." என்றாள்.

இது நடந்து ஒரு வாரம் போயிருக்கும். ஆனால் விடாமல் பிடிவாதமாய்க் காய்கறி நறுக்கக் கற்றுக் கொண்டாள்.

"பரவாயில்லைடா உன் பொண்டாட்டி. பிடிவாதக்காரி மட்டுமல்ல. கெட்டிக்காரிதான்" என்றார் ராசாத்தி பாராட்டாக.

"பின்னே? உன்ற புள்ளையப் புடிவாதமாக் கல்யாணம் பண்ணுனதுலயே அது தெரிஞ்சுருக்கோணுமல்லோ?" என்று சிரித்துக் கொண்டார் தண்டபாணி.

இருவரும் ஒருவரையொருவர் வெட்கத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.



இப்போது சமையல் கற்றுக் கொள்கிறேன் என்று அடுப்பூதிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று "ஏங்க! இங்க வாங்களேன்" என்று அழைக்க அவனும் என்னவோ ஏதோ என்று ஓடி வந்தான்.

"இங்க பாருங்களேன்! இந்த நெருப்புக் கங்கெல்லாம் எவ்வளவு அழகா இருக்கு... ஃபையர் ரெட் அப்படீம்பாங்களே! அது மாதிரி எவ்வளவு அழகா இருக்கு!.. ஒரு மாதிரி ரோஸ் கலர்ல... ஹையோ! எவ்வளவு அழகா இருக்குங்க..." அவனும் அருகில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

அப்போது உள்ளே நுழைந்த அம்மா..

"விடிஞ்சுது போங்க! இப்படி வேடிக்கை பாத்துகிட்டிருந்தா சோறு வடிச்சாப்லதான். அம்மிணி நகரு! சோறு போனாப் போகுது. கஞ்சியைக் கையில் கால்ல ஊத்திகிட்டின்னா என்ற மகன் மனசு நொறுங்கிப் போயிடும். அன்னைக்குக் கையில் காயம் பண்ணிகிட்ட. அன்னைக்கே பையன் ராத்திரியெல்லாம் தூங்கலை" என்று சிரித்தார்.

இரண்டு பேரும் வெட்கத்துடன் நகர்ந்தார்கள். சட்டியில் சோறு பொங்க ஆரம்பித்திருந்தது. ஒரு கிளறு கிளறி விட்டு விட்டுத் திரும்பி கேலியாகப் பார்த்துச் சிரித்தார்.

அதே நேரம் அப்பா உள்ளே வந்தார்.

"பாருங்க அத்தை கேலி பண்றாங்க" என்று அவன் மார்பில் சாய அவன் வெலவெலத்துப் போனான்.

தன்மேல் முழுமையாகச் சாயு முன்னே தடுத்து நிறுத்தினான்.

"ஏய் அம்மா.. அப்பா.." என்று கிசுகிசுத்தான். அவளும் சட்டென்று சமாளித்துக் கொண்டாள்.

அம்மா ஜாடையில் இதைக் கவனித்தவர் "ஏண்டா புள்ளைய மிரட்டறே! எத்தனை சொத்து சுகத்தையெல்

லாம் விட்டுப் போட்டு நம்மளை நம்பி வந்திருக்கறா!'' என்று கன்னம் வழித்துக் கொஞ்சினார்.

அவளுக்கென்று வாங்கி வைத்திருந்த ஹார்லிக்ஸை 'கலந்து கொண்டு வந்து கொடுத்தார்.

''சோறு வடிக்கறதுக்கு முன்னாடி நெருப்பைப் பார்த்தே உன்ற மருமக டையர்டாயிப் போயிட்டாளாக்கும். எனக்கு இதுவரைக்கும் குடுத்திருக்கியா ஹார்லிக்ஸ்'' என்று இளஞ் செழியன் பொய்ச் சண்டை போடவும் பெற்றோர்கள் சிரித்தார்கள்.

''உன்னையும் அவளையும் இணை போடாதடா! அது சொகுசா வளர்ந்த புள்ளை! போடா! இவங்க கண்ணு வைக் கறாங்க. போ! போய் ரூம்ல உட்கார்ந்து குடி போ! சமையல் மெதுவா கத்துகிட்டா போகுது. பொம்பளைன்னு பொறந்தா சமையல் செஞ்சுதான் ஆகணும். மெதுவாப் பழகிக்கலாம்'' என்று அனுப்பி வைத்தார்.

தன் மாமியார் தன்னைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங் குவது போல் தாங்குவது கண்டு அவளும் நெகிழ்ந்துதான் போனாள்.

அறைக்குப் போனதும் அவன் சிணுங்கினான். ''ஹேய்! நீ வந்தாலும் வந்தே! என்னை மனுஷனாவே மதிக்க மாட்டேங்கறாங்க! மருமக! மருமக! அப்படி இருந்தவ! இப்படி இருந்தவ! கஷ்டப்படாமல் பாத்துக்கணுங்கறாங்க. கஷ்டப்படாம எப்படி காதலிக்கறதாம்?'' என்று இடிஇடி யென்று சிரிக்க அவள் செல்லமாக ஒரு அடிஅடித்து விட்டு அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவன் அன்புடன் அருகில் இழுத்துக் கொண்டான். ''ஹேய்! இங்க என்ன இருக்குன்னு... எல்லாத்தையும் விட்டுட்டு... வந்து இப்படி அவஸ்தைப் படறே!'' என் றான் உணர்வுகள் செறிந்த குரலில்.



அவள் அவன் இதயத்தைத் தொட்டுக் காட்டினாள். ''என்னைச் சுத்தி இருக்கறவங்களுக்கு இல்லாத விஷயம் ஒண்ணு இங்க இருக்கு'' என்றாள்.

''ம்'' என்றான் கிறக்கமாக.

''இதயம்'' என்றான். மேலும் இழைந்தபடி சொன்னாள்.

''அதைவிட முக்கியமான விஷயம் அதுக்குள்ளே நான் இருக்கேன்'' என்றாள்.

அவனும் உருகினான்.

''இதயத்துக்குள்ளே மட்டுமா! என்னோட எண்ணம்.. செயல் எல்லாத்திலயும்...!'' என்றான். அவளும் உருகினாள்.

கிட்டத்தட்ட ஒரு மாதம் அவர்களது அன்பில் கரைந்து போயிருந்தாள் சித்ரலேகா.

இடையில் ஒரு நாள் கேட்டாள். ''ஏங்க! எத்தனை நாளைக்கு நாம வீட்டில உட்கார்ந்துகிட்டு இருக்கிறது?'' என்று.

''லேகா! அப்பா... என்ன சொல்றாங்கன்னா.. ஒரு மாசம் பேசாம இருங்க..! அதுக்கப்புறம் ஒரு கம்ப்யூட்டர் சென்டர் சின்னதா ஆரம்பிக்கலாம்ங்கறார்'' என்று சொன்னான்.

''சரிங்க!'' என்றாள்.

''பணம்?'' என்றாள்.

''அம்மா.. நகையெல்லாம் தர்றாங்களாம். அடகு வச்சு.. ஆரம்பிக்கலாம். இல்லே.. வித்தர்லாம்.. அப்பறம்.. நாம வாங்கிக் குடுத்தர்லாம்'' என்றான்.

''ஐயோ... வேண்டாங்க! நான் என் நகைகளைத் தர்றேன்.''

''வேண்டாம்.. லேகா! சூழ்நிலை சரியாகறவரைக்கும் உன் கழுத்துக் கையில் இருப்பதெல்லாம் அப்படியேதான் இருக்கணும். கவலைப்படாதே. நமக்குத்தான் கொஞ்சம்.. நிலம்.. இருக்கில்லே! அந்த நிலத்துல கையை வைக்க வேண்டாம்ங்கறதுக்காகத்தான் நகையை விக்கறது.''

அவள் சமாதானமடையவில்லை.

''பாவம்! அத்தை! அவங்களே கொஞ்சம்தான் வச்சிருக் காங்க.'' என்று அவள் அங்கலாய்ப்பதை தாயிடம் சொன்னான்.

மருமகளின் அக்கறை கண்டு மாமியார் மகிழ்ந்து போனார்.

''பரவால்லடி... தங்கம்! எங்களுக்கு நீயும் அவனும் தான் சொத்து.. நீங்க நல்லாயிருந்தாப் போதும். அதுக்கு மேலே எதுக்கு சொத்து..'' என்று கன்னம் வழித்து திருஷ்டி சுத்தினார்.

அவ்வளவு அருமையாகத் தன் பெற்றோருடன் ஒட்டிக் கொண்டாள்!

எப்படி அதையெல்லாம் மறந்தாள்!

ஒரு துளியும் கூட உறக்கம் பிடிக்காமல் புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டிருந்தான் இளஞ்செழியன்.

அது நாடகமா! இல்லை இன்றைக்கு நடித்து விட்டுப் போகிறாளே.. இது நாடகமா? ஆனால், தன்னிடத்தில் தவறேயில்லை என்பது போல் அவள் பார்த்த பார்வையும், நின்ற தோரணையும் அவனுக்கு உறுத்தலாக இருந்தது.

இன்றைக்கு அவள் நடந்து கொண்ட விதத்தில் கொஞ்ச நஞ்சம் அவள் மேல் இருந்த நெகிழ்வான உணர்வுகள் கூட அற்றுப் போயின.

நிர்த்தாட்சண்யமாக நிச்சலனமாக...



தெனாவெட்டாக... என்று என்னென்னவோ சொற்கள் அவன் மனதுக்குள் வந்து போயின.

கல்லில் எழுத்துப் போல தான் காதலையும், வேதனையை யும் சுமந்து கொண்டிருக்க.. அவள் நீர் மேல் எழுத்துப் போல உதறி விட்டு விட்டு ஒரு வாழ்க்கை நடத்தியிருக் கிறாள்.

பன்னிரண்டு மணிக்கு.. அவள் செல்போனுக்கு அடித் தான்!

''ஹேய்! சித்ரலேகா..! நீயே நாகரீகமா.. உன் வீட்டுக் காரன்கிட்டே சொல்லி.. டைவர்ஸ்.. கேளு..! இல்லே..!''

''இல்லே..! என்ன செய்வீங்க?'' என்றாள் அவளும் துணிவாகவே நின்றாள்.

''என்ன வேண்ணா.. செய்வேன். அவர் பிஸினஸை அழிப்பேன்.. அவசியப்பட்டா.. அவரையே..''

''ஹலோ..! அவர் சுண்டு விரல் மேல கூட உங்க கை பட முடியாது.''

''அப்படி என்னடி அவன் பெரிய கொம்பனா?''

''ஆமா.. உங்களை மாதிரிக் கொம்பனுக்கெல்லாம்.. கொம்பன்.''

''இங்க.. பாரு.. லேகா.. உனக்கும் எனக்கும்தான் பிரச் சினை. இதுல அவரு தலை எதுக்கு உருளணும்? அது அப்பாவி..! உன் சாகசத்துக்கு பலியான ஒரு ஜன்மம்..''

''நினைச்சதெல்லாம் நடக்காது.. மிஸ்டர்.''

''பேரைச் சொல்லிக் கூப்பிடாதே.. இப்ப நான் சொல் றேன்.. கேட்டுக்க.. நடக்கணும். என்னை எவ்வளவு ஈஸியா முட்டாள் பண்ணியிருக்க.. அதுக்கெல்லாம்.. நான் பதில்

குடுக்க வேண்டாம்? நான் ஏன் இத்தனை நாளாக் கல்யாணம் பண்ணாமக் காத்துகிட்டுக் கிடந்தேன். என்னைக் கிருந்தாலும் என் லைப்ல நீ கிராஸ் பண்ணுவே. அன்னைக்கு உன்கிட்டே கணக்குத் தீர்த்ததுக்கப்புறம் தான். அடுத்த அடி எடுத்து வைக்கணும்னுல்லே காத்து கிட்டிருக்கேன்.''

அவள் கிண்டலாகச் சிரித்தாள்.

''சிரிக்காதே! லேகா! என் லைஃப்ல நீ எவ்வளவு பெரிய டேமேஜ் பண்ணியிருக்கேன்னு தெரியுமா? சிம்பிளாய்ப் போயிருக்க வேண்டிய லைஃப். மேல விழுந்து பிடுங்கி ஒரு மாசம்.. ஒரு மாசம்.. ஒரு மறக்க முடியாத வாழ்க்கை வாழ்ந்துட்டு.. ஜஸ்ட் லைக் தட்.. போயிருக்கே! போன வளாவது சும்மாயிருந்தியா... வேற கல்யாணம் பண்றேன்னு.. எனக்கே.. பத்திரிகை அனுப்பறே..?'' அவன் உறுமினான்.

அந்தப் பக்கம் கனத்த மௌனம் நிலவியது. ''பத்திரிகை உங்களுக்கு வந்துதா?''

''என்னடி கதை கேட்கற மாதிரிக் கேட்கறே?''

''நான் அனுப்பலை!''

''நீ.. அனுப்பலேன்னா.. என்ன? உங்க அருமை அண்ணன்கிட்டே சொல்லி அனுப்பியிருப்பே... வந்துச்சே.'' ''சித்ரலேகா வெட்ஸ் ஹரிபிரகாஷ்ன்னு..''

சித்ரலேகாவிடம் இப்போது மாற்றம் தெரிந்தது.

''ஐம்.. சாரி! இளஞ்செழியன்.. ஐம் வெரி சாரி! என் வாழ்க்கை என் கையில் இல்லாமல் போயிட்டுது. ப்ளீஸ்... இதோட விடுங்க.. இனிமேலாவது நிம்மதியா.. வேற கல்யாணம் பண்ணிக்கிட்டு...''

''வேற கல்யாணம்..! அப்புறம்.. ஏற்கனவே செஞ்ச கல்யாணத்துக்கு என்ன அர்த்தம்? அந்த வெட்டிங் சர்ட்டிபிகேட்டை வைச்சுகிட்டு உங்க எல்லாரோட மானத்தையும் வாங்க வேண்டாம்?''



''அதனால... யாருக்கு.. என்ன பயன்? எல்லாப் பக்கமும் வேதனைதான் மிஞ்சும்.''

''எல்லாரும் வேதனைப்படட்டும். நான் வேதனைப் படலே! எட்டு வருஷமா மனசுக்குள்ள வெறுமையைச் சுமந்துகிட்டு.. வெறி புடிச்ச மாதிரி வெற்றிகளைத் தேடி ஓடிகிட்டு.. எத்தனை வெற்றி கிடைச்ச போதும்.. அதுல ஒரு நிறைவே.. இல்லாம.. வெந்து சாகலை? அந்த வேதனை என்னன்னு.. உனக்குத் தெரிய வேண்டாம்? தெரியணும்.. நெஞ்சில ரணம் சுமந்துகிட்டு அலைஞ்சேனே! அந்த ரணத்துக்குப் பின்னால் இருந்த நேசத்தை உதறிட்டுக் கிளம்பினியே உனக்குத் தெரிய வேண்டாம்!'' என்றான்.

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. அதற்குப் பிறகு சித்ரலேகாவின் தேம்பும் குரல் கேட்டது.

''அழு..! லேகா! இனிமே ஒவ்வொரு நாளும் உனக்கு சாட்டையடிதான். அப்படி அம்போன்னு விட்டுட்டுப் போன தற்கான சரியான காரணம் வர்ற வரைக்கும்.. உன்னைச் சும்மா விட மாட்டேன்.

''கடைசி பட்சம் நான் இழப்புக்கெல்லாம் நீ ஈடு கட்டியாகணும்'' என்றான்.

தேம்பிக் கொண்டே அந்தப் பக்கம் நிற்கிற சித்ரலேகாவை மனக்கண்ணில் பார்த்துக் கொண்டே சற்றும் இரக்கமில்லாமல் சொன்னான்.

''நாளைக்கு ஈவ்னிங் உங்க ஆபீஸ் வர்றேன். பிக்கப் பண்ணிக்கறேன். யோசிச்சு வை. எப்படி என்னோட இழப்புக்களுக்கு ஈடு கட்டப் போறேன்னு..'' என்றான்.

'டொக்'கென்று வைத்தான்.

அந்தப் பக்கம் நெஞ்சு வெடிக்க அழுகிற அவள் குரல் கேட்டும் மனசு இளகாமல் இருக்கையில் சற்று அமர்ந்திருந் தான்.

நடந்த இத்தனை பேச்சையும் தான் மட்டும் அல் லாமல் இன்னொருவரும் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

## 14



மறுநாளெல்லாம் வலுக்கட்டாயமாக அவன் தன்னை வேலையில் ஈடுபடுத்திக் கொண்டான்.

தனியாகத் தானே வேலை செய்தால் மனம் அதில் லயிக்காது என்று நினைத் தானோ என்னவோ காலை எட்டு மணிக்கே ஆபீஸ் வந்து விட்டான்.

அக்கவுண்ட்ஸ் சம்பந்தமான எல்லா பைல்களையும் எடுத்து வரச் சொன்னான்.

வேலுவுக்குப் புரிந்தது!

இன்னைக்கு அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் எல்லாரும் தீர்ந்தார்கள் என்று!

சில குறிப்பிட்ட நாட்களில் அவன் அந்த மாதிரி கிடுக்கிப் பிடி போடுவான். அதிலும் குறிப்பாக நான்கு நாட்கள் அன்னதானம் செய்வார்களே அதில் அந்தக் குறிப்பிட்ட தினம் அன்னதானம் முடிந்த பிறகு ஒரு இரண்டு மூன்று நாட்களுக்கு வெறி பிடித்தாற் போல் அலைந்து கொண் டிருப்பான்.



அக்கவுண்ட்ஸ் செக்ஷன்காரர்கள் அத்தனை பேரும் நொந்து போய் விடுவார்கள். அந்த மாதிரி சமயங்களில் விடுமுறையும் கொடுக்க மாட்டான்.

உண்மையாகவே தவிர்க்க முடியாத சூழ்நிலை என் றால் மட்டுமே.. அதையும் நேரடியாப் பார்த்துத் தெரிந்து கொண்டால் மட்டுமே விடுமுறை அனுமதிக்கப்படும். ஆனால் அக்கவுண்ட்ஸ் செக்ஷன்காரர்கள் அதையும் ஒரு நன்மைக்காகவே என்று எடுத்துக் கொள்வார்கள். ஏனென் றால் அத்தனை கணக்கு வழக்குகளையும் தோண்டித் துருவி ஆராய்ந்து விடுவான் என்பதால் கிட்டத்தட்ட ஆடிட் மாதிரியாகி விடும்.

எப்போது எதைக் கேட்பானோ என்ற பயத்தில் இருந் தாலும் இரண்டு மூன்று நாட்கள் ஆய்வு முடிந்து விட்டால் அதற்குப் பிறகு மனம் லேசாகி விடுவார்கள். அதற்குப் பிறகு அளவுக்கு மீறி கெடுபிடி செய்து விட்டோம் என்று தோன்றுமோ என்னவோ.. இரண்டு மூன்று நாட்கள் அலுவலகத்தில் விருந்து சுற்றுலா என்று அமர்க்களப் படும்.

அவனும் கூட சில சமயம் உடன் வருவான். அலுவல கப் பணியாளர்களிடம் சற்று தொலைவிலேயே நின்றாலும் குழந்தைகள் நெருங்கி விளையாட அனுமதிப்பான்.

'மாமா..' 'அங்கிள்' என்று குழந்தைகள் தலைமீது ஏறாத குறையாக அவனைச் சுற்றிக் கும்மாளம் போடும்போது ரசித்துச் சிரிப்பான்.

சிலசமயம் பெற்றோர்களை அழைத்து வருவான். புறப்படும்போதே அம்மாவிடம் சொல்லி விடுவான்.

"அம்மா! என்னோட நம்மோட சொந்த வாழ்க்கை பற்றி யார்கிட்டயும் விமர்சிக்கக் கூடாது" என்று.

தொழிலாளர்களோடு கலந்து பழகினாலும் அவர்களும் மகனது சொந்த விஷயங்களைப் பற்றி வாய் திறக்க மாட்டார்கள்.

தனது அலுவலக ஊழியர்களும், அல்லது குடும்பமும் மகிழ்ச்சியாக அளவளாவுவதை லேசான புன்னகையுடன் கவனிப்பான். ரசித்துக் கொள்வான். அதற்குப் பிறகு தனியாக சற்று நடப்பான்.

அப்போதெல்லாம் வேலு நினைத்துக் கொள்வான். தனது முதலாளிக்கு குடும்ப வாழ்க்கையின் மீது வெறுப் பேதும் இல்லை. ஆனால் தொழிலை இன்னும் கொஞ்சம் உயர்த்தியதற்குப் பிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறார் என்று. ஆனால் இப்போது ஏதோ கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது.

முதலாளியின் வாழ்க்கையில் ஏதோ பிரச்சினை இருந்திருக் கிறது. அந்தப் பிரச்சினை அவரை உள்ளுக்குள்ளே அரித்து தின்று கொண்டிருக்கிறது.

உள்ளுக்குள்ளே ஓடிக் கொண்டிருந்த சிந்தனைகளைத் தூக்கி அந்தப்புறம் வைத்து விட்டு அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் எல்லாருக்கும் ''சீக்கிரம் வந்து சேருங்கள்'' என்று செய்தி கொடுத்தாள்.

கணக்கு வழக்குகளில் ஆழ்ந்திருந்த போதும், வேலுவுக்குத் தோன்றியது தனது முதலாளி எதற்காகவோ காத் திருக்கிறார். அந்தக் காத்திருத்தலின் கடுமையைக் குறைப் பதற்காக இப்படி வேலைகளை வைத்துக் கொள்கிறார் என்று.

உண்மைதான்!

இளஞ்செழியன் சித்ரலேகாவிடமிருந்து செய்தி வருவதற் காகத்தான் காத்திருந்தான். அந்தக் கொடுமையான காத் திருப்புக்கு நடுவே நேரம் போக்குவதற்காகவே அவன் ஏதேதோ செய்து கொண்டிருந்தான்.



ஒவ்வொரு நொடியும் எதிர்பார்ப்பிலிருந்தான். இத் தனைக்கும் பகலுணவு தனியாக உண்டால் இறங்காது என்று நினைத்தானோ என்னவோ எப்போதாவது ஒரு முறை அலுவலகத்தில் எல்லாருடனும் அமர்ந்து சாப் பிடுகிற வழக்கத்தை இன்றைக்குக் கடைப்பிடித்தான்.

நேரம் நகர்ந்ததே தவிர எதிர்பார்த்துக் கொண்டிருந்த எந்தச் செய்தியும் வந்து சேரவில்லை.

நான்கு மணியிருக்கும்.

அவன் உள்மனது சொன்னது 'இனிமேல் எந்தச் செய்தியும் வராது...' என்று.

அதற்கு மேல் அவனுக்கும் பொறுமையிருக்கவில்லை. சட்டெனத் தனது அலுவலக சகாக்களிடம்,

''ஓ.கே.! நான் கொஞ்சம் அவசரமா வெளியே போக வேண் டிருக்கு. நாளைக்குக் கண்டின்யூ பண்ணிக்கலாம்'' என்று.

நேராக அந்த வீட்டுக்கடன் வங்கிக்குக் காரை ஓட்டி னான்.

புயல் போல் உள்ளே நுழைந்தான்!

அலுவலக மேனேஜரைச் சந்திக்கப் போனான். ரிசப்ஷ னிஸ்ட் மிகவும் மரியாதையுடன் வரவேற்று அமரச் செய்தாள்.

''சார்! மீட்டிங் போயிட்டிருக்கு. இன்னும் பத்தே நிமி ஷத்துல எல்லாரும் வந்துடுவாங்க சார்'' என்றாள்.

காத்திருந்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து! மீட்டிங் முடிந்து ஒவ்வொரு வரும் அந்த கான்ஃபரன்ஸ் ஹாலை விட்டு வெளியே வந்தார்கள்.

அவன் தனது வெறுப்பை வெளியே காட்டிக் கொள் ளாமல் கவனித்தான்.

வரிசையாக வந்து கொண்டிருந்தவர்களில் வேறொரு பெண்மணி இருந்தாள். சித்ரலேகாவைக் காணவில்லை. ஆனால் இவனைக் கண்டவுடன் மேனேஜரும், ஜி.எம்.மும்.

''ஹலோ! மிஸ்டர். இளஞ்செழியன் என்று ஆர்வமாக வரவேற்றார்கள்.

''சார்... வாங்க.. உட்காருங்க..'' என்று உபசரித்தார்கள். எதையும் காட்டிக் கொள்ளாமல் சற்று நேரம் அளவளாவி னான். பிறகு.

''சார்...! சித்ரலேகா மேடம் கிட்டே ஒரு கிளாரிஃபி கேஷன் கேக்க வேண்டியிருந்தது. வந்தேன்'' என்றான்.

வேணுகோபாலும், தவேவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சார்! என்னன்னு தெரியலை. உங்க டீலிங் முடியற துக்கு முன்னாலயே லீவு கேட்டாங்க. இப்ப சடனா காலைல ரெஸிக்னேஷன் குடுத்துட்டாங்க..'' என்றார் வேணுகோபால்.

உள்ளுக்குள்ளே ஏற்பட்ட அதிர்ச்சியைக் காட்டாமல் இருப்பதற்குள் அவன் பெரும்பாடு பட்டு விட்டான்.

என்ன பேசினான். எப்படி பதில்கள் சொன்னான் என்றே தெரியாத அளவுக்கு எங்கோ நினைவை வைத்துக் கொண்டு காரில் ஏறினான்.

முட்டாளடித்து விட்டாள்!

அதுவும் இரண்டாம் முறையாக.

நினைத்தால் தன் வாழ்க்கையில் நுழைவது ஒரு கலக்குக் கலக்குவது!... பிறகு வெளியேறுவது...!



என்ன நினைத்துக் கொண்டாள் இந்தப் பெண்! முதுகு காட்டினாற்போல் தன்னை உதறி விட்டுப் போகிற இந்தப் பெண்ணைப் போய் தான் பார்ப்பதா?

சே! அதை விடக் கேவலம் எதுவும் இல்லை.

இல்லையில்லை! அப்படி விட்டு விட முடியாது. ஏதாவ தொரு முடிவை அவள் சொல்லட்டும். தன் வாயால் சொல்லட்டும்.

கவனம் சிதறுவது நன்றாகத் தெரிந்தது. அவனால் தன் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

எதிரிலே வேகமாக வந்த லாரியிடம் இருந்து ஒதுங் கினான். இந்தப் பக்கமாக இருந்து ஒரு கார் வந்தது.

இரண்டிலும் இருந்து தப்பிப்பதற்காகவோ என்னவோ இடது புறம் ஒடித்தான்.

கார் மரத்தில் மோதி நின்றது.

தன் கட்டுப்பாட்டை இழந்து விட்டோம் என்று புரிந்தது.

கார்க் கதவில் இடது கை பட்டு கார்க் கதவு திறந்தது.

இடது கால் கார் சீட்டுக்கும். கார்க் கதவுக்கும் இடையே சிக்கிக் கொண்டது.

வலது கையோ ஸ்டியரிங்குக்குள் மாட்டிக் கொண்டது.

வலியில் துடித்து அலறி விட்டான்.

வரமா சாபமா என்று தெரியாத நிலையில் நினைவு உள்ளே உள்ளே சென்றது. ஆழ்கிணற்றில் விழுவது போல் இருந்தது.

வேறொரு உலகத்துக்குச் செல்வது போல் இருந்தது.

* * *

தலை கலைந்து, சாப்பிடப் பிடிக்காமல் வெளியே தலைகாட்ட முடியாத அவமானத்துடன் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கிற மகனைக் கவலையுடன் பார்த்தார் அப்பா தண்டபாணி.

பத்து நாட்கள் ஆகி விட்டது. சித்ரலேகா வீட்டை விட்டுப் போய்.

செய்தி வரும்.. வரும் என்று காத்திருந்தார்கள். தனது ஊர்க்கார நண்பர்களிடம் எல்லாம் சொல்லி வைத்திருந்தான்.

யாராவது ஏதாவது செய்தி அனுப்பி வைப்பார்கள் என்று காத்திருந்தான்.

''ஒண்ணுமே கண்டு பிடிக்க முடியலைடா! வீடு பூட்டிக் கிடக்குது. கூர்க்காவைக் கேட்டா வெளியூர் போயிருக்காங்க அப்படிங்கறதுக்கு மேல ஒரு இன்ச் நகர மாட்டேங்கறான்'' என்றுதான் செய்திகள் வந்தன.

பதினோராவது நாள்!

''அப்பா நான் போய்ப் பார்த்துட்டு வந்தர்றேன்'' என்றான். புறப்பட்டான்.

''நானும் வரட்டுமா?'' என்று புறப்பட்டார்.

''வேண்டாம்ப்பா! நான்னா எந்தத் திண்ணையில வேன்னாலும் படுப்பேன். இந்தப் பிரச்சினைக்கு நடுவிலே உங்களை வேற கவனிக்கணும்னா கஷ்டம்...'' என்றான்.

அப்பாவும் அமைதியாக இருந்து விட்டார்.

புறப்பட்டுப் போனான்.

வீடு பூட்டியிருந்தது. கூர்க்கா இருந்தார். ''வயசுப் பசங்க பாப்பாவைப் பத்தி விசாரிச்சா எதுவும் சொல்லக் கூடாதுன்னு ஆர்டர்'' என்று மட்டும் சொன்னார்.



எவ்வளவோ முயற்சி செய்தும் சித்ரலேகாவைப் பார்க்க முடியவில்லை. மனம் வெறுத்துப் போய் ஊர் திரும்பினான்.

அப்போதுதான் அப்பா சொன்னார்.

''தம்பி! சக்திக்கு மீறின இடங்கள்ல தொடர்பு வச்சுகிட்டா.. இந்த மாதிரி நிலைமையையும் நாம சந்திச்சுத்தான் ஆகணும்...'' என்றார்.

அம்மா பொங்கிப் பொங்கியழுதார்.

''தம்பி. அந்தப் பொண்ணு நல்ல பொண்ணு. அவங்க அண்ணன் முரடன் மாதிரித் தெரியுது. வேண்டாம்ப்பா! அந்தப் பொண்ணே சமாளிக்க முடிஞ்சு வெளிய வந்தா வரட்டும். எனக்கு உன்னைய ஏதாவது பண்ணிடுவாங்களோன்னு பயமாயிருக்கு'' என்று அழுதார்.

மற்றொரு நேரம் சொன்னார்.

''டேய்! ஊர்க்காரங்க என்னன்னமோ சொல்றாங்கடா. அன்னைக்கு வந்த கார்கள்ல வேலு, கத்தி கம்பின்னு என்னென்னத்தையோ வச்சிருந்தாங்கன்னு சொல்றாங்கடா!'' என்று புலம்பினார்.

பெற்றோர்களின் அளவுக்கு அவனுக்கு நெஞ்சில் பயம் இல்லையென்ற போதிலும் தனக்கும் பெரிய பின்புலம் இல்லையென்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

பிரசாத் முரட்டு ஆசாமி என்பதால் அவனும் கொஞ்சம் தயக்கத்திலேயேதான் இருந்தான்.

தான் ஏடாகூடமாக ஏதாவது செய்யப் போய் சித்ரலேகாவுக்கு ஆபத்தாய் முடியுமோ என்ற பயம் இருந்தது.

அன்றைக்கு!

செல்போன் லைனில் சித்ரலேகாவின் குரல் கேட்டாற் போல் இருந்தது. ஆனால் உடனடியாக ஆஃப் செய்து விட் டார்கள்.

அதற்குப் பிறகு அந்த செல்போனில் எப்போதுமே ஆட்டோமேடிக் குரல்தான் கேட்டது. குழம்பிப் போனான். பைத்தியம் பிடித்தாற்போல் அலைகிற மகனை அருகில் அமர்த்திக் கொண்டார் அப்பா.

''தம்பி! நான் சொல்றதைக் கேளு! சின்னப் பொண்ணு. வாழ்க்கைன்னா என்னன்னு தெரியலை. உன்ற கூட வந்து தாங்கிடுச்சு. ஆனா அழச்சுகிட்டுப் போய் அது மனசைக் கலைச்சிருப்பாங்க.''

''இல்லப்பா! லேகா அப்படியெல்லாம் மாற மாட்டா. ரொம்ப நல்ல பொண்ணு.'' என்றான் கிளிப்பிள்ளை போல. மகனின் முகம் பார்த்த அப்பாவுக்கே வேதனை பொங் கியது.

''தம்பி! நாங்க எங்க அனுபவத்துக்கு ஊரு உலகத்துல எத்தனையோ பாத்துருக்கோம். நீ சொல்றதையெல்லாம் பாத்தா அவங்க வசதிக்கும் நம்ம வசதிக்கும் ஏணி வச் சாக்கூட எட்டாது போல இருக்கு. இங்க வந்து நம்ம வசதி என்னன்னு பாத்துருச்சு. அங்க போனதுக்கப்புறம் ஆளா ளுக்கு அழுதா அது என்ன செய்யும்?''

''ஆமா! அவளுக்கு யாராவது அழுதாத் தாங்காது'' என்றான்.

''இப்ப.. உங்க அம்மா அழுத மாதிரி அவங்கம்மா அழு துருக்கலாம். வேண்டாம்டி மகளே! உங்கண்ணன் உங்களை நிம்மதியா இருக்க விட மாட்டான். இவ்வளவு வசதியா இருந்துட்டு.. அங்க போய் எதுக்குக் கஷ்டப்படணும்னு ஆளுக்காளு அழுதா அதுக்கும் குழப்பமாயிடும்.''



அவன் சங்கடமான முகத்துடன் கவனித்தான்.

''அப்புறம். என்னதான் முடிவு?''

''தம்பி! நீ செய்றதுக்கு எதுவுமே இல்லை... அந்தப் பொண்ணுதான் முடிவு செய்யணும்.''

''இல்லப்பா! அவ ரொம்ப ஸ்ட்ராங்கான பர்ஸனா லிட்டி. கண்டிப்பா என்னைத் தேடி வருவா!''

தண்டபாணி நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''அப்படி மட்டும் வரட்டும்! நாம உயிரைக் குடுத்துக் காப்பாத்துவோம். சரியா?'' இளஞ்செழியன் முகத்தில் தெரிந்த சமாதானமின்மை அவருக்குப் புரிந்தது. ஆனால் அவருக்கு நிதர்சனமும் தெரிந்திருந்தது.

''பாரு! அதுகூட வேண்டாம். தம்பி அந்தப் பொண்ணு போன் பண்ணட்டும். நமக்கும் நாலு பெரிய மனுஷங்க இருக்காங்க. ஊருக்காரங்க நாலு பேரைக் கூட்டிட்டுப் போய் பேசுவோம்'' என்றார்.

அதற்குப் பிறகு இளஞ்செழியன் மனம் சமாதானம் அடைந்தது.

ஏதாவது ஒரு விதத்தில் தகவல் வரும். ஏதாவது ஒரு வழியில் தொடர்பு கொள்வாள் என்று காத்திருந்தான்.

தினமும் தபால்காரரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். மேலும் ஒரு மாதம் ஓடியது.

இனிமேல் வரவே மாட்டாளோ என்று அவனுக்கே சந்தேகம் எழுந்தது.

மனதில் நொந்து போனான்.

இந்தப் பெண்ணின் தொடர்பால் தெளிந்த நீரோடை போல் ஓடிக் கொண்டிருந்த வாழ்க்கையில் குழப்பம்

ஏற்பட்டது மட்டுமல்லாமல் ஊர்க்காரர்களிடம் மரியாதை கெட்டதுதான் மிச்சம்.

ஒரு மாதத்திற்கு மேல் போன பெண் வரவில்லை என்றதும் ஊருக்குள்ளேயிருக்கிற பொறாமைக்காரர்கள் வேறு விதமாகப் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

''அதுதானே பார்த்தேன். இவ்வளவு வசதியான பொண்ணு. எதுக்காக அன்னக் காவடி கூட வருதுங்க. எங்கயோ தள்ளிகிட்டு வந்துட்டான். பெத்தவங்க கூடப் பொறந்தவங்க.. வுடுவாங்களா வந்து கூட்டிட்டுப் போயிட்டாங்க'' என்று பேச ஆரம்பித்தார்கள்.

இந்தப் பேச்சுக்கள் எதுவும் அவன் காதில் விழாத வண்ணம் பார்த்துக் கொள்ள பெற்றோர்கள் எவ்வளவோ முயற்சித்தார்கள். ஆனால் அவன் காதுகளில் அரசல் - புரசலாக விழத்தான் செய்தது.

'யாரோ என்னவோ பேசட்டும். சித்ரலேகா வந்தாப் போதும்' என்று கொக்குக்கு ஒன்றே மதி என்று காத்திருந்தான்.

வந்தது!

செய்தி வந்தது!

அந்த இளம் மனசு சுக்கு நூறாகப் பொடியாவதற்கென்றே அந்தச் செய்தி வந்து சேர்ந்தது.

சித்ரலேகாவின் திருமணப் பத்திரிகை.

ஆங்கிலப் பத்திரிகை.

பெரிய அளவில் ஆடம்பரமாக இல்லாமல் ''சித்ரலேகா வெட்ஸ் ஹரிபிரகாஷ்'' என்ற செய்தியைத் தாங்கி நாலைந்து வரிகளில்.



## 15

எங்கேயோ கிணற்றுக்குள் கேட்கிறாற் போல் குரல்கள் கேட்டன.

உடனே நினைவு பின்னோக்கி ஓடியது! சித்ரலேகாவின் ராஜினாமா!

இரண்டாம் முறையும் ஏமாற்றி விட்டாள் என்ற கோபத்தோடு கார் ஓட்டியது விபத்து நேர்ந்தது! ஏதோ அடிபட்டிருக்கிறது. அது மட்டும் புரிந்தது. வலியும் கூட உறைக்கிற மாதிரி இருந்தது. சுற்றிலும் பேச்சுக் குரல்கள்.

''முழிப்பு.. வருது.. டாக்டர்!'' என்ற குரல்கள்.

''இருக்கட்டும்.. ப்ளீஸ்! கூட்டம் போடாதீங்க! ஒண்ணும் பயப்படறதுக்கில்லே. சின்னச் சின்ன ஃபிராக்சர் தான். அதென்ன.. ஒரு இருபது இருபத்தைந்து நாள்ல சரியாயிரும்'' என்று அவர் சொல்கையிலேயே அவன் லேசாக கண்களைத் திறந்தான்.

அம்மா, அப்பா, வேல்முருகன் மற்றும் ஜி.எம். என்று எல்லாரும் நிற்கையிலே அவர்களுக்குப் பின்னாலயே ஒரு உருவம் தன்னை மறைத்துக் கொண்டது தெரிந்தது.

சித்ரலேகாவாக இருக்குமோ!

'இருக்காது. அவள் என்னிடத்திலிருந்து தப்பிப்பதற்காகவே முயற்சித்துக் கொண்டிருக்கிறாள். அவளாவது.. வருவதாவது..' கசப்புடன் புன்னகைத்துக் கொண்டான்.

மீண்டும் வலியுணர்வு தோன்றியது.

அவன் வலியில் முனகுவதைப் பார்த்த டாக்டர்கள் ஏதோ ஊசியைப் போட்டார்கள்.

மீண்டும் கண்களைத் தூக்கம் தழுவியது.

எல்லா.. உணர்வுகளிலிருந்தும் விடுபட்டவனாக..! டாக்டருக்கு அந்த வலியிலும் மனத்துக்குள் நன்றி சொல்லிக் கொண்டான் போலும்.

உறங்கிப் போனான்!

* * *

தன் வாழ்க்கையையே பறிகொடுத்த கோபத்துடன் நடமாடுகின்ற மகனைக் கரையேற்ற அந்த ஏழைத் தந்தை எத்தனையோ முயற்சித்தார். ஆனால் அது அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராகி விட்டது.

''அம்மா! இப்படிப் பண்ணிட்டாளே!'' என்று அம்மாவிடம் ஒற்றை வாக்கியத்தில் புலம்புவான்.

''ஏன்.. தம்பி! நீதான் போய்ப் பாத்துட்டு வாயேன்'' என்றார் அம்மா.

''ஏன்! பையன் உசுரோட நடமாடறது உனக்குப் பிடிக்கலையாக்கும்'' என்று கடிந்து கொள்ளும் அப்பா. திரும்பி மகனிடம் சொன்னார்.

''பாரு தம்பி! இப்ப சொல்றேன் கேட்டுக்க. பெரிய இடத்துப் பொண்ணு நீ சொன்னவுடனே எனக்குக் 'கறுக்' குன்னுச்சு. ஆனா புள்ளை பிடிவாதமா இருந்துச்சுன்னு சொன்னே. அது மட்டுமில்ல அது நல்ல புள்ளையாத் தெரிஞ்சுது. அதனாலதான் நானும் பேசாம இருந்திட்டேன். இப்ப ஏதோ பேசி அந்தப் புள்ளை மாத்தியிருக்காங்க. இந்தச் சூழ்நிலையில நீ அங்க போனா அவமானம் தான் மிஞ்சும் வேண்ணா... ஒண்ணு செய்! கல்யாணத்துக்கு முதல் ராத்திரி அங்கே போ என்ன ஏதுன்னு விவரம் தெரிஞ்சுட்டு.. வா..'' என்றார்.

ஊரில் மிக நெருங்கிய உறவினனும், சமவயதுக்காரனும் ஆன கருப்புசாமியை அழைத்துக்கொண்டு போனான்.



கல்யாண மண்டபம் களை கட்டியிருந்தது! மண்டபத்தில் உள்ளே நுழையும் போதே ஒரு பெரிய பேனர் வைத்திருந்தார்கள்.

''சி.லேகா வெட்ஸ் ஹரிபிரகாஷ்'' என்று தெர்மாகோலில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மின்னின..

இளஞ்செழியனுக்கு அந்த போர்டைப் பார்க்கும் போது ஒரு ஓரத்தில் உடைக்கிறாற் போல் இருந்தது. இதற்கு மேலும் உள்ளே போகலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது பிரசாத் அங்கே வந்தான்.

''இளஞ்செழியன்!'' என்றான் ஆச்சரியமாக. இளஞ்செழியன் தயக்கத்துடன் ''சார்! இந்த சி.லேகாங்கறது...?''

''வொய்! என் சிஸ்டர்தான்'' என்றவன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு,

''சார்! நீங்க வாங்க. நான் உங்ககிட்டே பேசணும்'' என்று ஒரு ஒதுக்குப்புறமான காருக்கு அழைத்துப் போனான்.

உடன் வர முயன்ற கருப்புசாமியிடம் சொன்னான். ''மிஸ்டர், நாங்க வாய் வார்த்தையாத்தான் பேசிக்கப் போறோம். உங்களுக்கும் ஊர்ல வேணுமட்டும் ஆள் பலம் இருக்கிறது எனக்குத் தெரியும்'' என்றான்.

கருப்புசாமி அந்த அளவிலே ஒதுங்கி நின்றான்.

காருக்குள் அழைத்துப் போய் அமர்த்திக் கொண்ட பிரசாத் சொன்னான்.

''இளஞ்செழியன்! பாருங்க.. உங்க ஸ்டேட்டஸ் வேற.. எங்க ஸ்டேட்டஸ் வேற. ஊர்ல இருந்து வந்ததுமே முதல் பத்து நாள் எங்க அம்மாவைக் கவனிக்கறதுல சரியாப் போச்சு. இன்ஃபாக்ட்.. இந்த நியூஸ் கேட்டு எங்க அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துருச்சு.''

எல்லா.. உணர்வுகளிலிருந்தும் விடுபட்டவனாக..! டாக்டருக்கு அந்த வலியிலும் மனத்துக்குள் நன்றி சொல்லிக் கொண்டான் போலும்.

உறங்கிப் போனான்!

* * *

தன் வாழ்க்கையையே பறிகொடுத்த கோபத்துடன் நடமாடுகின்ற மகனைக் கரையேற்ற அந்த ஏழைத் தந்தை எத்தனையோ முயற்சித்தார். ஆனால் அது அத்தனையும் விழலுக்கு இறைத்த நீராகி விட்டது.

''அம்மா! இப்படிப் பண்ணிட்டாளே!'' என்று அம்மாவிடம் ஒற்றை வாக்கியத்தில் புலம்புவான்.

''ஏன்.. தம்பி! நீதான் போய்ப் பாத்துட்டு வாயேன்'' என்றார் அம்மா.

''ஏன்! பையன் உசுரோட நடமாடறது உனக்குப் பிடிக்கலையாக்கும்'' என்று கடிந்து கொள்ளும் அப்பா. திரும்பி மகனிடம் சொன்னார்.

''பாரு தம்பி! இப்ப சொல்றேன் கேட்டுக்க. பெரிய இடத்துப் பொண்ணு நீ சொன்னவுடனே எனக்குக் 'கறுக்' குன்னுச்சு. ஆனா புள்ளை பிடிவாதமா இருந்துச்சுன்னு சொன்னே. அது மட்டுமில்ல அது நல்ல புள்ளையாத் தெரிஞ்சுது. அதனாலதான் நானும் பேசாம இருந்திட்டேன். இப்ப ஏதோ பேசி அந்தப் புள்ளை மாத்தியிருக்காங்க. இந்தச் சூழ்நிலையில நீ அங்க போனா அவமானம் தான் மிஞ்சும் வேண்ணா... ஒண்ணு செய்! கல்யாணத்துக்கு முதல் ராத்திரி அங்கே போ என்ன ஏதுன்னு விவரம் தெரிஞ்சுட்டு.. வா..'' என்றார்.

ஊரில் மிக நெருங்கிய உறவினனும், சமவயதுக்காரனும் ஆன கருப்புசாமியை அழைத்துக்கொண்டு போனான்.



கல்யாண மண்டபம் களை கட்டியிருந்தது! மண்டபத்தில் உள்ளே நுழையும் போதே ஒரு பெரிய பேனர் வைத்திருந்தார்கள்.

''சி.லேகா வெட்ஸ் ஹரிபிரகாஷ்'' என்று தெர்மாகோலில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் மின்னின..

இளஞ்செழியனுக்கு அந்த போர்டைப் பார்க்கும் போது ஒரு ஓரத்தில் உடைக்கிறாற் போல் இருந்தது. இதற்கு மேலும் உள்ளே போகலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது பிரசாத் அங்கே வந்தான்.

''இளஞ்செழியன்!'' என்றான் ஆச்சரியமாக. இளஞ்செழியன் தயக்கத்துடன் ''சார்! இந்த சி.லேகாங்கறது...?''

''வொய்! என் சிஸ்டர்தான்'' என்றவன் சுற்று முற்றும் பார்த்துவிட்டு,

''சார்! நீங்க வாங்க. நான் உங்ககிட்டே பேசணும்'' என்று ஒரு ஒதுக்குப்புறமான காருக்கு அழைத்துப் போனான்.

உடன் வர முயன்ற கருப்புசாமியிடம் சொன்னான். ''மிஸ்டர், நாங்க வாய் வார்த்தையாத்தான் பேசிக்கப் போறோம். உங்களுக்கும் ஊர்ல வேணுமட்டும் ஆள் பலம் இருக்கிறது எனக்குத் தெரியும்'' என்றான்.

கருப்புசாமி அந்த அளவிலே ஒதுங்கி நின்றான்.

காருக்குள் அழைத்துப் போய் அமர்த்திக் கொண்ட பிரசாத் சொன்னான்.

''இளஞ்செழியன்! பாருங்க.. உங்க ஸ்டேட்டஸ் வேற.. எங்க ஸ்டேட்டஸ் வேற. ஊர்ல இருந்து வந்ததுமே முதல் பத்து நாள் எங்க அம்மாவைக் கவனிக்கறதுல சரியாப் போச்சு. இன்ஃபாக்ட்.. இந்த நியூஸ் கேட்டு எங்க அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துருச்சு.''

''ஒ..!''

''ஆமா.. சார்! அம்மாவைப் பார்த்ததுல அவளுக்குப் பாதி மனசு விட்டுப் போச்சு. ஏற்கனவே உங்க வீட்ல இருந்த வசதிக் குறைவு பாத்து அவளுக்கு எப்படிடா வாழ்நாள் முழுக்க இருக்கப் போறோம்கற பயம் வந்துருச்சு.''

................!

இளஞ்செழியனின் முகம் வாடுவதைப் பார்த்த அவன் சொன்னான்.

''ஐம்.. சாரி! உங்களைப் புண்படுத்தறதுக்காகச் சொல்லலே.. எங்க அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இது பெரிய ஷாக்காப் போச்சு. அப்பா கிட்டத்தட்ட தற்கொலை பண்ணிக்கற அளவுக்குப் போயிட்டாரு. இதையெல்லாம் பார்த்த சித்ரலேகா 'நான் வேற கல்யாணம் பண்ணிக்கறே'ன்னு சொல்லிட்டா.''

''நான்..'' என்று இளஞ்செழியன் ஆரம்பிக்க பிரசாத் குறுக்கிட்டான்.

''பொறுங்க..! அப்ப.. நான் சொன்னேன்.. 'ஏம்மா.. அந்த இளஞ்செழியன் வந்து.. ஏதாவது தகராறு செஞ்சா..'ன்னு இழுத்தேன். அதுக்கு ஒரே வார்த்தையில் பதில் சொல்லிட்டா.. 'நானாத்தான் போய் அவருகிட்டே பழகினேன். நான் செய்றது துரோகமாவே இருந்தாலும் இளஞ்செழியன் புரிஞ்சுப்பாரு. தகராறு பண்ண மாட்டாரு'ன்னு'' என்றான் பிரசாத்.

இளஞ்செழியன் மறுபடியும் ''ஓ!'' என்றான் சுரத்தேயில்லாமல்.

தங்கு தடையில்லாமல் பேசுகின்ற பிரசாத்தின் வார்த்தைகளில் அவனுக்கு முழு நம்பிக்கை வரவில்லை.



ஆனாலும் அந்த போர்டைப் பார்த்ததற்குப் பிறகு அவனுக்குள் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டிருந்தது.

''நான்... ஒரு தடவை லேகாவைப் பார்க்கலாமா?''

''தம்பி..! நீங்க அதை முதல்லயே செஞ்சிருக்கணும் அதுக்காகத்தான். நான் உங்களுக்குப் பத்திரிகையை அனுப்பிச்சேன். இப்ப அவ முடிவுல தெளிவாயிட்டா. அப்படி நான் மட்டும் வேணும்னு நினைச்சிருந்தா.. வந்திருப்பாரில்லே. ங்கறா.. அவளுக்கு எந்த வருத்தமும் இல்லே.. நீங்க வேன்னா வந்து பாருங்க'' என்று மண்டபத்தின் பக்க வாட்டு வாசலுக்கு அழைத்துப் போய்க் காண்பித்தான்.

சித்ரலேகா நிறைய நகைகளோடு, ஒரு விலையுயர்ந்த பட்டுப்புடவை அணிந்து தோழிகளுக்கு நடுவே சிரித்துக் கொண்டிருந்தாள். வழக்கமான கள்ளமில்லாத சிரிப்பு!

நெஞ்சுக்குள்ளே இருந்த நம்பிக்கை உணர்வெல்லாம் கரைகிறாற் போல் உணர்ந்த இளஞ்செழியன் நடைப் பிணம் போல் திரும்பிப் போவதை வெற்றி கொண்ட பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் பிரசாத்.

* * *

குப்புறப் படுத்துக் கொண்டிருந்த மகனைப் பார்த்துக் கொண்டு அருகில் அமர்ந்திருந்தார் ராசாத்தி.

''டேய்.. ராசா! எழுந்திருடா! இது என்னத்துக்கு நீ இதுக்கு இப்படி மனசு விடறே'' என்றார்.

அம்மா சொல்கிற எதையும் காதில் வாங்காதவன் போல் படுத்துக் கிடந்தான் இளஞ்செழியன்.

இரண்டு நாட்களாகவே இப்படிப் படுத்துக் கிடந்தான் இளஞ்செழியன்.

தாயும், தந்தையும் அவன் படுகிற பாட்டைப் பார்த்துத் தவித்துப் போனார்கள்.

அழகான புடவையில் நிறைய நகைகளை அணிந்து கொண்டு தோழிகளோடு அவள் சிரித்துக் கொண்டிருந்த காட்சியே அவன் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

மனத்தின் உணர்வுகளை எப்போதுமே சித்ரலேகா அவ்வளவு சீக்கிரம் வெளியே விட மாட்டாள் என்றாலும் ஒரு மணமகளுக்கேயுரிய நாணம் தெரியவில்லை என்ற போதிலும் கவலையும் இருந்தாற் போல் தெரியவில்லை.

ஒரு மாத வாழ்க்கைக்குப் பொருளே இல்லையா? எத்தனை நெருக்கமாக எத்தகைய இயல்பான உணர்வுகளோடு வாழ்ந்தார்கள். சிட்டுக் குருவிகள் போலே என் பார்களே அப்படியல்லவா சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தார்கள். ஆனால்.. அத்தனையும் துடைத்தெறிந்து விட்டு இப்போது அலங்கார பூஷிதையாக நிற்கிறாள்.

எப்படி முடிந்தது?

அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ராசாத்திக்கு மிகவும் கவலையாகப் போய் விட்டது. வாய் விட்டு அழுதால் கூட தேவலை போல இருந்தது! அழுத்தமாகவே கிடக்கிறான். வற்புறுத்தி சாப்பிடக் கொடுத்தால் கொஞ்சமாகச் சாப்பிடுவான். அதுவும்.. வேண்டா வெறுப்பாக.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு அவன் அருகிலேயே அமர்ந்து விட்டார்.

"டேய்! ஏந்திருச்சு.. உட்கார்றா!" என்று வற்புறுத்தவும் எழுந்து அமர்ந்தான்.

"என்னடா நடந்துச்சு?" என்றார்.



சொன்னான்.

"அம்மா! கல்யாணமே நடந்திருக்கும்னு நினைக்கறேன்" என்றான்.

"என்னடா! பேசறே! நீ அந்தப் பொண்ணுகிட்டே பேசினியா?"

"எங்கம்மா.. பேசறது? கல்யாண மண்டபத்துக்கு முன்னால போர்டு வச்சிருந்தாங்களே. அதுலயே சித்ரலேகாவுக்கும், எவனோ ஹரிபிரகாஷுக்கும் கல்யாணம்னு போட்டிருந்ததே. போர்டு வரைக்கும் வந்தாச்சுன்னா, இவ்வளவு ஏற்பாடுகள் நடந்துருச்சுன்னா.. அவளோட சம்மதம் இல்லாமயா இருக்கும்?" என்றான்.

அம்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். "தம்பி! பொம்பளை ஜன்மம்பா! அந்தப் பொண்ணு இங்க இருக்கற வரைக்கும் நல்ல பொண்ணாத்தான் தெரிஞ்சுது.. அது மட்டும் அங்க சந்தோஷமாவா இருக்கும்னு நினைக்கறே? ஏதாவது மிரட்டியிருப்பாங்கடா! அம்மாவும், அப்பாவும் தற்கொலை பண்ணிக்குவேன்னு சொன்னா அந்தப் பொண்ணு என்ன செய்யும் "அண்ணன்கார வேற முரடனால்ல தெரியுது?" என்றார்.

இளஞ்செழியன் மௌனமாக வாங்கிக் கொண்டான். திடீரென்று அழுது விட்டான்.

உள்ளுக்குள்ளே பொங்கிய துக்கமெல்லாம் அருவியாக வெடித்தது.

"அம்மா! நான் பாட்டுக்குப் பேசாம இருந்தேன். மேல வந்து விழுந்து பழகினா உண்மையாத்தாம்மா பழகினா. என் வாழ்க்கையையே உங்களை நம்பி ஒப்படைக்கிறேன்னு வந்து நின்னாளே!" என்று புலம்பினான்.

"இல்லைடா! ஒரு வேளை இந்த ஒரு மாசத்துல நம்ம வீட்டு வசதிக் குறையைப் பார்த்து யோசிச்சிருப்பா. வாழ்நாள் முழுக்க இப்படி வாழ்க்கை நடத்த முடியுமா!ன்னு பயம் வந்திருக்கும். வசதியா வாழ்ந்த புள்ளை. திரும்பப் போய் அந்த வசதிகளப் பார்த்தவுடனே மறுபடியும் யோசிச்சிருப்பா. அதுக்குத் தகுந்த மாதிரி அவர்களும் பேசிப் பேசிக் கரைச்சிருப்பாங்க..." என்றார்.

இளஞ்செழியன் மெல்ல மெல்ல அடங்கினான். நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

"அப்ப எதுக்காக என் வாழ்க்கையில புயல் கிளப் பணும்?"

மறுபடியும் மறுபடியும் அதையே பேசி ஓய்ந்தார்கள். இரண்டு நாட்கள் பேச்சிலேயே ஓடியது.

அதற்குப் பிறகு நடப்பதையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்த அப்பா வந்து அருகில் அமர்ந்தார்.

"தம்பி! நீ வருத்தப்படறதும் நியாயம்தான். இப்படி ஒரு பணக்காரப் பொண்ணைக் கட்டிட்டு வந்துட்டேன்னு எனக்கும் வருத்தம்தான். ஆனா, பொண்ணு நல்ல பொண் ணாத் தெரிந்தது. ஆனா, உங்க அம்மா சொன்ன மாதிரி அந்தப் புள்ளைக்கு என்ன பிரச்சினையோ. அழைச்சுட்டு போனதுக்கப்புறம் என்னென்ன சொல்லி மனதைக் கரைச்சாங்களோ" என்றார்.

"ஆனா, அவ அப்படியெல்லாம் செய்யறவ இல்லே!" என்றான் மிகவும் வருத்தத்தோடு.

"அது அப்படித்தான்! என்ன செய்யறது! நல்லவங்களுக் குத்தான் சோதனைகள் வரும். அந்தப் பொண்ணு நல்ல பொண்ணா இருக்கக் கொண்டுதான் அம்மாவுக்கு உடம்பு



சரியில்லேன்னவுடனே கிளம்பிப் போச்சு. இப்படிக் குடும்ப மானம் கீனம்ன்னு எதையாவது சொல்லி அழு திருப்பாங்க. தற்கொலை கிற்கொலைன்னு மிரட்டியிருப் பாங்க. இல்லேன்னா உன்னை ஏதாவது செய்யறேன்னு சொல்லியிருப்பாங்க. எப்ப.. அந்தப் பொண்ணு கல் யாணம் வரை ஒத்துருச்சோ.. அதோட விட்ரு.. தம்பி.." என்றார்.

"அது சரிப்பா! நான் இனிப் போய் என்ன ஸ்டெப் எடுக்கப் போறேன். ஆனா, ஜீரணிக்க முடியலப்பா.. உண்மையா நேசிச்சேன். உண்மையா வாழ்ந்தேன். ஆனா, அந்த வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லையா?"

"இருக்குப்பா.. இருக்கும்.. கண்டிப்பா.. உன்னோட மன வருத்தத்துக்கு கடவுள் கண்டிப்பா.. மருந்து வச் சிருப்பா.. போதும்.. இதோட இந்த சாப்டர் முடிஞ்சதுன்னு நினை. இல்லே! வேற விதத்துல அந்தப் பொண்ணோட வாழ்க்கையோட விளையாடணும், பழி வாங்கணும்னு ஐடியா.. இருந்தா அதைச் செய். ஆம்பளைன்னு நிரூபி. இல்லே பெருந்தன்மையா ஒரு முடிவெடு. அவ வாழ்க்கை அவ வாழ்ந்துட்டுப் போகட்டும். நீ உன்னோட வாழ்க் கையை வாழற வழியைப் பாரு" என்றார்.

இளஞ்செழியன் மௌனமாகக் கேட்டுக் கொண்டான். பெற்றோர்கள் இருவரையும் மிகவும் நோகடிக்கிறோம் என்பது அவனுக்கும் புரிந்தது.

மெல்ல எழுந்து நடமாட ஆரம்பித்தான். தனது வேதனையை மறைத்துக் கொண்டு நடமாடப் பழகிக் கொண்டான்.

நன்றாக நடிக்கவும் பழகிக் கொண்டான். இருந்தாலும் அப்பாவிடம் சொன்னான்.

''எதுக்கும் இன்னும் ஒரு தடவை முயற்சி பண்ணலாமா?'' என்று.

''உன் இஷ்டம்'' என்றார். ஆனால், இன்னொரு கோணத்தில் யோசித்தான்.

தேடிப் போய் அவள் இன்னொருவனுடன் மகிழ்ச்சியாக வாழ்வதைக் காண நேர்ந்தால் மனதுக்கு எப்படி இருக்கும்? 'வேண்டாம்' என்று முடிவெடுத்தான்.

அதே சமயத்தில்தான் கருணாகரனிடம் இருந்து அழைப்பு வந்தது. அப்பா அவரைச் சந்தித்து வேலை கேட்டிருப்பார் போலும்.

இளஞ்செழியன் அங்கே போவதற்கும் யோசித்தான். இன்னமும் ஒரு ஓரத்தில் அவனுக்கு அவள் வரக்கூடும் என்ற நப்பாசை இருந்தது.

ஒருவேளை வலுக்கட்டாயமாக அவளுக்குத் திருமணம் செய்து வைத்து அதிலிருந்து தப்பித்து வந்தால் கூட ஏற்றுக் கொள்வதற்கு அவன் தயாராக இருந்தான். ஆனால் அந்த மாதிரிக் கருத்துக்களை எல்லாம் அவன் பெற்றோரிடம் பேசவில்லை.

''பிள்ளை மனது கனவு காணுகிறது'' என்றுதான் நினைப்பார்கள். ஆனால், தனக்குள்ளே ஏதோ ஒரு பகுதி கழண்டு போனாற் போல் உணர்ந்தான்.

மனதுக்குள்ளே அழுது கொண்டே நடமாடிக் கொண்டிருந்தான். ஆனால், வேலை அவனுக்குப் பெரிய வரப் பிரசாதமாய் அழைத்து விட்டது.

கனவு போலே காட்சிகள் வந்து போயின. அவன் கம்பெனியில் புதிது புதிதாக நினைவுகள் ஆரம்பித்த கம்பெனி திறப்பு விழாக்கள் வெகு வேகமாகப் படம் போல் வந்து போயின.



மெல்ல மெல்ல வெளியுலகம் புரிகிறாற்போல் இருந்தது.

மெதுவாக..! மிக மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

அம்மாவும், அப்பாவும் ஆர்வத்தோடும், கலக்கத்தோடும் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

படுக்கையில் இருந்தபடியே சுற்றிலும் பார்த்தான். இடது காலில் முழங்காலுக்குக் கீழே கட்டுப் போடப்பட்டிருந்தது. வலது கையிலும் முழங்கைக்கும் கீழே கட்டுப் போடப் பட்டிருந்தது.

இரண்டு பக்கமும் தொட்டில் கட்டி விட்டிருந்தார்கள்.

ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்தான்.

## 16



''சரி.. இந்தப் பாலைக் குடிப்பா!'' என்று கெஞ்சிக் கொண்டிருந்தார் ராசாத்தி.

அவன் வேண்டா வெறுப்பாக வாங்கிக் கொண்டான். இடது கையில் பிடித்துக் கொள்ள முயற்சி செய்தான். முடியவில்லை.

ராசாத்தி கையில் வாங்கிக் கொண்டார். உதட்டில் வைத்து மெல்லப் பருகச் செய்தார்.

அப்போதும் அவனுக்கு அந்தச் சந்தேகம் எழுந்தது. அந்த ஸ்டாண்டுக்குப் பின்னால் யாரோ நிற்கிறார்கள் என்று.

''அம்மா..! அது யாரு!'' என்றான்.

உருவம் மெல்ல வெளியே வந்தது.

அவள் கண்கள் நிலை குத்தினாற்போல நான் ''சித்ரலேகா..! சித்ரலேகாவேதான்!''

''இப்ப எதுக்கு வந்தே?'' என்றான். குரலில் கடுமையான கோபம் ஏறியது.

அவள் முகத்தில் கலக்கம் தெரிந்தது. ஒரு நிமிடம் தான். ஆனால், உடனே முகத்தில் உறுதியும் தெரிந்தது.

''என்னைத் தேடி ஆபீஸ் வந்தீங்களாம்!'' என்று அவள் பதில் சொல்ல ஆரம்பிக்கும்போதே ராசாத்தி மெல்ல நகர்ந்தார்.

''அம்மா.. நீ யிரும்மா!'' என்றான்.

''இல்லல்லே! நீங்க பேசுங்க..!'' என்று நகர்ந்து விட்டார்.

''ஆமா! நான் கேட்ட விஷயத்துக்கு நீ நேர்மையா நேர டியா பதில் சொல்லுவேன்னு நினைச்சேன். வழக்கம் போல இந்தத் தடவையும் ஓடிப் போயிட்டே'' என்றான்.

''ப்ளீஸ்! வார்த்தைகளால நாம காயப் படுத்திக்கறது னால ஆகப் போறதென்ன!'' என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

''அதானே! வாழ்க்கையையே காயப்படுத்திட்டே!'' என்றான்.

அவள் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

''நான் கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்லலே!'' என்றான்.

குரலை உயர்த்தாமல் நாகம் போல் சீறுகிற அந்தக் குரல் அவள் வயிற்றிலும் மீறி கிளப்பியது. என்றாலும் துணி வாக நின்றாள்.

''நான் ரிசைன் பண்ணிட்டேன். ஆனா, உங்களை வந்து சந்திக்கறதா இருந்தேன்'' என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

ஆழப் பார்த்தான்!



''ஆமா! நான் வாழ்க்கையில வெகு தூரம் வந்தாச்சு. இனிமே நான் என் ஹஸ்பென்டை விட்டுட்டு வர முடி யாது.. நீங்க புரிஞ்சுக்குங்க'' என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான்! பிறகு கிண்டலாகச் சொன்னான்.

''ஆமா! பூங்குழலி வேற பொறந்துட்டாப்ல!'' என்று.. அவள் அதற்கும் பதில் சொல்லவில்லை.

''அப்படீன்னா.. இப்ப எதுக்கு வந்தே!''

''கால்லயும், கையிலயும் அடிபட்டு நீங்க இங்கே படுத்துக் கிடக்கறதுக்கு.. நான்தானே காரணம். அதனால உங்க உடம்பு தேற வரைக்கும் நானே இங்க இருந்து உங்களைக் கவனிச்சுக்க வந்திருக்கேன்.''

''ஹாஹாஹா!'' என்று வெடிச் சிரிப்பு சிரித்தான். அது வெறி கொண்ட சிரிப்பாகவும் இருந்தது.

''உலக மகா... ஜோக்!''

அவள் மறுபடியும் இடத்தை விட்டு அசையாமல் நின்றாள்.

''என்னைப் பாத்துக்கறதுக்கு எங்க மதர் இருக்காங்க.. வேணும்கற ஆட்கள் இருக்காங்க.. உன்னோட ஆஃபருக்கு ரொம்ப நன்றி. நீ போலாம்'' என்றான் மிடுக்குடன்.

''அவர்களுக்கு வயசாச்சு.. அவங்களும் ரொம்பக் கவலைப்படறாங்க.. நான் இப்ப இங்கே வந்திருக்கிறது நர்ஸ் போல உதவி செய்ய'' என்றாள்.

''ஹலோ...! ஜோக்கெல்லாம் போதும். சீரியஸாப் பேசுங்க.''

''நான் சீரியஸாத்தான் பேசறேன். அது மட்டுமில்ல.. இன்னொரு விஷயமும் சொல்றேன் புரிஞ்சுக்குங்க.

எந்தப் பொருளும் எட்டாத் தொலைவில் இருக்கும் போதுதான்.. அது பெரிய விஷயமாத் தெரியும். அதுவே பக்கத்திலே இருக்கும்போது மனசுல தெளிவு வரும்.. நான் இப்ப உங்களுக்குத் தோழியா உதவி செய்ய வந்திருக்கேன். ஏன்னா, உங்க வாழ்க்கையில பெரிய டேமேஜ் என்னால நேர்ந்திருச்சு. என்னோட வாழ்க்கை என் கைகள்ல இல்லாமப் போயிடுச்சு. இந்த நிலைமையில ரெண்டு பேரும் ஒருத்தரைக் கண்டு ஒருத்தர் ஓடறதுனாலயோ அல்லது ஒருத்தருக்கொருத்தர் காயப்படுத்திக் கறதுனாலயோ ஆகப் போறது என்ன? அதனால ஒரு வேளை என்னோட அருகாமை உங்க மனசுக்குள்ளே ஒரு தெளிவை ஏற்படுத்தலாம். நீங்க விரும்பினா இந்த ஒரு சவாலா ஏத்துக்கலாம் இல்லேன்னா.. அதுவும் ஒரு விதமான தோல்விதான்.'' என்றவள் ஓரிரு வினாடிகள் நிறுத்தினாள் பிறகு சொன்னாள். ''ரெண்டு பேருக்கும் தான்!'' என்றாள்.

அவள் ஏதோ ஒரு பெரிய சவாலைத் தனக்கு வைக்கிறாள் என்பது புரிந்தது. இந்தச் சவால் தேவையா என்றும் தோன்றியது. ஆனால் அவள் சொன்ன ஒரு விஷயம் உண்மைதான்.

கண்ணுக்கு அருகில் அருகில் வந்து மறைகிற உறவினங்களில் ஒரு கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. ஒருவேளை ஒன்றிரண்டு மாதங்கள் அவள் தோழியாகவே அருகில் இருந்தால் அவளைப் பற்றிய உணர்வுகள் சமனப்படுவதற்கான வாய்ப்பும் இருக்கிறதோ! இந்த சவால் நன்றாக இருக்கிறதே?

அவன் முகத்தில் மெதுவாக ஒரு புன்னகை மலர்ந்தது.

''ஓ.கே! உன்னிஷ்டம்!'' என்றான்.



உடனடியாக அவள் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அருகில் வைக்கப்பட்டிருந்த பாலை எடுத்து மெல்ல அவன் இதழருகில் வைத்துப் பருகச் செய்தாள்.

வெளியே எட்டிப் பார்த்து ராசாத்தியம்மாவிடம் ''வாங்க..'' என்றாள்.

ராசாத்தி அம்மா உள்ளே வந்தார்.

''அம்மா! நீங்க.. போய் ரெஸ்ட் எடுத்துட்டு வாங்க..! நான் நைட் வரை பாத்துக்கறேன்'' என்றாள்.

ராசாத்தியம்மா மகன் முகத்தைப் பார்த்தார். அவன் சம்மதம் என்பது போல் தலையாட்டினான்.

இடது காலிலும் கட்டு. வலது கையிலும் கட்டு என்பதால் பெரிய எலும்பு முறிவு இல்லையென்றாலும் அவனால் தனித்து இயங்க முடியவில்லை. ஆள் உதவியாளர்கள் கூட இருந்தார்கள்.

அன்று முழுவதும் உடன் இருந்தாள்!

நேரத்துக்கு மருந்து மாத்திரைகள் கொடுத்தாள். உணவு கொடுத்தாள்.

அலுவலகத்திலிருந்து பத்திரிகைகள் கொண்டு வரச் சொல்லியிருந்தான்.

முக்கியமான செய்திகளை படித்துக் காட்டினாள். அது பற்றி விவாதங்கள் கூடச் செய்தார்கள்.

மெதுவாக எழுந்து சற்று நேரம் அமர்ந்திருந்தான். இளஞ்செழியனுக்குத் தன் மனநிலை குறித்து ஆச்சரியம் ஏற்பட்டது.

சித்ரலேகா உடனிருக்கிறாள் என்பதே அவனுக்குப் பெரிய மனநிம்மதியை கொடுத்தது. ஆனால், அவள்

இன்னொருவரின் மனைவி என்ற நினைவு ஒரு புறம் இருந்து கொண்டே இருந்தது. எனினும் தோழியாக என்று சொல்லியிருக்கிறாளே என்று மனதை அவ்வப்போது தெளிவாக்கிக் கொண்டான்.

உணவுக்குப் பிறகு சற்று நேரம் உறக்கத்தில் ஆழ்ந் தான்.

அந்த நேரம் சித்ரலேகா கூட திரைக்கு இந்தப் புறம் இருந்த அந்தச் சிறிய கட்டிலில் படுத்து உறங்கினாள்.

நான்கு மணியிருக்கும்!

அப்பா பார்ப்பதற்கு வந்தார்.

சித்ரலேகா வணக்கம் சொன்னாள். அவரும் அலட்டிக் கொள்ளாமல் வணக்கம் சொல்லிவிட்டு உள்ளே போனார்.

ராசாத்தியம்மாள் போய் விஷயம் சொல்லியிருப்பார் போலும். அவரும் மனதளவில் தயாராகத்தான் வந்தார் போலும்.

தந்தையும், மகனும் பேசட்டும் என்று அவள் ஆபீஸ் வராண்டாவில் வந்து நின்று கொண்டாள். மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஏம்பா! இது சரி வருமா?'' என்று அவர் கேட்பதும் ''பார்க்கலாம்ப்பா.. என்ன நடக்குதுன்னு பாப்பமே'' என்று அவன் பதில் சொல்வதையும் கேட்டபடி அவள் வெளியே வந்தாள்.

அது பெரிய ஹாஸ்பிடல்! வெளியே காலார நடக்கிற மாதிரி புல்வெளியைச் சுற்றி நடைபாதை கூட அமைத் திருந்தார்கள்.

மெல்லக் காலாற நடந்தாள்.



உள்ளத்தில் ஒரு குரல் எச்சரித்துக் கொண்டே இருந்தது.

'தெருவில போய்கிட்டிருக்கிற வம்பைத் தேடிப் பிடிச்சு.. வாங்கிக்கற மாதிரி ஒரு காரியம் பண்ணிகிட்டிருக்கே?' என்று உள்மனது எச்சரித்துக் கொண்டே இருந்தது. ஆனால் இன்னொரு மனது கேட்டது 'உன்னால் அவன் தனது எட்டு வருஷ வாழ்க்கையை இழந்திருக்கிறான். தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ள வெற்றிகளைத் தேடி ஓடிக் கொண்டிருந்திருக்கிறான். ஆனால் வெறுமையி லேயே உழன்றிருக்கிறான். அவன் மனத்தில் இழப்பை ஏற்றுக் கொள்கிற பக்குவத்தை ஏற்படுத்த வேண்டியது உனது கடமையல்லவா' என்று.

உண்மைதான்!

'அன்றைக்கு அவன் கேட்டது உண்மைதானே! தானாப் போய் மேல விழுந்தாற் போல விழுந்து அவன் வாழ்க்கையை டிஸ்டர்ப் செஞ்சுட்டு.. இப்ப.. தான் மட்டும் ஒரு வாழ்க்கை வாழ்ந்தர்லாமா.. என்ன?' என்று யோசித் தாள்.

அப்பா தண்டபாணி புறப்பட்டார் போலும். "லேகா!" என்று இளஞ்செழியன் குரல் கொடுத்து அழைப்பது கேட்டது.

உள்ளே போனாள்!

''அப்பா! இது லேகா..! வந்து.. லேகா..'' என்று அவன் அதற்கு மேல் என்ன செய்வதென்று புரியாமல் விழிக்க.

''அவருக்கு பர்சனல் அசிஸ்டெண்டாச் சேந்திருக்கேன்'' என்றாள்.

''ம்.. ஆ.. மா..!'' என்று அவன் தடுமாற அப்பா அலட்டிக் கொள்ளாமல் ஏற்றுக் கொண்ட பாவனையில் புன்னகைத்தார்.

''அப்பா...!'' என்று அவன் ஏதோ விளக்கம் சொல்ல ஆரம்பிக்க..

''வேண்டாப்பா! உனக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்!'' என்றார்.

புறப்பட்டார்!

அவளும் வணக்கம் சொல்லி அறை வாசல் வரை சென்று வழியனுப்பினாள்.

திரும்பி வந்து உள்ளே நுழைந்தபோது அவன் கன காரியமாகப் பேப்பர் படித்து கொண்டிருந்தான்.

அவளும் பேச்சை வளர்த்தாமல் அமைதியா ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

''சார்! எப்படி இருக்கீங்க!'' என்று ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்தான் வேலு.

''வாப்பா! நல்லா இருக்கேன்! உடைந்த காலும், உடைஞ்ச கையுமா!'' என்று இளஞ்செழியன் சொல்லச் சொல்ல திரும்பிப் பார்த்தான்.

சித்ரலேகா நின்று கொண்டிருந்தாள்.

விழிகள் தெறித்து விடுகிறாற்போல் பார்த்தவன் சமாளித்துக் கொண்டான்.

''மேடம்!'' என்று பேச ஆரம்பிக்கையில் இளஞ் செழியன் அலட்டிக் கொள்ளாமல் சொன்னான்.

''சித்ரலேகா.. எனக்கு பிரண்டு. ஓ! அதை நான் உனக்கு சொன்னதில்லையில்லே?'' என்றான்.

''ஆ..மா!'' என்றான் வேலு ஏதோ பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக.

''கோயமுத்தூர்ல இருந்தப்ப நாங்க ஃபாமிலி பிரண்ட்ஸ்!'' என்றும் சொன்னான்.



'அப்படிப் போடு!' என்று உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான் வேலு.

''சரிங்க.. சார்! சரிங்க.. சார்!'' என்றான்.

''சரி.. ஆபீஸ்ல..'' என்று அவன் ஆபீஸ் விஷயங்களும் பேச ஆரம்பித்தான்.

''சார்! அந்த நம்பர் எம்பது பிரேக் டவுன் ஆயிடுச்சு.. அப்புறம்.. வொர்க் ஷாப்ல விட்டிருக்கு. சம்பளம் பட்டுவாடா செய்யணும்'' என்றான்.

''சரி.. இன்னும் ரெண்டு நாள் இருக்கில்லே! பாக்கலாம். இந்த ஒரு மாசம் மட்டும் செக் பவர் உனக்குக் கொடுக்கறேன். டிரா பண்ணி. எல்லாருக்கும் டிஸ்பர்ஸ் பண்ணிடு'' என்றான்.

''சரிங்க.. சார்!'' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். வேலு உள்ள வந்தவுடனே நகர முற்பட்ட சித்ரலேகாவிடம் சொன்னான்.

''நீ போக வேண்டாம்.. இரு!'' என்று. ஆனாலும் அவள் அமைதியாக எதிலும் கலந்து கொள்ளாமல் நின்று கொண்டாள்.

''என்னப்பா வேலு! இந்த மாறுகால் மாறுகை வாங்கறதும்பாங்களே! அது மாதிரி வலது கை இடது கால்.. விவகாரமான ஆச்சரியம்ப்பா..'' என்று சிரித்தான் இளஞ் செழியன்.

''சார்.. இப்ப.. நீங்க சிரிக்கறீங்க..! அம்மாவும் அப்பாவும் எப்படித் துடிச்சுப் போயிட்டாங்க தெரியுமா..'' என்ற வேலு ஏதோ சொல்ல வந்தவன் சட்டென நிறுத்திக் கொண்டான்.

அதே நேரம் இடைவெளியில் வெளியில் சென்ற சித்ரலேகா அவர்கள் உதவிக்கென்று இருந்த ஆளை அழைத்து காபி வாங்கி வரச் சொல்லி வேலுவுக்குக் கப்பில் ஊற்றிக் கொடுக்க அவன் ''தாங்க்ஸ்.. மேடம்!'' என்று வாங்கிக் கொண்டான்.

''என்ன இருந்தாலும் லேடீஸ்க்குத்தான்.. இந்த உப சரிப்புகள் எல்லாம் தோணும். இல்லையா.. சார்'' என்றான் பாராட்டுதல் போல.

இளஞ்செழியன் மையமாகப் புன்னகைத்து வைத்தான்.

''சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்குங்க.. சார்! மேடம் நீங்க ரெகமண்ட் பண்ணுங்க..'' என்றான் சித்ரலேகா விடம்.

இளஞ்செழியன் அவள் முகத்தை ஆழமாகப் பார்த்தபடி படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தான்.

''கவலைப்படாதீங்க.. சார்! சீக்கிரம் சார் குடும்பஸ் தனாயிருவாரு..'' என்றாள் சித்ரலேகா கலகலச் சிரிப் புடன்.

வெகு நாட்களுக்குப் பிறகு அந்தக் கலகலச் சிரிப்பு அவனைக் கொஞ்சம் அசைத்துப் பார்த்தது. உடனே சமாளித்துக் கொண்டான்.

''வர்றேன்.. சார்!'' என்று போனான் வேலு.

ஐந்து நிமிடங்கள் போயிருக்கும்!

''செழியன்! இப்ப ஒரு இன்ஜெக்ஷன் போடணும். நர்ஸுக்கு ஞாபகப்படுத்திட்டு வரேன்'' என்று போகிற சித்ரலேகாவை அவன் பார்வை பின் தொடர்ந்தது.

செவிலியர்களுக்கான அறையில் போய் நினைவு படுத்தி விட்டு அவள் வந்தபோது அந்த வராண்டாவில்



ஒரு மூலையில் முதுகைக் காட்டியபடி நின்று செல் போனில் பேசிக் கொண்டிருந்தவன் வேல்முருகன்.

முதலில் சித்ரலேகா அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை. ஆனால், அருகில் வர வர அவள் காதில் விழுந்த வார்த்தைகள் அவளை நின்று கவனிக்கச் செய்தன.

''ஆமா.. பிரசாத்.. சார்! இப்ப செக் பவர் நம்ப கைக்கு வந்தாச்சு. நீங்க பழி வாங்கற நேரம் வந்தாச்சு. இனி விளையாடிடலாமில்லே! ஆனா, எனக்கு மட்டும் நீங்க சொன்ன மாதிரி எல்லாம் செஞ்சுடணும்'' என்றான்.

'பிரசாத்தா?! அவளுக்கு அந்தப் பெயர் உறுத்தியது. ஒரு வேளை தன் அண்ணனாக இருக்குமா..?'

''பின்னே! சும்மா விடலாமா? என்னதான் எனக்கு முதலாளின்னாலும் உங்க சிஸ்டரோட வாழ்க்கையில விளையாடினவராச்சே! எனக்கு ஒரு சிஸ்டர் இருந்தா நான் இப்படித்தான் ஃபீல் பண்ணுவேன். கவலைப்படாதீங்க. நான் உங்களோட பார்ட்னர்'' என்றான்.

அதற்கு மேல் சித்ரலேகா அருகில் நிற்கவில்லை. படபடப்பாக அறை நோக்கி நகர்ந்தாள். தனது சகோதரன் அந்தக் காலத்தில்தான் ரெண்டு பேருடைய வாழ்க்கை யிலும் விளையாடினான் என்றால் இப்போதுமா? இந்த பாவி வேலு! செழியனிடம் சொல்லலாமா? சொன்னால் கேட்பாரா?

நீண்ட நாட்களாகத் தன்னிடம் இருக்கிற ஒருவனைப் பற்றித் தான் சொன்னால் சரிவருமா?

'உனக்கென்ன தெரியும் வேலுவைப் பற்றி?' என்று கேட்பார்!

யோசனையுடனேயே நடமாடினாள். அவள் கூர்ந்து பார்த்தாள்.

''என்ன லேகா! குழந்தை ஞாபகம் வந்துடுச்சா?'' என்றான்.

அவள் ஒரு நிமிடம் தடுமாறியவள் ''ம்..'' என்று புன்னகைத்தாள்.

''சரி.. கிளம்பு'' நைட் ஸ்டேக்கு.. ஜென்ட்ஸ் நர்ஸ் வர்றாங்க'' என்றான்.

அவள் மனசில்லாமல் கிளம்பினாள்.

கதவருகில் அவள் போகிற நேரத்தில் அவன் ஒரு கேள்வி கேட்டான். அந்தக் கேள்வியால் அவள் முகம் வெளுத்தது என்றால் அவள் நிமிர்ந்து நின்று சொன்ன பதிலால் அவன் முகம் வெளுத்துப் போனது.

## 17

''அப்பா! பிரசாத் எங்கே?'' என்றாள் அப்பாவிடம்.

எப்போதும் பிரசாத்தைப் பற்றிக் கவலைப் படாதவள் அவன் வலிந்து வலிந்து பேசினாலும் ஏனென்று கூடக் கேட்காத மகள் வலிந்து வந்து அவனைப் பற்றிக் கேட்கிறாளே என்ற ஆச்சரியம் அப்பாவுக்கு. ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல்.

''தெரியலம்மா! யாரையோ பாக்கணும். என்னவோ முக்கியமான விஷயம் பேசணும்னு அலைஞ்சுகிட்டிருக்கான்.''

''அப்பா! அவனுக்கு பிஸினஸ் கோயமுத்தூர்ல. எதுக்காக இங்க வந்து அலைஞ்சுகிட்டிருக்கான்'' என்றாள்.

''தெரியலம்மா! ஏதோ முக்கியமான விஷயம். செட்ரைட் பண்ணனும்னான்'' என்றார் சௌந்தரராஜன்.



''ஆமா! இதுவரைக்கும் இவன் செட்ரைட் பண்ணின அழகெல்லாம் போதாதாமா?'' என்று முணுமுணுத்துக் கொண்டு போகிற மகளின் முதுகை அப்பா புரியாமல் பார்த்தார்.

விஷயம் முழுமையாகத் தெரியாமல் அப்பாவிடம் எதுவும் பேச வேண்டாம் என்று முடிவு கட்டிக் கொண்டிருந்தாள் சித்ரலேகா.

இதுவரையிலும் அண்ணன் எது செய்தாலும் கண்டு கொள்ள மாட்டாள். அவன் மேல் அவ்வளவு வெறுப்பு. தன் மேல் அவனுக்கு மிகவும் அன்பு என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அன்பு என்ற பெயரில் தன் வாழ்க்கையைப் புரட்டிப் போடுகிற செயல்களைச் செய்து விட்டான் என்று கடுமையான கோபம்.

நிம்மதியாக இருக்கலாம் என்று ஈரோட்டுக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்தால் இங்கேயும் வந்து தன் வாழ்க்கையில் விளையாடுகிறான் என்று அவன் மீது கோபம்.

மீளவும் அவன் என்ன செய்கிறான் என்று கண்காணிக்க ஆரம்பித்தாள். அவள் கண்காணிப்பதற்கேற்ப அன்று பிற்பகல் ஒரு காரியம் நடைபெற்றது.

எல்லாருமாகச் சேர்ந்து உணவருந்திக் கொண்டிருக்கையில் அவன் செல்போன் ஒலித்தது.

''சொல்லுங்க வேலு!'' என்றான் பிரசாத்.

வேலு என்ற பெயர் அடிபட்டதுமே காதுகளைக் கூர்மையாகத் தீட்டிக் கொண்டு கவனிக்க ஆரம்பித்தாள் சித்ரலேகா.

''ம்..''

''தட்ஸ் எ குட் ஐடியா...''

''விடறதா இல்லை'' என்று பொதுப்படையாக பேச ஆரம்பித்தான்.

தங்கை கவனிக்கிறாள் என்று தெரிந்தவுடன் "வேலு" என்ற பெயரைச் சொல்வதைத் தவிர்த்தான். மெல்ல எழுந்து முன்னறைக்குப் போனான்.

சித்ரலேகாவும் சமையலறையில் ஏதோ எடுப்பவள் போல் சமையலறைக்குப் போனாள். காலம் கடத்திய படியே நின்று கவனித்தாள்.

''இருக்கட்டுமே! பெரிய பணக்காரனா இருந்தா.. என்ன? நம்மகிட்டே பணமில்லையா? இந்தச் சலசலப்புக் கெல்லாம் இந்தப் பனங்காட்டு நரி அஞ்சவே அஞ்சாது'' என்று கிட்டத்தட்ட கர்ஜித்தான் பிரசாத்.

சித்ரலேகாவின் மனத்தில் ஒரு சலிப்புணர்வு தோன்றியது. 'இவன் எப்போதுதான் திருந்துவான்' என்ற வருத்தம் தோன்றியது.

''இத பாருங்க.. சார்! இந்தத் தடவை நான் விடப் போவ தில்லை. ஏமாறப் போறதில்லே! பர்ஃபெக்ட் பிளான்தான் இந்த தடவை விழுந்தா எழுந்திருக்கவே கூடாது'' என்றான் பிரசாத்.

சித்ரலேகா நகரவில்லை. நின்றாள். இப்போது சித்ரலேகா அருகில் இல்லை என்ற துணிவிலோ என்னவோ சொன் னான்.

"வேலு! இப்ப லஞ்ச் முடிச்சவுடனே நான் வந்து உங் களைப் பார்க்கறேன். சித்து அநேகமா ஆஸ்பிட்டல் போயி டுவா. அவள் திரும்பவும் ஆஸ்பிட்டலில் இருந்து வர்ற துக்குள்ளே எல்லாத்தையும் முடிச்சுடணும்'' என்றான்.

சித்ரலேகா மெதுவாக நகர்ந்து மீண்டும் டைனிங் டேபிளுக்கு வந்து விட்டாள். மும்முரமாக சாப்பிடுபவள்



போல் ப்ாவனை செய்து கொண்டு அமர்ந்து கொண் டாள்.

பிரசாத் எதிரில் வந்து அமர்ந்தான். முகத்தில் உற்சாகம் தெரிந்தது. அம்மாவிடமும், அப்பாவிடமும் கலாட்டா வாகப் பேசிக் கொண்டிருந்தான். சித்ரலேகா எப்போதும் போல அமைதியாகச் சாப்பிட்டாள்.

அவளுக்குள்ளும் பரபரப்பு நிறைந்திருந்தது.

'எப்படியாவது இளஞ்செழியனுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். தயார்ப் படுத்த வேண்டும். தன்னால் அவன் வாழ்க்கை கெட்டது போதும். இனிமேலும் கெட வேண் டாம்' என்று முடிவு செய்து கொண்டாள்.

சாப்பிடும்போது நேற்று அவன் கேட்ட கேள்வியும் தான் சொன்ன பதிலும் நினைவுக்கு வந்தது.

கதவுக்கருகில் வந்தபோது அவன் குரல் அவளை நிறுத்தியது.

''லேகா! நீ இப்படி வந்து ஹெல்ப் பண்றதெல்லாம் உங்க ஹஸ்பென்டுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

அவள் நின்றாள். அவனை நேராகப் பார்த்தாள். ''அவர் ரொம்ப நல்லவர். இந்த நேரம் நீ அவர் கூட இருந்து பாத் துக்க வேண்டியது ரொம்ப அவசியம் என்று அவர்தான் சொன்னாரு'' என்றாள்.

அவன் முகம் வெளுத்துப் போனாற்போல் பார்த்தான். நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''ஒண்ணு அவரு பெரிய தெய்வமா இருக்கணும். இல்லே.. கோழையாயிருக்கணும்'' என்றான்.

சித்ரலேகா சளைக்காமல் பார்த்தாள். ஆனால் அவள் முகமும் வாடியது.

''கண்டிப்பா.. அவர் தெய்வம்தான். வாழ்க்கையை சந்திக்க மறுத்து ஓடற கோழையில்லே. அவருக்குத் தன் மேல நம்பிக்கையிருக்கு. என் மேலயும் நம்பிக்கை யிருக்கு'' என்றாள். நிற்காமல் நடந்து விட்டாள்.

அன்றொரு நாள் கேட்ட கேள்விக்கும் சேர்த்து பதில் அதில் இருப்பது போல் உணர்ந்தான் இளஞ்செழியன். அவன் உணர்ந்து கொண்டதை சித்ரலேகாவும் உணர்ந் தாள்.

இளஞ்செழியன் முகம் போன விதம் இப்போது கூட அவளுக்கு நினைவுக்கு வந்தது. ஆனால் உடனே மனசாட்சி சொன்னது.

''உறவுகளின் நிலை வேறு. இது மாதிரியான செயல் கள் வேறு. இது கோழைகள் செய்கிற செயல். நேருக்கு நேராகச் சந்திப்பது வேறு. ஆனால் உயிரைக் கொடுத்து வளர்த்த தொழில்களில் புகுந்து விளையாடுவது என்பது எந்த விதத்திலும் நியாயமில்லை. இந்த முறை பிரசாத்தை ஜெயிக்க விடவே கூடாது. தான் உறுதியாக் நின்று. விஷ யங்களைக் கையாள வேண்டும்'' என்று முடிவு செய்து கொண்டாள்.

பிரசாத் புறப்படும் வரை காத்திருந்தாள். பிறகு தானும் இயல்பாகப் புறப்படுவது போல் புறப்பட்டுப் பின்னா லேயே போனாள்.

வழியில் ஒரு இடத்தில் வேலு நின்றான். அவனை ஏற்றிக் கொண்டாள். இருவருமாகப் போகிற இடம் வரை போய்ப் பார்த்து விட்டுக் காரை ஆஸ்பத்திரிக்குத் திருப்பி னாள்.

இளஞ்செழியனின் முகம் அவளைக் கண்டவுடன் பூவாய் மலர்ந்தது.



''லேகா! ஆஃப்டர்நூன் வர்றேன்னு போன் பண்ணி னயா? கவலையாப் போச்சு. ஒருவேளை உனக்கு உடம்பு சரியில்லாமப் போச்சோ என்னவோன்னு'' என்றான்.

''இல்ல... காலையில ஏதோ கொஞ்சம் டயர்டா இருந் துச்சு. அதான்.''

''லேகா! நான் உன்னைத் தொல்லைப் படுத்தறனோ?''

''இல்லல்லே! நேத்து நைட் கொஞ்சம் தூங்கலே'' என்றாள்.

''ஓ!'' என்றான். ''என்ன விஷயம்?'' என்றான்.

''இல்லே! ஒரு பிராப்ளம். அந்த பிராப்ளம்கூட..'' என்று நிறுத்தினாள்.

அவன் கேள்விக்குறியாகப் பார்த்தான்.

''அந்தப் பிராப்ளம்.. உங்க சம்பந்தப்பட்டதுதான்.''

அவன் கண்களில் சுவாரசியம் கூடியது.

''ஓ!'' என்றான்.

''நான் ஒரு விஷயம்.. சொல்வேன்.. நீங்க தப்பா.. நினைக்கக் கூடாது..'' என்றாள்.

''சொல்லு!''

''இல்லே! வேலு.. உங்ககிட்டே எத்தனை நாளா வேலைக்கு இருக்காரு.''

''ஏன்! கிட்டத்தட்ட நாலு வருஷமா.. இருக்கான்.''

''இல்லே! அவரு நேச்சர் எப்படி?'' என்றாள்.

இளஞ்செழியன் சித்ரலேகாவை வெறித்துப் பார்த்தான்.

''லேகா! நீ தான் ஸ்டாப் கேப் மாதிரி! ஆனா, அவன் என்னை நம்பி வந்தவன்'' என்றான்.

சித்ரலேகாவின் முகம் சிவந்தது. அவள் இதை எதிர் பார்த்ததுதான். ஏதோ கொஞ்ச நாளைக்குப் பாத்துக் கொள்

கிறேன் என்று வந்தவள் தனது அமைப்பிலேயே வைக்கிறாளே என்று கோபம் கிளம்பும் என்றுதான் நினைத்தாள்...

சித்ரலேகா பெருமூச்சு விட்டாள்.

''அப்ப.. சரி! நான் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாது. ஆனா.. ஒரு நல்ல நிர்வாகி எந்தக் கருத்து யார்கிட்டே இருந்து வந்தாலும் சரி.. மனசுல வாங்கிட்டு அப்புறமா முடிவெடுப்பாங்க.. விஷயத்தை வாங்கிக்காமே முடிவெடுக்க மாட்டாங்க'' என்றாள் சற்றே கோபத்தோடு. ஆனால் அவன் முகத்தைப் பார்த்து சொல்லவில்லை. மாறாக சுவரைப் பார்த்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தாள்.

முகத்தில் புன்னகை படர்ந்தது. அந்த ஒரு மாத காலத்தில் இப்படித்தான் ஏதாவது கோபமாகப் பேச வேண்டுமென்றால் முகத்தைப் பார்க்க மாட்டாள். இப்போதும் அதே போல் பேசுகிறாள்.

புன்னகைத்துக் கொண்டான்!

''சரி... நான் மோசமான நிர்வாகியா இருக்க விரும்பலே. இப்ப சொல்லு.. கேட்போம்'' என்றான்.

சொன்னாள்.

முந்திய நாள் ஆஸ்பத்திரியில் வைத்துத் தான் வேல்முருகன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டதைச் சொன்னாள். அப்போது கூட பிரசாத் என்ற பெயரைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் சொன்னாள். ஆனால் இவ்வழக்கில் தன் சகோதரனும் வேலு என்று தவறுதலாகக் குறிப்பிட்டுப் பேசி விட்டு உஷாரானதையும், தான் பின் தொடர்ந்து செய்ததையும் சொன்னாள்.

வழியில் ஒரு இடத்தில் நின்று வேலுவைப் பிக்கப் செய்து கொண்டதையும் சொன்னாள்.



இளஞ்செழியன் எழுந்து அமர்ந்து கொள்ள விரும்புவதாக சைகை செய்தான். எழுந்து அமர வேண்டும் என்று நினைத்தவுடனே சித்ரலேகா உதவியாளரை அழைக்க எழுந்து அமர்ந்தான்.

''ம்.. லேகா! நீ சொல்றதுலயும் விஷயம் இருக்கு..'' என்றான்.

செல்போனை ஆன் செய்தான்.

''மேனேஜர்.. வேலுவைப் பேசச் சொல்லுங்க..'' என்றான். மேனேஜர் அந்தப் பக்கம் திணறினார் போலும்.

''என்னது? வெளிய போயிருக்காரா? எங்க போனாலும் இனிமே சொல்லிட்டு போகச் சொல்லுங்க..'' என்றான். ஆஃப் செய்தான்.

''லேகா!.. ஆபீஸ்லயும் இல்லயாம்...'' என்றான்.

கனத்த மௌனம் நிலவியது.

லேகா தனக்காகத் தவிப்பது புரிந்தது. ''லேகா! நீ வொர்ரி பண்ணிக்காதே. ஐ வில் மானேஜ்'' என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் தளும்பியது.

''எந்த நேரம்.. நான் உங்க வாழ்க்கையில் நுழைஞ்சேனா.. உங்க வாழ்க்கை டிஸ்டர்ப் ஆச்சு.. இப்ப மறுபடியும்.. உங்க தொழிலும்..'' என்று தழுதழுக்க அவன் வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

''லேகா! அப்ப இருந்த செழியன் வேற. இப்ப இருக்கிற செழியன் வேற. அவன் இளந்தண்டு. அப்படியே ஒடிச்சர்லாம். இவன் அப்படியல்ல. வஜ்ஜிரம். வைரம் பாய்ந்த இரும்புத் தூண். இப்ப என்கிட்ட மோதறவங்களைப் பொடிப் பொடியாக்க எனக்குத் தெரியும்'' என்றான்.

அவள் மெல்ல சமாதானம் அடைந்தாள்.

''ஒரு விஷயம் ஞாபகம் வச்சுக்க.. லேகா..! அது பிரதராயிருந்தாலும் சரி.. இந்தத் தடவை கருணை காட்ட மாட்டேன். வேணும்னா.. அவனைக் காப்பாத்திக்க'' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

''எண்ணம் சரியில்லாதவனை எத்தனை நாள் ஒருத்தர் காப்பாத்த முடியும்? தன் வினை தன்னைச் சுடும். ஒட்டப்பம் வீட்டைச் சுடும்'' என்றாள்.

''அப்ப.. சரி! இந்த விளையாட்டிலிருந்து நீ விலகிக்க.. நான் பாத்துக்கறேன்.. தப்போ.. சரியோ.. இனி உன் வாழ்க்கையை நிம்மதியாக்கறதுக்கு வழியை பாரு..'' என்றான்.

அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

* * *

''ஏன்.. ரேணுகா? பிரசாத் ஏதாவது சொன்னானா?'' என்றார் சௌந்தரராஜன்.

''தெரியல. இப்ப எதுக்கு கோயமுத்தூர்ல இருந்து வந்தான். மறுபடியும் ஏதோ பிரச்சினை செய்வான் போல இருக்கு. இவன் திருந்தவே மாட்டானோ?'' என்றாள்.

அப்பா சொன்னார். ''இப்பவும் ஏதோ பண்றான் போல இருக்கு. அந்த இளஞ்செழியன் பத்தி அடிக்கடி பேசறான். இந்தப் பொண்ணு வேற அங்க ஆஸ்பத்திரியில போய் உட்காந்துருக்கு. மறுபடியும் ஆட்டம் ஆரம்பிச்சுட்டாங்க'' என்றார் வருத்தத்துடன்.

வெளியே போன பிரசாத் வரும்வரை அமர்ந்திருந்தார். அவன் உள்ளே நுழைந்தவுடன் கடுமையான குரலில் ''பிரசாத்.. வா உன் கிட்ட பேசணும்'' என்றார்.



வந்தான்!

''சொல்லுங்கப்பா!'' என்றான்.

''இத பாரு..! நீ பேசாம.. புறப்பட்டுக் கோயமுத்தூர் போ..! இனிமேலும் சித்ரலேகா லைஃப்ல புகுந்து குழப்பாதே'' என்றார். ஒரு ஐந்து நிமிடம் படபடவென்று பேசினார்.

பிரசாத் அமைதியாகக் கேட்டுக் கொண்டான். பிறகு எழுந்து சொன்னான்.

''அப்பா! இந்தத் தடவை நான் விடறதாயில்லே. சொல்லப் போனா.. போன தடவை நான் ஏமாந்துட்டேன். ஆனா.. இந்தத் தடவை நான் முடிவா ஏதாவது ஒண்ணு செஞ்சுட்டுத்தான் உட்காரப் போறேன்.''

''ஒரு முடிவும் வேண்டாம். சித்த கிளம்பு.''

அவன் வெறி கொண்டவன் போல் சிரித்தான்.

''அப்பா..! நான் யார் சொன்னாலும் கேட்க மாட்டேன். என்னைக்கிருந்தாலும் அந்த இளஞ்செழியனைப் பார்ப்பேன். கணக்குத் தீத்துட்டுத்தான் நான் செட்டிலாவேன்னு முடிவு பண்ணிட்டுத்தான் நானும் கல்யாணம் பண்ணிக்குவேன்னு இருக்கேன்.. அப்பா.. நீங்க ஒதுங்கிக்குங்க..'' என்றான்.

''தம்பி..! நீ சொல்றதும்.. செய்றதும்.. ஒண்ணும் எனக்குப் புரியவேயில்லை'' என்றார்.

பிரசாத் அதைக் கண்டு கொள்ளாதவன் போல் உள்ளே போய் விட்டான். ஆனால், அப்பா சித்ரலேகா வரும் வரை காத்துக் கொண்டிருந்தார்.

சித்ரலேகா வந்தாள்.

''அப்பா! தூங்கலையா?'' என்றாள்.

''இல்லம்மா! தூக்கம் வர்லே'' என்றார்.

''அப்பா! இனிமே என்னைப் பத்தி வொர்ரி பண்ணாதீங்க'' என்றாள் சித்ரலேகா வாஞ்சையுடன் அருகில் அமர்ந்தாள்.

''இல்லம்மா! பிரசாத்.. மறுபடி.. ஏதோ.. வேண்டாத வேலையெல்லாம் செய்யறான் மாதிரி தோணுது'' என்றார்.

''ஆமாம்பா! எனக்கும் அப்படித்தான் தோணுது'' என்றவள், மேலும் தொடர்ந்து சொன்னாள்.

''அதுக்குத்தான் சொன்னேன். நான் பாத்துக்கறேன்'' என்றாள். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு எழுந்து போனாள்.

சித்ரலேகா போனவுடன் மறுபடியும் பிரசாத் உள்ளே வந்தான். இந்த முறை அவன் முகத்தில் கடுகடுப்பு குறைந்திருந்தது.

''அப்பா... நான் சொல்றதை முழுசா மனசில வாங்கிக்குங்க.. ஆனா, என்னை மாத்தறதுக்கு மட்டும் முயற்சி செய்யாதீங்க..'' என்றான்.

கிட்டத்தட்ட ஒரு அரை மணி நேரம் பேசினான். அப்பா அதிர்ந்து போனவராகக் கேட்டுக் கொண்டார். தன்னுடைய திட்டங்களையும் சொன்னான்.

அப்பாவுக்கு அந்தக் கணத்தில் புரிந்தது சித்ரலேகாவும் சரி, பிரசாத்தும் சரி.. தாங்கள் யார் சொன்னாலும் கேட்கப் போவதில்லை. அவரவர் வழியில்தான் போகப் போகிறார்கள் என்று.

வேடிக்கை பார்ப்பதைத் தவிர தங்கள் இருவருக்கும் வேறு வழியிருக்கவில்லை என்பதும் புரிந்தது.

கடைசியாகச் சொன்னார்.



''என்னமோ.. செய்ங்கப்பா! யாரும் இப்ப நாங்க சொன்னாக் கேக்கற மாதிரி இல்லே! நடப்பது நடக்கட்டும்!'' என்றார்.

பிரசாத் 'அப்பா இந்த மட்டும் வழிக்கு வர்றாரே..' என்று எண்ணினான் போலும். தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு எழுந்து போனான்.

அப்பா அன்றைக்கு வெகு நேரம் உறங்கவில்லை. சித்ரலேகாவும் உறங்கவில்லை. ஆனால் பிரசாத் வெகு நிம்மதியாக உறங்கினான்.

அதே சமயம்!

இரவு பத்து மணிக்கு ரவுண்ட்ஸ் வந்த டாக்டரிடம் இளஞ்செழியன சொன்னான்.

''டாக்டர்! நான் இனி முடங்கியிருக்க முடியாது. ஆபீஸ் போயே ஆகணும்'' என்றான்.

''போயிரலாம்..! ரெண்டு நாள்ல போயிடுங்க.. ஒரு நல்ல அசிஸ்டெண்ட் வச்சுக்குங்க.. கால் கட்டைப் பிரிச்சுரலாம். கைக்கட்டை சின்னதாப் பண்ணிரலாம்'' என்றார்.

''தாங்க்ஸ்!'' என்றான்.

உறங்குவதற்கு முன் மனத்துக்குள் திட்டங்கள் போட்டுக் கொண்டான். வழக்கம் போல எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் ஒதுக்கி வைத்து விட்டு உறங்குவது போல் ஆழ்ந்து உறங்கினான்.

## 18

மெல்ல வாக்கர் வைத்து நடை பயின்று பழகிக் கொண்டிருந்தான் இளஞ்செழியன்.

பிடிவாதமாக அலுவலகத்துக்கு வந்து விட்டான். தனது அலுவலகத்தில் தனக்கென்று இருக்கிற அறையிலேயே எல்லா

வித வசதிகளும் செய்து கொண்டு தங்கிக் கொண்டான். பெரிய அளவிலான எலும்பு முறிவுகள் இல்லை என்ப தால் படுக்கையிலேயே இருக்க வேண்டும் என்ற அவசியமும் இருக்கவில்லை.

"சார்!" என்று வந்தான் வேலு.

"என்னப்பா?"

"இல்ல.. சார்! இன்னைக்கு அந்த ஹவுஸிங் பைனான் ஸுக்கு ஒரு செக் அனுப்பணும். நிறைய வண்டிகளுக்கு ட்யூ கட்டறதுக்கான செக்ஸ் இஷ்யூ பண்ணணும்" என்றான்.

காலை மேலே சோபாவில் வைத்துக் கொண்டிருந் தான். இன்னும் வலது கையைப் பயன்படுத்துகிற நிலைமை வரவில்லை.

இடது கையில் முகவாயை நீவிக் கொண்டான். தனது அலுவலக அறைக்குள்ளே இருந்த பீரோ சாவியை எடுத் தான்.

"வேலு... மேனேஜரைக் கூப்பிடு" என்றான். மேனேஜர் வந்தார்.

"மேனேஜர் சார்! நீங்களும் வேலுவும் அந்த பீரோவுக் குள்ளே இருக்கிற எல்லா செக் புக்குகளையும், பாஸ் புக்கை யும் எடுத்துட்டு வாங்க. பிராப்பரா மூடி வச்சுட்டு வாங்க" என்றான்.

வேலுவின் முகத்தில் குழப்பம் தோன்றியது. ஆனாலும் எதையும் காட்டிக் கொள்ளாமல் கூடப் போனான். மறு படியும் தனது பீரோவைக் காட்டி,

"எல்லாத்தையும் இங்க இருக்கிற பீரோவுல வைங்க" என்றான். பூட்டச் சொல்லி சாவியைத் தன் ஹாண்ட் பேக்கில் வைத்துக் கொண்டான்.



"வேலு! நீ போய் யார் யாருக்கு செக் அனுப்பணும்னு லிஸ்ட் தயார் பண்ணிட்டு.. வா" என்றான்.

வேலுவின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. ஆனாலும் போனான்.

இளஞ்செழியன் மானேஜரிடம் "சார்! உங்க பேரைப் போட்டு உங்களுக்கு செக்ஸ் பவர் குடுத்த மாதிரி ஒரு லெட்டர் அடிச்சுட்டு.. வாங்க" என்றான்.

மேனேஜர் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுப் போனார்.

"சார்! வேலு சார்..!"

"ப்ளீஸ்! யார் யாருக்கு என்னென்ன வேலை குடுக்க ணும்னு எனக்குத் தெரியும். அவருக்கு நிறைய அவுட் டோர் வேலை இருக்கு. அவர் இங்க உட்கார்ந்து செக் புத் தகத்துல கையெழுத்துப் போட்டுகிட்டு இருக்க முடியாது" என்றான்.

மேனேஜர் மெதுவாக நகர்ந்தார். ஆனாலும் உள்ளுக் குள்ளே வேலுவுக்குக் கோபம் வருமோ என்ற பயம் இருந்தது. வேலுவிடம் போய்ச் சொன்னார்.

"வேலு.. சார்! எனக்கு செக் பவர் குடுக்கறதா சார் சொல்றாரு..!" என்றார்.

வேலுவின் முகம் சற்று கறுத்தது. உடனே சமாளித்துக் கொண்டான்.

"சார் சொன்னா அதுக்கு ஏதாவது காரணம் இருக்கும்.." என்றான்.

"ஆமா..! அவுட்டோர் வேலை எல்லாம் நீங்க.. பாக்கணுமாம்" என்றார்.

அந்த பதிலில் அவன் மனம் திருப்திப்பட்டுப் போனது. ஆனால், உள்ளூர பிரசாத்தைத் தான் சந்தித்தது இளஞ்

செழியனுக்குத் தெரிந்திருக்குமோ என்ற பயமும் இருந்தது போலும்.

செக் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய்க் கொடுக்கும்போது முகம் வாடி இருந்தது. இளஞ்செழியன் அதைக் கவனித்தவன் போல் சொன்னான்.

''வேலு! கொஞ்ச நாளைக்கு என்னால வெளிய அலைய முடியாது. என்னோட வெளி வேலை எல்லாத்தையும் நீதான் பொறுப்பாப் பாத்துக்க முடியும். அதனால தான் செக் பவரை மேனேஜருக்குக் குடுக்கப் போறேன். அவருக்கு எப்படி செக் வைக்கிறதுங்கறதை நான் பாத்துக்கறேன்.''

வேலு கேள்விக்குறியாகப் பார்த்தான்.

இளஞ்செழியன் தன் மனத்திலுள்ள எதையும் காட்டிக் கொள்ளாமல் வாஞ்சையாகப் பார்த்தான். பிறகு சொன்னான்.

''சித்ரலேகா மேடத்தை நான் சரியாகற வரைக்கும் பாத்துக்கச் சொல்லியிருக்கேன். ஒரு வழியா ஒத்துகிட்டாங்க'' என்றான்.

அப்போது மட்டும் வேலுவின் கண்களில் ஏதோ செய்தி தோன்றி மறைந்தாற் போல் இருந்தது. இளஞ்செழியன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

இப்போது அதையெல்லாம் சொல்லிவிட்டு இடிஇடியென்று சிரித்தான்.

சித்ரலேகா கண்கள் மலரப் பார்த்தவள் புன்னகைத்தாள். உள்ளுக்குள் பாராட்டுவதாகத் தோன்றியது.

''பரவால்லே! வேலுவை இன்ஸல்ட் பண்ணாம ஆனா, அதே சமயத்துல பைனான்ஷியல் பவர்ஸ்ல இருந்து விலக்கியும் வச்சுட்டீங்க'' என்றாள்.



அவன் முகத்தில் சிந்தனை தோன்றியது. மெல்லிய குரலில் தனக்குத் தானே பேசுவது போல் சொன்னான்.

''லேகா! வாழ்க்கை சில சமயங்கள்ல சூழ்நிலையால கட்டுப்படுத்தப்படுது. நம்மை மீறின விஷயங்கள் நடந்து போகுது. வேலு இதுவரைக்கும் நல்லவன். எனக்காக நிறைய உழைச்சிருக்கான். ஒரு சகோதரனாத்தான் நான் நினைச்சுருக்கேன். இன்னும் அவனுக்கு நிறைய செய்யணும்னு இருக்கேன். அதுக்குள்ள ஏன் அவனுக்கு புத்தி இப்படிப் போகுதுன்னு தெரியலை'' என்றான்.

சித்ரலேகா பெருமூச்சு விட்டாள்.

''எல்லாம் எங்கண்ணனோட வேலையாத்தான் இருக்கணும்'' என்றாள்.

இளஞ்செழியன் அதை ஒத்துக்கொள்ளவில்லை. "அப்படியில்ல.. லேகா! உங்கண்ணன் என்ன சொன்னாலும் சரி.. இவன் நம்பியிருக்க கூடாதில்லே.''

குரலில் ஆழ்ந்த வருத்தம் தோன்றியது.

லேகா சொன்னாள். ''கவலைப்படாதீங்க.. செழியன்! இப்ப நாம ரெண்டு பேரும் சேர்ந்து நின்று எங்கண்ணனை சமாளிக்கலாம். அப்ப வந்து நாம களிமண்ணு மாதிரி இருந்தோம். இப்ப அப்படியில்ல. அனுபவம் இருக்கு. உலகம் தெரியும். கேப்பார் பேச்சைக் கேக்கற எடுப்பார் கைப்பிள்ளை இல்லை'' என்றாள்.

இளஞ்செழியன் மறுபடியும் மௌனம் சாதித்தான். இருவருக்குமே நடந்து போன நிகழ்வுகளில் நினைவுகள் வந்தன.

* * *

''இளஞ்செழியன்.. சார்! சொன்னாக் கேளுங்க. இப்படியே நீங்க ஆபீஸ் போக முடியாது'' என்றார் டாக்டர்.

''இப்ப.. நான் இங்க என்ன பண்ணிகிட்டிருக்கேன். வெட்டியாப் பொழுது போக்கிட்டிருக்கேன். உங்களுக்குத் தெரியுமில்லே.. என்ன நம்பி எவ்வளவு பெரிய தொழில் இருக்கன்னு. இதே மாதிரி அரேன்ஜ்மென்ட்ஸை வீட்லயும் வச்சுக்கறேன். ஆபீஸ்லயும் கெஸ்ட் ரூம்லயும் வச்சுக்கறேன்'' என்றான்.

''ஓ.கே.. தென்'' என்ற டாக்டர் சிந்தனையிலாழ்ந்தார்.

''சரி.. ரெண்டு நாள் பொறுங்க..! கைக்கட்டை அவிழ்த்தர்லாம். சின்னதா ஒரு கட்டுப் போதும். ஆனா, அந்தக் கையைப் பயன்படுத்த ஒரு மாசம் ஆகும். காலுக்கு மட்டும் ஒரு பேண்ட் மாதிரிப் போட்டுக்கலாம். அப்பப்ப கொஞ்சம் கொஞ்சமா வெயிட்டை இன்கிரீஸ் பண்ணி அப்புறம் மே.பி. ஒரு மாசத்துல நடக்க ஆரம்பிக்கலாம்'' என்றார். இந்தப் பேச்சுக்களின்போது சித்ரலேகாவும் உடன் இருந்தாள்.

டாக்டர் போனதற்குப் பிறகு அவன் திரும்பி சித்ரலேகாவைப் பார்த்தான்.

''லேகா.. தேங்க்ஸ்'' என்றான்.

''எதுக்கு'' என்றாள் புரியாமல்.

''செய்த உதவிகளுக்காகவும், செய்யப் போற உதவிகளுக்காகவும்.''

''புரியலே!''

''வேலுவும் உங்க பிரதரும் மீட் பண்ணினதை நீ சொல்லாமயே விட்டிருக்கலாம். ஆனா, சொன்னியே.. அதனால நீ இப்பவும் என்னோட நம்பிக்கைக்குரிய வெல்விஷர் தான். அதனாலதான் நான் மேற்கொண்டு உன்கிட்டதான் உதவி கேட்கலாம்னு இருக்கேன்.''

''ஓ..!''

''ஏன்.. லேகா! உன் ஹஸ்பெண்ட் வர்றதுக்கு எவ்வளவு நாளாகும்?''



''அநேகமா.. இன்னும் இரண்டு மாசமாகும்.''

''குழந்தை.''

''குழந்தை இப்போதைக்கு அவரோட அம்மா. அப்பா கிட்டே இருக்காப்ல.''

''அவங்க.. இன்னும் ஒரு ரெண்டு மாசம் பாத்துப்பாங்களா?''

''தெரியாது.. கேட்டுப் பாக்கணும்.''

''ப்ளீஸ் கேட்டுப் பாரு. இடையில வேன்னா ரெண்டு நாள் போய்ப் பாத்துட்டு வா.''

அவள் யோசிப்பது போல் ஜன்னல் பக்கம் திரும்பி நின்று கொண்டாள்.

''லேகா! என்னோட ராசி நான் நம்பிக்கை வைக்கிறவங்க.. யாரும் எனக்கு நிலைக்கிறதில்லே. வேலு.. எவ்வளவு நம்பிக்கை வச்சேன். இப்ப எனக்கே.. எதிரா?'' அவன் பேசுவதை நிறுத்தினான். அவன் குரலில் சொல்ல முடியாத வேதனை தெரிந்தது?

''ஆனாலும்.. ஒரு சந்தோஷம். நீ எனக்காகக் கவலைப் படறே. நடந்து போனது எதுவானாலும் என்னோட வெல்விஷரா இருக்கே.. உன்னோட சக்திக்கு எது முடியுமோ அதைச் செய்யறே. இன்னும் ஒரு இரண்டு மாசம். கூட இருந்து இதையெல்லாம் முடிச்சுக் குடுத்துட்டுப் போ..'' என்றான்.

அவளும் சற்று நேரம் யோசித்தாள். பிறகு சொன்னாள் ''செழியன். உங்களுக்குக் காலும் கையும் குணமானவுடனே.. என்னை விடுவிச்சரணும்'' என்றாள்.

அவன் சரியென்று தலையசைத்தான். பிறகு சிரித்துக் கொண்டே சொன்னான்.

''ஏன்.. லேகா! என்னை விட்டுத் தப்பிச்சுப் போறதுல.., அவ்வளவு ஆர்வமா இருக்கே!'' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''தப்பா.. நினைச்சுக்காதீங்க! நாம ரெண்டு பேரும் நினைக்காத அளவுக்கு.. வாழ்க்கை திசை மாறிப்போச்சு. ஆனாலும் அவரோட பெருந்தன்மையை நான் மிஸ்யூஸ் பண்ணிடக் கூடாதில்லே! அவரு என்னை நம்பறாரு..! அவரு நம்பிக்கைக்கு பங்கம் வராம நான் பாத்துக்கணும் இல்லே!'' என்றாள்.

அவன் சற்று நேரம்.. ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். பிறகு ஆழ்ந்த குரலில் சொன்னான்.

''நீ சொல்றதும் சரிதான்!'' என்றான்.

அந்தப் பேச்சுக்குப் பிறகு அவர்களுக்குப் பேசுவதற்கு நேரம் இருக்கவில்லை.

வேலுவை அழைத்தான்.

''வேலு.. நீ சைட் பக்கம் போய்ப்பாரு.. என்ன நடக்குதுன்னு தெரியும். அப்புறம், ஃபீல்ட் இன்ஸ்பெக்ஷன் அதெல்லாம் நீ பாத்துக்க.. முக்கியமான விஷயம் இருந்தா.. எனக்கு உடனே தெரிவி'' என்றான்.

வேலு வெளியே போனதும் வேறொருவரை அழைத்தான். சில அறிவுரைகள் சொன்னான். அனுப்பி வைத்தான்.

சித்ரலேகா உண்மையாகவே அசந்து போனாள். தான் சொன்ன விஷயத்தை மனதில் வாங்கிக் கொண்டு வேலுவை உடனே அழைத்து சத்தம் போடாமல் அதற்கு மாறாக அவன் அமைதியாக விஷயங்களை நடத்துவது பார்க்க நன்றாக இருந்தது.



வேலுவைக் கண்காணிக்கவும் அவன் ஏற்பாடுகள் செய்து விட்டான் என்பதும் புரிந்தது. இனிமேல் பயப்படுவதற்கு இல்லை என்ற நிம்மதியும் தோன்றியது.

உற்சாகமாக நடமாடினாள்.

அவள் உற்சாகமாக நடமாடுவதை அவன் புன்னகையுடன் பார்த்துக் கொண்டான். அன்று மாலை!

அவன் எதிர்பார்த்த போன் ஒன்று வந்தது!

''சார்! வேலு சார்... உங்ககிட்டே சொன்னா மாதிரி சைட்டுக்குப் போகலே. ஆஃப்டர்நூன் வேற எங்கயோ போயிட்டாரு'' என்றான்.

''சரி.. நீ நான சொன்னேன் இல்ல..! அந்த இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் எல்லாத்தையும் ஃபாலோ பண்ணு'' என்றான்.

''சரிங்க.. சார்!'' என்றான். அந்தப் புறம் லேகாவைப் பார்த்துச் சிரித்தான்.

''லேகா! வெளிய போகச் சொன்னதை நல்ல விதமாகப் பயன்படுத்திக்கறான்.. நம்மாளு!'' என்றான் ஒரு விதமாகச் சிரித்தான்.

லேகா கலக்கத்தோடேயே நடமாடினாள்!

பிரசாத் எதற்காக இப்படியெல்லாம் செய்ய வேண்டும்? என்ற கேள்வி மனத்துக்குள் ஓடிக் கொண்டே இருந்தது.

கலக்கமாகவே நடமாடினாள். நேர்மாறாக இளஞ்செழியன் அழுத்தமாகவே நடமாடினான்.

* * *

''வாங்க.. வேலு! எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன்'' என்றான் பிரசாத்.

''சார்!'' என்றான் வேலு. குரலில் கொஞ்சம் கலக்கம் தெரிந்தது.

''சொல்லுங்க!''

''சார்! இளஞ்செழியன் சாருக்கு ஏதோ தெரிஞ்சுருக்கோன்னு சந்தேகமா இருக்கு'' என்றான் கவலையுடன்.

''ஏன்.. அப்படிச் சொல்றீங்க?''

''இல்லே.. செக் பவர் எனக்குத் தர்றேன்னு சொன்னாரு.. இப்ப மேனேஜருக்குக் குடுத்திருக்காரு.''

''ம்..!'' என்றான் சிந்தனையுடன்.

''ஆனா.. இன்னொன்றும் செய்திருக்காரு. என்னன்னா... மேனேஜர் ஸைன் பண்ணினாலும் செக் புக்கெல்லாம் உங்க சிஸ்டர் பார்வையிலதான் இருக்கும். எல்லாமே அவங்ககிட்ட வந்துட்டுத்தான் போகும்.''

பிரசாத்தின் கண்கள் மின்னியது!

''அப்படிப் போடு!'' என்றான். பிறகு கடகடவென்று சிரித்தான்.

''சித்ராதானே... மேனேஜ் பண்ணிக்கலாம் விடு..'' என்றான் பிரசாத் கெத்தாக.

''சார்..! நீங்க நினைக்கற மாதிரியெல்லாம் எதுவும் நடத்திட முடியாதுன்னு நினைக்கறேன்.. ஏன்னா.. சித்ரலேகா மேடமும் சரி, இளஞ்செழியனும் சரி.. ரொம்ப ஸ்ட்ராங்கான ஆளுங்க. கடந்த காலத்துல ஏமாளிகளா இருந்திருக்கலாம். ஆனா, இப்ப ரெண்டு பேரும் உஷார் பார்ட்டிங்க..!'' என்றான்.

''அது கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம்தான். ஆனா, எப்படியானாலும் நான் நினைக்கறது நடக்கணும். அதுக்காக எந்த லெவலுக்கு வேன்னாலும் போவேன்.''

பிரசாத்தின் கண்களில் தெரிந்த உறுதியை மட்டும் அந்த நேரம் இளஞ்செழியன் பார்த்திருந்தால் அவனைக்



கண்ட துண்டமாக வெட்டியிருப்பான். அந்த அளவு வைராக்கியம் அவன் கண்களில் தெரிந்தது.

வேலுவுக்கும் கூட கொஞ்சம் பயம் ஏற்பட்டது. தேவையில்லாமல் தான் இதில் சிக்கிக் கொண்டோமோ என்று. ஆனால் இன்னொரு புறம் யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்த்து விட வேண்டும் என்ற எண்ணமும் வலுத்தது.

யார் ஜெயித்தாலும் தனக்கு ஒன்றும் கெட்டுப் போய் விடப் போவதில்லை.

ஒருவேளை பிரசாத் ஜெயித்தால் பிரசாத்துக்கு உதவியாளராகப் போய் விட வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''சரிங்க.. சார்! நான் கிளம்பறேன்'' என்று புறப்பட்டான்.

இருவரும் பேசிக் கொண்டே அந்த கெஸ்ட் ஹவுஸ் விட்டு வெளியே வந்தார்கள். அங்கேயும் ஒன்றிரண்டு நிமிடம் நின்று பேசினார்கள்.

அதே நேரம்!

சற்று தொலைவில் இருந்தபடி பிரசாத்தும் அவனும் பேசிக் கொள்கிற நிலையில் போட்டோக்கள் எடுக்கப் படுகின்றன என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

தெரிந்தாலும் அது பற்றிக் கவலைப்படுகிற நிலையில் இருவரும் இருக்கவும் இல்லை. அன்று மாலை!

தன் கையில் இருந்த போட்டோக்களை ஆழமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் இளஞ்செழியன். கண்களில் சினமேறியது.

அருகில் நின்ற சித்ரலேகாவுக்குக் கூட அடிவயிற்றில் பயம் தோன்றியது.

"சார்.. மேற்கொண்டு என்ன செய்யட்டும்?"

"என்ன.. இன்னும் ரெண்டொரு நாள்ல வாக்கரோட நடக்க ஆரம்பிக்கலாம்.. அப்புறம். நானே நேரில் போய் கையும் களவுமாப் பிடிச்சுக்கறேன். அது வரைக்கும்.. அப்பப்ப எனக்குத் தகவல் குடுத்துரு" என்றான்.

அவன் போனதற்குப் பிறகு சித்ரலேகாவைக் கவலையுடன் பார்த்தான்.

"லேகா! இந்தத் தடவை நான் ஆக்ஷன் எடுத்தே ஆகணும்.. சரியா? நீ வருத்தப் படக்கூடாது."

"உங்களைக் காப்பாத்திக்க.. நீங்க என்னவும் செய்யலாம். தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம் என்று காந்திஜியே சொல்லியிருக்காரு" என்றாள் சித்ரலேகா.

இருவர் மனத்திலும் வருத்தமே நிறைந்திருந்தது.

## 19

அதிகாலை அவசர அவசரமாகப் புறப்படுகிற மகளிடம் ரேணுகா சொன்னார்.

"ஏய்! சாப்பிட்டுட்டுப் போடி! இப்படிக் காலைல ஏழு மணிக்குப் போறே. ராத்திரி பத்து மணிக்கு வர்றே!" என்றார்.

"அம்மா! நா சீக்கிரமாப் போனா செழியன் கொஞ்சம் லேட்டா வருவார். இல்லன்னா அந்த ஒடைஞ்ச கையையும், காலையும் வச்சுகிட்டு அடிச்சுப் புடிச்சுகிட்டு சீக்கிரம் வருவாரு" என்றாள்.



பிரசாத் செய்தித் தாள் படிக்கிற பாவனையுடன் செய்தித் தாளைக் கையில் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் காதில் விழட்டும் என்பது போல் சொன்னாள்.

"அம்மா! நாம பண்ணின துரோகத்துல இருந்து மீண்டு இப்பத்தான் செழியன் கொஞ்சம் கொஞ்சமா மேல வந்தாரு. அது பொறுக்காம அவருக்கே துரோகம் செய்யறவங்க அவரைச் சுத்தியிலும் இருக்காங்க. வெளியிலயும் இருக்காங்க.. அதனால அவரா வந்து எல்லாத்தையும் கவனிக்கற வரைக்கும்.. நாம கொஞ்சம் ஹெல்ப் பண்ணித் தான் ஆகணும்" என்றாள்.

"என்னடி இப்படிச் சொல்றே? அவரு பாத்து சம்பளம் குடுத்தா ஆள் கிடைக்காமயா போயிடும்?" என்றார்.

"என்னம்மா இப்படிச் சொல்றே! உனக்குப் பழமொழி தெரியாதா? ஆள் போனா அதமம். மகன் போனா மத்திமம். தான் போனா உத்தமம்னு" என்றாள் மகள்.

"அதென்னடி பழமொழி எனக்குத் தெரியாத பழமொழி சரி.. இந்தா இந்த பாலையாவது குடிச்சுட்டுப் போ."

மகள் சிரித்தாள். 'எப்படியாவது தாமதிக்கச் செய்து அந்தப் பாலையாவது சாப்பிடச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தாமதப் படுத்துகிறார் தாய்" என்பது புரிந்தது.

பாலை வாங்கி டைனிங் டேபிளின் மேல் வைத்தாள். "அம்மா ரொம்ப சூடா இருக்கு?" என்றாள்.

"அதென்ன பழமொழி" என்றார் அம்மா விடாப்பிடியாக "அதுவா.. ஆளை அனுப்பி ஒரு வேலை செய்யச் சொன்னா அது சரியா இருக்காதாம். மகனை அனுப்பினா அரை குறையா நடக்குமாம். ஆனா, தானே போனா அந்தந்த

இடத்துக்குத் தகுந்த மாதிரி முடிவெடுத்து உடனடியாகக் காரியங்கள் நடத்தலாம் இல்லே'' என்றாள்.

பேசிக் கொண்டே பாலைப் பருகி முடித்தாள். பின் சட்டென்று கிளம்பினாள்.

''அப்பா... வரேம்ப்பா!'' என்று ஒரு தலையசைப்பு அண்ணனிடம் சொல்லலாமா என்று திரும்பிப் பார்த்தாள். அவன் வெளியில் நின்று செல்போனில் பேசிக் கொண்டிருந்தான்.

''ஆமப்பா.. வேலு! மத்தியானம் லஞ்சக்கு வருவே இல்லை அப்படியே வந்துடு. ஒரு மணி நேரம் அடுத்தது என்ன செய்யலாம்னு.. பேசி முடிவு பண்ணிக்கலாம்'' என்றான்.

சித்ரலேகாவுக்குச் சுருக்கென்றது. காதைத் தீட்டிக் கொண்டாள்.

''ஆமப்பா! நம்ம பிரண்டு கங்காதரனோட கெஸ்ட் ஹவுஸ்ல இருக்கேன் வந்துரு'' என்றான். அந்தப் பக்கம் என்ன சொன்னார்களோ தெரியவில்லை.

''ஆமா.. கச்சேரி ரோட்லதான்'' என்றான்.

சித்ரலேகாவுக்கு இடம் தெரிந்தது. உள்ளுக்குள் கோபம் பொங்கியது.

''இவன்கிட்டே போய் போயிட்டு வர்றேன்னு சொல்லலைன்னா என்ன'' என்று எண்ணிக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

அவள் தன்னிடம் கூட சொல்லாமல் போவதை ஒரு விதமான பார்வையில் பார்த்தபடியே தன் செல்போனை ஆஃப் செய்தான் பிரசாத்.

* * *



லேசான படபடப்பிலேயே சித்ரலேகா நடமாடிக் கொண்டிருப்பதை இளஞ்செழியன் கவனித்தான். என்ன விஷயமாயிருந்தாலும் அவளது வாயிலிருந்தே வரட்டுமே என்பது போல் காத்துக் கொண்டிருந்தான்.

விஷயம் ஒன்றும் பெயரவேயில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு பதினோரு மணி வாக்கில் கேட்டான்.

''லேகா! சம்திங் இட் ஈட்டிங் யூ? என்னம்மா விஷயம்?'' என்றான்.

அந்தக் கணத்தில் அவள் கிட்டத்தட்ட உடைந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன. ஆனால், அலுவலகங்களில் பல்வேறு விஷயங்களையும் கையாண்டு பழகியவள் என்பதால் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''செழியன்! கஷ்டப்பட்டு ஒரு விஷயம் நான் உங்க கிட்டே சொன்னேன். ஆனா, நீங்க அதைக் கண்டுக் கலையோன்னு எனக்குக் கவலையா இருக்கு.''

'என்ன விஷயம்?' என்று யோசித்தான். பிறகு முகம் மலர்ந்து.

''ஓ! உங்கண்ணன் மேட்டரா? கொஞ்சம் கால் சரியாகட்டும்னு பார்த்தேன்'' என்றான்.

''ஆமா..! இப்படியே நீங்க பெருந்தன்மையா விட்டுட்டீங்க.. கடைசியில திரும்பிப் பார்க்கும்போது பெருசா.. ஏதோ இழப்பா ஆகியிருக்கும்..'' என்றாள்.

அவள் அவன் முகத்தைப் பார்க்கவில்லை.

''எவ்வளவோ இழந்தாச்சு...'' என்றான். அதில் தெரிந்த வேதனை அவள் நெஞ்சை அறுத்தது. ஆனாலும் விடாப் பிடியாகச் சொன்னாள்.

''ப்ளீஸ்! செழியன். நான் சொல்றதைக் கேளுங்க..! எனக்காகவாவது என்ன நடக்குதுன்னு பாருங்க!'' என்றாள்.

''சரி.. சரி நீ ரொம்ப வொரி பண்ணிக்காதே'' என்றான்.

* * *

''வேலு.. வா.. வா..!'' என்று வரவேற்றான் பிரசாத்.

''வணக்கம்.. சார்'' என்றான் வேலு.

''வாப்பா.. உட்காரு! கூல்டிரிங்ஸ் சாப்பிடறியா'' என்றான்.

''பரவால்ல சார் அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்'' என்று ஒப்புக்கு மறுத்தான். ஆனால் கூல்ட்ரிங்ஸ் வந்ததும் குடித்தான்.

''சார்! எனக்கென்னமோ ரொம்ப பயமா இருக்கு.. இதுவரைக்கும் சார் என்னை பிரதர் மாதிரித்தான் நடத்தறாரு. ஆனா, இப்ப தப்புத் தப்பா செய்திகள் போனா..'' என்று நிறுத்தினான்.

''இருக்கட்டுமேப்பா... பிரதர் மாதிரித்தானே நடத்தறாரு. ஆனா, அதுக்காக சொத்தைத் தூக்கிக் குடுத்துடுவாரா என்ன?''

''சொல்ல முடியாது சார்! ஆட்களைப் பிடிச்சுப் போச்சுன்னா நேர்மையானவங்கன்னு மட்டும் தெரிஞ்சுதுன்னா.. கண்டிப்பாகத் தூக்கிக் குடுப்பாரு..''

''நீ ஏன்ப்பா.. கவலைப்படறே? நான் நினைக்கறது மட்டும் நடந்து போச்சுன்னா. நானும் உனக்கு நல்லது செய்வேன்ப்பா.. இந்த விஷயத்தை முடிச்சுட்டுப் போகணும்னே நானும் கங்கணம் கட்டிகிட்டிருக்கேன் வேலு. எனக்காச்சு... உங்க செழியனுக்காச்சு'' என்றான் பிரசாத்.



அதே நேரம் அந்த கெஸ்ட் ஹவுஸுக்கு சற்று தொலைவில் ஒரு கார் வந்து நின்றது.

இப்போதெல்லாம் ஒற்றைக் கைத்தடி போல ஒரு ஸ்டாண்ட் மட்டும் கையில் வைத்துக் கொண்டு நடந்தான் இளஞ்செழியன்.

டிரைவிங் ஸீட்டில் சித்ரலேகா அமர்ந்திருந்தாள்.

''நானும் வரட்டுமா?'' என்றாள்.

''வேண்டாம்! நீ வந்தா நான் பேசறதெல்லாம் பேச முடியாது. இது எனக்கும் உங்கண்ணனுக்குமான பிரச்சினை..! எனக்கும் பேச வேண்டியது.. நிறைய இருக்கு. நான் பேசிக்கறேன்'' என்றான்.

அந்த நேரத்தில் அவன் முகம் கடுமையாக மாறியது. சித்ரலேகா ஒரு விதக் குற்ற மனப்பான்மையோடு தலையைக் குனிந்து கொண்டாள்.

பின்னாலேயே ஒரு வண்டியில் இரண்டு மூன்று பேர் உதவிக்கு வந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்து லேசாகத் தலையசைத்து விட்டு இளஞ்செழியன் சித்ரலேகாவிடம் சொன்னான்.

''லேகா! விஷயம் ஏதும் சீரியஸாப் போனா நான் மிஸ்ட் கால் குடுக்கறேன் அப்ப நீ இவங்களை உடனே அனுப்பினாப் போதும்..'' என்றான்.

மெல்ல நடந்து போனான் அந்த கெஸ்ட் ஹவுஸின் அறையை நோக்கி.

அவன் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் சித்ரலேகாவுக்கு ஏதோ ஹிட்ச்காக் படத்தில் மர்ம மனிதன் எவனோ நடக்கிற நடையைப் போல இருந்தது.

நெஞ்சம் 'தடக்' 'தடக்' கென்று அடிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

உள்ளே போனவன் அரை மணி நேரமாகியும் வரவில்லை. ஒரு மணி நேரம் ஆகியும் வரவில்லை.

* * *

''அப்பா!'' என்று பரிதவிப்புடன் அழைக்கிற மகளின் குரல் கேட்டும் கொஞ்சம் திடுக்கிட்டார் சௌந்தரராஜன்.

பிற்பகல் ஓய்வில் இருந்தார்!

''என்னம்மா!'' என்றார்.

''அப்பா..! செழியன்.. செழியன்..'' என்று தடுமாறினாள்.

''சொல்லும்மா..!''

''அப்பா... நம்ம பிரசாத் அந்த வேலுவைக் கூட்டு சேத்துகிட்டு ஏதோ செய்யறான்னு சொன்னேன் இல்ல.. இப்ப.. செழியன் அந்த கெஸ்ட் ஹவுஸுக்குப் போறேன்னு வந்தாரு..'' என்றாள்.

தான்தான் வற்புறுத்தி அனுப்பினோம் என்று சொல்வதற்கான துணிவு அவளுக்கு வரவில்லை.

''சரி...'' என்றார் அப்பா.

''உள்ளே.. போய் ஒரு மணி நேரம் ஆயிடுச்சு.. இன்னும் அவரு வர்லை'' என்றாள்.

''ஓ..!''



''அப்பா.. எனக்கு பயமாயிருக்கு. பிரசாத் தொடர்ந்து தப்புப் பண்றாப்ல...'' என்றாள் கவலையோடு.

''வொரி பண்ணிக்காதம்மா! நான் பாத்துக்கறேன்'' என்றார்.

அந்த அளவில் லேகாவின் மனம் நிம்மதியடைந்தது. அதே நேரம்!

பிரசாத்துக்கு அப்பாவிடம் இருந்து அழைப்பு வந்தது. அந்தப்புறம் இருந்து அப்பா.. என்ன சொன்னாரோ தெரியவில்லை.

''சரிப்பா.. சரிப்பா!'' என்றான் பிரசாத் பவ்யமாக.

அது நடந்து பத்து நிமிடத்திற்கெல்லாம் இளஞ்செழியன் வெளியே வந்தான்.

முகம் இறுகிப் போய்க் கிடந்தது.

சித்ரலேகாவுக்கு வயிற்றுக்குள் ஏதோ அடைத்தாற் போல் உணர்வு எழுந்தது.

அழுத்தமாகவும் அமைதியாகவும் வந்து அமர்ந்தான் இளஞ்செழியன். அடுத்து அவன் என்ன சொல்லப் போகிறானோ என்று ஆர்வமாகப் பார்த்தாள் சித்ரலேகா.

அவன் எதுவும் பேசவில்லை!

''செழியன்'' என்ன நடந்துச்சு..! ஏன் இவ்வளவு நேரம்..'' என்றாள் பரபரப்பாக.

அவன் வெகு நேரம் ஒன்றும் பேசவில்லை.

''காரை எடு!'' என்று மட்டும் சொன்னான்.

அவள் ஒரு வித படபடப்புடன் காரை எடுத்தாள். ஓட்டினாள்.

சற்று கழித்து அவனே பேசினான்.

''வழக்கம்போலத்தான்.. உங்க அண்ணன் மிரட்டிப் பாக்கறான்'' என்றான்.

''ஓ..!''

மறுபடியும் மௌனம் ஒரு நிமிடம் நிலவியது.

''என்ன மிரட்டறான்?''

''உன்னை இன்னைக்கே அனுப்பிடணுமாம்.. இல் லாட்டி..!''

''இல்லாட்டி..! என்ன? என்னை ஒழிச்சுக் கட்டிடு வானாம். அவன் ஒழிச்சுக் கட்றவரைக்கும் நான் வேடிக்கை பாத்துகிட்டிருப்பேனாம்'' என்றாள்.

முகம் கோபத்தால் சிவந்து போனது.

''ஓ..!''

பிறகு அவனே தொடர்ந்து பேசினான்.

''நான் சொன்னேன்! போன தடவை மாதிரி நானும் சரி உன் சிஸ்டரும். சரி.. உன் மிரட்டலுக்கு பயப்படற நிலைமையில் இல்ல. எங்களுக்கு எது சரின்னு தோணுதோ.. அதைத்தான் செய்வோம்..னு சொன்னேன்.''

''இதையா.. இவ்வளவு நேரம் பேசினீங்க?''

''ஆமா..! அவனும் வேற விதமா.. மிரட்டிப் பார்த்தான். நானும் வேற வேற விதமா பதில் சொன்னேன்.''

''ஓ..!''

திடீரென்று நினைவு வந்தவன் போல் கேட்டான்.

''லேகா! நான் உள்ள போகும்போது.. அந்த வேலுப்பயல் இல்லையே! அங்கயிருந்து ஓடிப் போயிருப்பானோ?''



''இல்லையே! எங்கண்ணன் தெளிவாச் சொன்னானே? எப்பவும் வேலு வேலுன்னு நல்லாக் கூப்பிட்டுப் பேசறானே! அது மட்டுமில்ல அந்த வேலுவா.. இல்லாம.. வேற யாராவதா.. இருந்தா.. எதுக்கு இளஞ்செழியன்னு உங்க பேரைக் குறிப்பிட்டுப் பேசறான்'' என்றாள்.

''ம்..!'' என்றவன் சிரித்தான்.

''லேகா! ஆனாலும் உங்க வீட்ல எல்லாருமே பயங்கர மான நடிகர்கள் தெரியுமா?'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

''நீ எப்படி... உன் வாழ்க்கையில எதுவுமே நடக்கற மாதிரி. நடமாடறே அது மாதிரி..! உங்க அண்ணன் வேற விதமா. ஸ்ட்ராட்டஜி மாத்தறான் தெரியுமா? முதல் முதல்ல ரொம்ப உருக்கமா பேசினான் அப்புறம்.. கொஞ் சம் கோபமா.. அப்புறம் மறுபடியும் கெஞ்சலா அப்புறம்.. மிரட்டலா..! ஆனா, விஷயம் என்னவோ.. ஒண்ணுதான்.''

''ம்..!''

''நான் கிளினா சொல்லிட்டேன்! இதுவரைக்குமாவது நானே லேகாவை அடுத்த வாரத்துல அனுப்பலாம்னு இருந்தேன். இனி.. இந்த மிரட்டலுக்கப்புறம்.. லேகாவை குறைந்தது ரெண்டு மாசமாவது உதவியாளரா வச்சிகிட் டுத்தான் அனுப்புவேன்னு..''

சித்ரலேகா ஒரு விதமான கையாலாகாத்தனத்துடன் அவனைப் பார்த்தாள்.

''என்ன பாக்கறே! எப்ப அவன் இவ்வளவு சவால் விடறானோ அப்ப. நாம அடங்கிப் போலாமா? நாம நம்ம இஷ்டத்துக்குத்தான் நடந்துக்குவோம்னு காட்ட வேண் டாமா? என்ன சொல்றே?''

அவள் என்ன சொல்வதென்று தெரியாமல் தலையை ஆட்டினாள்.

அவன் சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான்.

''ஆமா.. உனக்கொண்ணும் பிரச்சினையில்லையே? ஹரிபிரகாஷ்கிட்டே பேசிடு. பாப்பாவை வேணும்னாலும் கொண்டு வந்துடு. நான் பாத்துக்கறேன். ஹரிபிரகாஷ் ஒத்துக்குவாருதானே...''

''ஹரி.. பிரகாஷ்..! அவரு.. அவரு.. ம் ஒத்துக்குவாரு.. நல்லவர்தான்'' என்றாள். ஆனால் குரலில் தடுமாற்றம் இருந்தது.

''அதானே! அவ்வளவு நம்பிக்கை இல்லாதவரு.. இப்படி அனுப்பி வைப்பாரா. என்ன? உண்மையிலேயே நல்லவர்தான். எனக்கு ஒரு வைஃப் இருந்து.. இப்படி ஒரு சிச்சுவேஷன் இருந்திருந்தா.. நான் அனுப்பியிருக்க மாட்டேன். இன்ஃபாக்ட்.. பூந்து விளையாடியிருப்பேன்'' என்றான்.

சித்ரலேகா மௌனம் சாதித்தாள்.

''ரொம்ப பக்குவமானவர் போல இருக்கு..!'' என்றான் தனக்குத்தானே பேசிக் கொள்வது போல்.

திரும்பவும் அலுவலகத்திற்கு வந்தால் வேலு அங்கே இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்பது போல் பால் வடியும் முகத்துடன் அமர்ந்து இருந்தான்.

சித்ரலேகாவுக்குத் தலை சுற்றுகிறாற்போல் ஆகி விட்டது. ஒருவேளை தான் ஏதாவது தவறாகப் புரிந்து கொண்டோமோ என்பது போல் கவலையான பார்வை யுடன் இளஞ்செழியனைப் பார்த்தாள்.



''நீ சொன்னது சரிதான் போல இருக்கு. வெளியே வந்ததற்குப் பிறகு அப்புறம். நம்ம பிரண்டு ஒருத்தரை விட்டு விசாரிச்சேன். கெஸ்ட் ஹவுஸுக்கு வேலு போயிருந்தானாம்'' என்றான் அவளுக்கு மட்டும் கேட்கும் படியாக.

அதற்குப் பிறகு... அவர்களுக்கு நிமிர்வதற்கு நேர மிருக்கவில்லை. வேலை சரியாக இருந்தது.

இரவு ஏழு மணி வாக்கில் அவள் புறப்பட்ட போது மிக வும் உருக்கமான குரலில் இளஞ்செழியன் சொன்னான்.

பஸ்கள் நிற்கும் பெரிய ஷெட்டையும், டாக்ஸிகள் நிற்பதற்காக இருந்த பெரிய கிரவுண்டையும் காட்டினான்.

அறைக்கு அழைத்துப் போனான்.

மேனேஜர், ஜி.எம். என்று எல்லாரையும் அழைத்து அறிமுகப்படுத்தினான்.

''மேடம்தான் இனிமே சாருக்கு பர்ஸனல் பி.ஏ. எதுவானாலும் இனிமே சார் கிட்டே பேசறதுக்கு முன் னால இவங்ககிட்டே பேசுங்க..!'' என்றான்.

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு வேலு சொன்னான்.

''இப்போ.. இதுக்கெல்லாம் என்ன அவசியம்னு கேக் கறீங்களா? நான் ஒரு மாசம் லீவுல போறேன்'' என்றான்.

எல்லாரும் பெரியதாக உணர்வுகளைக் காட்டாமல் கேட்டுக் கொண்டார்கள்.

வேலு விடைபெற்றுப் போன பின்பு மேனேஜரும், ஜெனரல் மானேஜரும் அவளிடம்,

''மேடம்! நீங்க நம்ம ஆபீஸ்க்கே வந்ததுல ரொம்ப சந்தோஷம்'' என்று வாழ்த்து சொல்லிவிட்டுப் போனார்கள்.

அதற்குப் பிறகு உள்ளே வந்த சித்ரலேகா இளஞ்செழியனிடம் கேட்டாள்.

''எதுக்காக... வேலுவுக்கு லீவு குடுத்தீங்க?'' என்றாள். கோபமாக இல்லாமல் சாதாரணமாகவே கேட்டாள்.

அவன் மிகவும் தீவிரமான முகபாவத்தோடு அவளைப் பார்த்தான். பிறகு சொன்னான்.

''இப்போதைக்கு எனக்கு நேரடி ஃபைட் உங்கண்ணனோடதான். அதுல இவனை எந்த நேரமும் கண்காணிச்சிட்டிருக்க முடியாது. அதனால அவன் லீவுல போகட்டும். அதற்கப்புறம் விஷயங்கள் முடிவானதுக்கப்புறம் அவனைக் கூப்பிட்டுக்கலாம்'' என்றான்.

அதற்குப் பிறகு அவர்களுக்கு அதைப் பற்றிப் பேச நேரமிருக்கவில்லை. பிற்பகல் நேரம்!

உணவுண்ண அமர்ந்திருந்தார்கள்.

''சார்!'' என்று ஜி.எம். போனில் அழைத்தார்.

''சொல்லுங்க!''

''சார்.. வொர்க் ஷாப் போயிருந்த பஸ் ஒண்ணு வந்து சேரலை. இரண்டு மணிக்கு கோயமுத்தூர்ல இருந்து பஸ் கிளம்பணும். ஃபுல்லா ரிசர்வேஷன்ஸ் ஆயிருக்கு. கேன்சல் பண்ண முடியாது'' என்றார்.

''சரி.. ஒண்ணும் வொரி பண்ணிக்க வேண்டாம்'' என்றான். உடனடியாக ஸ்பேர் பஸ் ஏற்பாடுகளில் ஆழ்ந்தான்.

ஒன்றரை மணிக்கு பஸ் ஸ்டாண்டுக்கு பஸ் போய் விட்டது என்று தெரிந்ததற்குப் பிறகுதான் மறுபடியும் சாப்பிட அமர்ந்தான்.



''லேகா! நீயும் உட்காரு'' என்றான்.

''இல்லே! நான் உங்களுக்கு சர்வ் பண்றேன். ஏதாவது போன் வந்தாக் கூட அட்டெண்ட் பண்ண வசதியா இருக்கும்'' என்றாள்.

அவனும் வற்புறுத்தவில்லை.

இன்று கையிலேயே ஸ்பூனில் எடுத்துச் சாப்பிடும் போது அவஸ்தைப்பட்டான் என்பதால்,

''இஃப் யூ டோன்ட் மைன்ட்'' என்று அவளே எடுத்து ஸ்பூனில் ஊட்டியும் விட்டாள்.

அவன் ஒரு முறை விழுங்கி விட்டு சிரித்தான்.

''லேகா! இது மாதிரியெல்லாம் ஹெல்ப் பண்ணினா உங்க பிரசாத் கோபிச்சுக்க மாட்டாரா?''

''இதுல கோபிச்சுக்கறதுக்கு என்ன இருக்கு? உங்களுக்குக் கையில் ஃபிராக்சர்.. இருக்கு.. ஹெல்ப் பண்றேன்..'' என்றாள்.

அவன் ஏதோ சொல்ல வாயைத் திறந்தவன் லபக்கென்று மூடிக் கொண்டான்.

சித்ரலேகாவுக்கு என்ன சொல்ல வந்தான் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் இருந்தது. ஆனால் கேட்கத் தயக்கமாக இருந்தது.

திடுக்கிட்டுப் போய்த் தன்னை மீட்டுக் கொண்டாள். லலிதா ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னாள்.

''ஆமா..! சார் இல்லாம நல்லாவேயில்லை'' என்று.

அந்தக் கணத்தில் சித்ரலேகாவுக்குப் புரிந்தது இளஞ்செழியனை அவனது அலுவலக ஊழியர்கள் எவ்வளவு நேசிக்கிறார்கள் என்று.

முகத்தில் பெருமை ஜொலிக்க அவன் தனது வாக்கரின் உதவியுடன் நடந்து அவனது அலுவலகத்தில்

அமர்ந்து கொண்டபோது அவனைக் குறித்தும் பெருமை யாகக் கூட இருந்தது.

எவ்வளவு வருத்தம் இருந்த போதிலும், உள்ளே வெறுமை இருந்த போதிலும் எதையும் காட்டிக் கொள் ளாமல் வாழ்க்கையில் போராடியிருக்கிறான். இப்போது ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஜெயித்திருக்கிறான் என்று தோன்றியது. எதையுமே வெளிப்படையாகப் பேசுவதற்கு அவளுக்குப் பயமாக இருந்தது.

பேச்சுத் தடித்து மேலும் பிரச்சினைகளில் சிக்கி விடா மல் இருக்க வேண்டுமே என்று தோன்றியது. மெல்ல அவனிடம் கேட்டாள்.

''உங்க ஆபீஸ் ஸ்டாஃப் லேபரர்ஸ், டிரைவர்ஸ் எல் லாரும் உங்களை ரொம்ப நேசிக்கிறாங்க எப்படி?''

அந்தக் கணத்தில் அவன் முகம் ஒரு கணம் சிறுத்துப் போய் பிறகு மீண்டும் பழைய நிலைமைக்கு வந்தது.

''அவங்க எல்லாரும் என்னை நம்பினாங்க. நம்பித் தங்களோட வாழ்க்கையை ஒப்படைச்சிருக்காங்க.. நானும் அவங்களை நல்லா வச்சிருக்கேன்'' என்றான்.

சித்ரலேகாவின் முகமும் சற்றே சுண்டிப் போனது.

'நீ மட்டும்தான் என்னை நம்பாமல் போனவள்' என்ற குற்றச் சாட்டு அதில் தொனித்தது. அவள் சட்டென்று சுதாரித்துக் கொண்டாள் போல்.

''நோ அஃபென்ஸ் ப்ளீஸ்'' என்று புன்னகைத்தான். அவன் பொதுவாகத் தலையசைத்து விட்டுத் தன்னறைக்கு வந்தான்.

தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். 'இது என்ன பைத்தியக்காரத்தனம்? எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவனைப் பார்த்தோம். முறிந்து



போன உறவு முறிந்ததாகவே இருக்கட்டும் என்று நாமும் அளவாகப் பேசிவிட்டு நகர்ந்து போயிருக்க வேண்டியது தானே? இப்படி இங்கே வந்து மாட்டிக் கொண்டது தேவைதானா? மேலும் மேலும் சிக்கல்களை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமா?' என்று கேட்டது ஒரு மனது.

இன்னொரு மனது சொன்னது.

'அன்றைக்கொரு நாள் அவன் வாழ்க்கையில் அடி பட்டது உன்னால். பெரிய மனக்காயத்தை ஏற்படுத்தி னாய். இப்போதும் உன்னால்தான் மனதை தறிகெட்டுப் போய்க் காரை ஓட்டி உடம்பால் காயப்பட்டிருக்கிறான். சூழ்நிலை சரியாகிற வரை பொறுமையாக இருந்து பேச்சு வார்த்தை நடத்தி இந்தச் சூழ்நிலைக்கு ஒரு முடிவு கட்டு. எப்போது சந்தித்தாலும் இருவரும் எந்தக் குற்ற உணர்ச் சியோ, வருத்தமோ இல்லாத அளவுக்கு சந்தித்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் கிளியர் செய்து கொள்ள வேண்டும். அதற்காகவாவது அவன் காயம் ஆறுகிற வரை நீ உடனிருக்கத்தான் வேண்டும்' என்று சொன்னது.

முகம் வாடி அமர்ந்திருந்தாள்.

எதிர்பாராத விதமாக அவளது அறைக்கே அவன் தனது வாக்கரை இடது பக்கத்தில் இடுக்கியவனாக நடந்து வந்தான்.

''ஐ..ம்.. சாரி லேகா.. உன்னைக் காயப்படுத்தணும் கிறதுக்காகச் சொல்லலே.. ஆஃப்டரால்.. தொழிலாளி களை எல்லாம் நல்லா வச்சுக்க முடியுதே.. எந்தப் பெண்ணை என் வாழ்நாள் முழுக்கப் பாதுகாப்பா வச்சுக்கணும்னு நினைச்சேனோ.. அந்தப் பெண்ணை...'' என்று பெரு மூச்சு விட்டான்.

பிறகு சொன்னான்.

''லேகா! இப்பவும்... நான் பர்ஸ்யூ பண்ணி நட வடிக்கை... எடுத்தேன்னா... நீ என்கிட்ட வந்தாகணும்.. தெரியுமா?'' என்றான்.

அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள். அவனே தொடர்ந் தான்.

''ஆனா.. நம்ம பிரச்சினையைக் காட்டிலும் ஒரு குழந் தைக்குத் தாய்ங்கற போது.. அந்தப் பொறுப்பு முக்கிய மானது. அதனாலதான்.. நான் கையைப் பிசைந்துக்கிட்டுப் பேசாம இருக்கேன்'' என்றான்.

இப்படியெல்லாம் பேசும்போது அவள் முகத்தை அவன் கூர்ந்து கவனித்தான்.

அவள் முகம் வெளுத்துப் போனது. பின்பு படபடப் பாக வந்தது.

ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு அவள் தரையைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''செழியன்! உங்களுக்குக் காலும், கையும் சரி யாகட்டும். எனக்கும் கேள்விகள் நிறைய இருக்கு. உங் களுக்கும் கேள்விகள் நிறைய இருக்கு. பேசுவோம்! கம்யூனிகேஷன் இல்லாமத்தான் நிறைய விஷயங்கள் தவறாப் போயிருச்சு. இனிமே பிரியும்போது.. நாம நண் பர்களாகவே பிரிவோம்'' என்றாள்.

அப்போது அவன் கோபமாக வாய்க்குள் ஏதோ சொல் லிக் கொண்டான். அவள் அதை ஒரு விதக் கையாலாகாத் தனத்துடன் பார்ப்பதைக் கண்டவுடன் வாயை இறுக மூடிக் கொண்டான்.

''ஓ..கே! அடுத்த வேலையைப் பார்க்கலாம்'' என்றான்.

மறுபடியும் மாலையில் கேட்டான்.

''ஏன்.. லேகா! பூங்குழலியைப் பாக்கணும்னு இருக் காதா? ரெண்டு நாள் லீவு குடுக்கட்டுமா?'' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.



''இல்லே! போன ஞாயிற்றுக்கிழமை போய்ப் பார்த் துத்தான் வந்தேன்.''

''எப்படி இருக்கா?''

''அவளுக்கென்ன எப்பவும் போல கலகலப்பா.. இருக்கா..!'' என்றாள்.

அவன் அதற்குப் பிறகு பேச்சை மாற்றி விட்டான். இரவு ஏழு மணி வாக்கில்தான் புறப்பட்டார்கள்.

காரை ஓட்டிக் கொண்டு போகும்போது 'செழியன்.. பாவம்! எத்தனை நிர்வாகப் பிரச்சினைகள்.. கவனிக்க வேண்டிய விஷயங்கள். ஆனால் ஒருவேளை இவை யெல்லாம்தான் அவரை உயிரோட வச்சிருக்கோ.. என்னமோ..!' என்றும் தோன்றியது.

அதே நேரம்!

பிரகாஷும், வேலுவும் காரசாரமாக எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் வேலு சொன்னான்!

''சார்! நீங்களும், நானும் பேசி என்ன செய்றது? சித்ர லேகா மேடத்தோட ஹஸ்பெண்ட் என்ன சொல்றாருன்னு கேட்டுக்குங்க'' என்றான்.

''ஆமா..! கேக்கணும்.. அப்புறம்தான் விளையாட்டை ஆரம்பிக்கணும்'' என்றான் பிரசாத்.

இப்போது அவன் முகத்தில் ஒரு விதமான புன்னகை படர்ந்திருந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த வேலு நினைத்துக் கொண்டான்.

'இந்த முறை இந்தப் புன்னகையால் யார் யார் விழப் போகிறார்களோ' என்று.

## 20

''சார்! என்ன சார் இது! எம்.டி. இப் படி டிரில் வாங்கறாரு'' என்று சலித்துக் கொள்வார்கள் ஜி.எம்மும், மேனேஜரும்.

''ஆமா! வேலுவுக்கு லீவு குடுத்து அனுப்பிட்டாரு. அதுதான் தப்பாய் போச்சு!'' என்றார் ஜி.எம்.

''சும்மா.. சொல்லக்கூடாது.. சித்ரலேகா மேடமும்.. நல்லாத்தான் செய்யறாங்க'' என்று பேசிக் கொண்டார்கள்.

திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக ஒரு மாதம் ஓடியிருந்தது. வேலுவுக்கு கம்பெனி செலவில் இந்தியாவை சுற்றிப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கி விட்டான் இளஞ்செழியன். அதனால் வேலுவும் ஒரு வழியாகத் திருப்தியடைந்து விட்டான்.

''லேகா! இனி வேலு விளையாட முடியாது. உங்கண் ணன் மட்டும்தான். நான் பாத்துக்கறேன்'' என்றான்.

''என்ன செய்யப் போறான்னே.. தெரியலையே!'' என்று சித்ரலேகா புலம்புவதை சுவாரசியமாகப் பார்த்து விட்டு,

''இப்போதைக்கு.. உங்கண்ணன் எதுவும் செய்ய மாட்டான்னு நினைக்கறேன்'' என்றான் இளஞ்செழியன்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க?'' என்றாள்.

''இல்லே! நான் வேற நேரடியா மோதிட்டு வந்திருக் கேன். வேலுவையும் கழட்டி விட்டிருக்கேன். அதனால ஓரளவுக்கு எனக்கு விஷயங்கள் தெரிஞ்சிருக்குன்னு புரிஞ்சுக்குவாங்க. அதனால கொஞ்ச நாளைக்கு அடக்கி வாசிப்பாருன்னு நெனக்கறேன்'' என்றான்.

சித்ரலேகா ஒரு விதமாக அவனை ஆழ்ந்து பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''ரெண்டு பேருமே எனக்குத் தெரியாம ஏதோ ஒரு விதத்துல மோதிக்கறீங்கன்னு நெனைக்கறேன்'' என்றாள்.

அவனும் ஒரு விதமாகச் சிரித்தானே ஒழிய வேறொன் றும் பேசவில்லை.

வாரத்தில் இரண்டு நாட்கள் கணக்கு வழக்குகள் பார்ப் பார்கள். இரண்டு நாட்கள் அலுவலகங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள்.



அன்றைக்கு!

சித்ரலேகா புறப்படும்போதே மணி எட்டாகி விட்டது. அவள் தள்ளு கதவுக்கருகில் போனபோது அவன் சொன்னான்.

''லேகா! உங்க வீட்ல சொல்லிட்டு வந்துரு... ஒரு ரெண்டு மூணு நாளைக்கு ரொம்ப லேட்டாப் போக வேண்டி வரும். காலையில வேண்ணா நீ நேரம் கழிச்சு வந்துக்கலாம். நாளைக்கு வேண்ணா.. நீ காலைல ஒரு பதினோரு மணிக்கு வா..'' என்றான்.

அவள் சரியென்று தலையாட்டிவிட்டு நகர்ந்தாள். அந்தப் பெரிய காம்பவுண்டிற்குள்ளேயே ஒரு ஓரத்தில் அவன் சிறியதாக ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டி வைத்திருந் தான். உதவியாளர்களை அங்கேயே பைல்களைக் கொண்டு வரச் சொல்லிவிட்டான்.

''ப்ளீஸ்! செழியன் இங்கயே... ஆபீஸ்லயே உட்கார்ந்து வொர்க் பண்ணலாமே?'' என்றாள் சித்ரலேகா.

''ஏன்! ஹரிபிரகாஷ் கோபிச்சுக்குவாரா? இவ்வளவு தூரம் வரை நம்பி அனுப்பியிருக்காரு. ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட பன்னெண்டு மணி நேரம் என்கூட இருக்கே. அப்பவெல்லாம் வராத சந்தேகம் இப்ப வந்துடுமா?''

அவள் தயங்கினாள்.

''செழியன்! நான் என்னைப் பத்திக் கவலைப்படலை. நீங்க இனிமேலாவது ஒரு கல்யாணம் பண்ணிட்டு செட்டிலாகணும். உங்க மேல'' என்று இழுத்தாள்.

''இத பார்றா! நம்ம மேல அக்கறையாம். இந்த நாட்டுக் கலாச்சாரம் பத்தித் தெரியுதா? நம்மள மாதிரி பணம், காசு இருக்கிறவனெல்லாம்.. முன்ன பின்னதான் இருப்பான்னு.. சமுதாயம் ஒத்துக்கும் தெரியுமா?'' என்றான் கிண்டலாக.

''முன்ன, பின்ன இருந்து சொன்னாப் பரவாயில்லே. நீங்க அந்த மாதிரி இல்லாதப்ப எதுவும் சொன்னா நியாய மில்லையே?''

''லேகா! இந்த எட்டு வருஷத்துல நான் எப்படி இருந்தேன்னு உனக்குத் தெரியுமா? எப்படிக் கடத்தினேன்னு உனக்குத் தெரியுமா?

''எனக்கென்ன தெரியும்! உங்களுக்கும் கல்யாணம் ஆயிருக்குன்னு நான் நெனச்சுகிட்டேன்.''

அவன் முகத்தில் கடுப்பேறியது. சட்டென்று சமாளித்துக் கொண்டான்.

''ப்ளீஸ் லேகா! நாம கடந்த காலத்தைப் பத்திப் பேச வேண்டாமே!''

''ஆமா! மேக்ஸிமம்.. ஒரு மாசம்.. அதுக்கப்புறம் நான் என் வேலையைப் பாத்துகிட்டுப் போகப் போறேன்'' என்றாள்.

இப்போதெல்லாம் ஊன்றுகோல் இல்லாமலும் அவ்வப்போது நடக்க ஆரம்பித்திருந்தான் இளஞ்செழியன்.

காசோலைகளில் அவனே கையெழுத்தும் போட ஆரம்பித்திருந்தான். ஆனாலும் அதிகபட்ச வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறானோ என்று தோன்றியது.

ஒரு மாத காலத்தில் ஏதோ ஒரு வித்தியாசம் அவனுடைய நடத்தையிலே அவளுக்குப் புரிந்தது. உள்ளுக்குள்ளே கலக்கமாகவே இருந்தது.

* * *

உறக்கம் வராமல் பால்கனியில் சேரைப் போட்டுக் கொண்டிருந்த மகனிடம் அம்மா வந்தார்.

''ஏண்டா.. சாமி! தூக்கம் வர்லயா?'' என்றார்..

''ஆமாம்மா!'' என்றான்.

''ஏம்ப்பா! அந்தப் பொண்ணுக்கு எதுக்கு வேலை குடுத்திருக்கே.. இது தேவையா.. சாமி!''



''அம்மா.. நான் வேலை குடுக்கலே! அதுவா வேலை கேட்டு வந்து வேலை செய்யுது..''

''ஏம்ப்பா! கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்குன்னு நீதானே சொன்னே?''

''ஆமா!''

''பின்னே.. அது குழந்தையையும், புருஷனையும் விட்டுப் போட்டு வந்து உன்கிட்டே வேலை செஞ்சுகிட்டிருக்கா?''

''அதெல்லாம் தெரியாது? அந்தப் பொண்ணோட ஊட்டுக்காரனே வருத்தப்படலை. நீ எதுக்கு வருத்தப் படறே?'' என்றான்.

அம்மா அவனைக் கவலையுடன் பார்த்தார்.

''தம்பி! இதெல்லாம்.. நல்லதுக்கு மாதிரி எனக்குத் தெரியலே!''

''ஆமா.. எந்த வேலையும் பாதியில பாக்கும்போது.. வேற மாதிரித்தான் தெரியும்.. ஆனா, முடிவுல பாக்கும் போதுதான் விஷயம் என்னன்னு புரியும்?''

அம்மா ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு எதிரில் அமர்ந்தார்.

''தம்பி! உன்னோட வருத்தம் புரியுது. ஆனா, கடந்து போன விஷயங்களை அந்த மாதிரியே விட்டுப் போடறது தான் நல்லது'' என்றார்.

''எப்படிம்மா.. முடியும் நான் பாட்டுக்கு நானுண்டு என் வேலையுண்டுன்னு இருந்தேன். தானா வந்து பழகினா. திடீர்ன்னு ஒரு நாள் வந்து எனக்கு வாழ்க்கை குடுன்னு நின்னா. வாழ்க்கை குடுத்தேன். இதோ.. இப்ப.. வந்தர்றேன்னு.. போனா.. வரவேயில்லை. இப்ப எட்டு வருஷம் கழிச்சு வந்து என் வாழ்க்கையை மறுபடியும் குழப்பறா. இனிமே இந்த மாதிரிக் குழப்பம் எதுவும் வராம நான் பாத்துக்கணும். இல்லே! முடிவு வரட்டும்.''

அம்மா ஆழ்ந்த மௌனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நியாயப்படி பார்த்தா நான் இப்பப் பிரச்சினை கிளப்பினாக் கூட அவ பண்ணிகிட்ட கல்யாணம் செல்லுபடியாகாது. இத நான் விடறதாயில்லே. எனக்குள்ளே எப்படி கோபம் இருக்குன்னு உனக்குத் தெரியாதும்மா.''

''தெரியும்பா.. தம்பி.. தெரியும்! எத்தனையோ நாள்.. நீ தூங்காம நடமாடிகிட்டிருப்பே. உங்கிட்ட என்ன பேசறதுன்னு தெரியாம.. நானும் தூங்காமத்தான்.. உட்கார்ந்திருப்பேன்'' என்றார்.

அன்றிருந்து சுமந்த வலிகள் எல்லாம் இருவருக்கும் நினைவுகளில் உழன்றன. கண்களில் கட்டிய கண்ணீருடன் ஆழ்ந்த மௌனமுமாக அமர்ந்திருந்தார்கள்.

''இனி.. என்ன செய்யப் போறே?'' என்றார்.

''அம்மா! கவலையே படாதீங்க. இந்தத் தடவை நான் மீண்டு வருவேன். இந்தத் தடவை நான் மீண்டு வரும்போது தோல்வி அந்தப் பக்கமாத்தான் இருக்கும். விடமாட்டேன்'' என்றான் கோபமாக.

அம்மா எழுந்தார். அவன் தலையைத் தடவிக் கொடுத்தார். பிறகு சொன்னார்.

''தம்பி! உனக்குத் தெரியாததில்லே! உனக்கு எது வசதியோ.. அதைச் செய்!'' என்றார்.

அம்மா வருத்தத்துடன் போவதை அவனும் ஆழ்ந்த வருத்தத்தோடு பார்த்தான்.

'எல்லாவற்றையும் கொட்டி விடலாமா?' என்று உள்ளம் பதைத்தது. ஆனால் கட்டுப்படுத்திக்கொண்டான். உள்ளதையெல்லாம் சொன்னால் அம்மா கெஞ்சுவார். காரியம் கெட்டு விடும். மிகவும் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.



தனது படுக்கையறைக்குள் போனான். அந்த பீரோ அவன் கண்ணில் பட்டது.

திறந்து பார்த்தான்!

அப்போது ஒரு மாத காலத்தில் அவள் உடுத்திக் கொண்ட உடைகள்! அவள் பயன்படுத்திய சோப்பு டப்பா... முதல்.. அதில் இருந்தது.

இன்றைக்கு அவள் யாருடைய மனைவியாய் இருந்தால் என்ன? அன்றைக்குத் தன் வீட்டில் தனது அருகாமையில் இருந்ததற்கான அடையாளங்கள் இவை. எவ்வளவு சீக்கிரம் சொல்லி விட்டாள்? தன் மீதல்லவா குற்றம் சாட்டுகிறாள்?

இதுவரையிலும் கவனமாக அந்தக் குற்றச்சாட்டுக்கு அவன் பதில் சொல்லவில்லை.

காத்திருக்கிறான்!

அந்தக் குற்றச்சாட்டுக்கு.. அவன் பதில் சொல்லத்தான் போகிறான். அப்படிப் பதில் சொல்லும்போது அந்தப் பதிலால் அவள் கடுமையாகத் திக்குண்டு திணறத்தான் போகிறாள்.

தப்பவே முடியாது!

தப்ப விடப் போவதும் இல்லை!

பற்களைக் கடித்துக் கொண்டான். ஆனால் அதே சமயம் மீண்டும் அவன் கண்கள் அந்த பீரோவின் மேல் படிந்தன.

அவனுக்கு மிகவும் பிடித்த சுடிதார்!

வெளிர் பச்சையும், இலைப் பச்சையும் கலந்தாற் போல் ஒரு நிறம்.

அந்த சுடிதார் மட்டும் அணிந்து நின்றால் ஏதோ வன தேவதை போல் இருப்பாள். அப்போது இருந்த அந்தக் கள்ளமில்லாத் தன்மை போய் விட்டது இப்போது உறுதி தெரிகிறது.

'இரண்டாவது முறையும் தன்னிடம் இருந்து கழன்று கொண்டு போனவள் இப்போது எதற்காக வந்தாள்? ஒருவேளை! இரண்டு மூன்று மாதங்கள் கூடவே இருந்து சட்டப் பிரச்சினையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் வந்திருப்பாளோ' என்று தான் முதலில் நினைத்தான். ஆனால் அதைக் காட்டிலும் ஆழமான ஒரு நோக்கத்தோடுதான் வந்திருக்கிறாள் என்றவுடன் அவன் எச்சரிக்கையாகி விட்டான்.

பிரசாத்தின் தலையீட்டுக்குப் பிறகு அவன் ரொம்பவும் துணிந்து விட்டான்.

சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன என்ற நிலைமைக்கு வந்து விட்டான்.

இனி அவன் எடுக்கப் போகிற ஒவ்வொரு நடவடிக்கையும் சித்ரலேகாவுக்கு பலத்த அடியாக இருக்கும். அடியாக இருக்குமோ.. இல்லையோ அவன் செய்ய வேண்டியதைச் செய்யத்தான் போகிறான்.

அந்த சுடிதாரைக் கையில் எடுத்தான்!

அவ்வப்போது எடுத்து வேறு விதமாக மடித்து வைப்பான். அதனால் அப்படியே இருந்தது.

இப்போதும் அவள் பொருட்களை வைத்திருப்பது நியாயமா? என்று முன்பெல்லாம் அவன் மனசாட்சி குரலெழுப்பும். அப்போதெல்லாம் சொல்லிக் கொள்வான்.

'நான் இப்போதைய. சித்ரலேகாவின் உடைகளை வைத்திருக்கவில்லை. என்னுடைய மனைவியாக இருந்த சித்ரலேகாவின் உடைமைகளைத்தான் வைத்திருக்கிறேன்' என்று சமாதானம் சொல்லிக் கொள்வான். இப்போது கம்பீரமாக நிற்கிறாள்!

ஒருவேளை அந்தப் பழைய உறவு நிலைக்காமல் போனது கூட இருவருக்கும் நல்லது தானோ என்னவோ. இப்போது அவளும் மேலே படித்து நல்ல நிலைமைக்கு



வந்திருக்கிறாள். தானும் ஒரு தொழிலதிபர் என்ற முறையில் வளர்ச்சியடைந்து நிற்கிறோம் என்று எண்ணிக் கொண்டான். அது சரி.. இழந்த காலம் இழந்ததுதானே, இனி வரவா போகிறது என்று எண்ணிக் கொண்டான்.

சாப்பிட்டு முடித்து விட்டு வந்து அமர்ந்தான்! அதற்குள் மறுபடியும் போன்!

''சார்! நம்ம டை அப் டாக்ஸியில ஒரு ஆக்ஸிடென்ட். டிரைவர் அடிபட்டுக் கிடக்காரு'' என்று வந்தது.

''இம்மீடியட்டா.. ஹாஸ்பிட்டலுக்கு ஓடுங்க.''

''சார்! டை அப் டாக்ஸியைப் பொறுத்த மெயின்டனென்ஸ் எல்லாம் அவங்களுதுதான். ஹாஸ்பிடல் செலவு.. நாமளா.. அவங்களா..'' என்று கேட்டு முடிக்கு முன்பாகவே அவன் குறுக்கிட்டான்.

''ஹலோ..! அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல அவரைக் காப்பாத்துங்க'' என்றான்.

இந்தப் பேச்சு வார்த்தை நடக்கும்போது சித்ரலேகா அருகில் நின்றாள். அதற்குப் பிறகும் அந்த டிரைவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்பு,

''பெரியதாக அடி எதுவும் இல்லை. அதிர்ச்சியில் ஏற்பட்ட மயக்கம்தான்'' என்று செய்தி வரும்வரை அவன் அதுபற்றிய விவரங்களைத் தொடர்ந்து சேகரித்துக் கொண்டிருந்தான்.

இதற்கு நடுவிலே பைல்களில் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தான் அது பற்றிய விவரங்கள் கேட்டுக் கொண்டான். 'ஃபார்' என்று போட்டு சித்ரலேகாவையே கையெழுத்துக்கள் போடச் சொன்னான்.

கைகள் நடுங்க அவளும் போட்டாள்.

கொஞ்சம் கழித்து!

''லேகா.. என்னோட வா'' என்று டாக்ஸி சர்வீஸ் தொடர்பான அலுவலகத்தில் இருந்த தனது அறைக்கு அழைத்துப் போனான்.

''அமைதியாகக் கேள்!'' என்பது போல் சைகை காட்டி விட்டு அமர்ந்தான். அவளும் அமர்ந்தாள்.

''ஹல்லோ! லோகு.. சார்! லைனுக்கு வாங்க'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அலுவலகத்தின் பெண்மணி.

''லைனா? எந்த லைனையும் காணோமே?'' என்றான் அந்தக் குறும்புக்கார டிரைவர்.

''விளையாடாதீங்க.. லோகு!'' என்று அந்தப் பெண் மணி கடிந்து கொண்டாள் போலும்,

''லோகு சார்! அடுத்த தெருவில் பார்ட்டி வெயிட் பண்றாங்க..'' என்றாள்.

''ம்..! என்ன சொன்னீங்க! எனக்குக் காதுல விழலையே.. பார்ட்டி வெயிட்டான பார்ட்டியா?''

''ஆரம்பிச்சுட்டீங்களா? ஒருவேளை எம்.டி. லைன்ல வந்தாலும் வருவார்.'' என்று அந்தப் பெண்மணி எச்சரிக்க அதே நேரம் செழியனும், லேகாவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''எம்.டி... எங்க வரப்போறாரு. அவருதான் நேர்த்திக் கடன் மாதிரி சுத்தி சுத்தி நினைச்ச இடத்துல கூட்டு போட்டுகிட்டிருக்காரே'' என்றான் லோகநாதன்.

''சே! நம்ம எம்.டி. எவ்வளவு நல்லவரு. அவருக்கு அடிபட்டதை வச்சு இப்படி ஜோக் அடிக்கறீங்களே!'' என்றாள் லலிதா என்ற அந்தப் பெண்.

''மேடம்! நீங்கதான் எங்களைப் புரிஞ்சுக்கலே! எங்க எம்.டி.யையும் புரிஞ்சுக்கலே. அப்படியே கம்பீரமா நடந்து வந்தார்ன்னா.. எப்படியிருக்கும்னு நாங்களும் எதிர் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கோம். ஆனா, எந்தக் கஷ்ட நேரத்துலயும் குய்யோ, முறையோன்னு உட்காந்துகிட்டு புலம்புவது அவரு பாலிஸியில்லே. இப்ப நீங்க அவரு கிட்டே போயி அடிபட்டதைப் பத்திப் பேசிப் பாருங்க.. அவரே ஜோக்கடிப்பாரு'' என்றான் லோகநாதன்.



லேசான ஒரு புன்னகையுடன் இருக்கையில் கம்பீரமாகச் சாய்ந்து அமர்ந்தபடி இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான் இளஞ்செழியன். அந்தக் கணத்தில் அவன் முகத்தைப் பார்த்த சித்ரலேகாவுக்கு வயிற்றுக்குள் எதுவோ பிசைகிறாற் போல் இருந்தது. இதயத்துக்குள் ஏதோ அசைகிறாற் போல் இருந்தது.

''லேகா! உங்கண்ணனாலே என் வாழ்க்கை எவ்வளவோ பாதிக்கப்பட்டுச்சு... ஆனா.... இந்தத் தடவை என் ஈகோவைத் திருப்திப்படுத்திக்கவாவது... நான் அவனுக்குப் பதிலடி கொடுக்கணும் அது உன்னோட ஒத்துழைப் பாலதான் இருக்கு...'' என்றான்.

அவள் பெருமூச்செறிந்தாள். பிறகு சொன்னாள்.

''ஆகட்டும்.''

''ஆமா... ஏன்னா... இனிமே நான் அதிரடித் தாக்குதல் நடத்தப் போறேன். அது பொய்த் தாக்குதலா இருந்தாலும் நிஜம் போலவே அவனுக்குத் தெரியணும். அதுக்கு நீ கொஞ்சம் ஒத்துழைக்கணும்'' என்றான்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டு தலையாட்டினாள்.

''என் பர்ப்பஸ் முடிஞ்சதும் நீ உன்னோட ஹரிபிரகாஷ் கிட்டே எந்த விதமான சேதமும் இல்லாம போய்ச் சேரலாம்'' என்றான்.

அவன் ஒரு நிமிடம் ஆழப் பார்த்தான். அவள் பார்வை அவனைச் சந்திக்கவில்லை.

சரேலென்று வெளியேறினாள். இரண்டு பெரிய திமிங்கலங்களுக்கிடையில் மாட்டிக் கொண்டாற்போல் ஒரு அச்சம் அவளுக்கு ஏற்பட்டது.

## 21

''சார்! இத்தனை நாள் நீங்க இப்படியெல்லாம் இருந்ததில்லை. இப்பத்தான்

அதுவும் யாரோ எதுவோ சொல்லித்தான் நீங்க... இந்த மாதிரி என்னை நடத்தறீங்களோன்னு வருத்தமா... இருக்கு..."

"இல்லப்பா! அப்படியெல்லாம்... எதுவும் இல்லே! எனக்கு இப்பக் கொஞ்சம் முக்கியமான ஒரு கடமை இருக்கு. அது முடியற வரைக்கும்தான். நான் தனியா... இருக்கணும். யோசிக்கணும்... நிறைய விதமான பிரச்சினைகளை சந்திக்கணும். திட்டங்களை செயல்படுத்தணும்... அதுக்குத்தான் இந்த லீவு..." என்றான்.

ஒரு மாதம் விடுமுறையில் போகும்படி வேலுவுக்கு இளஞ்செழியன் அறிவுறுத்தியிருந்தான். அது குறித்து வேலுவுக்கு வருத்தம் போலும். முகத்தைத் தூக்கிக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தான்.

இன்றைக்கு சித்ரலேகாவை பத்து மணிக்கு மேல் வந்தால் போதுமானது என்று சொல்லியிருந்தான். வேலுவை ஒன்பது மணிக்கே வரச் சொல்லியிருந்தான். சித்ரலேகா வருவதற்குள்ளாக வேலுவிடம் பேசி முடித்து விட வேண்டும் என்றிருந்தான்.

சித்ரலேகா உள்ளே நுழைந்த போது வேலு சிறுத்த முகத்தோடு அமர்ந்திருந்தான்.

சித்ரலேகா வழக்கம் போல் "ஹலோ! குட்மார்னிங்" என்றாள்.

அதே கடுகடுத்த முகத்துடன் குட்மார்னிங் என்றான் வேலு.

உள்ளே நுழையும் போது இளஞ்செழியன் இடது காலை நீட்டி ஒரு ஸ்டூலின் மேல் வைத்துக் கொண்டிருந்தான்.

"குட்மார்னிங்... செழியன்!" என்றாள்.

யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தான். பேசிக் கொண்டே தலையை ஆட்டினான்.

அவள் அமைதியாகத் தனக்கென்று ஒதுக்கியிருந்த கேபினில் அமரப் போனபோது அவன் மீண்டும் அழைத்தான்.



"லேகா!" என்று அழைத்தான்.

போனாள்!

"லேகா! வேலுவுக்கு ஒரு மாசம் லீவு குடுத்திருக்கு." என்று சொல்லிக் கொண்டே, மணியை அடித்து வேலுவை அழைத்தான்.

வேலு முகத்தை ஒரு விதமாக வைத்துக் கொண்டு நின்றான்.

வேலு மௌனமாக நின்றான்.

"வேலு! முக்கியமான நம்ம நடைமுறைகளை மட்டும் சித்ரலேகா மேடத்துக்குச் சொல்லிடு... அப்புறமா நீ ஆஃபடர் நூன்ல போயிக்கலாம்" என்றான்.

வேலு சரியென்று தலையாட்டி விட்டு அழைத்துப் போனான்.

'அம்மா, அப்பாவிடம் விஷயங்களை வெளிப்படையாக பேசி விடலாமா! வேண்டாம். தான் நினைத்திருப்பது எதையுமே செய்ய முடியாமல் போகலாம். சொதப்பி விடுவார்கள்' என்று எண்ணிக் கொண்டான்.

இப்போது காலை ஊன்றி நடக்க ஆரம்பித்தாயிற்று. அடுத்த வாரத்தில் வேலு வந்து விடுவான். வேலு வந்து விட்டால்

"என்னை விடுவித்து விடுங்கள்!" என்று சித்ரலேகா கேட்பாள். அதற்குள்ளாகத் தான் நினைப்பதை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

தெளிவான ஒரு திட்ட வரைபடத்தைப் போட்டுக் கொண்ட பிறகுதான் அவனுக்குள் ஒருவிதமான நிம்மதி ஏற்பட்டது.

மறுநாள் காலை!

முதல் வேலையாகத் தனது கெஸ்ட் ஹவுஸ் மேற்பார்வையாளரை போனில் அழைத்தான்.

சில கட்டளைகள் கொடுத்தான். அதற்குப் பிறகு சாவகாசமாகக் கிளம்பினான்.

சித்ரலேகா வரவும் அவளையும் அழைத்துக் கொண்டு கெஸ்ட் ஹவுஸிலேயே தனது வேலைகளைத் தொடங்கினான்.

கெஸ்ட்ஹவுஸ் அழகாக இருந்தது. ''காம்பாக்ட்'' என்பார்களே அது போல இரண்டு அறைகள். ஒரு ஹால், முன்னாலே ஒரு சிட் அவுட் ஒன்று. ஒரு சின்னக் குடியிருப்பு வீட்டைப் போல இருந்தது. ஆனால், ஆங்காங்கே தொங்கிய அழகான ஓவியங்கள், சிறப்பாகக் கவனம் செலுத்திச் செய்யப்பட்டிருந்த இன்டீரியர் டெக்ரேஷன் என்று மிகவும் நன்றாக இருந்தது.

சித்ரலேகா கவனம் செலுத்தி அதை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கையில் சொன்னாள்.

''செழியன்! ரொம்ப அற்புதமா இருக்கு! உங்களுக்கு பிடிச்ச அந்த வெளிர் பச்சை. ஐய்யோ ரொம்ப சூப்பரா இருக்கு...'' என்றாள்.

அவன் ஒரு அரைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு நின்றான். வரிசையாக மாட்டாமல் ஆங்காங்கே கவனிக்கிற மாதிரியான இடங்களில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்கள் அழகாக இருந்தன.

மாடர்ன் ஆர்ட், கைவேலைப்பாடுகள் நிறைந்த ஓவியங்கள் என்று. வேறு வேறு வகையான ஓவியங்கள் இருந்ததை.

வரிசையாக ஒவ்வொன்றாய் நின்று பார்த்தாள். பார்க்கும்போதுதான் அவளுக்குத் தோன்றியது.

செழியனுக்கும், அவளுக்கும் எப்போதும் ரசனைகள் ஒத்துப் போயிருந்தன என்று. தன்னைக் காட்டிலும் வாழ்க்கை செழியனுக்கு துரோகம் செய்து விட்டது என்று எண்ணிக் கொண்டாள்.

"செழியன்! இது அந்த கோல்டன் பவுடரோ என்னமோ அது தூவி செய்யற வொர்க்தானே!'' என்றபடியே திரும்பினாள்.



செழியன் சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டான். ஆனால், அவளுக்குள் புரிந்து விட்டது. இது வேறு விதமான பார்வை.

அந்த ஒரு மாத காலத்தில் அவள் கண்ட பார்வை அது. அப்போதெல்லாம் அவன் சுவாரசியமாக எதையாவது சொல்லிக் கொண்டிருப்பான். பெரும்பாலும் தரையில் தான் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

அவள் சுவரில் சாய்ந்து அமர்ந்திருப்பாள். அவன் சென்று அருகில் ஒரு விதமாகக் காலை மடக்கியபடி அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பான். கேட்டுக் கொண்டிருப்பான் என்பதை விட அவனது முன்நெற்றி முடி நீவிக் கொண்டு அவள் முகபாவத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருப்பான்.

அவள் சிணுங்குவாள். அந்த மாதிரிப் பார்வையைப் பார்த்தவுடன் அவளுக்கு முதுகில் சில்லிட்டாற்போல் தோன்றியது. இளஞ்செழியன் உடனே ''என்ன... லேகா!'' என்று ஏதோ கேட்பவன் போல் பேசி பேச்சை மாற்றி விட்டான். ஆனாலும் சித்ரலேகாவுக்கு உள்ளுக்குள்ளே ஏதோ பயம் நிறைந்து கொண்டே இருந்தது. வளர்ந்து கொண்டும் இருந்தது.

## 22

''சார்! நான் இன்னைக்கு ஆஃப்டர்நூன் வர்றேன்'' என்றாள் சித்ரலேகா.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்ட செழியன் சொன்னான் ''நோ... பிராப்ளம்... லேகா! ஆனா, இன்னைக்கு நைட் போறதுக்கு லேட்டாகும்... நானே டிராப் பண்றேன்'' என்றான்.

சித்ரலேகா ''சரிங்க... சார்'' என்றாள்.

போனை ஆஃப் செய்து டேபிளின் மேல் வைத்த பிறகு யோசனையில் ஆழ்ந்தாள்.

கெஸ்ட் ஹவுஸில் அமர்ந்து வேலை செய்வதென்னவோ அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காத விஷயமாக இருந்தது. இல்லை ஒருவேளை பிடித்திருந்ததோ.

செழியனிடம் இருந்து ஒதுங்கி விட வேண்டும் என்ற எண்ணம் மாறிப் போய் இப்போது செழியனோடு அதிக நேரம் செலவழிக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ.. இத்தனைக்கும் மற்ற அலுவலர்களும் அவர்களோடு அமர்ந்து அவனோடு வேலை செய்வது கடினமாக இருந்தது.

தங்களது மொத்தக் கணக்கு வழக்குகளையும் ஒரு முறை சரிபார்த்துத் தருமாறு அவளிடம் கேட்டிருந்தான். இப்போது பஸ் கம்பெனியின் கணக்கு வழக்குகளைத் தான் அதுவும் பாதியளவுக்குத்தான் அவள் சரிபார்த்து முடித்திருந்தாள்.

பெரிய தவறுகள் எதையும் அவள் கண்டறியவில்லை. ஆனாலும் அவன் விடாப்பிடியாகப் பார்த்துக் கொடுத்துத் தான் ஆக வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அவளால் மறுப்பு சொல்ல முடியவில்லை.

அதுபோன்ற பணிகளில் ஆர்வமுள்ளவள் என்பதால் தான் அவள் பி.எஜி.எல் படித்திருந்தாலும் நிதி சம்பந்தமான விஷயங்களில் மட்டுமே ஆர்வம் செலுத்தினாள்.

பணியில் ஆழ்ந்து விட்டால் அவளுக்கு உலகமே மறந்து விடும். இளஞ்செழியனும் வேலையில் ஆழ்ந்து விடுவான். முந்தைய நாள் ஒரு விஷயம் நடந்தது.

ஏழு மணி இருக்கும்!

அறைக்குள் போய்விட்டு வந்த இளஞ்செழியன் பனியன் அணிந்து கொண்டு லுங்கியில் வெளியே வந்தான்.

சித்ரலேகா உள்ளே சங்கடமாக நெளிந்தாள். "சாரி! லேகா! அடிபட்ட காலுக்கு பேண்ட் கொஞ்சம் இடைஞ்சலா.... இருக்கு..." என்றான்.



"பரவால்லை செழியன்!" என்றாள்.

டேபிளுக்கு எதிரெதிராக அமர்ந்து கொண்டு அவள் ஒவ்வொரு தாளாக சரிபார்த்து நீட்ட நீட்ட அவனும் சரிபார்ப்பான்.

ஏதேனும் சந்தேகங்கள் எழுப்பினால் அவன் உடனே பதில் சொல்வான். இவ்வளவு தெளிவாகவும் "தரோ" வாகவும் இருப்பவன் எதற்காக தன்னைச் சரிபார்க்கச் சொல்கிறான் என்று கேள்வி எழுந்தது.

ஏதோ திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான். அதற்காகவே தன்னையும் இருத்திக் கொண்டிருக்கிறான். உள்ளூர அவளுக்கும் பிரசாத் மீது கடும் கோபம் இருந்தது.

பிரசாத்துக்கும் பெரிதாக ஏதாவது ஒரு அடி விழுந்தால்தான் இனிமேல் யாருடைய வாழ்க்கையில் வேண்டுமானாலும் விளையாடலாம் என்ற நினைப்பு மாறும் என்று எண்ணிக் கொண்டாள்.

வேலையில் ஆழ்ந்திருக்கும் போது இப்போதெல்லாம் சில வேளைகளில் சேருக்குப் பின்னால் வந்து இளஞ்செழியன் நிற்பான். அப்போதெல்லாம் அவளுக்குள் குறுகுறுவென்று இருக்கும். தனக்கும் இந்த மாதிரி நினைவுகள் தோன்றுவது அவளுக்குள் பயத்தை ஏற்படுத்தியது. அதனால்தான் காலையில் இருந்து 'போகலாமா...? வேண்டாமா...?' என்ற இரண்டு மனதாக இருந்தாள். ஆனால் மணி பத்தானதும் இருப்புக் கொள்ளவில்லை. அவளே போன் செய்தாள்.

"சார்! நான் ஆஃடர்நூன் வர்றேன்" என்று அனுமதி வாங்கிக் கொண்டாள்.

கிளம்பும் போதே அவள் ஆழ் மனது சொன்னது "ஏதோ நடக்கப் போகிறது" என்று.

* * *

"என்னப்பா! ஊர் சுத்தறதுக்கு டிக்கெட்டும், பணமும், கிடைச்சதும்... ஒத்துகிட்ட விஷயத்தையெல்லாம் மறந்

துட்டியா? இல்லே கழண்டுகிட்டியா?'' என்று கேட்டான் பிரசாத்.

''அதெப்படி சார் மறப்பேன்! தானா டிக்கெட்ஸும், பணமும் கிடைக்கும் போது அதை ஏன் விடணும்? அதான் என்ஜாய் பண்றேன். ஆனா, உங்க திட்டத்துக் கான எல்லா ஏற்பாடுகளும் நடந்துகிட்டுத்தான் இருக்கு. அதிகபட்சம் இன்னைக்கு இல்லேன்னா... நாளைக்கு... வேலை முடிஞ்சுரும்.''

''ஆமா... ஏதாவது ஒரு முடிவு கட்டணும்... எனக் கென்ன கடுப்புன்னா... ராத்திரி எட்டு மணி ஒன்பது மணின்னு என் சிஸ்டர் வந்து இறங்கறா. எங்க பேரண்ட் ஸும் கண்டுக்கவே மாட்டேங்கறாங்க... இது எங்க போய் முடியுமோ... தெரியலை.''

''கவலைப்படாதீங்க.. சார்! போய் முடிய வேண்டிய இடம்னு ஒண்ணு இருக்கில்லே! எல்லா ஏற்பாடுகளும் பண்ணியிருக்கு... நான் பாத்துக்கறேன்'' என்றான்.

''நீ என்னத்தைப் பாக்கறேன்னு எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது. போப்பா... நீ!'' என்றான் சலிப்பாக.

''இல்ல... சார்! கொஞ்சம் பொறுத்துக்குங்க...! இன் னைக்கோ அல்லது நாளைக்கோ மேட்டர் முடிஞ்சுடும்'' என்றான்.

பிரசாத் பேசி முடிக்கிற நேரம் தன் தங்கை அதைக் கூர்ந்து கவனிக்கிறாள் என்பது புரியவில்லை.

நடந்து போன விஷயங்கள் உள்ளே ஓடிக் கொண் டிருக்க இன்றைக்கு உள்ளே நுழைந்தவுடனே இளஞ் செழியன் உற்சாகமாக வரவேற்றான்.

''லேகா... முதல்ல... லஞ்ச்! அப்புறம் கொஞ்சம் ரிலாக் ஸேஷன் அப்புறம்தான்... வேலை!'' என்றான்.

''ஓ....!''

''மேடம்! இன்னைக்கு என்ன விசேஷம்னு... கேட்க மாட்டிங்களா?'' என்றான்.



அவள் மௌனமாகவே பார்த்தாள்.

''இன்னைக்கு ரிலாக்ஸேஷன்.. டே! நான் எப்பவுமே ஒரு நாளை இப்படி ஒதுக்குவேன்'' என்றான்.

''சார்...! இதை முதல்லயே சொல்லியிருந்தா... நான் வீட்ல இருந்திருப்பேனே!'' என்றாள்.

''அங்கதான் இருக்கு மேட்டரே! இன்னைக்கு நாம ரெண்டு பேருமே சேர்ந்துதானே ரிலாக்ஸ் பண்ணப் போறோம்'' என்றான்.

''போங்க... செழியன்!'' என்று சிணுங்கினாள். ஆனால் தொடர்ந்து வந்த நேரத்தில் விளையாட்டாகப் பேசி கலகலவென்று சிரிக்கச் செய்தான்.

ஜோக்குக்கு மேல் ஜோக்காக அவன் எடுத்து விட அவளுக்கு வயிறே வலித்து விட்டது. அவளும் தான் வேலை செய்து கொண்டிருந்த அலுவலகங்களில் நடந்த விஷயங்களை எல்லாம் பகிர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் டி.வி.யில் படம் பார்த்தார்கள். நான்கு மணி வரை பொழுது போனதே தெரியவில்லை. அதற்குப் பிறகுதான் வேலை ஆரம்பித்தார்கள். மூன்று நான்கு மணி நேரம் வேலையில் ஆழ்ந்து விட்டார்கள். அதற்குப் பிறகு. இரண்டு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்த இளஞ்செழியன் சொன்னான்.

''ஓ.கே.! லேகா...! இன்னைக்குப் போதும்'' என்றான்.

''சரிங்க... செழியன்!'' என்றாள் அவளும். அதே நேரம் போன் ஒலித்தது.

இளஞ்செழியன் எழுந்தான்.

''ம்...! ம்....!'' என்று கேட்டான். முகம் தீவிர பாவத்துக்கு மாறியது. போனை வைத்தான்.

''லேகா....! பூங்குழலிக்கு உடம்பு சரியில்லையாம்.'' லேகா திடுக்கிட்டாற்போல் விழித்தாள்.

''ஆமா! லேகா... ரொம்பக் காய்ச்சலாம்...!''

"யாரு... போன் பண்ணினா?" என்றாள்.

"பிரசாத்....!" என்றான்.

லேகா எழுந்தாள். எழுந்து ஜன்னல் பக்கம் பார்த்தபடி நின்று கொண்டாள்.

"பிரசாத் ஏதோ பிளே பண்றான்!" என்றாள்.

"லேகா! எனக்கு என்னவோ அப்படித் தோணலே! குரல்ல ரொம்ப வருத்தத்தோடுதான் பேசறான்" என்றான் இளஞ்செழியனும் கவலை நிறைந்த குரலில்.

"நான்தான் உங்க சிஸ்டர்கிட்டே வேண்ணாப் பேசுங் கன்னுதானே சொன்னேனே அதுக்கு இல்ல செழியன் என் சிஸ்டர் நான் சொன்னா நம்ப மாட்டா. நீங்களே சொல் லுங்கன்னு சொல்றானே" என்றான்.

"பிரசாத்துக்கும் குழந்தைக்கும் சம்பந்தமேயில்லை. சும்மா... பொய் சொல்றான்."

அவன் வெறித்துப் பார்த்தான்.

"லேகா! ரொம்ப மாறிப் போயிட்டே! பெத்த குழந் தையைப் பத்திக் கவலைப்படாத மாதிரிப் பேசறே!"

"நான் கவலைப்படாத மாதிரிப் பேசலே. பிரசாத்துக்கு அந்தக் கவலை அவசியம் இல்லேன்னுதான் சொல் றேன்."

"ஏன்... எல்லா மனுஷங்களும் எல்லா சமயத்துலயும் மோசமாவா இருப்பாங்க...?"

"குழந்தை பொறுப்பான கையிலதான் இருக்கு. அவங்க பத்திரமாப் பாத்துக்குவாங்க."

"யாரு பொறுப்பில இருக்கு?"

"அவரோட அம்மா... அப்பா பொறுப்பில இருக்கு..."

"ஓ...! எந்த ஊர்ல?"

"திருச்சியில! அப்படியே குழந்தைக்கு ஏதாவது ஆகியிருந்தாக் கூட அவங்கதான் என்னைக் காண்டாக்ட் பண்ணுவாங்க. அதுவும் என்னை மட்டுமே காண்டாக்ட்



பண்ணுவாங்க... பிரசாத்தைக் காண்டாக்ட் பண்ண வேண்டிய அவசியமே இல்லை."

"சரி... திருச்சி... அட்ரஸ் சொல்லு! அங்க நம்ம ஆபீஸ் ஆட்களை ஹெல்ப்புக்குப் போகச் சொல்றேன். ஒரு நல்ல ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டு போகட்டும். உடனே நாம கிளம்பலாம். ஃபைவ் அவர்ஸ் டிராவல். அவ்வளவுதான். போய்ப் பாத்துரலாம்."

"அதெல்லாம் வேண்டாம். செழியன். குழந்தையைப் பாத்துக்கறதுக்கு நான் ஏற்பாடு செஞ்சிருக்கேன். அது போதும்."

"எனக்கென்னவோ அது போதாதுன்னு தோணுது."

அவள் கோபமாகத் திரும்பினாள்.

"போதும்னு சொல்றேன் இல்ல. விடுங்களேன்" என்றாள்.

"அதெப்படி விடறது? விஷயம் முக்கியமானது இல்லே எழுந்திரு... லேகா..." என்று அவன் கிட்டத்தட்ட கையைப் பிடிக்க வர அவள் ஜன்னலோரமாக ஒண்டினாள்.

கோபமாக ஐந்தாறு நிமிடங்களுக்குக் கத்தினாள். இளஞ்செழியன் நின்ற இடத்திலேயே நின்று வேடிக்கை பார்த்தான். பிறகு இரையைத் தேடிச் செல்லும் புலி போல அவளை நெருங்கினான்.

மிக அருகில் நின்றான்.

"சரி... விடு... எதுக்கு இவ்வளவு கோபிச்சுக்கறே! ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்" என்றான். மெல்ல அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

அவள் விடுவித்துக் கொள்ள முயன்றாள். இயலவில்லை.

ஒருவித அச்சத்துடன் அவனை நிமிர்ந்து பார்த் தாள். அப்போதுதான் அந்த வார்த்தைகளைச் சொன்னான்.

"அன்னைக்கொரு நாள் ஒரு குற்றச்சாட்டு வச்சே இல்லே. அதுக்கு பதில் கேட்டுக்க..." என்றான்.

தன் பதிலைச் சொன்னான். அதற்குப் பிறகும் மேலும் சில வார்த்தைகள் சொன்னான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட சித்ரலேகாவின் முகம் வெளிறிப் போனது.

''ப்ளீஸ்! இளஞ்செழியன்... என்னைப் போகறதுக்கு அனுமதியுங்க....'' என்றாள் கெஞ்சுவது போல்.

இளஞ்செழியன் அருகாமையைத் தன் மனம் விரும்புவது போல் நடுக்கம் அவள் உடலில் ஓடியது.

''நான் என்ன அனுமதிக்கிறது? நீ விருப்பப்பட்டா எப்ப வேண்ணாப் போலாம். ஆனா போகனும்கிற விருப்பமே வராத அளவுக்கும் பாத்துக்கறதுக்கு எனக்குத் தெரியும்'' என்றான்.

அவள் பீதியோடு அவனைப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இன்னும் நெருங்கினான்.

''அன்னைக்கே... நான் சொன்னேன் இல்ல... என்னைக்காவது நீ பதில் சொல்லியாகணும்னு. நீ பதில் சொல்ற நேரம் வந்தாச்சு. இனியொரு முறை நான் வாய்ப்பைத் தவிர விடப் போறதில்லே'' என்றான். இரு கைகளாலும் வளைத்தான். முகம் நோக்கிக் குனிந்தான்.

சாவகாசமாக அவள் நிமிர்கிற போது என்ன நடக்கிறதென்றே புரிந்து கொள்ளாத பாவனையில் சித்ரலேகா விழிப்பதை பார்த்தான்.

சிரிப்பு வந்து விட்டது. இந்த முறை குனிந்த போது சித்ரலேகாவுக்குப் புரிந்து விட்டது. தானும் கட்டுப்பாட்டை இழக்கிறோம் என்று.

''நான்... குழந்தை...!'' என்று திமிறினாள்.

''ஆமா...! நீ குழந்தைதான்! எல்லாத்தையுமே மிஸ்ஹேஸ்டில் பண்ணிட்ட குழந்தை... ஆனா... இனிமேலும் குழந்தையா இருக்க விடறதா உத்தேசமில்லை'' என்றான்.



வலிமையான தன் கைகளால் சிறைப்படுத்திக் கொண்டான். தானும் இளகுவதை உணர்ந்தாள் சித்ரலேகா.

இளஞ்செழியன் திட்டமிட்டுத் தன் காரியத்தை நடத்திக் கொள்கையில் எந்த விதமான திட்டமிடலும் இல்லாமலே அவன் இழுத்த இழுப்புக்கு அவள் வளைந்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அதே நேரம்!

போன் ஒலித்தது! எடுத்த இளஞ்செழியன் கிட்டத்தட்ட அடித்து விடுபவன் போல் சொன்னான்.

''மிஸ்டர். பிரசாத். இனியொரு தடவை கூப்பிடாதீங்க. உங்க சிஸ்டரை எப்ப... எப்படி அனுப்பி வைக்கறதுன்னு எனக்குத் தெரியும்... யு அண்டர்ஸ்டாண்ட்'' என்றான்.

ரிசீவரை எடுத்து அந்தப்புறம் வைத்துவிட்டான்.

சித்ரலேகா தன்னை இழக்கிறோம் என்று தெரிந்தும் விளக்கைக் கண்ட விட்டில் போல் இழந்து கொண்டிருந்தாள்.

* * *

தன் மார்பில் சாய்ந்து கொண்டு விக்கி விக்கி அழுகிற சித்ரலேகாவின் தலையை மெல்லக் கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

''என்ன... என்ன? என்ன ஆயிடுச்சு... இப்ப... நீ சட்டப்படி என் மனைவி தான்'' என்றான்.

அவள் கோபமாக அவனைத் தள்ளி விட்டாள்.

''இந்த வார்த்தையை சொல்லிகிட்டு அன்னைக்கு எங்க வீட்டுக்குத் தேடிகிட்டு ஏன் வர்லே? போலீசுக்குப் போயாவது என்னை மீட்டிருக்கலாம்... இல்லே! இப்ப... இப்ப... சொல்றீங்களே?'' என்று மறுபடியும் அழுதாள்.

அவன் சோபாவில் சாய்ந்து அமர்ந்தான்.

''நான் தேடிகிட்டு வர்லேன்னு நீ நினைக்கறியா? வந்தேன்... லேகா...! உன் கல்யாண அன்னைக்கு...''

அவள் மீண்டும் நிமிர்ந்து பார்த்தாள்.

''என் கல்யாண அன்னைக்கா?'' என்றாள் பக்கத்தில் கிடந்த குஷன் மெத்தையை எடுத்துக் கோபமாக வீசினாள்.

அவன் தப்பிப்பவன் போல் நடித்து விட்டுச் சிரித்தான். பிறகு சொன்னான்.

''இப்ப... என்ன அதுக்கு? நீ உன் வாழ்க்கையை வாழலாம் ஆனா... அப்பப்ப... நான் உன்னோட சட்டப்படியான ஹஸ்பெண்ட்டுன்னு நினைப்பு வச்சிட்டு என்னையும் கவனிச்சுடு...'' என்றான்.

அவள் காளி போல் எழுந்தாள். மறுபடியும் கோபமாக அந்தத் தலையணையை அவன்மேல் வீசினாள்.

இப்போது அவன் எழுந்தான்.

''ஹேய்! போதும்டி...! எனக்கு எல்லாம் தெரியும்'' என்றான்.

''எல்லாம்னா?''

''எல்லாம்னா... உனக்குக் கல்யாணம் எப்படிடி நடந்துச்சு..? யாரோட நடந்தது... எல்லாம்தான்''' என்று மறுபடியும் அருகில் இழுத்தான்.

இந்த முறை வெறும் அணைப்போடு நிற்கவில்லை. மேலே... மேலே'' என்று தன் கணவனுக்கான உரிமையை முழுமையாக நிருபித்தான்.

சித்ரலேகா தான் தனது சட்ட அறிவை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய இயலாமல் உணர்வுப் போராட்டத்தில் தோற்றுக் கொண்டிருந்தாள்.

## 23

''அண்ணா! அம்மாவுக்கு என்ன ஆச்சு?'' என்று கவலையுடன் கேட்கிற தங்கையை உறுத்துப் பார்த்தான் பிரசாத்.



''ஹார்ட் அட்டாக்'' என்றான்.

''ஓ!'' என்றாள் சித்ரலேகா. கண்களில் கண்ணீர் கரகரவென்று வடிந்தது.

''இப்ப... அழுது என்ன செய்யறது? மானம் போகிற மாதிரி ஒரு காரியத்தைப் பண்ணிட்டு...'' என்றான் உறுமலாக.

சித்ரலேகா ஒன்றும் பேசவில்லை. வெளியே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கண்களில் கண்ணீர் மட்டும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

''எங்க வச்சுப் பாக்குது?''

''இங்குதான்...'' என்று ஆஸ்பத்திரியின் பெயரைச் சொன்னான்.

''நல்ல ஹாஸ்பிடல்தான்'' என்றாள் சித்ரலேகா.

''ஆனா... நான் அம்மாவை மெட்ராஸ் கூட்டிட்டுப் போயிடலாம்னு பாக்கறேன்'' என்றான்.

''ஏன்?''

''இங்க யார்யாருக்கு உன் விஷயம் தெரிஞ்சுருக்கும்னு தெரியலே ஆளுக்காளு வந்து ஜாடை மாடையா ஏதாவது பேசினாங்கன்னா... அம்மாவுக்குத் தாங்காது!''

அவன் சொல்வதில் இந்த நியாயம் அவளுக்குப் புரிந்தது. மறுத்துப் பேசாமல் அமர்ந்து கொண்டாள்.

''நீ போன நாள்ல இருந்து ஒரே அழுகை. சரியா சாப்பிடறதில்லே... தூங்கறதில்லே... திடீர்ன்னு நாலு நாளைக்கு முன்னால நெஞ்சுவலி!''

''ஐயோ! அப்புறம்...!'''

''அப்புறம் என்ன? அடிச்சுப் பிடிச்சிகிட்டு ஆஸ்பத்திரிக்கு ஓட வேண்டியதாய் போச்சு. இப்பவும் இன்டென்சிவ் கேர்லதான் இருக்காங்க.... அத்தை கூட இருக்காங்க...

அப்பா பாத்துக்கறாரு. நம்ம கம்பெனி ஆளுங்களை உதவிக்கு வச்சுட்டு வந்திருக்கேன்.''

''ஓ...!''

''ஆமா... இப்ப கதை கேளு... அங்க... அந்த வீட்ல... நம்ம வீட்டு பாத்ரூம் சைஸ் கூட இல்லே... அந்த வீட்ல... சே... எவ்வளவு கேவலம்?''

''அண்ணா! நான் அம்மாவுக்கு உடம்பு சரியில்லேங்கிறதுக்காக வந்திருக்கேன். முதல்ல அம்மாவுக்கு உடம்பு சரியாகறதைப் பார்ப்போம். மத்ததை அப்புறம் பேசலாம்... என்ன?'' என்று கடுமையாகச் சொல்கிற தங்கையைப் பார்த்து அவனுக்குக் கடுங்கோபம் ஏற்பட்ட போதும் ஒரு விதமான அச்சமும் தோன்றியது.

'துணிச்சலாகத்தான் இருக்கிறாள். இனிமேல் பேசிக் காரியங்களைச் செய்யவே முடியாது. வேறுவிதத்தில்தான் ஏதாவது செய்ய வேண்டும்.' என்று எண்ணிக் கொண்டான்.

ஆஸ்பத்திரி வராண்டாவில் காத்துக் கிடந்தார்கள். இரண்டு மணி நேரம் கழித்து அனுமதித்த போது போய்ப் பார்த்தாள்.

அம்மா... இப்போதும் படுத்துக் கொண்டுதான் இருந்தார். மகளைக் கண்டவுடன் எழுந்து அமர்ந்து விட்டார்.

''சித்ரா... சாமி என் தங்கம்!'' என்று கட்டிக் கொண்டார்.

''அம்மா... நா... வந்துட்டேன்... இல்லே...! எல்லாம்... சரியாயிடும்'' என்று தேற்றினாள் மகள்.

''என் கூடவே இருப்பியாடி! எங்கயும் விட்டுட்டுப் போயிட மாட்டியே!'' என்று அவர் கண்ணீர் வடிக்க

''அம்மா... ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே! நான் உன் கூடவே இருக்கேன்... பாத்துக்கறேன்'' என்று உறுதியளித்தாள்.

அந்த வார்த்தைகள்தான் அம்மா இப்போது மிகவும் எதிர்பார்க்கிற வார்த்தைகள் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.



அம்மாவுடைய உடல் நலத்திற்கும், மன நலத்துக்காகவும் அந்த வார்த்தைகளை சொல்லத்தான் வேண்டும். பிறகு பேசிக் கொள்ளலாம் என்றுதான் எண்ணிக் கெண்டாள் சித்ரலேகா.

அடுத்த நாள் காலையிலேயே அம்மாவை அறைக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

தெம்பாக எழுந்து அமர்ந்து விட்டார்.

வீட்டில் ஒன்றிரண்டு நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அம்மாவுக்கு உடல் நலம் சரியில்லை என்பது தெரிவிக்கப்பட்டது. அதிலும் சித்ரலேகாவின் விவகாரம் சுத்தமாக மறைக்கப்பட்டது. அவள் ஏதோ ட்ரெயினிங்குக்காக வெளியூர் போயிருக்கிறாள் என்றே சாதித்து விட்டார்கள்.

அம்மா அறைக்கு வந்தவுடனே பிரசாத் வந்து சித்ரலேகாவைத் தனியாக அழைத்துப் போனான்.

''இத பார்... சித்ரா! எதுக்கும்... தாலியை உள்ளே மறைவா வச்சுக்க.. அம்மா கண்ணு முன்னாடி தாலிக் கொடியைப் பெரிசா காட்டிகிட்டுத் திரியாதே. அம்மா கிட்டே பக்குவமா விவரம் சொல்லிக்கலாம்....'' என்றான்.

சித்ரலேகா சகோதரனை முறைத்தாள்.

''எப்படியிருந்தாலும் தெரியத்தானே போகுது!''

''தெரியத்தாண்டி போகுது. கொஞ்சம் உடம்பு தேறட்டும். அப்புறம் விவரமா சொல்லிக்கலாம்'' என்றான்.

''அதுக்குள்ள நீ ஏதும் தில்லுமுல்லு செய்ய மாட்டியே'' என்றாள் சித்ரலேகா சந்தேகப் பார்வையுடன்.

''இதென்னடா... வம்பாய் போச்சு. நடந்து போன விஷயங்களை எப்படி மாத்த முடியும்! அம்மாவுக்கு உடம்பு தேறட்டும்! நடந்து போனதை நல்ல விதமா சொல்லி... யாரோட கௌரவமும் கெடாம மறுபடியும் ஊரறிய ஒரு கல்யாணம் ஏற்பாடு செய்யலாம்...'' என்ன?'' என்றான்.

'எப்போதிலிருந்து சகோதரன் இவ்வளவு மனமுதிர்ச்சி உள்ளவனாக ஆனான்' என்று அவளுக்கு ஆச்சரியம்தான். இருப்பினும் அம்மாவின் உடல்நிலை கருதி அவன் சொல்லுகிற விஷயங்களை ஏற்றுக் கொண்டாள்,

மெட்ராஸ் புறப்பட்டுப் போய் விட்டார்கள். அங்கே புகழ் பெற்ற ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்தார்கள்.

''ஹார்ட் அட்டாக் மாதிரித் தெரியில. ஆனா... ஏதோ அதிர்ச்சி... ஏற்பட்டிருக்கு'' என்றார்கள்.

ஒரு மாதம் அங்கேயே தங்க வைத்து ஓய்வு எடுப்பது என்று முடிவானது.

சித்ரலேகாவுக்கு இப்படி அப்படித் திரும்பிப் பார்க்க நேரமில்லை. அம்மாவை முழுமையாகக் கவனித்துக் கொண்டாள்.

எத்தனை நாள் ஆனால் என்ன? இளஞ்செழியன் தன்னைப் புரிந்து கொள்வான் என்று கனமான நம்பிக்கை இருந்தது.

இதற்கிடையில் வேறு ஒன்றும் நடந்தது.

காரில் இருந்து அம்மாவை இறக்கி அழைத்துச் செல்கையில் அவளது செல்போனை மறந்து வைத்துவிட்டாள்.

அதிகம் அலட்டிக் கொள்ளாமல் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதால் சொகுசுக் காரில் அழைத்துச் சென்றார்கள்.

வழியில் இரண்டு மூன்று இடங்களில் இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்தும் சென்றார்கள். ஆங்காங்கே அப்பாவின் நண்பர்களின் வீடு இருப்பதால் சேலத்தில் கொஞ்ச நேரம், வேலூரில் கொஞ்ச நேரம் என்று தங்கினார்கள்.

ஒரு நாளே ஓடி விட்டது!

இடையிலே செல்போன் தொலைந்து போனதும் அவளுக்குக் கவலையாகிப் போனது.



''அண்ணா செழியன் கூப்பிடுவாரே!'' என்றாள் சகோதரனிடம் கவலையுடன்.

''ஒண்ணும் வொரி பண்ணிக்காதம்மா... அப்புறமாக் கூப்பிட்டு அவன்கிட்டே விஷயம் சொல்லிடலாம்'' என்றான்.

சித்ரலேகாவுக்கு அவனை நம்புவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

இதற்கிடையில் வேறு ஒன்றும் நடந்திருந்தது.

அவள் திரும்பி வந்த அன்றைக்குப் பார்வையாளர்கள் நேரத்தில் அப்பா வந்தார்.

அவளை வருத்தத்துடன் பார்த்தார்.

''வாழ்க்கையை நினைச்சா பயம்மா... இருக்கும்மா....!'' என்றார்.

அவர் என்ன சொல்கிறார்னே தெரியாமல் விழித்தாள்.

''நம்ம கண்ணு முன்னால வளர்ந்த குழந்தைகள் திடீர்னு பெரிய மனுஷங்களா மாறிடறாங்க... அது மட்டுமில்லே... நம்மளைத் துச்சமாத் தூக்கியெறிஞ்சுட்டு போயிடறாங்க...'' என்ற போது அவளுக்கும் குற்ற மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது.

''அப்பா... ஐ ம் சாரிப்பா...! நான் வேணும்னு செய்யலை. இந்த பிரசாத் செஞ்ச ஆர்ப்பாட்டத்துல...'' என்று அவள் விளக்க முயன்றபோது அவர் கையை உயர்த்தினார்.

''ஏம்மா... பெத்தவங்க... நாங்க இருக்கோமில்லே எங்ககிட்டே சொல்லியிருக்கலாம்... இல்லே!'' என்றார்.

அவள் காயப்பட்டவளாகப் பார்த்தாள்.

''அப்பா... எப்ப நீங்க... என்னோட உணர்வுகளுக்கு மதிப்புக் குடுத்திருக்கீங்க...? பிரசாத் என்ன சொல்றானோ அது மட்டும்தானே எடுபடும்?'' என்றாள்.

''தப்புப் பண்ணிட்டம்மா! பிரசாத் உன்மேல காட்டற அக்கறையை நாங்க மதிச்சோம்... ஆனா... அதுக்காக...

உன்னோட சொந்த விருப்பு வெறுப்புக்களை நாங்க கண்டுக்க மாட்டோம்னு எப்படிம்மா... முடிவு செஞ்சே...'' என்றார்.

அவள் ஒரு நிமிடம் மௌனம் சாதித்தாள். பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டவள் போல் சொன்னாள்.

''அப்பா! பிரசாத் எப்பவும் என்னை சந்தேகக் கண்ணோடவேதான்... பார்த்தான்... நீங்க அதைத் தட்டிக் கேட்கவே இல்லை. அது நம்ம வீட்டுப் பொண்ணுடா... அவ மேல நம்பிக்கை வைக்கணும்னு... நீங்க ஒரு நாள் கூடச் சொன்னதில்லே... அவனைக் கண்டிக்கவும் இல்லே... அதனாலதான்...'' என்று நிறுத்தினாள்.

அப்பா தொடர்ந்து அதே பார்வையாகப் பார்த்தார்.

''அதனாலதான்... உங்ககிட்டே சொன்னா... என்னோட கருத்துக்கு மதிப்பிருக்கும். என்னோட ஆசை நிறைவேறும்னு எனக்குத் தோணவேயில்லை. அந்த மாதிரி... நம்பிக்கை எனக்கு ஏற்படவேயில்லை.''

அப்பா மனந்தளர்ந்தவர் போல் அமர்ந்து விட்டார். ''அது மட்டுமில்லப்பா! செழியன் ரொம்ப நல்லவர். அவரை நான் கவனிச்சுக் கூடப் பார்த்ததில்லே. ஒரு நாள் எதேச்சையாய் காருக்காகக் காத்துகிட்டு நின்னுகிட்டிருந்தப்ப... அவரும் வெளில்ல வந்தார். சிரிச்சுப் பேசிகிட்டிருந்தோம். உடனே பிரசாத் துளைஞ்சு... துளைஞ்சு கேள்விகள் கேட்க ஆரம்பிச்சான் பாருங்க... அதுக்கப்புறம்தான்... நானே அவரைக் கவனிக்க ஆரம்பிச்சேன்... எல்லாத்துக்கும் காரணம் பிரசாத்தான்'' என்றாள்.

''காரணம்... பிரசாத் இல்லம்மா... விதி! உனக்குள்ளே இவ்வளவு ஆழமான விருப்பு வெறுப்புக்கள் இருக்கும்னு பெத்தவங்க எங்களுக்குப் புரியாமப் போச்சு'' என்றார்.

அவரது வருத்தம் சித்ரலேகாவையும் வருத்தப்படுத்தியது.



''ஐ. ம்... வெரி.... சாரிப்பா!'' என்றாள். அவரது அருகில் அமர்ந்து கொண்டாள். அவரது கையை எடுத்துத் தன் கையில் வைத்துக் கொண்டாள்.

''அப்பா! செழியன்... ரொம்ப நல்லவர்..! பொறுப்பானவர்... சொந்த முயற்சியிலே முன்னேறினவர். வாழ்க்கையோட கஷ்ட நஷ்டங்கள் புரிஞ்சவர்'' என்றாள்.

அப்பா அமைதியாகக் கேட்டுக் கொண்டார். பிறகு நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

''சரிம்மா! அம்மா வீட்டுக்கு வந்து சேரட்டும்... மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு முடிவெடுக்கலாம்...'' என்றார்.

தந்தை மகள் இருவருக்குமே பிரசாத் அறைக்கு வெளியே அமர்ந்து இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்பது தெரிந்திருக்கவில்லை.

பிரசாத் சிந்தனையில் ஆழ்ந்தான். காரில் வரும் போது ''இந்த மாதிரி ஒரு அன்னக்காவடியைப் போய்ப் பிடிச்சிருக்கியே'' என்று சற்று நேரம் பட்டாசு போல் பொரிந்தான். அதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசவேயில்லை.

கடந்த ஒரு மாதமாகவே வெறி பிடித்த மிருகமாகவே ஆகி விட்டான்.

எவ்வளவோ எச்சரிக்கையாக இருந்தும் சகோதரி தன்னை மீறிக் கொண்டு போய்த் தன் வாழ்க்கைத் தீர்மானத்தை எடுத்து விட்டதிலும், திருமணத்தை நிறைவேற்றிக் கொண்டதிலும் கொதித்துப் போயிருந்தான்.

அது அவனுக்கு மிகப் பெரிய கௌரவப் பிரச்சனையாகப் போய்விட்டது. நாலாபுறத்திலும் ஆட்களை அனுப்பித் தேடினான்.

போன வாரமே இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டான். ஆனால் போய் என்ன மிரட்டினாலும் தங்கை வரப் போவதில்லை. இவ்வளவு தூரம் அவள் உறுதியாக நிற்பாள் என்பது அவன் எதிர்பாராதது.

அது மட்டுமல்ல. 'அவளும் பட்டப்படிப்பு முடித்திருக்கிறாள். அவனும் பட்ட மேற்படிப்பு படித்திருக்கிறான்.. சட்டத்தின் உதவியை நாடினார்கள் என்றால் தன்பாடு வில்லங்கமாகிவிடும். போலீஸ் ஸ்டேஷனில் அவர்கள் பாட்டுக்கு இரண்டு மாலை வாங்கிப் போட்டு வாழ்த்தி அனுப்புவார்கள். தன்னைத்தான் மிரட்டுவார்கள்.

செழியனோடு மட்டும் தங்கையை வாழவிட்டால் அது தங்கள் குடும்பத்துக்கே மானப்பிரச்சினையாகி விடும். அதுவும் செழியன் மாதிரி ஒரு அன்னக்காவடியிடம் போய்த் தான் தோற்பதா...? பேசாமல் மீசையை எடுத்து விடலாம்' என்று எண்ணியவன் அதை ஒரு கௌரவப் பிரச்சினையாகவே பாவித்து கொண்டிருந்தான்.

இப்போது அப்பாவும் மகளும் பேசிக் கொண்டதைக் கேட்டு சற்றே அதிர்ந்து போனான்.

'இதென்ன? அப்பா... சித்ரலேகாவின் வழிக்கு வந்து விடுவார் போல இருக்கே?' என்று அதிர்ந்து போனான்.

அப்போதுதான் அந்த முடிவை எடுத்தான். இனிமேல் வெளிப்படையாக எதிர்ப்பைக் காட்டக்கூடாது. இணக்கமாகவே பேச வேண்டும். ஆனால் தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

முதல் வேலையாக அப்பாவிடம் நயமாகப் பேசினான். அதுவும் சித்ரலேகாவின் காது பட.

''ஏம்ப்பா! நானும் சித்ராகிட்டே இவ்வளவு கடுமையா நடந்திருக்கக் கூடாது இல்லே!'' என்றான். ரொம்பவும் கவலை கொண்டவன் போல் பெருமூச்சு விட்டான்.

அப்பாவும் ஆமோதித்தார்.

''அவனும் பொருத்தமாத்தான் இருக்கான். படிப்பும் இருக்கு. ஆனா வசதிதான் இல்லே. ஒரு வசதியும் காணோம்ப்பா...! நம்ம கிராமத்துல நம்மளோட வீடு இருக்கில்லே... அதுல இருக்கிற சமையற்கட்டு அளவுக்



குத்தான் வீடு... இதுல எப்படித்தான் லேகா... ஒரு மாசம் இருந்தாளோ! எல்லாம் தலையெழுத்து...''

''ம்....'' என்றார் அப்பாவும் பெருமூச்சுடன்.

''சரிப்பா...! அம்மாவுக்கு உடம்பு சரியாகட்டும். செழியனோட அம்மாவையும், அப்பாவையும் வரச் சொல்லி பேசி ஒரு முடிவு எடுக்கலாம்...''

''ஏதோ... ஒரு முடிவுன்னா...!'' என்றார் அப்பா.

''அப்பா... இவங்கதான் கல்யாணமே பண்ணிகிட்டாச்சே! சட்டப்படி ரெஜிஸ்டர் வேற பண்ணியிருக்காங்க... இனிப் போய் என்னத்தைப் பண்ண முடியும்? மத்த விஷயங்கள் பற்றித்தான் பேசணும். எப்படியோ நம்ம சித்துக்குட்டியை நல்லா வசதியா வச்சுக்கற அளவுக்கு ஏதாவது செய்யணும் போல இருக்கு...'' என்றான்.

சித்ரலேகா உண்மையாகவே மகிழ்ச்சியடைந்தாள். 'பரவாயில்லையே! அண்ணன் கூட பிராக்டிக்கலாப் பேசறானே?' என்று.

அறையின் முன்னால் இருந்த மரச் சேரில் மகிழ்ச்சியுடன் அமர்ந்தாள்.

எதேச்சையாக வெளியே வருவது போல் வந்தான் பிரசாத்.

''ஹேய்! நீ இங்க உட்கார்ந்திருக்கியா? நாங்க பேசறதை ஒட்டுக் கேட்டியாக்கும்?'' என்று புன்னகைத்தான்.

''நாங்க ஒண்ணும் ஒட்டுக் கேட்கலே.. நீங்க பேசறது.. தானா எனக்குக் காதில விழுந்துச்சு'' என்றாள்.

திரும்பவும் அறைக்குள் வந்தார்கள்.

அவள் நின்றாள். அவள் தலையைக் கலைத்து விட்டான். ''சித்துக் குட்டி.. ஆனா... எனக்கு ஒரு பிராமிஸ் பண்ணணும்'' என்றான்.

''சொல்லு!'' என்றாள்.

''அம்மா.. உடம்பு தேறட்டும்...! அது மட்டுமில்ல.. செழியன் உன்னை தேடி வரட்டும்.. அவன் தானா வரணும். அதுவரைக்கும் நீயா அவன்கிட்டே பேசக் கூடாது. என்கிட்டே வந்து பேசட்டும். அதுக்குப் பிறகு கிராண்டா ஒரு ரிசப்ஷன் ஏற்பாடு பண்ணி நானே வழியனுப்பி வைக்கிறேன்'' என்றான்.

சித்ரலேகா ஒரு நிமிடம் யோசித்தாள். எப்படியும் இளஞ்செழியன் தன்னைத் தேடி வருவான் என நம்பிக்கை இருந்தது.

''அண்ணா! செழியனை உனக்குத் தெரியாது! ஏழுக் கடல் ஏழு மலை கடந்து வேண்ணாலும் எனக்காக வருவாரு...'' என்றாள்.

பிரசாத் சிரித்தான். அப்பா கூட புன்னகைத்தார். ''வரட்டும் சித்துக் குட்டி! வரட்டும்! அதைத்தானே நானும் எதிர்பார்க்கிறேன்'' என்றான். கலகலவென்று சிரித்தான்.

அவனது அணுகுமுறையின் முதற்கட்டமாகத்தான் செல்போன் காணாமல் போனது அன்று அவளுக்குப் புரியவில்லை. முதலில் லேசாகச் சந்தேகம் எழுந்தது. உடனே கேலியான எண்ணமும் தோன்றியது.

'சீப்பை ஒளித்து வைத்து விட்டால் கல்யாணம் நின்று போயிடுமா?' என்று.

தனது சகோதரன் சீப்பை மட்டுமல்ல முழுப் பூசணிக் காயையே சோற்றுக்குள் மறைக்க முயல்கிறான் என்பது அப்போது அவளுக்குப் புரியவில்லை.

## 24

''அண்ணா.. அவரு போன் பண்ணுவாரு... செல்போன் வேற காணாமப் போச்சு'' என்று கவலையுடன் தன்னைப் பார்த்த தங்கையை அவனும் அதே அளவுக்கு கவலைச் சாயம் பூசிக் கொண்டு பார்த்தான்.



''பரவாயில்லைம்மா! ஒண்ணும் கவலைப்படாதே! நான் யாரையாவது அனுப்பித் தகவல் குடுத்துடறேன்'' என்றான்.

''ஆமா.. அண்ணா! கண்டிப்பாச் சொல்லிடு.. கவலைப் படுவாரு..'' என்றாள்.

ஒரு வழியாக அம்மா தேறினார். ஆனாலும் சித்ரலேகா அம்மாவை உடனிருந்து கவனித்தாள். அவளுக்கு உள்ளூர ஒரு குற்ற மனப்பான்மை. தன்னுடைய செயலால் தான் அம்மாவுக்கு உடல்நலமில்லாமல் போய்விட்டது என்று. அதனால் மற்ற எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு அம்மாவுக்கே நேரத்தை ஒதுக்கினாள்.

இதற்கிடையில் பிரசாத் ஒரு நாள் தங்கையிடம் சொன்னான்.

''சித்ரா ஒண்ணும் பிரச்சினையில்லே! அம்மாவுக்கு உடம்பு நல்லா ஆனதுக்கப்புறம் லேகா வந்தால் போதும். நான் இப்ப அங்கே வந்தால் பிரச்சினைதான் ஆகும். அம்மா தேறட்டும். நானே நேரில் வந்து பெரியவர்களையும் சமாதானம் பண்ணிக் கூட்டிட்டு வரேன்னு செழியன் நம்மாளுகிட்டே சொல்லியனுப்பியிருக்காப்ல'' என்றான்.

சித்ரலேகா அதை முழுமையாக நம்பினாள். அவளும் ஊருக்குப் போய் விட்டு வந்ததாக சகோதரன் காட்டிய அந்த ஆளிடத்தில் ஒரு கடிதம் கொடுத்துக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வரச் சொன்னாள்.

*''அன்புள்ள செழியனுக்கு,*

*நலம். நாடலும் அதுவே. அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் போனதற்கு நானும் ஒரு முக்கிய காரணம் என்ற உறுத்தல் எப்போதும் எனக்கு இருக்கிறது. அதனால் அம்மா முழுமையாகத்*

*தேறும் வரைக்கும் அம்மாவோடு இருந்து விட்டுப் பிறகு வருகிறேன். நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எப்போதும் எனது முடிவுகளுக்கு நீங்கள் ஆதரவு கொடுத்திருக் கிறீர்கள். அதுபோல் இப்போதும் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனாலும் உங்களைப் பிரிந்திருப்பது கஷ்டமாக இருக்கிறது.. அத்தை மாமாவை மிகவும் கேட்டதாகச் சொல்லுங்கள்.*

*அன்புடன்*
*சித்ரலேகா.''*

என்று எழுதியிருந்தாள்.

தனது ஆள் அந்தக் கடிதத்தை தங்கையிடம் வாங்கிக் கொண்டு வருகிற வரைக்கும் காத்திருந்து விட்டு வழியி லேயே வாங்கிக் கொண்டான் பிரசாத். பிரித்துப் படித்துப் பார்த்தான்.

முகத்தை ஒரு விதமாக வைத்துக் கொண்டு கேலியாகச் சிரித்தபடி கடிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டான்.

சித்ரலேகா கணவனிடம் கடிதம் போய்ச் சேர்ந்து விட்டதாக நினைத்துக் கொண்டாள். நிம்மதியாக இருந்தாள்.

அம்மாவை மீண்டும் ஊருக்கு அழைத்து வந்து விட்டார்க்ள். ஆனால், பிரசாத் வெகு சாமர்த்தியாகத் திட்ட மிட்டான். இதுவரை இருந்த வீட்டில் இருக்க வேண்டா மென்றான். அப்பாவிடம் சொன்னான்.

''அப்பா! கூட்டம் கூட்டமாப் பார்க்க வர்றேன்னு வரு வாங்க எதுவும் சொல்ல முடியாது. பிரியமா வர்றவங்களைக் கடிஞ்சுக்கவும் முடியாது. பேசாம.. அந்த வீட்ல இருக்க லாம்'' என்று இன்னொரு பங்களாவைக் குறிப்பிட்டு சொன்னான்.

சித்ரலேகாவும் அவன் வேறு ஐடியாவில் சொல்கிறான் என்று புரிந்து கொள்ளவில்லை. சகோதரன் சுத்தமாக



மாறிவிட்டான் என்றே நம்பினாள். எல்லாரும் ஒத்துக் கொண்டார்கள்.

அந்தக் காலகட்டத்தில்தான் இளஞ்செழியன் அந்த வீட்டிற்கு வந்து தேடிப் போயிருந்தான்.

கூர்க்காவிடம் ''யார் வந்து கேட்டாலும் அவங்க ஊர்ல இல்லைன்னு சொல்லு.. வேறு எதுவும் சொல்லாதே'' என்று சொல்லி வைத்திருந்தார்கள்.

கிளிப்பிள்ளை போல அதே பாடத்தை ஒப்பித்தான். தேடி வந்தவர்களின் விலாசம் மட்டும் வாங்கி வை என்று ஒரு நோட்டையும் கொடுத்து வந்திருந்தான்.

இளஞ்செழியன் வந்து போன அன்றைக்கு கூர்க்கா விடம் அந்த ஆள் வந்தால் எல்லாரும் குடித்தனம் மாறிப் போய்விட்டார்கள் என்று சொல்லிவிடு என்று கறாராகச் சொல்லிவிட்டான்.

இதையெல்லாம் அறிந்து கொள்ளாமல் சித்ரலேகா நிம்மதியாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு!

அவர்களது நெருங்கிய உறவினர். சித்ரலேகாவுக்கு அத்தை முறையாக வேண்டும். அவர்களது வீட்டுப் பெண் கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் பற்றிப் பேச வந்திருந்தார்கள்.

அந்தப் பெண்ணின் பெயரும் சித்ரலேகாதான். அவர்களது நெருங்கிய குடும்பங்களில் சித்ரலேகா என்ற பெயர் நான்கைந்து பேருக்கு இருந்தது.

அவர்களது பாட்டி ஒருவரின் பெயர் அது. அதனால் சௌந்தரராஜனின் குடும்பத்தார்கள் வீட்டில் இரண்டு மூன்று பேருக்கு அந்த மாதிரிப் பெயர் இருந்தது.

அவர்கள் வந்து விட்டுப் போனதற்குப் பிறகுதான் பிரசாத்துக்கு அந்த எண்ணம் தோன்றியது.

இது ஒரு நல்லவாய்ப்பு. இதை விவரமாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று.

மணப்பெண்ணின் சகோதரன் அவர்களுக்கு அத்தை மகனிடம் போய் உருக்கமாகப் பேசினான்.

''ஏதோ ஒரு பையன் ஒண்ணுக்கும் ஆகாதவன் அவனைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு நிக்கறா... என்ன சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேங்கறா. இனிமே இவகிட்டே பேசிப் பிரயோஜனமில்லை. அவன்கிட்டே தான் போய்ப் பேசணும்.''

உருக்கமாய் பேசி அவனைத்தான் விலகிப் போக வைக்கணும்'' என்றான்.

திருமணம் ஆகி விட்டது என்பதையும், சட்டப்படி பதிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் சுத்தமாக மறைத்து விட்டான்.

''சரி.. இப்ப என்ன செய்யணும்கறே!'' என்றான் மதன்.

''ஒண்ணும் செய்ய வேண்டாம்...! அவனோட போட்டோ காட்டறேன். உங்க வீட்டுப் பத்திரிகையை எங்க வீட்டுப் பத்திரிகை மாதிரி அனுப்பறேன். ஒரு பத்துப் பதினைஞ்சு ஆளுங்களை முன்னாடி நிக்க வைப்போம். எப்படியும் முதல் நாளே தேடி வருவான். நானே முன்னாடி நின்று விவரமாப் பேசி அனுப்பிடறேன். என் தங்கச்சிய வாழ விடுன்னு கால்ல விழுந்து விட வேண்டியதுதான்.''

பெரிய இடங்களில் இது மாதிரிப் பிரச்சினைகள் சகஜம் என்பதால் அவனும் ஒத்துழைப்புக் கொடுப்பதாகச் சொன்னான்.

''இன்னொண்ணும் செய்ப்பா! உங்க வீட்ல சொல்லி.. நம்ம சித்ரலேகாவையே பொண்ணுக்குத் தோழியா நிக்க வைப்போம் கொஞ்சம் கிராண்டா டிரஸ் பண்ணிக்க வைப் போம். மத்ததெல்லாம்.. நான் பாத்துக்கறேன்'' என்றான்.

அதில் ஒன்றும் தனக்கு இடைஞ்சல் இல்லை என்று உணர்ந்தான் மதன். அதனால் ஒத்துழைத்தான்.



பிரசாத் எதிர்பார்த்தாற் போலவே இளஞ்செழியன் வந்தான். பிரசாத் அதற்காகவே தன்னுடைய ஆட்களை நிறுத்தி வைத்திருந்தான்.

தனியாக அவனை அழைத்துப் போய் பேசினான். நல்லவேளையாக தங்கை அன்றைக்கு மகிழ்ச்சியாக நடமாடிக் கொண்டிருந்தாள். தூரத்திலிருந்தே அதைக் காண்பித்து அனுப்பி வைத்தான்.

இளஞ்செழியன் போனதற்குப் பிறகுதான் நீண்ட தொரு நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

அன்றைக்கு வீட்டில் நடந்த பிரச்சினை நினைவுக்கு வந்தது.

''டேய்! சித்ரா! நீதான் துணைப் பொண்ணாம்... மதன் போன் செய்தான்'' என்று வந்தான் பிரசாத். அத்தை மக ளின் பெயர் வீட்டில் அழைப்பது ஜனனி.

''ஜனனிக்கு அலங்காரம் செய்ய வேண்டிய பொறுப்பு உன்னோடது. நீயும் கிராண்டா அலங்காரம் செஞ்சுகிட்டு வரணும்'' என்றான்.

அவள் முகம் சுளித்தாள்.

பிரசாத் அருகில் போய் அமர்ந்தான்.

''சித்ரா... நம்ம வீட்டுப் பிரச்சனை எதுக்கு அடுத்தவர் களுக்குத் தெரியணும். நம்ம துக்கங்களை வெளியில காட்டிக்கணும்கறது அவசியம் இல்லே. தெரியுதா? இந்தக் கல்யாணத்துக்கு ஹாஸ்பிடல்ல இருந்த அம்மா முதன் முதலா வர்றாங்க. அவங்களுக்கும் ஒரு சந்தோஷம் கிடைக் கும். நீயும் கொஞ்சம் சந்தோஷமா நடமாடும்மா...!'' என்றான் வேண்டுதல் போல.

சித்ரலேகா அரை மனதாக ஒத்துக் கொண்டாள். ஆனால் கல்யாண வீட்டிற்கு வந்தற்குப் பிறகு. தன் வயதொத்த தோழிகள் வந்ததால் மனம் மாறிப் போனாள்.

கலகலவென்று சிரித்துக் கொண்டு நடமாடினாள். பிரசாத்துடைய அதிர்ஷ்டம் அன்றைக்கு சித்ரலேகா கிராண்டாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

இளஞ்செழியன் வந்த நேரம் தன் வயதொத்த உறவுக் காரப் பெண்களுடன் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந் தாள்.

இந்தத் திருமணம் முடிந்த பின் ஒரே வாரத்தில் தன் கணவனிடம் போய் சேர்ந்து கொள்ளப் போகிறோம் என்ற எண்ணத்தில் இருந்ததால் அவளுக்கு சோகமாக முகத்தை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அதுவே பிரசாத்துக்கு சாதகமாகப் போய்விட்டது.

''பாருங்க! என் சிஸ்டர் முகத்துல ஏதாவது வருத்தம் இருக்கா? அவளைச் சுத்தியும் நிக்கற பொண்ணுங்களைப் பாருங்க.. எல்லாரும் எங்க உறவுக்காரப் பொண்ணுங்க. அவங்கள்ளாம் உடுத்தியிருக்கிற துணிகளையும், போட் டிருக்கிற நகைகளையும் பார்த்தீங்களா? இதுல எது பொண்ணு என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு கிராண்டா இருக்காங்க.. இப்படிச் சூழ்நிலையில வளர்ந் தவ என் சிஸ்டர். அவ எப்படி உங்க வீட்டில சந்தோஷமா இருக்க முடியும்? நாங்க அவளை வற்புறுத்தவே இல்லை. உங்க வீட்ல வாழ்க்கை எப்படி இருக்கும்? எங்க வீட்ல நாங்க பாத்து வைக்கிற மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணினா எப்படி இருக்கும்? இதை மட்டும்தான் சொன்னோம்! அவளே புரிஞ்சுகிட்டா. இந்த அளவுக்கு வந்ததுக்கப்புறம்... நீங்க விலகிக்கறதுதான் நல்லது.''

இளஞ்செழியனின் முகத்தில் அதிர்ச்சி தெளிவாகத் தெரிந்தது.

''உங்களுக்கு சந்தேகம்னா.. போய்ப் பேசுங்க...! நீங்க யார்ன்னு அவ கேட்டா.. உங்களுக்கு இன்னும் அசிங்க மாப் போயிடும்... உங்களுக்கு உண்மையாவே அவ



மேலே பிரியம் இருந்தா... அவ வாழ்க்கை நல்லபடியா அமைய விடுங்க...'' என்று கை கூப்பினான்.

அதே நேரம்!

யாரோ ஏதோ ஜோக் சொல்லியிருப்பார்கள் போலும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தாள் சித்ரலேகா.

நொறுங்கிப் போனவனாகத் திரும்பிப் போனான் இளஞ்செழியன்.

''அண்ணா... நான் கிளம்பறேன்...'' என்று நச்சரித்த தங்கையிடம்.

''சித்ரா! இருந்தது இருந்தே! நாலைஞ்சுநாள் அம்மா தேறட்டும்...'' என்றே இழுத்தடித்தான் பிரசாத்.

ஒரு வழியாக அந்த மாதக் கடைசியில் அவள் புறப்பட முடிவு செய்த போது, பிரசாத் அவளுடைய அறைக்கு வந்தான்.

''சித்ரா! நான் சொல்றதைக் கேட்டு அதிர்ச்சியாகாதே! இளஞ்செழியன் வேற கல்யாணம் பண்ணிக்கறதா முடிவு பண்ணிட்டான்'' என்றான்.

அவள் அதிர்ந்து போய்ப் பார்த்தாள்.

''ஆமா! எனக்கு பத்திரிகை அனுப்பியிருந்தான்'' என்று பத்திரிகையை எடுத்துக் காண்பித்தான்.

''அண்ணா...! நீ பொய் சொல்றே!'' என்றாள்.

''நான் எதுக்கும்மா.. பொய் சொல்லணும்! இன்னைக்கே வேண்ணாக் கிளம்பு. கார்ல போலாம். போய்ப் பார்த்துட்டு வரலாம்'' என்றான் பிரசாத்.

''அப்பா! பிரசாத்.. சொல்றதைக் கேட்டீங்களா?'' என்று ஓடினாள் சித்ரலேகா.

திருமணப் பத்திரிகையைப் பார்த்தவுடனே பிரசாத் தின் அப்பா அதிர்ச்சியால் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தார்.

இந்த முறை அப்பாவுக்கு வெறும் நெஞ்சுவலியாக மட்டுமல்ல.. உண்மையாகவே மைல்ட் அட்டாக் ஆகியிருந்தது.

மீண்டும் ஒரு மாதம்!

வேறு எதையும் நினைப்பதற்கு அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

''அப்பா! நீங்க ஏம்ப்பா.. கவலைப்படறீங்க... சித்ராவோட வாழ்க்கையை சரி பண்ண வேண்டியது என் பொறுப்பு! அவ செட்டிலானதுக்கப்புறம்தான் நான் செட்டிலாவேன்'' என்று தனிமையில் அப்பாவுக்கு உறுதியளித்தான் பிரசாத்.

அப்பாவும் அதை நம்பினார்!

பிரசாத்துக்கு அப்போதெல்லாம் தன் தங்கையின் மன ஆழம் புரிந்திருக்கவேயில்லை. அவளுக்கு ஏதோ நல்லது செய்கிறோம் என்ற நினைப்புடனேயே எல்லாவற்றையும் செய்தான்.

இன்னும் ஒரு வருடம் கழித்து சித்ரலேகா மனம் மாறினாலும் சரி.. அதற்குப் பிறகு ஒரு வெளிநாட்டு மாப்பிள்ளையாகப் பார்த்து நடந்தவற்றைச் சொல்லியே கல்யாணம் செய்யலாம் என்று எண்ணினான். அதனால் தெளிவாகத் திட்டத்தைத் தொடர்ந்தான். ஆனால் அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டது கொஞ்சம் கவலைத் தந்தது.

அப்பா கொஞ்சம் தேறிய பிறகு சொன்னது போலவே தங்கையை அழைத்துப் போனான். அவர்கள் போனபோது இளஞ்செழியனின் குடும்பம் அங்கேயிருந்து குடி பெயர்ந்து போயிருந்தார்கள்...

நடந்து போன விஷயங்களுக்குப் பிறகு கிராமத்தினரின் வம்பு வழக்குப் பேச்சுக்களுக்காக அந்தக் குடும்பம் ஒதுங்கியே இருந்தது.

கிராமத்திற்குப் போய் விசாரித்தார்கள். எல்லாரும் ஒன்று போல.



''என்ன ஆச்சுன்னு.. தெரியலே! திடீர்னு காலி பண்ணிட்டுப் போயிட்டாங்க.'' என்றார்கள்! ''உனக்கே தெரியாதா?'' என்று கேட்டார்கள்.

சித்ரலேகாவுக்கு தெரியாத விஷயம் என்னவென்றால் தனது ஆட்களையே ஆங்காங்கே நிறுத்தி வைத்து தன் தங்கையின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வைத்தான் பிரசாத் என்பதுதான்.

ஊருக்குத் திரும்பி வந்தார்கள்!

சித்ரலேகாவுக்கு நடந்த எதையும் நம்பமுடியவில்லை. தானும் மாதக் கணக்காகத் தங்கியிருக்கக் கூடாதோ! சகோதரன் உண்மையைத்தான் சொல்கிறானோ.. பொய் சொல்வதென்றால் இப்படி நேரடியாக அழைத்துக் கொண்டு வருவானா? அந்தத் தைரியம் அவளுக்கு நம்பிக்கையைத் தந்தது.

அதிகமாக வெளியிடங்களில் பழகாதவள் என்பதால், கூட்டுக்குள்ளேயே வளர்ந்தவள் என்பதால் இதை எப்படி அண்ணனுக்குத் தெரியாமல் விசாரிப்பது என்று தெரியவில்லை. அதற்குள்ளாக அப்பாவின் உடல்நிலையைக் கவனிக்க வேண்டிய அவ்சியமும் ஏற்பட்டது.

''அப்பா! கல்யாணத்தை நிறுத்திட்டோம். யாரோ அவர் கிட்டே என்னைப் பத்தித் தப்பாச் சொல்லியிருக்காங்க..! இனிமே அந்தப் பொண்ணு வராதுன்னு சொல்லியிருக்காங்க...! நானா போய் உண்மையைச் சொல்லிட்டு வந்திருக்கோம். அப்படின்னா... சரி! நீ இன்னும் கொஞ்ச நாள் கூட இருந்து அப்பாவைப் பாத்துக்க...! அப்புறமா... வா!ன்னு அவரே சொல்லீட்டாருப்பா..!'' என்றாள் உற்சாகமாக.

அது நடிப்பு என்பதைப் புரிந்து கொள்ளாத அப்பா நிம்மதியடைந்தார்.

தன்னுடைய சோகத்தையெல்லாம் மறைத்துக் கொண்டு அப்பாவை மகிழ்ச்சிப் படுத்துகிற தங்கையைப் பார்த்த

வுடன் அவனுக்குள்ளும் ஏதோ அசைகிற மாதிரி இருந்தது. ஆனாலும் ''கௌரவம்'' என்ற உணர்வே முன்னால் நின்றது.

கொஞ்ச நாள்! எல்லாரும் வருத்தப்படுவார்கள். பிறகு எல்லாரும் சரியாகி விடும். பிறகு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்து கொண்டான். ஆனால், அப்போது அவனுக்குப் புரியவில்லை.

தங்கையும் தன்னைப்போலவே பிடிவாதக்காரிதான். அவளுடைய பிடிவாதத்தின் முன்னாலே தன்னுடைய பிடிவாதம் உறை போடக் காணாது என்று.

## 25



''நிஜம்மாவா சொல்றே... கவிதா!'' என்று திரும்பத் திரும்பக் கேட்டாள் சித்ரலேகா.

''அட... ஆமா! நான் பார்த்தேன். உன்னைப் பாக்கறதுக்காக வந்திருக்கார் போல இருக்குன்னுதான் நினைச்சேன்.''

''ஓ...! தெரியலை! என்னன்னு தெரியலை! என்னைப் பார்க்கலை!'' என்றாள்.

''ஓ!''

சித்ரலேகா தனக்கு இளஞ்செழியனிடம் இருந்து கல்யாணப்பத்திரிகை வந்ததைச் சொல்லவில்லை. கவிதா போன்ற நெருங்கிய தோழிகளிடம் கூட தனக்குத் திருமணம் ஆனதையும் அவள் சொல்லவில்லை.

சிந்தனையுடன் போனை வைத்தாள். தனது அத்தை மகள் சித்ரலேகாவின் கல்யாண சமயத்தில் தன்னைத் தேடி வந்திருக்கிறான். பிரசாத்தை சந்தித்திருக்கிறான். அதற்குப் பிறகுதான் திருமணப் பத்திரிகை வந்திருக்கிறது. பிரசாத் இளஞ்செழியன் வந்து விட்டுப்போன



விஷயத்தை இதுவரை சொல்லவில்லை. ஏன்? எங்கேயோ ஏதோ இடிக்கிறது.

இளஞ்செழியன் எங்கேயிருக்கிறார் என்று மட்டும் தெரிந்தால் நேரில் போய் எல்லாவற்றையும் பேசி விடலாம்... இந்த ஜனசமுத்திரத்தில் எங்கேயென்று போய்த் தேடுவது?

பிரசாத் வரட்டும்! கேட்டு விடலாம்!

காத்துக் கொண்டிருந்தாள். வந்தவுடன் கேட்டாள். இப்போதெல்லாம் அம்மாவை வைத்துக் கொண்டு அவர்கள் எந்த வாக்குவாதங்களும் வைத்துக் கொள்வதில்லை. அவரது மனம் சோர்ந்து விடுகிறது. தனது அறைக்கு அழைத்துப் போய் சகோதரனிடம் கேட்டாள்.

''அண்ணா! சித்ரலேகா கல்யாண சமயத்துல செழியன் வந்திருக்கிறாராமே! உன் கூட பேசிகிட்டிருந்தாராமே! நீ ஏன் இது வரைக்கும் சொல்லலை'' என்றாள்.

பிரசாத்தின் முகம் ஒரு கணம் இருண்டது. ஆனால், அடுத்த கணமே கை தேர்ந்த நடிகனைப் போல் முக பாவத்தை மாற்றிக் கொண்டான்.

''ஏம்மா! நான் சொல்லலைன்னா... அதுக்கு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்கணும் இல்லே!''

''என்ன அப்படி அழகான காரணம்?!''

பிரசாத் ஒரு சோகப் பெருமூச்சு விட்டான்.

''செழியன்.. வந்தாரும்மா! எதுக்காக வந்தாங்கன்னா.. இந்த மாதிரி நான் வேற கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்றதுக்காக வந்தாரு'' என்றான்.

சித்ரலேகாவுக்கு நம்பிக்கை வரவில்லை. பிரசாத் மறுபடியும் சோக முகத்தை வைத்துக் கொண்டு தொடர்ந்தான்.

''உன்னைத் தூர நின்னு பாத்தாரு. அன்றைக்கு நீ வேற கிராண்டா இருந்தியா. பாத்தீங்களா.. பிரசாத்.. சார்! இந்த ஸ்டேட்டஸ்க்கு நடுவிலதான் சித்ரலேகா சூட்

ஆகறா. என்னோட ஸ்டேட்டஸ்ல அவளைக் கஷ்டப் படுத்தறது கூட ஒரு விதக் கொடுமைதான். அதான் நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேங்க. நாம்ம பிரிஞ்சுரலாம்னு சொல்லத்தான் வந்தேன். சித்ரலேகாவை பார்த்தர்றேன். அப்படீன்னார். அம்மாவுக்கு உடம்பு சரியில்லாமப் போனதுக்கப்புறம்.. அன்னைக்குத்தான் நீ கலகலன்னு சிரிச்சுகிட்டிருந்தே. அதனால சொல்லி விடறதுக்கு எனக்கு மனசு வர்லே. அதையே தனக்கு சாதகமாக்கிட்டுப் பேசினாரு... செழியன்.. பாருங்க... என்னோட பிரிவினால லேகா ஒண்ணும் கவலைப்படலே. நல்லாத்தான் இருக்கா... இனிமேலும் சமாளிச்சுக்குவா..ன்னாரு..."

எந்த விதமான தடுமாற்றமும் இல்லாமல் சரளமாக அவன் பேசுவதைக் கேட்டு சித்ரலேகாவுக்கே கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டது.

"நான் சொன்னேன். இது கல்யாண வீடு. இங்க வச்சு எதுவும் பேச வேண்டாம். ஒரு வாரம் பொறுங்க... நானே சிஸ்டரைக் கூட்டிட்டு ஊருக்கு வர்றேன். இல்ல.. நீங்க வாங்க... பேசுவோம். அப்படீன்னேன். உள்ள வாங்கன்னு வற்புறுத்திக் கூப்பிட்டேன். வர்லேன்னுட்டாரு. எனக்கு அப்பவே புரிஞ்சுக்க முடியலை. ஆனா, நேர்ல போய்ப் பேசலாம்ன்னு நினைச்சேன். மனுஷன் அதுக்குள்ள.. எஸ்கேப் ஆயிட்டாரு. கல்யாணப் பத்திரிகை வருது. அதுவும் பார்த்தா பேக் டேட்... சரின்னு ஆட்களை அனுப்பிப் பார்த்தேன். பட்சி பறந்துருச்சு...! அதுக்கப்புறம் தான் உன்னைக் கூட்டிட்டுப் போனேன். நீதான்.. நான் எது சொன்னாலும் நம்ப மாட்டியே! அதுக்குத்தான நேர்லயே பாத்துக்கட்டும்னு... கூட்டிட்டுப் போனேன்" என்றான்.

அவன் கோர்வையாகப் பேசுவதைக் கேட்டவுடன்... கொஞ்சம் திணறித்தான் போனாள்.



உள்ளம் நொறுங்கிப் போனவளாக இருந்தாள். ஆனால் வேதனையை வெளியே காட்டிக் கொண்டால் அம்மா வும், அப்பாவும் வருத்தப் படுவார்களேயென்று காட்டிக் கொள்ளாமல் நடமாடினாள்.

"நடந்தது... நடந்து போச்சுப்பா.. நான் மேல படிக் கறம்ப்பா" என்று தபாலில் மேல் படிப்புக்கு சேர்ந்தாள்.

ஒரு வருடம் ஓடியது!

எதேச்சையாக ஒரு நாள் வெளியிடத்தில் வைத்து இளஞ்செழியனின் இன்ஸ்டிட்டியூட் நண்பன் ஒருவனைச் சந்தித்தாள் கேட்டாள்!

"செழியனுக்குக் கல்யாணமா? யார் சொன்னா!" என்றான்.

"இல்லே! எனக்குப் பத்திரிகை வந்துச்சே..." என்றாள் சித்ரலேகா.

"எனக்குத் தெரிஞ்சு... அவனுக்குக் கல்யாணம் ஆகலே.. ஒரு வேளை.. எங்களுக்கு இங்க வச்சு விவகாரம் எல்லாம் தெரியும்கறதால.. எங்களையெல்லாம் கூப்பிடலையோ.. என்னமோ! எனக்குத் தெரிஞ்சு... எங்க பிரண்ட்ஸ் யாருமே செழியனுக்குக் கல்யாணம் ஆன மாதிரிச் சொல் லலே. அது மட்டுமில்லே... மேடம்! செழியன் ரொம்ப இன்டக்ரிட்டி உள்ளவன்.அப்படியெல்லாம் பொறுப்பில இருந்து தப்பிக்கறவன் இல்லே! யாரோ ஏதோ பிளே பண்ணியிருக்கிற மாதிரித் தெரியுது. சொல்றேன்னு தப்பா.. நினைக்காதீங்க... உங்க பிரதர்தான் ஏதோ பிளே பண்றாரு. நீங்க.. செழியனோட கிளம்பினதுக்கப்புறம்... எங்களுக்கெல்லாம் குடுத்த டார்ச்சர் கொஞ்சம் நஞ்ச மில்லே எங்கடா... கூட்டிட்டுப் போயிருக்கான்.. உங்க செழியன்? என்னைக்கிருந்தாலும் கண்டு பிடிப்பண்டா... கண்டிப்பா.. என் தங்கச்சியை அவன்கிட்டே விட்டு வைக்க மாட்டேன்டான்னு... சத்தியமே செஞ்சாப்ல..." என்றான்.

சித்ரலேகாவின் மனம் வாடியது.

"செழியன்.. இப்ப.. எங்க.. இருக்காருன்னு தெரியுமா!" என்றாள்.

நண்பன் பெருமூச்சு விட்டான்.

"தெரியலை.. மேடம்! அவன் அந்தக் கிராமத்தை விட்டுப் போனதுக்கப்புறம் நண்பர்கள் யார்கிட்டயும் டச் வச்சுக்கறதில்லே!" என்றான்.

அந்தக் கணக்கில் சித்ரலேகாவுக்கு நன்றாகப் புரிந்தது. இந்தப் பிரிவுக்குக் காரணம் பிரசாத்தான். நேரம் வரட்டும் என்று காத்திருந்தாள்.

* * *

ஆறு மாதங்கள் ஓடின!

சித்ரலேகா மெது மெதுவாக இயல்புக்கு வந்து விட்டாள் என்றே தோன்றியது.

அப்போது பிரசாத் தனது அடுத்த திட்டத்தை ஆரம்பித்தான்.

அம்மா, அப்பாவிடம் பேசினான்!

"வேற வழி...!" என்றார்கள்.

பிரசாத் நினைத்தாற்போலவே வேறு மாப்பிள்ளை வெளிநாட்டு மாப்பிள்ளையாகப் பார்த்தான்.

விவரம் அனைத்தையும் சொன்னான். ஆனால் கவனமாக இளஞ்செழியன் ஏமாற்றி விட்டுப் போன மாதிரி சொன்னான்.

"ஸோ.. வாட்! இந்தக் காலத்துல குழந்தையோட இருக்கிற விடோவுக்கே மேரேஜ்... நடக்குது. இது ஏதோ மிஸ் ஹாப்ன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்" என்றான் மாப்பிள்ளை பெருந்தன்மையாக.

அதற்குப் பிறகு தங்கையிடம் பேசினான். அப்போதுதான் தங்கையின் இன்னொரு முகத்தைப் பார்த்தான்.



"அண்ணா! இது வரைக்கும்.. நீ எனக்கு செஞ்சதெல்லாம்.. போதும்.. இனிமே எனக்கு நீ ஏதாவது நல்லது செய்யணும்னு நினைச்சா... உனக்கு இப்படி ஒரு தங்கை இருக்காங்கிறதையே மறந்துட்டு.. நீ உன் வாழ்க்கைக்கான வழியைப் பாரு..." என்றாள்.

பிரசாத் அம்மா, அப்பாவை அழைத்துப் புகார் செய்தான்.

சித்ரலேகா தாய் தந்தையிடம் மனம் நோகாமல் சொன்னாள்.

"அப்பா.. நான் இப்பக் கல்யாணம் பண்ண முடியாது. பண்ணினா... சட்டப்படி செல்லாது. நானும், இளஞ்செழியனும்.. எங்க மேரேஜை ரிஜிஸ்டர் பண்ணியிருக்கோம். அதைச் சட்டப்படி டீல் செஞ்சு விவாகரத்து வாங்கினதுக்கப்புறம்தான்.. வேற ஏற்பாட்ல இறங்க முடியும்..." என்றாள்.

அம்மாவும் அப்பாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அந்த நேரம் மகள் ஒரு காரியம் செய்தாள். இரு கைகளையும் கூப்பிக் கொண்டு அம்மாவிடம் கதறினாள்.

"அப்பா...! அம்மா! இப்ப நான் சொல்றதைக் கேட்டுக்குங்க...! இந்தப் பிரசாத்தான் என் வாழ்க்கையில பூந்து விளையாடிட்டான்னு எனக்குத் தோணுது. தயவு செய்து இனிமேலாவது என் வாழ்க்கையை என்னை வாழ விடச் சொல்லுங்க... என் முடிவுகளை நான் எடுக்க விடுங்க" என்றாள்.

அப்பாவின் மனம் உருகிப் போனது. எழுந்து மகளின் கூப்பிய இரு கைகளையும் விலக்கினார். தலையைத் தடவிக் கொடுத்தார். பிறகு பிரசாத்தைப் பார்த்துச் சொன்னார்.

"பிரசாத்... விட்ரு! அவ வாழ்க்கையை அவ வாழட்டும்..." என்றார்.

பிரசாத் தங்கையின்.. கதறலைப் பார்த்தவுடன் திடுக்கிட்டுப்போனான். அவனுக்குள்ளும் இந்த பாசம் கொஞ்சம் இருந்தது போலும். முகம் இருண்டு போனது.

அப்பா இப்போது மகனைப் பார்த்துக் கடுமையாக கேட்டார்.

''பிரசாத்! இப்பவாவது உண்மையைச் சொல்லு.. நடந்தது என்னன்னு சொல்லு!''

பிரசாத் அப்பாவின் கோபம் பார்த்துக் கொஞ்சம் நடுங் கிப் போனான்.

''அப்பா! செழியன் தேடி வந்தாப்ல...! நம்ம அத்தை பொண்ணு சித்ரலேகாவோட கல்யாணப் பத்திரிகையை அனுப்பி வச்சேன். அது நிஜம்னு நம்பிட்டான். நானே பேசி அனுப்பிட்டேன்'' என்றான்.

சித்ரலேகா வெடித்து அழுதாள்!

''அப்ப.. அவர்கிட்டே இருந்து வந்த பத்திரிகை!''

''அது நான்தான் அடிச்சு அனுப்பியது!''

அப்பாவின் முகம் சிவந்து அன்றைக்குத்தான் பார்த்தான்.

''டே! எனக்குப் பொறந்தவன்னு சொல்லிக்கவே கேவலமா... இருக்கு.. எவ்வளவு கிரிமினல் வேலை எல்லாம் செஞ்சிருக்கே...! அதுவும் யாருக்கு எதிரா...? சொந்தத் தங்கச்சிக்கு எதிரா...! இத்தனை திட்டம் போடறதுக்கு பதிலா... அவ மனசுக்குப் பிடிச்ச பையனையே கல்யாணம் பண்ணி வச்சு.. நாம பாத்து அவன் ஸ்டேட்டஸை உயர்த்தியிருக்க நினைச்சுருக்கக் கூடாதா?'' என்று கர்ஜித்தார்.

மகளைத் தோளோடு அணைத்துக் கொண்டார். விம்மி விம்மி அழுகிற மகளின் தலையைத் தடவிக் கொடுத்தார்.

''வா.. இப்பவாவது அவன் எங்கிருக்கான்னு சொல்லித்தொலை...!'' என்றார்.

பிரசாத் மென்று விழுங்கிக் கொண்டு சொன்னான்.

''நிஜம்மாவே தெரியாது...!''

''ரொம்ப உத்தமம்!.. சரி... முதல்ல நீ இங்கிருந்து கிளம்பு. கொஞ்ச நாளைக்கு என் கண் முன்னாடியே வராதே!'' என்றார் அப்பா சௌந்தரராஜன்.



பிரசாத் அப்பா, அம்மாவிடமிருந்து இப்படி வெறுப்புக் கிளம்பும் என்று எதிர்பார்க்கவில்லை.

நொந்து அமர்ந்து விட்டான்!

''அப்பா! ஐ ம் சாரி! நீங்க அந்த வீட்டைப் போய்ப் பாத்திருக்கணும்...! ரொம்ப சின்ன வீடு. அந்த மாதிரி வாழ்க்கை வசதிகள்ல எப்படி நம்ம சித்துக்குட்டி... அதான்! அதான்!''ன்னு அவனும் உருகினான்.

சித்ரலேகா வெடித்து நிமிர்ந்தாள்.

''பொய்! உனக்கு.. உன் ஈகோதான்... பெருசு.. குடும்பமே உன் கட்டுப்பாட்டில இருக்குன்னு காட்டிக்கற வெறி.. இப்ப என் வாழ்க்கையை சிதறடிச்சுட்டியே! அவருக்கென்ன.. இனிக் கொஞ்ச நாள் கழிச்சுக் கல்யாணம் செஞ்சாலும் செஞ்சுடுவாரு... ஆனா... நான்.. மனசொப்பி அவரோட ஒரு மாசம் வாழ்ந்திருக்கேன். இன்னொருத்தன் என்னைத் தொடும்போதெல்லாம்.. என் மனசும் உடம்பும் கூசாதா? நீ என் அண்ணன்கறதுக்காக.. என் மனசும் கூட உன்கிட்ட அடிமையாயிருமா.....? நெவர்... மிஸ்டர்.. பிரசாத். இனிமே என் வாழ்க்கையில தலையிட்டீன்னா.. நடக்கறதே.. வேற!'' என்றாள்.

பிரசாத் அவமான உணர்வுடன் கோபத்துடன் வெளியேறினான்.

அப்பாவை நோக்கித் திரும்பினாள்.

''அப்பா! பாத்தீங்களா? மூத்தவன். மகன் அப்படீன்னு அளவுக்கு மீறி இடம் குடுத்துட்டீங்க.. எவ்வளவு தில்லுமுல்லு பண்ணியிருக்கான். இப்பக் கண்டிச்ச மாதிரி முதல்லயே எங்களையும் மேற்பார்வை பார்த்திருந்தீங்கன்னா.. நான் இளஞ்செழியன் பத்தி நேரடியாப்பேசியிருப்பேன். ஆனா, இந்த வீட்ல என் உணர்வுகளுக்கு மதிப்பேயில்லைங்கற மாதிரி என்னை நடத்திட்டீங்க...! இப்ப என் வாழ்க்கையை தொலைச்சுட்டு நிக்கறேன்.''

அம்மா அரவணைத்துக் கொண்டார்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தேற்றினார்கள். தூக்கம் மறந்து புரண்டு புரண்டு படுக்கிற மகளைத் தூங்க வைப்பதற்காக பாலில் தூக்க மாத்திரையைக் கலந்து கொடுத்தார்கள்.

அடுத்த நாள்!

ஆழ்ந்த வேதனையுடன் சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தவளைப் பார்த்தான் பிரசாத்.

அருகில் வந்து அமர்ந்தான்!

"லேகா! நான் இளஞ்செழியன் ஊர் விட்டுப் போவான்னு எதிர்பார்க்கவில்லை. நீ இவ்வளவு டீப்பா... ஃபீலிங்ல இருப்பேன்னும் நான் நினைக்கலை.. என் பிரண்டோட சிஸ்டர்.. கதையில.. இப்படியாச்சு. அதனால பயம்'' என்று கதையைச் சொன்னான். சொல்லி முடித்து விட்டு அவனும் குலுங்கி அழுதான்.

''நீயும் அவசரக் கோலம் அள்ளித் தெளிச்சு..ங்கற மாதிரி வாழ்க்கையைத் தொலைச்சுடுவியோ.. எங்களுக்கு நீ இல்லாமப் போயிடுவியோன்னு.. பயம்!'' என்றான்.

அவள் அவனை வெறுமையாகப் பார்த்தாள்.

''அதுக்காக...! என் வாழ்க்கையை இல்லாமப் பண்ணிட்டே!'' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. நிமிர்ந்து பார்த்துக் கொண்டான்.

''இப்ப.. என்ன ஆச்சு? நான் உனக்கு வீட்ல இருப்பேன். குத்துக் கல்லாட்டமா இருப்பேன்.. ஆனா.. நீ தான் எனக்கு இல்லாமப் போயிடுவே'' என்றாள்.

அதன் பொருள் அப்போது அவனுக்குப் புரியவில்லை. அதற்குப் பிறகு வந்த நாட்களில் தங்கை அவனிடம் நடந்து கொள்ளும் விதத்தில்தான் புரிந்து கொள்ளப் போகிறோம் என்று அப்போது அவனுக்குப் புரியவில்லை.



அவனைப் பற்றிய பேச்சுக் கிடையாது. அவனிடத்தில் இயல்பான சிரிப்புக் கிடையாது அதுதான் இருக்கப் போகிறது என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

அப்போது தங்கையிடம் கேட்டான்!

''சித்து..! இப்ப சரின்னு சொல்லு! செழியன் எங்க இருக்காருன்னு.. நான் கண்டுபிடிச்சுச் சொல்றேன்'' என்றான் பிரசாத்.

''வேண்டாம்'' என்றாள் அழுத்தமாக!

''ஏன்?!''

''வேண்டாம்... காரணம் உனக்குப் புரியாது'' என்றாள்.

அவனும் விட்டு விட்டான்.

இப்போது இரண்டு வலிய கரங்களின் அணைப்பில் இருந்து கொண்டு அதையெல்லாம் சொன்ன போது அந்த வலிய கரத்துக்குச் சொந்தக்காரன் இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

உணர்ச்சி நிறைந்த கரகரத்த குரலில் கேட்டான்,

''ஏண்டா! அப்படிச் சொன்னே?'' என்று.

அன்றைக்குத் தனது சகோதரனுக்கு சொன்ன பதிலையே இன்றைக்கு அவனுக்கும் சொன்னாள்.

அந்த உருவத்தின் முகம் இருண்டது!

அடுத்த கணம் பார்த்தாள்!

அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு கதறித் தீர்த்தாள்.

''கொட்டிடு.. எல்லாம்...! எல்லாத்தையும்...'' என்று அவன் தலையைத் தடவிக் கொடுத்தபடி மேலும் கேட்கத் தயாரானான்.

சித்ரலேகாவும் உள்ளுக்குள்ளேயிருந்த எல்லாக் கோபத்தையும் கேள்விகளையும், உடைப்பெடுத்தாற் போல் கொட்டினாள்.

## 26

''மேடம்! சி.எல்.கே...டிராவல்ஸ் இருக்கிற ஊழியர்களுக்காக ஒரு ஹவுசிங் காலனி கட்டப்போறாங்களாம்.. பெரிய ப்ராஜக்ட் மேடம்! அது மட்டும் முடிச்சுக் குடுத்தா.. பெரிய இன்ஸென்டிவ் கிடைக்கும். இன்ஸென்டிவை விடுங்க.. பெரிய அளவுல பேர் கிடைக்கும்'' என்று ஜி.எம். சொன்ன போது சித்ரலேகா கேட்டுக் கொண்டாள்.

யாருடைய கம்பெனி, என்றெல்லாம் கூட அவள் விசாரித்துக் கொள்ளவில்லை. பத்தோடு பதினொன்று. வழக்கம் போல சாமர்த்தியமாகப் பேச வேண்டும். கம்பெனிக்கு லாபகரமாக முடித்துக் கொடுக்க வேண்டும்.. மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது பிரிந்து. ஆனாலும் எப்போதும் இளஞ்செழியனைப் பற்றிய நினைவுகள் மனதுக்குள் புதைந்து கிடந்தது. நேரம் கிடைக்கும் போது தலைகாட்டும்.

''ஹேய்! உனக்கும் எனக்கும் பொறக்கற குழந்தைக்கு என்ன பேரு வைக்கலாம்?'' என்று கேட்டான் இளஞ்செழியன் அந்த ஒரு மாத வாழ்க்கையின் போது.

அன்றைக்கு அத்தையும், மாமாவும் எங்கோ பக்கத்தில் உறவுக்காரர்கள் வீட்டுக்குப் போயிருந்தார்கள். அந்தத் துணிவில் கூடத்தில் உள்ள தூணில் சாய்ந்து ஏதோ கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். மடியில் சாய்ந்து கொண்டான் இளஞ்செழியன்.

அவள் களுக்கென்று சிரித்தாள்.

''ஆணாப் பொறந்தா.. சுப்பணி, பொண்ணாப் பொறந்தா...'' என்று அவள் இழுக்கு முன்னே,

''உதைப்பேன்!''என்று சிரித்தான்!



''சரி.. நீங்களே சொல்லுங்க!'' என்றாள்.

''ஆணாப் பொறந்தா... இனியன் பொண்ணாப் பொறந்தா.. பூங்குழலி...!''

''ஐய்யோ! ரொம்ப நல்லாயிருக்குங்க...!'' என்று மகிழ்ந்து போனாள்.

''பூங்குழலி.. வெரி.. ஸ்வீட் நேம்...!'' என்றாள்.

''இத பார்றா.. தமிழ்ப் பேரை இங்கிலீஷ்ல பாராட்டறா'' என்று சிரித்தான் இளஞ்செழியன்.

''ஏன்? இந்தத் தமிழ்ப் பேரும், சமஸ்கிருதப் பேரும் இப்ப சேரலியா.. என்ன?''

''இல்லையே!''

''என்ன?!''

''ஆமா..! இப்பத்திக்கு.. தனியாத்தானே இருக்கோம்!''

''பகல் நேரத்துலயே அலையாதீங்க.. மிஸ்டர்'' என்று தலையைக் கலைக்க அவன் பதில் கொடுக்க...! என்று அந்த நினைவுகள் எல்லாம் அலையலையாய்ப் பொங்கும்!

முதல் ஆறு மாதங்களைக் கடப்பதற்குள் பெரும்பாடு பட்டுப் போனாள்!

அத்தனை வருத்தத்தையும் பிரசாத்திடம் மௌனக் கோபமாகக் காட்டியிருந்தாள்.

ஒரு கல்யாண ஆல்பத்தில் பார்த்த ஒரு குழந்தையின் போட்டோ... அவள் கிட்டத்தட்ட கற்பனை செய்து வைத்திருந்த உருவம் போலவே இருந்ததால்.. அந்தப் போட்டோவை வாங்கி வைத்துக் கொண்டாள்.

அந்தப் படத்திற்கும் பின்னே ''பூங்குழலி இளஞ்செழியன்'' என்று எழுதி வைத்துக் கொண்டாள்.

ஒரு நாள் இரவு அந்த போட்டோவை மார்போடு அணைத்துக் கொண்டே உறங்கி விட்டாள்.

அறையில் விளக்கெரியவே எட்டிப் பார்த்த பிரசாத் வந்து அந்த போட்டோவை எடுத்து வைக்கப் போனவன் அதன் பின்னால் எழுதியிருந்த பெயரைப் பார்த்து விட்டு மனதளவில் மிகவும் வருத்தப்பட்டுப் போனான்.

தன் சகோதரி.. இளஞ்செழியனுடன் மனதளவில் வாழ்கிறாள் என்று புரிந்தது. அவள் வாழ்க்கையை நேராக்குவதாக நினைத்துக் கொண்டு முற்றிலும் கோணலாக்கிவிட்டோம் என்று புரிந்தது. கிட்டத்தட்ட எட்டாண்டுகள் ஓடின.

அந்த சமயத்தில்தான் ஈரோட்டுக்கு மாற்றலாகிக் கிளம்பினாள். ஈரோட்டுக்கு வந்தற்குப் பிறகு முதன் முதலாகப் பெரிய டீலிங்.. என்பதால் அவளும் டிரிம்மாக உடை உடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

காரில் போகும்போதுதான் ''இளஞ்செழியன்'' என்று பெயர் அடிபட்டது.

'ஒரு வேளை.. அந்த இளஞ்செழியனாக இருக்குமா.. இருக்காது...! நூறு பஸ் ஓடுதாமே! டாக்ஸி சர்வீஸ்...! பெரிய மெக்கானிகல் ஷெட்...! என்று என்னென்னவோ சொல்றாங்க... இல்லை அந்த இளஞ்செழியனாக இருக்காது!' என்று நம்பிக்கை கொண்டு வந்தவளுக்கு.. இளஞ்செழியனைப் பார்த்தவுடன் அதிர்ச்சி.

அதிலும் இப்போது அவன் இருக்கிற நிலை! அழகான மெல்லிய கோடுகள் போட்ட முழுக்கை சட்டை! டை...! அரும்பு மீசை... என்று அசத்தலாக அவன் நின்ற போது அவள் திகைத்துப் போனாள்!

அதே திகைப்பு அவன் கண்களிலும் தெரிந்தது! உடனே இளஞ்செழியன் சமாளித்துக் கொள்வதை உணர்ந்தாள். அவளும் அதே நாடகத்திற்குத் தயாரானாள்.

அந்தக் கணத்தில் ஓடிப் போய் அவன் மார்பில் சாய்ந்துக் கொண்டு கதற வேண்டும் என்று மனது பரிதவித்தது!



ஆனால்! இப்போதும்... அவன் அதே இளஞ்செழியனாக இருக்கிறானா...! ஒரு வேளை திருமணமாகி இருந்தால்...!

கட்டுப்படுத்திக் கொண்டாள்!

கடந்த நான்கைந்து ஆண்டுகளாக அலுவலகத்தில் பலவிதமான ஆட்களோடு பழகி இருந்ததால் உடனே நிதானமடைந்து கொள்ள முடிந்தது!

அடிவயிற்றிலிருந்து உணர்வுகள் கிளர்ந்தெழுந்தன. நிலை குத்தி நின்ற பார்வையை மெல்லத் திருப்பிக் கொண்டாள்.

கம்பெனி மேனேஜர் அறிமுகப் படுத்தியவுடனே அவன் புதிதாகப் பார்ப்பது போல் வணக்கம் சொன்னான்.

திரைப்படங்களில்தான் அந்த மாதிரி ஒரு காட்சியைப் பார்த்திருக்கிறாள். இப்போது நேரில் அதை எப்படி சமாளிப்பது என்பது அவளுக்கு புரியவில்லை.

பட்ட மேற்படிப்பு சட்டப்படிப்பு எதுவுமே அவள் கண்களில் நீர் திரளுவதைத் தடுக்கவில்லை. எப்படியோ சமாளித்தாள்.

வணக்கம் சொன்னான். ஆனால், பேச்சுவார்த்தை ஆரம்பித்தவுடனே எல்லாம் மறந்து போயிற்று.

தொழில் தொடர்பான விஷயங்கள் அவள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டன.

அன்றைக்கெல்லாம் சொந்தத் தனிப்பட்ட விவரங்களைப் பேசக் கூடுமோ என்ற அச்சத்தில் இருந்தாள்.

பிரசாத் அந்தக் காலகட்டத்தில் திருமணப் பத்திரிகை வந்தது நிஜம்தான் என்பது போலவே சொல்லியிருந்தான் என்றாலும், பின்னால் அது தன்னுடைய வேலைதான் என்பது ஒத்துக் கொண்ட போதும் அவளுக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

இவ்வளவு வசதியும், ஆளுமையும் உள்ள ஒரு இளைஞனை உலகம் விட்டு வைக்குமா என்ற கவலை இருந்தது.

திருமணமாகியிருக்கும் என்றே நினைத்தாள். அதனால் தானாகப் பேச வேண்டாம் என்று முடிவெடுத்தாள்.

காத்திருந்தாள்!

அன்றைக்குப் பேசவில்லை!

மறுநாள்!

திடீரென்று ஹரிபிரகாஷ் நல்லாயிருக்காரா என்று கேட்டவுடனேதான் அவளுக்கும் புரிந்தது... அவனும் தனக்குத் திருமணமாகி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று.

சரளமாகச் சொன்னாள்.

''நல்லாயிருக்காரு!'' குழந்தை பற்றிக் கேட்டபோது அவள் கொஞ்சம் கடுப்பானாள். வேண்டுமென்றே பூங்குழலி என்று சொன்னாள்.

அப்போதிருந்து அந்தப் போராட்டம் ஆரம்பித்தது. அவளை வார்த்தைகளால் அவன் தாக்க முயல்வதும், அவன் உள்ளூர ஒரு சிரிப்போடும் எரிச்சலோடும் தாங்கிக் கொள்வதும் என்று. ஆனால் கடைசியாக அவள் டைவர்ஸ் பண்ணி விட்டுவா, என்றவுடன்தான் அவளுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

இல்லாத கணவனை எங்கே போய் டைவர்ஸ் செய்வது?

கடந்து போன அந்தப் பத்து நாட்களுக்குள் பிரசாத் வந்து இளஞ்செழியனைப் பார்க்க முயன்றதும் இளஞ்செழியன் அவனை அவமானப் படுத்தியதும் அவளுக்கு அரசல் புரசலாகத் தெரிந்திருந்தது.



வேலுவிடம் ஒரு நட்பு ஏற்பட்டிருந்தது! இடைப்பட்ட நேரங்களில் வேலுவுடன் நின்று பேசும் போது கேட்டாள்.

''சார் வைய்ப் என்ன படிச்சிருக்காங்க?'' என்று.

அப்போது வேலு சொன்னான் யதார்த்தமாக.

''வைய்ஃபா! சார் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலே'' என்றான்.

''ஓ!'' என்றாள்.

''அதையேன் கேக்கறீங்க மேடம்! சாரோட அம்மாவும், அப்பாவும் அவரை எப்படியாவது கல்யாணம் பண்ணிக்க வைக்கணும்னு முயற்சி பண்றாங்க.. முடியவே மாட்டேங்குது'' என்றான் வேலு.

எல்லையற்ற நிம்மதியை உணர்ந்தாள் சித்ரலேகா. சரி இந்த மட்டும் தெரிந்து விட்டதே. இனிமேல் எப்படியாவது மீண்டும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்று எண்ணினாள்.ஆனால், இளஞ்செழியன் வார்த்தைகளால் குத்திக் குத்தி பேசவும் அவளுக்குள்ளும் கோபம் எழுந்தது போலும்.

மேலும் மேலும் அவளைக் கோபப் படுத்துகிற மாதிரியே பொய்கள் சொல்லிக் கொண்டு போக ஆரம்பித்தான். ஆனால் பிரசாத் வந்து சந்திப்பான் என்பது அவள் எதிர்பாராதது.

பிரசாத்தை அவன் அவமானப் படுத்தி அனுப்பி விட்டான் என்று கேள்விப்பட்டாலும் அவளுக்கு நேரடியாக மோதல் செய்வதற்குப் பயம் ஏற்பட்டது. அதற்குத் தகுந்தாற்போல் இளஞ்செழியன் குத்தலாகவே பேச ஆரம்பிக்கவும் அவளுக்கு பயம் ஏற்பட்டது.

''டைவர்ஸ் பண்ணி விடு'' என்று சொன்ன போது ஒரு புறம் அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் இன்றைக்கு கல்நெஞ்சனாக மாறிப் போனானே என்று கவலையாகவும் மாறியது.

யோசித்து யோசித்துத்தான் அந்த ராஜினாமா முடிவைச் செய்தாள். ஒரேயடியாக ஏதாவது செய்வோம் என்ற முடிவுக்கு நேர்மாறாக விஷயங்கள் நடந்து போயின.

இளஞ்செழியனுக்கு ஆக்ஸிடென்ட் ஆகி விட்டது என்ற கட்டத்தில்தான் தந்தையிடம் மனம் விட்டுப் பேசினாள்.

''அம்மா! ரெண்டு பேரும் தேவையில்லாம வருத்திக் கறீங்களோன்னு கவலையா இருக்கும்மா! ஏம்மா, நேரடியாப் பேசக் கூடாது!'' என்றார்.

''அப்பா! எனக்கே புரியலை. சட்டென்று முடியக் கூடிய விஷயத்தை எதுக்கு இப்படி இழுத்துக்கறோம்னு எனக்கே தெரியலை. ஆனா, ஒரு விஷயம் புரியுது. அவரு ரொம்பக் கோபமா இருக்காரு. சூழ்நிலையில பிரச்சனை வராம இருக்கறதுக்குத்தான் நான் எனக்கும் கல்யாணம் பண்ணியிருக்குன்னு பொய் சொன்னேன். அதனால் டீசன்ஸிக்காக பேசாம இருக்காரு. ஆரம்பக் கட்டக் கோபம் தணிந்தற்குப் பிறகு மனசு விட்டுப் பேசலாம்னு இருக்கேன்'' என்றாள்.

''அம்மா, இப்பச் சொல்றியே! ராஜினாமா முடிவுக்கு முன்னாடி இந்த விஷயத்தைச் சொல்லியிருந்தா வேற விதமா ஹேன்டில் பண்ணியிருக்கலாம்மா. இப்ப ராஜினாமா பண்ணினதைக் கேள்விப்பட்டு ஒரேயடியாத் தப்பிச்சு ஓடப் பாக்கறீங்களோன்னு முடிவு பண்ணிட்டாரோ என்னமோ?'' என்றாள்.

முகத்தில் ஆழ்ந்த சிந்தனை ஓடியது. பிறகு சொன்னார். ''அம்மா! தப்போ ரைட்டோ... நடந்தது நடந்து போச்சு. இந்த நேரம்.. நீ அவரோட இருக்க வேண்டிய நேரம் போய்க் கூட இரு...'' என்றார்.

''அப்பா!'' என்று ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''ஆமம்மா! உன் வாழ்க்கையில பிரசாத் ரொம்ப விளையாடிப் போட்டானோன்னு எனக்கு ஒரு எண்ணம்.



அதுக்கு நானும் இடம் குடுத்திருக்கக் கூடாது. ஒரு அப்பாவா நானும் உன் மேல நம்பிக்கை வச்சிருக்கணும். நம்பிக்கை வைக்காததாலேயே உனக்கு வெளியில நாட்டம் விழுந்தது. அதிலயும் இளஞ்செழியன் மாதிரி ஒரு பொறுப்பான பையனைப் பார்த்ததும் உனக்கு நாட்டம் விழுந்துருச்சு. அந்தக் கட்டத்திலாவது நான் நேரடியா உள்ளே நுழைஞ்சிருக்கணும். அதனால.. நான் இப்ப உள்ளே நுழையறேன். எதைப் பத்தியும் கவலைப்படாதே! நல்ல வேளை அவருக்கும் கல்யாணம் ஆகலே.. உனக்கும் ஆகலே! நீ உதவிக்குப் போற மாதிரிப் போ! சமயம் வரும்போது நடந்து போன விஷயங்களைச் சொல்லு...!'' என்றார்.

அந்தத் துணிவில்தான் அவள் இளஞ்செழியனை சந்திக்க வந்தாள்.

அவனுக்கு உதவி செய்வதற்காக அவனைத் தொடும் போதும். அவன் களைத்துப் போய்ப் படுத்துக் கொண்டிருக்கும்போதோ.. அமர்ந்து கொண்டிருக்கும்போதோ அவனை அறியாமல் கவனித்துப் பார்ப்பாள்.

ஆழத்தில் இருந்து சோகம் கிளம்பும். ஆனால் அவனுக்கு நேர்ந்த விபத்துக்கும் அதனால் ஏற்பட்ட விளைவுகளில் இருந்து அவன் மீளுவதற்குமாக அவள் காத்திருந்தாள்.

கடைசியில் அவன் அப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

* * *

''வேலு! நான் பிரசாத்.. சிஸ்டர் இன்னும் வந்து சேரலே!''

''சார்! எது எப்படின்னாலும் சரி.. எங்க சார் ரொம்ப டீசன்டானவரு!''

''உங்க சாரோட டீசன்ஸியைக் கொண்டு போய் உடைப் பில் போடு...! அக்கம் பக்கத்துல என்ன பேசுவாங்க?''

''சார்...! உங்கப்பாகிட்டே சொல்லி சித்ரலேகா மேடம் கிட்டே பேசச் சொல்லுங்க!''

''நீ வேற எங்கப்பா. இப்பப் பழைய மாதிரி இல்லப்பா! நான் சொல்ற எதையும் காது குடுத்துக் கேக்கறதில்லே! அவ ஒண்ணும் குழந்தையில்லே! அவ வாழ்க்கையை என்ன செய்யறதுன்னு அவளுக்குத் தெரியும் அப்படீங் கறாரு! ரொம்பப் பேசினா போதும் போதும். நீ அவ வாழ்க் கையில விளையாடினதே போதும் அப்படீன்னு கடிக்கறாரு!''

''சரியாத்தான் சொல்றாரு! இன்னும் விளையாடறதை நிறுத்த மாட்டேங்கறீங்களே!''

''நேரம்தாம்ப்பா! உன்னைப் போய் இந்தத் திட்டத்துல சேத்துகிட்டேன் பாரு! என்னைப் போடணும்''

''சார்! எங்க சாரைப் பொறுத்தவரை ஏதோ ஒரு முடி வுக்கு வந்துட்டாரு! ஏதோ நடக்கப் போகுது! அதுக்காகத் தான் என்னை ஓரங்கட்டி அனுப்பிச்சிருக்காரு...!'' என்றான்.

''ஆமப்பா! உங்க ஆளு பழைய இளஞ்செழியனா இருந்தா.. நானே ஊதித் தள்ளிருவேன். இப்ப எனக்கே கொஞ்சம் நடுக்கமாகுது...'' என்றான்.

''வேற வழியில்லே! சார்! காத்திருக்கத்தான் வேணும்...'' என்றான் வேலு.

பிரசாத் பெருமூச்சு விட்டு விட்டு போனை ஆஃப் செய் தான். பிரசாத் ஒரு புறம் தவிப்புடன் காத்திருந்தான். சித்ர லேகாவின் பெற்றோர்கள் ஒரு புறம் காத்துக் கொண்டிருந் தார்கள்.

சித்ரலேகாவிடம் இருந்து போன் வரும் வரும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். போனும் வரவில்லை. சித்ரலேகாவிடம் தொடர்பும் கொள்ள முடியவில்லை.

* * *



# 27

நாகரீகத்தின் உருவமாகத் தெரிந்த இளஞ்செழியனிடம் அன்று ஏதோ மாற்றம் தெரிந்தது!

கெஸ்ட் ஹவுஸில் வைத்து வேலை செய்ய லாம் என்று சொன்னார்கள் அன்று!

ஏழு மணிக்கு சிற்றுண்டி மாதிரி ஏதோ வந்தது. அந்த சமயத்தில் அறைக்கு உள்ளே சென்று இளஞ்செழியன் ''காஷூவல்'' என்பார்களே அது போல வீட்டில் அணியும் டீ ஷர்ட்டும் லுங்கியுமாக வந்து அமர்ந்தவுடனே சித்ரலேகாவுக்கு வயிற்றுக்குள்ளே ஏதோ செய்கிற மாதிரி இருந்தது.

அது மட்டுமல்லாமல் அவன் அப்படி வந்து சோபா வில் அமர்ந்தபோது சாவதானமாக இரண்டு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்து விட்டு அமர்ந்தான்.

பார்வை ஒரு விதமாக அவள் மேல் படிந்து மீண்டது.

அந்தப் பார்வையைக் கண்டு மறுபடியும் துணுக்குற் றாள் சித்ரலேகா! நெஞ்சுக்குள்ளே ஏதோ செய்கிறாற் போல் இருந்தது. பட்டாம் பூச்சிகள் பறந்தன.

தனது பழைய புன்னகையை அவன் மெல்லப் பரவவிட்டான்.

சித்ரலேகா அவசரமாகப் பார்வையைத் தாழ்த்தி கொண் டாள்.

''ம்..!'' என்று இழுத்தான்.

''சாப்பிடலாமா?''என்றான்.

முந்திரி பக்கோடா, மைசூர்பாகு என்று ஏதோவந்தது.

''எதுக்கு இப்படி ஸ்வீட் காரமெல்லாம் அமர்க்களப் படுத்தறீங்க...?'' என்றாள்.

''என்னை.. நம்பி என் கெஸ்ட் ஹவுஸுக்குத் தனியா வந்திருக்கயே...? அதைக் கொண்டாடறதுக்கு...!''

ஊடுருவினாற்போல் அவன் பார்க்கிற பார்வையை அவளால் சந்திக்க முடியவில்லை.

மீண்டும் ''சாப்பிடு...!'' என்பது போல் சைகை காட்டினான். இருவரும் பக்கோடாவை நாகரீகமாக மெல்கிற அந்த மென்மையான சத்தத்தைத் தவிர அங்கே அசாதாரணமான அமைதி நிலவியது.

தலை நிமிராமல் சாப்பிட்ட சித்ரலேகாவுக்குப் புரிந்தது. அவன் தன்னைப் பார்வையாலேயே விழுங்கிக் கொண்டிருக்கிறான் என்று.

கைகள் லேசாக நடுங்கின!

டிபன் முடிந்தவுடன் சூடான அருமையான காபி வந்தது.

என்ன நினைத்தானோ என்னவோ அவன் காபிக் கப்பைக் கையிலெடுத்துக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்தபடி அமைதியாக ரசித்துக் குடித்தான்.

சித்ரலேகா மெல்ல அவன் முதுகுப்புறத்துப் பக்கம் நிமிர்ந்து பார்த்தாள். பிறகு திடீரென்று திரும்பி விடுவானோ என்று பயந்தவள் போல் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

அவளும் மெல்லக் காபியைப் பருகினாள்.

திரும்ப வந்து அந்த பெரிய டேபிளுக்கு எதிர்ப்புறத்தில் அமர்ந்து கொண்டான்.

சித்ரலேகாவும் எழுந்து எதிரில் போய் அமர்ந்தாள். சற்று நேரம் வேலையில் ஆழ்ந்தார்கள். அந்த நேரம் எந்த விதமான வித்தியாசமும் காட்டாமல் அமர்ந்து கொண்டான்.



மேலும் அரை மணி நேரம் ஓடியது!

''லேகா! இந்த டோட்டல் டேலியாக மாட்டேங்குது.. பாரேன்...'' என்று நீட்டினான்.

''கம்ப்யூட்டர்ல ஃபீட் பண்ணிரலாமா?''

''இல்ல...! முதல்ல பைனான்ஷியல் அட்வைஸர் பார்த்து சரியா இருக்கான்னு சொல்லுங்க'' என்றான் கிண்டலாக.

சித்ரலேகா குனிந்து தீவிரமாகச் சரிபார்த்துக் கொண்டிருக்கையில் அவன் பார்வை அவள் மேல் அழுத்தமாகப் படிந்தது...!

தற்செயலாக நிமிர்ந்து பார்த்தவள் அந்தப் பார்வையால் கவரப்பட்டவளாய் அமர்ந்து விட்டாள்!

''லேகா!'' என்றான் கரகரத்த குரலில்.

குறும்பாகச் சிரித்தான்.

''ஏன்.. லேகா! யாரு லேகா... அந்த ஏமாளி.. ஹரிபிரகாஷ்.. தேவையே இல்லாம.. நம்ம வாயில விழுந்து அரைபடறான்?!'' என்றான்.

அவள் திகைத்துப் போனவளாய் அமர்ந்திருந்தாள்!

எழுந்து இந்தப் புறமாய் வந்தான்!

அவள் அருகில் அமர்ந்தான். சற்று நெருக்கமாகவே! ''ம்.. சொல்லு!'' என்றான்.

இன்னும் ஒரு இன்ச் நெருங்கினால் கூட முகத்தில் முகம் படும் என்ற நிலைமையில் இருந்தான்.

''செழியன்!'' என்றாள் குரலே எழும்பாத ஒரு குரலில்.

''ம்...! இல்லாத ஒரு ஹஸ்பென்டையும், குழந்தையையும் ஒரு கிரிப்பா வச்சுகிட்டு.. எத்தனை நாளைக்கு.. எனக்கெதிரா.. போராடுவே!'' என்றான்.

மறுபடியும் சித்ரலேகா பேச வாயெழாமல் பார்த்தாள்!

"செழியன்!" என்றாள்.

இளஞ்செழியன் அவளது வலது புறத்தில் அமர்ந்திருந்தவனின் இடது கை அவளை வளைத்தது.

"போதும்டா! இந்த விளையாட்டை இதோட நிறுத்திக்குவோம்...! வேற விளையாட்டை இனிமே ஆரம்பிக்கலாம்...!" என்றான்.

அவள் சட்டென்று எழுந்தாள்! அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

'வேண்டாம்! இந்த அழைப்பிலிருந்து தப்பிக்கவே நினைக்காதே! வாழ்க்கை முழுதும் இந்த அணைப்பு மட்டுமே இருந்தால் போதாதா?' என்று ஏக்கக் குரல் எழும்பியது. ஆனால், வெட்கம் தடுத்தது.

உடனடியாக அவள் எழுந்திருக்கவில்லை. அவள் அவஸ்தை புரிந்தவன் போல் பார்த்தான்.

"செழியன்! ப்ளீஸ்! நான் போகணும்...!" என்றாள்.

இளஞ்செழியன் சாவதானமாக எழுந்தான். அந்த கெஸ்ட் ஹவுஸின் கதவை இழுத்துச் சாத்தினான். பூட்டி விட்டு சாவியைத் தன் இழுப்பறையில் போட்டான்.

"போகலாம்!" என்றான்.

சித்ரலேகா அழுகையும், கலவரமுமாக அவனைப் பார்த்தாள்!

"போலாம் வா! லேகா! போ! என் வாழ்க்கையிலிருந்து ஒட்டு மொத்தமா விலகிப் போகிறதா இருந்தா.. டேபிள் டிராயரைத் திறந்து சாவியை எடுத்துகிட்டுப் போலாம்...!" என்றான்.

இரு கைகளையும் அகல விரித்தான்.



சித்ரலேகா தயக்கமும், மயக்கமுமாக நின்றாள்! பிறகு மெல்லக் காலடி எடுத்து வைத்தாள்.

அடுத்த கணம்!

இளஞ்செழியனின் அணைப்பில் இருந்தாள்! இறுக்கமான அணைப்பில்!

இளஞ்செழியன் சேர்த்து வைத்திருந்த தாபத்தையெல்லாம் கொட்டியவன் போல் முகம் நோக்கிக் குனிந்தான். தனது அன்பு மலர்ச் சரத்தைத் தொடுத்து அவளுக்கு மாலையாக அணிவித்தான்!

சித்ரலேகாவும் கண்களில் கண்ணீர் மல்க.... பதில் கொடுத்தாள்!

கிட்டத்தட்ட ஐந்து நிமிடங்களுக்கு மேல் அணைப்பில் வைத்திருந்த பின் மெல்ல நிமிர்ந்து சிரித்தான்!

"சே! உப்புக் கரிக்குதுடா! முதல்ல அழுது முடி! அப்புறம்...!" என்று சிரித்தான்!

அவளும் சிரித்தாள்! ஆனால் வெகு நேரம்... அவன் மார்பில் சாய்ந்து கொண்டு அழுது தீர்த்தாள்.

"எப்படி.. எப்படி.. பிரிஞ்சு இருந்தீங்க...?" என்று கோபமும், தாபமுமாக அவன் மார்பில் இரு கைகளாலும் குத்தினாள்!

இளஞ்செழியனை அந்தக் குத்துக்கள் இம்மியளவும் அசைக்கவில்லை என்ற போதும் அவன் அதே தாபப் பார்வையில் அந்தக் குத்துக்களை வாங்கிக் கொண்டான். மகிழ்ச்சியாகச் சிரித்தான்.

"நானும் கேட்கலாமில்லே அந்தக் கேள்வியை?" என்றான்.

செல்லமாக அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான். அவளும் ஒரு விதமாக முகத்தை வைத்துக் கொண்டு "ஆமா" என்றாள்.

''பாவி! நான் அப்பவே விஷயம் சொல்லாம...?'' என்று புலம்பிக் கொண்டாள்.

''சரி.. விடு..! எல்லாம் நல்லதுக்குத்தான்...! என்றான்.

''செழியன்!'' என்று மறுபடியும் மார்பில் சாய்ந்து கொண்டான்.

மறுபடியும் கரைந்தார்கள்!

சற்றே எல்லை மீறுகிற சமயம் அவள் விலகினாள். ''லேகா...! இனிமே எப்பவும் என் கூட இருக்கப் போறேங்கறதே.. போதும்...! எனக்கு என்னவோ இறக்கை கட்டிட்டுப் பறக்கற மாதரி.. இருக்கு! ஆனாலும்.. எனக்குன்னு சில கடமைகள் இருக்கு!'' என்றான். ஆனால் தனது அணைப்பில் இருந்து அவளை விலக்கவில்லை.

இடது கை அணைப்பில் வைத்துக் கொண்டு டெலிபோன் ஸ்டேண்டுக்கருகில் போனான்.

அவன் சுழற்றுகிற எண்ணைப் பார்த்து அவள் பயந்து போனாள்!

தங்களது வீட்டுக்கு போன் செய்கிறான் என்று புரிய வியப்பாய்ப் பார்த்தாள்!

அந்தப்புறம் அப்பா லைனில் வருவது தெரிந்தது!

''அப்பா! அப்பா...'' என்று அவள் பதற அவன் அவள் உதடுகளில் தனது இடது கை ஆட்காட்டி விரலை வைத்து அமைதிப்படுத்தினான்.

''வணக்கம்! நான் இளஞ்செழியன் பேசறேன்!''

''வணக்கம்.. மாப்ளே! சொல்லுங்க...'' என்று அந்தப் பக்கம் குரல் கேட்கவும் சித்ரலேகா திகைத்துப் போனாள்.

''அங்கிள்! இப்ப சித்ரலேகா.. என் வைஃப்.. என் கூட இருக்காப்ல! இப்படியே வீட்டுக்குக் கூட்டிட்டுப் போலாம்னு பாக்கறேன்'' என்றான்.



அந்தப் பக்கம் ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. பிறகு அப்பா பேசினார்.

''மாப்ளே! உங்க மனசு புரியுது சட்டப்படியும், உறவுப்படியும் அவ உங்க வைஃப்தான். ஆனா, இன்னைக்கு எவ்வளவு நேரம் வேண்ணாலும் பேசிட்டு அனுப்பி வைங்க...! நாளைக்கு.. வந்து கூட்டிட்டுப் போங்க...!'' என்றார்.

''ஓ.கே...! நோ பிராப்ளம்...!'' என்றான்.

''வைக்கட்டுமா?'' என்னும் முன்பு தந்தை குறுக்கிட்டார்.

''மாப்பிளே! ரொம்ப சந்தோஷம்... வயித்துல பாலை வார்த்தீங்க...!'' என்றார்.

''நல்லது.. மாமா!'' என்றான். புன்னகையுடன் போனை வைத்தார்.

பேந்தப் பேந்த விழிக்கிற மனைவியைப் பார்த்து பளிச்சென்று சிரித்தான்.

''என்னடி...பாக்கறே! அறிவுக் களஞ்சியம் நான் பழைய இளஞ்செழியன் இல்லே! பயந்துகிட்டு ஒதுங்கிக்கறதுக்கு! இனிப்பார்! எப்படி எல்லாம் முறைப்படி.. நடக்கும்!'' என்றான். ஆனால் சட்டென்று இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு தனது அறைக்குப் போனான்.

''இது.. மட்டும்.. முறையல்லாம.. நடக்கலாமா?'' என்று அவள் முணுமுணுக்க...

''மக்கு! உங்கப்பா.. பர்மிஷன் குடுத்தாரே... புரியலையா?'' என்றான்.

''எங்கப்பாவா...? பர்மிஷனா..?''

''ஆமா! எவ்வளவு நேரம் வேண்ணாலும் பேசிட்டு... வாங்க..ன்னாரே...'' என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

''நாம பேசிகிட்டா இருப்போம்? இங்க என்ன நடக்கும்ன்னு அவருக்குத் தெரியாதா?'' என்றவன் மேற்கொண்டு அவளைப் பேச விடவில்லை.

* * *

புத்தம் புதிய சுடிதாரில் ஜொலிக்கிற மனைவியை ஆசையாகப் பார்த்தான்!

''எல்லாம் பிளான் பண்ணித் தயாரா இருந்திருக்கீங்க!'' என்றாள் தலையை வாரியபடி.

''ஆமா! ஒரு தடவை திட்டம் போடத் தெரியாமப் போட்டு இளிச்சவாய்த்தனமா.. இருந்தது பத்தாதா?'' எட்டு வருஷம்.. ஆச்சே! எட்டு வருஷம்.. இழப்பு...!'' என்றான்.

அவள் அன்புடன் சிரித்தாள்.

கடிகாரத்தைப் பார்த்தான்!

மணி பதினொன்று ஆகி இருந்தது!

''லேகா! போலாம். உங்க வீட்லயும், எங்கவீட்லயும் எதிர்பார்த்துகிட்டிருப்பாங்க'' என்றான்.

புறப்பட்டார்கள்!

பல நாட்களுக்குப் பின்னர் சந்தித்த வேகம் இருந்த போதும் இளஞ்செழியன் மென்மையாகவே அவளிடம் நடந்து கொண்டான்!

சித்ரலேகாவும் கரைந்து போனவளாய் இடம் கொடுத்தாள்.

சற்று நேரம் ஆழ்ந்த அமைதியில் இருந்தார்கள். காலை நீட்டி அவன் அமர்ந்திருக்க.. அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

''லேகா...!''



''ம்...!''

''அந்த பீரோவுல.. சுடிதார்ஸ் இருக்கு..'' என்றான். அவன் தனது பழைய வழக்கம் எதையும் மறக்கவில்லை என்பது புரிந்தது.

அப்போதெல்லாம் அதிகாலையில் எழுந்து குளிப்பாள்.

சித்ரலேகா குளித்து தயாராவதற்குப்பின் அவனும் குளித்துத் தயாரானான்!

''போகலாமா?'' என்றான்.

காரில் புறப்பட்டார்கள்!

சித்ரலேகாவின் வீடு சேரும்போது மேலும் பத்து நிமிடம் ஆகியிருந்தது.

கார் அவர்கள் வீட்டை நெருங்க நெருங்க.. ''லேகா... நான் வாசல்லயே நிறுத்திக்கறேன்! நாளைக்கு வர்றேன்!'' என்றான். ஆனால் போர்டிகோவில் லைட் எரிந்து கொண்டிருந்தது.

''அம்மா...! மாப்பிள்ளையும் உள்ள வந்துட்டுப் போகட்டும்'' என்று செல்போனில் அழைத்து அப்பா கேட்டுக் கொண்டார்.

சற்றே சிவந்த முகத்துடனும், தயக்கத்துடனும் அவன் காரை நிறுத்தி இறங்க அப்பாவும், அம்மாவும் சிட் அவுட்டில் இருந்த சேர்களில் காத்திருந்தவர்கள் எழுந்து கைகூப்பி வரவேற்றார்கள்.

லேசாகச் சிவந்த முகத்துடனும், லேசான தயக்கத்துடனும் அவனும் இறங்கி வணக்கம் சொன்னான்.

போர்ட்டிகோவிலிருந்து சிட் அவுட்டுக்கு செல்வதற்காக இருந்த அந்த இரண்டு மூன்று படிகளில் ஏறுகிற

தருணத்தில் பரபரப்பாக உள்ளேயிருந்து பிரசாத் வந்தான்.

சித்ரலேகா ஒரு கணம் துணுக்குற்றாள்! இவன் ஏதாவது ரசாபாசமாகப் பேசுவானோ என்று.

கலக்கமாகக் கணவனின் முகம் பார்த்தாள்! ஆனால், பிரசாத் சட்டென்று வந்தவன் இளஞ்செழியனின் இரு கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''வெல்கம் மாப்பிள்ளை! விஷ் யூ எ வெரி பீஸ்ஃபுல் அன்ட் வெரி ஹாப்பி லைஃப்'' என்று விடாமல் குலுக்கினான்.

கலகலவென்று சிரித்தான்!

''தேங்க்யூ... மச்சான்!'' என்று இளஞ்செழியனும் கலகலவென்று சிரித்தான்!

சித்ரலேகா வாயைப் பிளந்தாற்போல் பார்க்க இருவரும் அவளைப் பார்த்து விட்டு மறுபடியும் சிரித்தார்கள்.

அதற்குள்ளாக,

பெற்றோர்கள் இருவரிடமும் நெருங்கவே கையை விடுத்துக் கொண்டவன் சித்ரலேகாவைத் திரும்பிப் பார்க்க இருவரும் சட்டென்று காலில் விழுந்து வணங்கினார்கள்.

அம்மா மகளைத் தழுவிக் கொண்டு மௌனக் கண்ணீர் வடிக்க.. அப்பாவும் மருமகனைத் தழுவிக் கொண்டு கண்கலங்க நின்றார்.

பேச்சும் விஷயப் பரிமாறலுமாகச் சற்று நேரம் கழிந்து அவர்களின் அன்பான உபசரிப்பை ஏற்றுக் கொண்டு விடைபெற்றுக் கொண்டு இருந்தவனை,

''என் ரூமுக்கு வந்துட்டுப் போங்க!'' என்று முணுமுணுப்பாக அழைத்தாள் சித்ரலேகா!



போனார்கள்!

சித்ரலேகாவின் மேஜை மேல் இருந்த பூங்குழலியின் கற்பனை போட்டோவை எடுத்து அழுந்த முத்தமிட்டவன் அப்படியே மனைவிக்கும் அதை ரிலே செய்தான்!

''ஒரே வருஷம்...! இப்படி ஒரு பூங்குழலியோ.. இனியனோ.. முடிந்தா.. ரெண்டுக்கும்மா வழி பண்ணனும்'' என்றான்.

மீண்டும் ஒருமுறை.

''நாளைக்கு.. ''ம்...!'' என்றான்.

''செழியன்!'' என்றாள்.

''என்னம்மா?''

''அதென்ன! பிரசாத் வந்து கலாட்டா செய்வான்னு பார்த்தேன். ரெண்டு பேரும் கையைக் குலுக்கிட்டுச் சிரிக்கறீங்க!'' என்றாள் கொஞ்சம் புகார் சொல்லும் விதமாக.

அவன் சிரித்தான்!

''அது சஸ்பென்ஸ்... நாளைக்கு.. ம்!''

அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை மறுநாள் அவர்கள் எதிர்பாராததெல்லாம் நடக்கப் போகிறது என்று!

## 28



''சார்! குட்மார்னிங்!'' என்ற வேலுவின் உற்சாகக் குரல் கேட்டு புன்னகைத்தான் இளஞ்செழியன்.

''குட்மார்னிங்.. சொல்லுப்பா!''

''சார்! இப்ப வேற உலகத்துல.. இருக்கீங்க.. சாரி.. டிஸ்டர்ப் பண்றேன்'' என்றான் வேலு.

இளஞ்செழியன் சிரித்துக் கொண்டான்.

''விஷயத்துக்கு.. வா!''

''சார்! நீங்க காலைல நேரமே ஆபீஸ்க்கு வந்தீங்கன்னா.. ஒரு ஒன் அவர் இருந்துட்டு பத்து மணிக்கு.. மேடம் வீட்டுக்குப் போயிரலாமாம். உங்களைக் கூட்டிட்டு வர வேண்டியது உன் பொறுப்புன்னு உங்க அம்மாவும், அப்பாவும் எனக்கு ஆர்டர் போட்டிருக்காங்க...'' என்றான்.

''ஓ!''

''சார்! ஐ ம் வெரி ஹாப்பி! இப்ப உங்க முகம் பாக்கணும் போல இருக்கு. லேசா சிவந்திருக்குமோ...?'' என்றான் அந்தப்புறம்.

நிஜமாகவே இளஞ்செழியனின் முகம் சிவந்து போனது.

''ஹேய் ஓட்டாதப்பா... நீ!'' என்று வெட்கத்துடன் சிரித்தான்.

வேலு அத்தோடு நிறுத்தவில்லை. இளஞ்செழியனைக் காரில் அழைத்துச் செல்லும் போதும் சிரித்துக் கொண்டேயிருந்தான்.

''சார்! நானும் இத்தனை நாள் பாத்திருக்கேன்... இன்னைக்கும் பாக்கறேன். எத்தனை வித்தியாசம்? முகமே மலர்ச்சியா இருக்குது. கண்ணெல்லாம் ஒரு விதமா சிரிக்கற மாதிரி இருக்குது'' என்று பேசிக் கொண்டே வந்தான்.

''சும்மாயிருப்பா...!'' என்று லேசாகக் கடிந்து கொண்டாலும் அவன் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதித்தான். அவர்கள் இருவரும் காரில் போய் இறங்கிய போது சித்ரலேகாவின் வீடு கலகலப்பாக இருந்தது.



உறவினர்கள் கூட்டம்!

''இது என்னப்பா...!'' என்று திரும்பி வேலுவைப் பார்க்க அவன் அன்புடன் புன்னகைத்தான்.

''சார்! திரும்பவும் சேர்ற வரைக்கும்தான் உங்க முடிவு! அதுக்கப்புறம் நடக்கறதெல்லாம் பெரியவங்க முடிவு!''

இளஞ்செழியன் உள்ளே நுழைந்தபோது சித்ரலேகாவின் வீட்டுப் பெரியவர்கள் எல்லாம் வரவேற்றார்கள். ஐந்தே நிமிடத்தில் பின்னால் இரண்டு மூன்று பஸ்களில் இளஞ்செழியனின் முக்கிய உறவினர்களெல்லாம் வந்து இறங்கினார்கள்.

உண்மையாகவே இளஞ்செழியன் அசந்து போனான்!

''வாங்க.. சம்பந்தி! வாங்க சம்மந்தி'' என்று வரவேற்றார்கள் சித்ரலேகாவின் பெற்றோர்.

இளஞ்செழியன் கண்கள் சித்ரலேகாவைத் தேடின.

சித்ரலேகாவும் உள்ளே இருந்து வந்தாள். அந்த இளம் பச்சை நிறத்தில் எளிமையான பட்டுப்புடவை உடுத்திக் கொண்டு வந்தாள்.

''வாங்க!'' என்றாள்.

இளஞ்செழியன் ''லேகா! என்ன இதெல்லாம்?'' என்றான்.

''அம்மாவும், அப்பாவும் எனக்கே தெரியாம ஏதோ ஏற்பாடு செஞ்சிருக்காங்க! இந்தத் தடவை ஊரறிய அழைச்சுகிட்டுப் போகணுமாம்!'' என்றாள்.

''ஓ! நான் நம்ம வீட்டுக்குப் போனதுக்கப்புறம் பெரிய விருந்து ஏற்பாடு செஞ்சுக்கலாம்னு இருந்தேன்...'' என்றான்.

''அதுவும் செய்யலாம்!'' என்றாள் சித்ரலேகா.

''போதும்.. மச்சான்! கொஞ்சம் எங்களையும் கவனிங்க!'' என்றான் பிரசாத்.

இளஞ்செழியன் திரும்பினான்.

இரு வீட்டுப் பெரியவர்களுக்கும் அறிமுகம் நடந்தது. எல்லாருடைய காலிலும் விழுந்து வணங்கி சலித்துப் போனார்கள் இரண்டு பேரும்.

''ஹேய்! என்னதிது.. இந்தப் பாடு படுத்தறாங்க!'' என்று முணுமுணுத்தான் இளஞ்செழியன் தனியாக.

''என்ன செய்யறது! ரொம்ப நாளா மனசுக்குள்ளே வேதனையை அடக்கி வச்சிருக்காங்க... இப்போ ரொம்ப சந்தோஷம்! உங்க வீட்லயும்.. சரி.. எங்க வீட்லயும் சரி.. எல்லாக் கவலையும் உள்ளேயே வச்சுகிட்டு நடமாடி கிட்டு இருந்திருக்காங்க.. இப்ப இப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சவுடனே.. தடபுடல் பண்றாங்க...!'' என்றாள்.

''சரி.. விடு! அவங்க சந்தோஷத்தை நாம ஏன் கெடுப்பானேன்? என்ன.. சாயங்காலத்துக்குள்ளே நாம கால்ல விழுகறதுல. கின்னஸ் ரெக்கார்டே பண்ணிடு வோம்போல இருக்கு...! அப்புறம்.. டயர்டாயிட்டா...'' என்றான் குறும்பாகச் சிரித்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்! அன்புடன் புன்னகைத்தாள்!

''இனிமே.. வாழ்நாள் பூராவும் ஒண்ணா இருக்கப் போறோம்! ஒரு நாளைக்கு அவங்களுக்காக இதையெல்லாம் தாங் கிக்கலாம் இல்லே?'' என்றாள். காதலுடன் பார்த்தாள்!

''ஐயய்யோ! எல்லாத்தையும் சுத்தியும் வச்சுகிட்டு இப்படிப் பாக்கறாளே! பேசாம இரு. நான் அப்புறம்.. எக்குத் தப்பா ஏதாவது செஞ்சுரப் போறேன்'' என்றான்.



அவள் முகம் சிவக்கச் சிரித்தாள்!

* * *

''வேலு! நீ என்னமோ தில்லு முல்லு பண்ணற மாதிரி இருக்கு...! சீட்டை ஒழுங்காப் போடு...!'' என்றார் சௌந்தரராஜன்.

இளஞ்செழியன் பார்வையாளராக அமர்ந்து கொண் டிருந்தான்!

உறவினர்கள் எல்லாம் கிளம்பி விட்ட பிறகு மாலை நேரத்தில் சீட்டுக் கச்சேரி.. நடந்து கொண்டிருந்தது. அப்பா வந்து உட்காருவதைப் பார்த்தவுடன் இளஞ்செழி யன் மெதுவாகக் கழன்று கொண்டான்.

மாமனாரிடம் ''மாமா! எங்கப்பா.. சீட்டு விளையாடற துல,, ரொம்ப கெட்டிக்காரர்.. ஜாக்கிரதை'' என்று டிப்ஸ் வேறு கொடுத்தான்.

''அடப்பாவி... மகனே! ஒரே நாள்ல அவங்க.. பக்கம் சேர்ந்துகிட்டியே!'' என்று கலாய்த்தார் அப்பா!

''இல்லப்பா! உங்களோட பலம் என்னன்னு அவங் களுக்குத் தெரியணுமில்லே! எதிலயும் பலம் தெரியாம போராட்டத்துல.. இறங்கக் கூடாதில்லே!'' என்றான் இளஞ்செழியன்.

''செழியன்! விளையாட்டுக்குக் கூட இனிமே எதிரிங் கற வார்த்தையை யூஸ் பண்ணாதீங்க! நாம எல்லாம் இனிமே ஒண்ணு'' என்றாள் சித்ரலேகா.

''ஆஹா.. சென்டிமென்ட்ல தாக்கறாங்க'' என்று சிரித் தவன் அருகில் அமர்ந்திருந்த மனைவியை ரகசியமாகச் சீண்டினான். அவள் பதிலுக்கு நறுக்கென்று கிள்ளி வைக்க இதைத் தற்செயலாகக் கவனித்த வேலு மெல்லவும்

முடியாமல், சொல்லவும் முடியாமல் தவிக்கிற முதலாளியைப் பார்த்து களுக்கென்று சிரித்தான்.

''போடுவேன்.. ரெண்டு மண்டை மேலே! ஆட்டத்தைக் கவனி!'' என்றான் இளஞ்செழியன்.

''சரி..! இதெல்லாம் கிடக்கட்டும்... எங்க பொண்ணு என்னமோ...'' என்று செளந்தரராஜன் ஏதோ சொல்ல ஆரம்பிக்க குறுக்கிட்டார் தண்டபாணி.

''அது இப்ப எங்க.. பொண்ணு!'' என்றார்.

''சரி.. உங்க.. பொண்ணு..! முதல்ல சொன்னா.. இந்த வேலுப் பயலும்.. பிரகாசும்.. ஏதோ.. பிரச்சினை பண்ற மாதிரியல்ல சொன்னா...!'' என்றார்.

பிரசாத்தும், வேலுவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

''மாமா! அது ஒரு பெரிய கதை!'' என்றான் வேலு.

* * *

''வெளியே போங்க.. மிஸ்டர்.. பிரசாத்.. இனிமேக் கொண்டு என்னைப் பாக்க வராதீங்க..'' என்று இளஞ்செழியன் அவமானப்படுத்தி அனுப்பியதற்குப் பிறகு பிரசாத் வெகுவாகத் துவண்டு போனான்.

'இளஞ்செழியனிடம் போய்த் தங்கை தனக்குக் கல்யாணமாகி விட்டது. குழந்தை இருக்கிறது என்றெல்லாம் எதற்காகச் சொல்ல வேண்டும்! இப்படித் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறாளே!' என்று கவலையாகிப் போனது. ஆனால், தங்கையிடம் எதுவும் பேச முடியாது.

சுத்தமாகத் தன்னை வெறுத்து விட்டாள்!



அவளைச் சொல்லியும் குற்றமில்லை! அவளாக இருக்கக் கொண்டு தன்னிடம் முகம் கொடுத்துப் பேசுகிறாள்.

கடந்த எட்டாண்டுகளில் பிரசாத்தின் எண்ணப் போக்குகளிலும் பெருத்த மாற்றம் ஏற்பட்டிருந்தது. தேவையில்லாமல் தான் தங்கையின் வாழ்க்கையில் விளையாடி விட்டோம் என்பது புரிந்தது.

உண்மையில் பிரச்சினையைத் தீர்க்க விரும்பியிருந்தால் பையனைப் பற்றி விசாரித்து அவனுக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவி செய்து ஒரு லெவலுக்கு வருவதற்கு முயற்சி செய்திருக்க வேண்டுமே யொழிய இந்த மாதிரித் தகிடு தத்தங்கள் எல்லாம் செய்திருக்கக் கூடாது.

''அண்ணா! எனக்கு நீ நல்லது செய்வதா இருந்தா.. இனிமே.. என்னோட எந்த விஷயத்துலயும் தலையிடாம இருந்தாப் போதும்'' என்று ஒரு நாள் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு அவள் அழுதது நினைவுக்கு வந்தது.

என்ன விதமான நடவடிக்கைக்குப் போவது என்றே புரியவில்லை. எத்தனையோ நாட்கள் அந்தக் குழந்தையின் போட்டோவை மார்போடு அணைத்துக் கொண்டு தங்கை கன்னங்களில் கண்ணீர்க் கோடு வழிய உறங்கியிருப்பதைப் பார்த்திருக்கிறான்.

தங்கை தன்னுடைய முடிவுகளில் பிடிவாதமாக நிற்பாள் என்பதை அறியாமல் போனோமே.. என்று உருகி விட்டான்.

''சரி..! அந்தக் கட்டத்திலாவது உள்ளே நுழைந்து தங்கை ஏதோ ஒரு காரணத்துக்காகப் பொய் சொல்கிறாள்

என்பதை இளஞ்செழியனுக்கு விளக்கலாம் என்றால் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியே அனுப்பி விட்டான். ஆனால் தான் என்ன அவமானப் பட்டாலும் சரி.. இந்த முறை விடப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டான்.

யாரைப் பிடிப்பது? அடுத்து என்ன நடவடிக்கை.. எடுப்பது? என்று யோசித்துக் கொண்டிருக்கையில்தான் அந்த போன் வந்தது.

''சார்! நான் வேலு.. பேசறேன்!'' என்றது.

''ஓ!''

''சார்! நான் இளஞ்செழியன் சாருக்கு தூரத்து சொந்தம். அதனால அவரோட அம்மா.. அப்பாகிட்டே விஷயங் களை விசாரிச்சுகிட்டேன். எனக்கு என்னமோ.. ரெண்டு பக்கமுமே ஏதோ மிஸ்கம்யூனிகேஷன் இருக்கற மாதிரி தெரியுது. நீங்க இப்ப எனக்கு உண்மையைச் சொல் லுங்க..! என்னதான் நடக்குது?'' என்றான்,

அவன் குரலில் உண்மையான அக்கறை தெரிவதைப் பார்த்த பிரசாத் இப்படி யாராவது கேட்க மாட்டார்களா..? என்று ஏங்கிப் போயிருந்த பிரசாத் உடைப்பெடுத்துக் கொண்டாற் போல மாதிரி உள்ளதையெல்லாம் கொட்டி விட்டான்.

''சார்! நான் உங்களை நேர்ல சந்திக்கிறேன்'' என்றான்.

சந்தித்தார்கள்!

''சார்..! எனக்குப் புரியுது! ரெண்டு பேருக்குமே அன்பு மாறாம இருக்கு.. ஆனா, ஒருவேளை அடுத்தவருக்குக் கல்யாணம் ஆகியிருந்தா..! அப்படீன்னு.. தயங்கியிருக் காங்க! இளஞ்செழியன் சாருக்குக் கல்யாணம் ஆகலேங்



கறதை நம்ப எப்படியாவது உங்க சிஸ்டருக்கு சொல் லிடறேன்.. மேற்கொண்டு என்ன நடக்குதுன்னு பார்க்க லாம்..''

பிரகாஷ் பெருமூச்சு விட்டான்.

''இல்லப்பா! ரெண்டு பேருமே.. ஈகோ புடிச்சவங்க. அவ்வளவு சீக்கிரம்.. இறங்கி வரமாட்டாங்க.. போல இருக்கு!'' என்றான் பிரசாத்.

அப்போதுதான் அந்த ஐடியாவைச் சொன்னான் வேலு.

''சார் நாம எதுக்கு நேரடியாச் சொல்லணும்.. ஒரு டிராமா.. போடலாம். அவங்க தானா நம்மளைக் கவனிக்கிற மாதிரிச் செய்யலாம். ஏற்கனவே ரெண்டு பேருக்குமே உங்க மேல நம்பிக்கையில்லாம இருக்கு..!'' என்று அவன் முடிக்கு முன்னே,

''ஆமப்பா! தெரிஞ்சோ தெரியாமலோ ரெண்டு பேரு வாழ்க்கையிலயும் அவ்வளவு விளையாடி இருக்கேன்.. தெரியுமா?'' என்றான் உண்மையான வருத்தத்துடன்.

''போனதை விடுங்க.. சார்! ஏற்கனவே எட்டு வருஷம் இழந்தாச்சு.. இனிமே அதிக பட்சம் ரெண்டு மாசம்.. அதுக்குள்ள ரெண்டு பேரையும் சேர்த்தே ஆகணும்'' என் றான் வேலு.

''சரி! நான் போட்ட திட்டமெல்லாம் தான்.. எல்லாத் தையும் கஷ்டப்படுத்திருச்சே.. இனி.. நீ போடு திட்டம்..'' என்றான்.

''சார்.. இப்படி செய்யலாம்! எப்படியும் ரெண்டு பேரும்.. வெடுக்குன்னு வெளிப்படையாப் பேச மாட் டாங்க.. ஆனாலும் யாராவது ஒருத்தருக்குக் கஷ்டம்ன்னா... கண்டிப்பாப் பேசுவாங்க.. இல்லே!'' என்றான்.

"அது சரி போ! இதுக்காகக் கஷ்டத்தை வலை போட்டுப் பிடிக்கணுமாக்கும்?" என்றான் பிரசாத் சலிப்புடன்.

"வலையெல்லாம் போட வேண்டாம்? அதான் நீங்க.. இருக்கீங்களே?" என்றான்.

"அடப்பாவி! நீ கூட சந்தடி சாக்கில் சிந்து பாடறே?" என்றான் பிரசாத்.

"இருங்க.. சார்! நிஜமாத்தான் சொல்றேன். இப்பப் பாருங்க. நீங்க போய் நல்லது செய்யறீங்கன்னா யாரும் நம்பப் போறதில்ல. ஆனா, மறுபடியும் ஏதோ சதி செய்யறீங்கன்னா.. நம்புவாங்க.. அப்படி ஆரம்பிப்போம்!" என்றான்.

"பாரு.. வேலு! என்ன வேண்ணா செய்ங்க! சக்ஸஸ் ஆச்சுன்னா.. போதும்!"

"பெயிலியர் ஆச்சுன்னா?"

"நீ ஏம்ப்பா.. கவலைப்படறே? நான் குடுக்கறேன்.. உனக்கு.. வேலை தரேன்?" என்றான்.

"அதுக்காக சொல்லலை.. சார்!" என்ற வேலு அருமையாகத் திட்டம் போட்டான்.

ஆஸ்பத்திரியில சௌந்திரராஜனை வழியனுப்பி விட்டு வருவதைப் பார்த்தவன் அவள் காதில் விழும் விதமாக.

"பிரசாத் சார்! பிரசாத்... சார்!" என்று வேண்டுமென்றே அவன் பெயரைப் பயன்படுத்திப் பேசினான்.

சித்ரலேகா கவனிக்க ஆரம்பித்தவுடன் மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியவில்லை. அப்போதைக்கு ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக.. செக் பவரை எடுத்துப் பேசினான்.



"சார்! செக் பவர் நம்ம கைக்கு வந்தாச்சு தெரியுமா? இனிப் பூந்து விளையாடிர வேண்டியதுதான்" என்று ஆரம்பித்தவன், மேலே நம்புகிற மாதிரி பேச ஆரம்பித்தான். அதற்குப் பிறகு பொய்கள் பண்ணுவதும், கதை பண்ணுவதும் கடினமான காரியமாக இருக்கவில்லை.

சித்ரலேகா இருண்ட முகத்துடன் கணவனின் அறைக்குச் செல்வதை ஒரு விதமாக திருப்தியுடன் பார்த்தான்.

எப்படியும் இளஞ்செழியனிடம் சொல்வாள் என்பது தெரிந்தது.

சொன்னாள்!

அடுத்த நாளே 'செக் பவர்' வேலுவுக்கு இல்லை என்று சொன்னபோது உண்மையில் வேலுவும், பிரசாத்தும் மகிழ்ச்சியடைந்தார்கள்,.

"சார்! கம்யூனிகேஷன் ஆரம்பிச்சுருச்சு.. பாத்துக்கங்களேன்..! இத்தனை நாள் நான் எவ்வளவு சின்சியரா உழைச்சிருக்கேன்! ஆனா, வைஃப் சொன்னவுடனே கேட்டுகிட்டாரு பாத்தீங்களா?" என்றான் வேலு கொஞ்சம் மனத்தாங்கலுடன்.

பிரசாத் உடனே சொன்னான். "வேலு! அது உன் மேல வந்த அவநம்பிக்கையில்லை! என் மேல இருந்த அவநம்பிக்கை! நான் உன்கிட்டே கூட்டுப் போட்டுட்டேன்னு என் சிஸ்டரே கவலைப்படறா? நீ ஒண்ணும் வொரி பண்ணிக்காதே! பிரச்சினைகள் முடியட்டும். முன்னால நின்னு எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்" என்றான்.

வேலு சொல்லி முடித்தவுடன் இளஞ்செழியனிடம் சித்ரலேகா கேட்டாள்.

''அப்புறம்.. அன்றைக்கு நீங்க என்னத்தை போய்ப் பேசிட்டு வந்தீங்க? வரும்போது திட்டிட்டு வந்தீங்க?'' என்றான். பிறகு முகம் தெளிவானது.

''ஓஹோ! அத்தனையும் நாடகமா?'' என்றாள்.

இப்போது பிரசாத்துடன் சேர்ந்து கொண்டு இளஞ்செழியனும் சிரித்தான்.

## 29



கோலை ஊன்றிக் கொண்டு வாசலை அடைத்தாற்போல் நின்று கொண்டிருந்த இளஞ்செழியன் உள்ளே பார்த்தான்.

பிரசாத் மட்டும்தான் அமர்ந்து கொண்டிருந்தான். அதுவும் சாதாரணமாக பத்திரிகை படித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''எங்கே.. அவன்?'' என்றான் இளஞ்செழியன் உறுமலாக.

''எவன்?'' என்றான் பிரசாத்.

''அவன்தான்.. வேலு!'' என்றான்.

''அவரு.. போயிட்டாரே!'' என்றான் பிரசாத் எழுந்து.

''உள்ள வாங்க! செழியன்'' என்றான்.

''உங்ககிட்டே எனக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு? ஆனா, ஒரு விஷயம் புரிஞ்சுக்குங்க. மிஸ்டர். பிரசாத்.. என்னோட செட் அப்ல நுழைஞ்சு, என்னோட ஸ்டாஃபை டைவர்ட் பண்ற வேலையெல்லாம் வேண்டாம்'' என்றான் கோபத்தோடு.

பிரசாத் பொறுமையாக அவனது இரு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

''செழியன்! நடந்த எல்லாத் தவறுகளுக்கும் நான்தான் காரணம். நான் உங்க கால்ல வேண்ணாலும் விழுகறேன்.



இந்த முறை எல்லாத் தப்பையும் சரி பண்ணி, உங்க ரெண்டு பேரையும் நிம்மதியா வாழ விடணும்னு நினைக்கறேன்'' என்றான்.

இளஞ்செழியன் திடுக்கிட்டுப் போனான்.

''எங்க ரெண்டு பேரையுமா? அப்ப அந்த ஹரிபிரகாஷ்!''

''ப்ளீஸ்! உள்ள வாங்க! எல்லா விவரத்தையும் சொல்றேன்'' என்றான்.

சொன்னான்!

''செழியன்! அந்தப் பொண்ணு சித்ரலேகா வேற! அது எங்க அத்தை பொண்ணு! நான் உங்களைத் திசை திருப்பறதுக்காக.. அந்த சந்தர்ப்பத்தை யூஸ் பண்ணிட்டேன்!''

இளஞ்செழியன் அளவு மீறிய அதிர்ச்சி அடைந்தது மட்டுமல்லாமல் தளர்ந்து போய் சோபாவில் அமரப் போனான்.

முகம் வெளுத்துப் போனது. எல்லையில்லாத வேதனை தெரிந்தது.

''பிரசாத்! அப்ப.. லேகா.. இப்பவும்.. என் லேகாதானா?'' என்றான்.

''சார்! அவ எப்பவும் உங்க லேகாதான்! நான்தான் அவளைச் சரியாப் புரிஞ்சுக்கலை'' என்றான்.

இளஞ்செழியன் முகத்தில் இருந்த குழப்பம் எல்லாம் மாறி மெல்ல முகம் ஒளி பெறுவதையும் டென்ஷன் எல்லாம் வடிந்து தெளிவு ஏற்படுவதையும் வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு செழியனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

''செழியன்! நான் ஒரு பெரிய பாவம் பண்ணிட்டேன். அன்பான ரெண்டு நெஞ்சங்களைப் பிரிச்சுட்டேன். என் தங்கை... உள்ளுக்குள்ளே செத்துப் போயிட்டா..

தெரியுமா? மனசுல உங்களோட வாழ்ந்து.. உங்களுக்கே.. குழந்தை பெற்று.. அதுக்குக் கற்பனையில பேர்.. வச்சு.. ஐயோ.. கொடுமை..'' என்று குலுங்கிக் குலுங்கி அழுதான்.

இளஞ்செழியன் மனமெல்லாம் காதல் பொங்கக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''லேகா.. இன்னமும் என்னுடையவள்தான்'' என்று திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டான். உலகத்தையே வெற்றி கொண்டாற்போல் கர்வம் கொண்டான்.

கலகலவெனச் சிரித்தான்.

''போகட்டும் விடுங்க! பிரசாத் நடந்ததெல்லாம் மறந்துடுங்க. இந்த நிமிடத்துல நான் ஜெயிச்ச திருப்தி எனக்குக் கிடைச்சிருச்சு.. நான் உங்களை மன்னிக்கிறேன்'' என்றான்.

பிரசாத் மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பினான். ''சார்! நான் மனசாரச் சொல்றேன். இந்த விஷயத்துல.. தோக்கறதுலதான் எனக்குத் திருப்தி. நீங்க ஜெயிச்சாப் போதும்.. சார்! அது மட்டுமல்ல.. ஆக்சுவலா நான் மன்னிப்புக் கேட்கறதுக்குத்தான் உங்களைத் தேடி வந்தேன்.. ஆனா.. நீங்க அந்த நேரத்துல...'' என்றான் வருத்தத்துடன்.

''ஐ'ம் சாரி!'' என்றான் இளஞ்செழியன் மிக எளிமையாக.

''ஓ.கே.! ஓ.கே.! போனது போகட்டும். இனி என்ன செய்யறதுன்னு பாக்கலாம்..'' என்றான் பிரசாத்.

''என்ன செய்யறது? விஷயத்தை என்கிட்டே விடுங்க நான் பாத்துக்கறேன்'' என்றான்.

''மாப்பிளே! சித்ராகிட்டே எப்ப சொல்லப் போறீங்க?''

''இதேதான்! நாம ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசிகிட்டோம்கறதை சொல்ல வேண்டாம்... நான் மேற்கொண்டு வேற விதமா சொல்லிக்கறேன். ஏற்கனவே லேகா நினைச்சுகிட்டிருக்கிற மாதிரியே மெயின்டெயின் பண்ணிக்கறேன்'' என்றான்.



காரில் ஏறும்போது ஆர்வமாக விசாரித்த சித்ரலேகாவிடம் தான் அவனை மிரட்டி விட்டு வந்தாற்போலவே சொன்னான்.

வேலுவுக்கு ஒரு மாதம் லீவு என்றவுடன் அவன் மிகவும் வருத்தப்பட்டு விட்டான். ஆனால் பிரசாத்துடன் பேசிய பிறகு நிம்மதியாகக் கிளம்பினான்.

''லேகா.. உன்னோட உதவி வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டபோது அவளும் ஒத்துக் கொண்டாள்.

இப்போது எல்லாரும் கேட்கும் விதமாக எல்லாவற்றையும் போட்டு உடைத்தபோது சித்ரலேகாவின் முகம் சிவந்து போனது.

''பாருங்க மாமா! எல்லாரும் சேர்ந்துகிட்டு என்னை முட்டாளாக்கியிருக்காங்க'' என்று மாமனாரைப் பார்த்து சிணுங்கினாள்.

''அம்மா நீ வேற! இந்தத் தடவையாவது என் மகன் புத்திசாலியாக நடந்துகிட்டானேன்னு நான் சந்தோஷமா இருக்கேன்'' என்று அவர் காலை வாரவும் எல்லாரும் சிரித்தார்கள்.

இரவு உணவு முடிந்த பின் எல்லாம் கிளம்பினார்கள்.

வேலுவும் கிளம்பினான்!

''வேலு! இங்க வா!'' என்றான் இளஞ்செழியன்.

''சார்!'' என்று வந்தான்.

''வேலு! எனக்காகக் கவலைப்பட்டதுக்காகவும் - இத்தனை முயற்சிகளுக்காகவும்.. உனக்கு ஒரு பரிசு.. உண்டு.''

வேலுவின் முகம் மலர்ந்தாலும் அவசரமாகச் சொன்னான்.

''சார்! நான் எந்தப் பரிசையும் எதிர்பார்த்து இதைச் செய்யலை! உங்க வாழ்க்கை நல்லா இருந்தாப் போதும்னு... தான்'' என்றான்.

''தெரியும்.. அதனாலதான் பரிசு! நம்ம கட்டற காலனி யிலே உனக்கு ஒரு வீடு அலாட் பண்ணுதில்லே! அதுக் குக் கம்பெனி.. இல்லல்ல.. நான் பணம் கட்டிடுவேன் ஓ.கே.வா?'' என்றான்.

அதே சமயம்!

''வேலுவுக்குத்தான் பரிசா? எனக்கில்லையா?'' என்றான் பிரசாத்.

இளஞ்செழியன் கம்பீரமாக திரும்பினான்.

''உங்களுக்குப் பரிசில்லே... தண்டனை!''

''அப்படியா?''

''ஆமாம்! சீக்கிரமா ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்ய வேண்டியதுதான்!'' என்றான்.

''செய்ங்க.. செய்ங்க! வேலுவுக்குப் பரிசு குடுத்ததும் நியாயம்தான். ஏன் தெரியுமா? வருஷத்துல நாலு நாள் எங்க பாஸ் எல்லா அனாதை விடுதிகளுக்கும் சாப்பாடு போடுவாப்ல.. அதுல ஒன்று அவரோட பிறந்த நாள்! மத்ததுல ரெண்டு நாட்கள் அவங்க அப்பா, அம்மாவோட பிறந்த நாட்கள். இன்னொன்னு யாருதுன்னு தெரியலே. உங்க சிஸ்டரோட டேட் ஆஃப் பர்த் சொல்லுங் கன்னாப்ல. நானும் சொன்னேன். சார், அதே நாள் தான் அது மட்டுமல்ல.. பாஸ், அந்த சமயத்துல ரெண்டு மூன்று நாளைக்கு ரொம்ப மூட் அவுட்ல இருப்பாருன்னார். அப்பவே எனக்கு நம்பிக்கை வந்துடுச்சு. உங்க ரெண்டு பேரையும் ஒன்னு சேர்க்க முடியும்னு. உங்களுக்காக ரொம்ப வருத்தப்பட்ட அருமையான ஆள்.. என்கிட்ட



இருந்தும் அவனுக்குப் பரிசு கிடைக்கும். ஆனா.. இப்ப இல்லே.. அவன் கல்யாணத்தப்ப...'' என்றான்.

வேலு புறப்படும்போது சித்ரலேகாவும் வந்து நின்று வழியனுப்பினாள்.

''வேலு.. தாங்க்ஸ்!'' என்றாள் நெகிழ்ச்சியுடன்.

''ஐயோ! என்ன மேடம்! நீங்க எனக்கு சிஸ்டர் மாதிரி. உறவு முறையிலயும் நீங்க எனக்கு சிஸ்டர்தான்'' என்றான்.

''தாங்க்ஸ்!'' என்றாள்.

அதே நேரம் அங்கே வந்த இளஞ்செழியன் சித்ரலே காவிடம் நெருங்கி நின்று கொண்டான்.

இருவருமாக வழியனுப்பி வைக்கவும் வேலு உண்மை யாகவே மகிழ்ச்சியடைந்தான்.

நிறைந்த மனத்தோடு அங்கிருந்து கிளம்பினான்.

* * *

சித்ரலேகாவும் இளஞ்செழியனும் ஒரு காரில் ஏறிக் கொள்ள பின்னாலே ஒரு காரில் இளஞ்செழியன் பெற்றோரும், மற்றொரு காரில் சித்ரலேகாவின் பெற்றோரும் வந்தார்கள்.

ஏதோ நேற்றுத்தான் திருமணமானவர்கள் போல் முறை யாக ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துப் போனார்கள்.

அங்கேயும் இளஞ்செழியன் குடும்பத்துக்கு மிகவும் நெருங்கிய உறவினர் குடும்பங்கள் வந்திருந்தார்கள்.

நேரம் கலகலப்பாகக் கழிந்தது. ஆனால் இருவரும் களைத்துப் போனார்கள்.

எல்லாரும் விடை பெற்றுச் செல்வதற்கு இரவு பதி னோரு மணியாகி விட்டது. அதன் பிறகுதான் தங்கள் அறைக்குப் போனார்கள்.

இளஞ்செழியனுக்கு என்று இருந்த பகுதியிலேயே ஒரு ஹால், இரண்டு படுக்கையறைகள். ஒரு சின்ன ஆபீஸ் மற்றும் நூலக அறை என்று அழகாக இருந்தது.

சித்ரலேகாவை ஆச்சரியப்படுத்திய விஷயம் என்ன வென்றால் எல்லா சுவரும் அவளுக்குப் பிடித்த வெளிர் பச்சை நிறத்திலேயே பெயின்ட் செய்யப்பட்டிருந்தது.

படுக்கையறைக்கு உள்ளே அழைத்துப் போய்க் காட்டினான். இரண்டு வார்டிரோபுகளுக்கும் இடையிலே சின்னதாக உள்ளடங்கிய அறை ஒன்று இருந்தது. அதில் சித்ரலேகாவின் படம். அவள் அழகாகச் சிரிக்கிறாற் போன்ற படம் பெரிதாக மாட்டப்பட்டிருந்தது.

சித்ரலேகா திரும்பி அவன் முகம் பார்த்தாள். புன்னகையுடன் நின்றிருந்தான்.

''எப்படி.. என் பர்மிஷன் இல்லாம.. என்.. படம் வச்சிருக்கீங்க?'' என்றாள்.

அவன் சிரித்தான். இழுப்பறையிலிருந்து ஒரு சிறிய புகைப்படத்தை எடுத்தான். பெரிய படத்தின் சிறிய வடிவம்தான் அது!

''ஆக்சுவலா.. இந்த போட்டோதான் என் பர்ஸனல் ஆல்பத்தில் இருந்தது. எப்ப.. பிரசாத் மச்சான்கிட்டே இருந்து உனக்கும் ஹரிபிரகாஷுக்கும் கல்யாணம் ஆகலே அது வேற சித்ரலேகான்னு தெரிஞ்சுகிட்டேனோ... அப்போ.. இருந்தே.. என் வைஃப் இன்னமும் நம்ம வைஃப்தான்னு ஒரு சந்தோஷம் பொங்கி எழுந்துச்சுன்னு வச்சுக்கயேன். உடனே படத்தை பெரிசு பண்ணி.. மாட்டிட்டேன்! அது மட்டுமல்ல.. அம்மணிக்கு இந்த ரூம் ரெடியாயிருக்கு..'' என்று திறந்து காட்டினான்.

''அப்ப.. இத்தனை நாளா தெரிஞ்சு வச்சுக்கிட்டுத் தான்.. தெரியாத மாதிரி நடிச்சீங்களாக்கும்..'' என்றாள்.



இளஞ்செழியன் ரிலாக்ஸ்டாக படுக்கையில் சாய்ந் தான். அவளையும் அருகில் இழுத்துக் கொண்டான்.

''லேகா! லெட் அஸ் டேக் ரெஸ்ட்! காலையில இருந்து மொத்தமா எல்லாக் கால்லயும் விழுந்து விழுந்து இடுப்பே கழண்டு போச்சு.. போ..'' என்றான்.

அவள் சிரித்தாள்!

''நீங்க எங்க விழுந்தீங்க! விழற மாதிரி பாவ்லா செஞ் சீங்க..'' என்றாள்.

''கண்டு பிடிச்சுட்டியா? ஃபிராக்சர் ஆன கால் இல்லே! அதான்! முழுசா விழலேன்னாலும் பரவால்லே.. பரவால் லேன்னுட்டு எல்லாரும் மனசாரத்தான் ஆசீர்வாதம் செஞ்சாங்க..'' என்றான்.

''கமிங்.. டு.. த.. பாயிண்ட்'' என்று அவள் விட்ட இடத் தையே மறுபடியும் பிடித்தாள்.

''எங்கண்ணன்கிட்ட பேசியதெல்லாம் மறைச்சுட்டு.. என்கிட்டே நடிச்சுட்டுத்தானே இருந்தீங்க..''

''ஆமா! ரொம்ப நிம்மதியா நடிச்சுட்டிருந்தேன். ஆக்சு வலா.. அந்த நியூஸ் கிடைக்கிற வரைக்கும்.. ஏதோ நிம்மதியாய் இருக்கற மாதிரி நடிச்சுகிட்டிருந்தேன். ஆனா.. அந்த நியூஸ் கிடைச்சதுக்கப்புறம்.. நம்ம லேகா.. நம்மளுக்குத்தான்.. என்ன இன்னைக்கில்லேன்னா.. நாளைக்கு இங்க கூட்டிட்டு வரப்போறோம்ங்கற நிம்மதி யில நடிச்சுகிட்டிருந்தேன்.''

அவள் முகத்தில் நெகிழ்ச்சி ஏற்பட்டது.

''செழியன்!'' என்று அவள் ஏதோ ஆரம்பிக்க.. ''கேள்வி.. பதில் செஷன் எல்லாம் இப்ப இல்லே! இப்ப.. ரெஸ்ட்!'' என்றான்.

''சரி'' என்றாள்.

''உடைமாற்றிக் கொண்டு வந்து இரவு விளக்கின் ஒளியில் அவன் மார்பில் சாய்ந்து கொள்ள அவன் எழுந்து சாய்ந்தாற்போல் அமர்ந்தான்.

சித்ரலேகாவின் போட்டோவை அவளிடம் காட்டினான்.

''பாரு.. லேகா! நீ நேர்ல சிரிக்கிற மாதிரியே இருக்கு..! அந்த போட்டோவையும் மாட்டிட்டு தூக்கம் வராம இதை ஒரு பத்து இருபது நாளாவே ரொம்ப அவஸ்தைப் பட்டுட்டேன்'' என்றான்.

சித்ரலேகாவும் எழுந்து சாய்ந்தாற்போல் அமர்ந்து கொண்டாள்.

''அப்பறம்.. என்ன? நேரடியாக் கேட்டிருக்க வேண்டியதுதானே?''

''எங்கே! எங்கப்பாதான்.. தம்பி.. அந்தப் பொண்ணு ஏன் அப்படி சொல்லியிருக்குங்கறதுக்கான காரணம் தெரிஞ்சுக்க..! இப்பவும் ஏதாவது கோப தாபம் வச்சுகிட்டு வாழ்க்கையை ஆரம்பிச்சீங்கன்னா சரிவராது அப்படீன்னார்.''

''ஓ!''

''அது மட்டுமில்ல..! என்னைக்கு நம்ம விஷயம் பத்தி.. உன்கிட்ட பேசணும்னு கூட அப்பாதான் குறிச்சுக் குடுத்தாரு..'' என்றான்.

அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

''ஆமடா! போன தடவைதான் நீங்களே போய் எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு நல்ல நேரம் கீரம்னு எதுவுமே.. பாக்காமே.. எல்லாத்தையும் நடத்திட்டு வந்தீங்க..! இப்பவாவது நல்ல நேரம் பார்த்து பேச்சு வார்த்தையை ஆரம்பின்னு'' என்று இடி இடியென்று சிரித்தான்.



''எல்லாத்துக்குமா.. நேரம் குறிச்சுக் குடுத்தாங்க..?'' என்றாள் சிவந்த முகத்துடன்,

''ஆமா!'' என்றான். குறும்பாகச் சிரித்தான். அவளும் ''க்ளுக்''கென்று சிரித்தாள். அன்பு பொங்கப் பார்த்தாள்.

''இளஞ்செழியன்! நீங்க ரொம்ப மாறிட்டீங்க?'' என்றாள்.

''எந்த விதத்துல?''

''முதல்லயெல்லாம்.. உங்களுக்கு.. இந்த மாதிரிப் போக்கிரித்தனமான பார்வையெல்லாம் கிடையாது தெரியுமா? ஆனா, வேணும்னே ஆபீஸ் வேலைன்னு கூப்பிட்டு உட்கார வச்சுட்டு.. ஒரு வாரமா.. பாத்துகிட்டு இருந்தீங்க.. தெரியுமா?'' என்றாள்.

முகம் சிவந்து போனான். இரவு விளக்கின் மங்கலான ஒளியில் அவள் முகம் சிவந்தும், மலர்ந்தும் கிடந்த விதம் பார்த்து அவன் தன்னை மறந்தான்.

தன் கைப்பிடிக்குள் சிறைப் படுத்துகையிலேயே கலகலவென்று சிரித்தாள்.

''என்னமோ... ரெஸ்ட்னீங்க!'' என்றான்.

''ஆமா.. இதுக்கப்புறம்..'' என்றான். அடிக்குரலில் சிரித்தான்.

## 30

''அன்னைக்குப் பார்த்த வீடா.. அது?'' என்றாள் ஆச்சரியமாக.

கிராமத்தில் அவர்கள் தங்கியிருந்த வீடு அருமையான பங்களாவாக மாறியிருந்தது. சுற்றிலும் அழகழகான மலர்ச் செடிகள். சுற்றி வர இடம். காம்பவுண்ட் ஓரத்தில் மரங்கள். என் பங்களா பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

அவள் நின்று ரசித்துப் பார்த்தாள்!

''ஹேய்... வா! முதல்ல உள்ளே போய் ரெஸ்ட் எடுக்க லாம்'' என்று காலடி எடுத்து வைக்கையில் பங்களாவில் உள்ள வேலைக்காரர்கள் அனைவரும் கூட்டமாக வந்து விட்டார்கள்.

வயதான இரு தம்பதியர் ஆரத்தி எடுக்க இளஞ் செழியன் மதிப்புக் கொடுத்து நின்றான்.

உள்ளே சென்றவுடன் பங்களா மேற்பார்வையாளர் ''அய்யா! எல்லா வசதிகளும் ஏற்பாடு செஞ்சிருக்கு. பெல் அடிச்சாப் போதும் ஆட்கள் உள்ளே வந்து ஹெல்ப் பண்ணுவாங்க'' என்றான்.

''மாடி ரெடியா இருக்கில்லே?'' என்றான்.

''ஆமா.. சார்!'' என்றான்.

''சரிங்க..! சுப்புராமன்.. நான் இன்னும் இங்க வந்து சேரலே! புரியுதா? நாளைக்குத்தான் காலையில வர்றேன்.. சரியா?'' என்றான்.

சுப்புராமன் சிரித்தான்.

''ஆமாம்.. சார்! அதுவும் நல்லதுதான்.. காலையில இருந்தே.. போன் மேல.. போன். ஐயா இன்னும் வர்லை தான் நானும் சொல்லிகிட்டிருக்கேன்.''

''ஆமா.. அப்படியே சொல்லுங்க! கொஞ்சம் எங்களுக் காகவும் நான் டைம் குடுக்கணும். இனிமே முதலாளி யம்மா.. வந்தாச்சு.. தெரியுமில்லே!'' என்றான். அன்புடன் மனைவியைப் பார்த்துச் சிரித்தான்.



கம்பீரமாகவும் ஆனால் அவனது நடைமுறைகள் எதிலும் தலையிடாமல் நிற்கிற மனைவியைப் பார்த்து அவன் உள்ளத்தில் அன்பு ஊற்றாகப் பொங்கியது.

''மாடிக்குப் போலாமா?'' என்றான்.

போனார்கள்.

''ஹேய்! நாளைக்குக் காலையில வரைக்கும் நம்ம நேரம் நமக்கு.'' என்றான்.

உடனே போன் ஒலித்தது. அவனது தனிப்பட்ட எண். குறிப்பிட்ட சில பேருக்கு மட்டும் தெரியும் அந்தப் பக்கம் வேலு!

''சார் நல்லபடியா.. போய்ச் சேர்ந்தாச்சா? ஏதாவது முக் கியமான விஷயம்னா.. எந்த டைம்க்கு வேண்ணாலும் கூப்பிடலாம்.. சார்?''

''எந்த டைம்க்கு வேண்ணாலும் கூப்பிடலாம். உடனடி யாக் கிடைக்கலேன்னாலும்.. மறுபடியும் கூப்பிடுவேன். முடிஞ்ச வரைக்கும் கூப்பிடாம இருக்கப் பாரு'' என்றான்.

சிரித்தான்!

வேலுவும் சிரித்தான்!

மறுபடியும் போன்?!

இந்த முறை பிரசாத்!

''மச்சான்! இந்த வார வீக் என்டுக்கு நம்ம வீட்டுக்கு வந்துருங்கன்னு.. அம்மாவும், அப்பாவும் கூப்பிடச் சொல்றாங்க.''

''மச்சான்! இந்த வீக் என்ட் எங்க பேரன்ட்டோட.. அதுக் கப்புறம்.. ஒரு பத்து நாள் ஃபாரின் போறோம். இடையில கண்டிப்பா.. ஒரு நாளாவது அங்க வர்றோம்.'' என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிவிட்டு ஆஃப் செய்தான். ஸோபாவில் ரிலாக்ஸ்டாக அமர்ந்திருந்தான். அவளும் அருகில் வந்து அமர்ந்தாள்.

''இன்னும் எங்கண்ணன் டிஸ்டர்ப் பண்றதை விடலை யாக்கும்'' என்றாள் முணுமுணுப்பாக.

அவன் சிரித்தான். மனைவியைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டான்.

''ஹேய்! அப்பவும்.. சரி.. இப்பவும்.. சரி.. நான் பிரசாத் மச்சானுக்குக் கடமைப்பட்டிருக்கேன். அவரு.. மட்டும் அப்படி டார்ச்சர் குடுக்கலேன்னா.. நீ என்னை இன்ஸ்ட் டியூட்ல.. கவனிச்சுப் பார்த்திருப்பியா? அது மட்டும்.. இல்லே.. இப்பவும் விடாப்பிடியா என்னைத் துரத்தித் துரத்திப் பிடிச்சு.. அவமானப்படுத்தினாலும் தாங்கிகிட்டு மறுபடியும் சேர்க்க ஏற்பாடு செஞ்சான்.. இல்லே! அதுக்கு நன்றி சொல்லணும்!

சித்ரலேகாவின் தலையை மெல்ல கோதிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

சித்ரலேகா கடந்த நாட்களில் எல்லாம் அவன் அணைப் பில் இருக்கும்போதெல்லாம் அதிகம் பேசுவதேயில்லை. அது குறித்து அவன் ஒன்றிரண்டு முறை கேள்விகள் கேட்டபோதுகூட அவள் சொன்னாள்:

''போதும்! சும்மா.. என்ன பேச்சு! உங்களுக்குப் பக்கத்திலே இருக்கிறதே.. எனக்குப் போதும்..'' என்பாள். அதே போல் அமைதியை அனுபவித்து அமர்ந்திருக்கிற மனைவியை அன்பாகப் பார்த்தான். காதல் மீதூரச் சொன்னான் இளஞ்செழியன்.

''ரெஜிஸ்டர் மேரேஜ் செஞ்சுக்கலாம்..! அதுக்கு ஒத் துக்கலேன்னா.. தற்கொலை செஞ்சுக்குவேன்னு.. சொன் னியே ஞாபகம் இருக்கா? அதுக்கப்புறம்.. எத்தனை நாட் கள் அதை நினைச்சு கோபப்பட்டிருக்கேன்.. தெரியுமா? அப்படிச் சொன்னவ.. எப்படி இன்னொருத்தனைக் கல் யாணம் பண்ணினான்னு.''



''எனக்கு இன்னும் புரியலே.. செழியன்.. நீங்க ஊரை விட்டுப் போறதுக்கு முன்னாலே இன்னொரு தடவை என்னைப் பார்ப்பதற்கு முயற்சி செஞ்சிருக்கணும் இல்லே!''

இளஞ்செழியன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

''லேகா..! அது உனக்குப் புரியாது. நான்தான் சொன் னேனே.. உங்கண்ணன் என்கிட்டே கோபமா பேசலே..! ரொம்பத் தஞ்சமாப் பேசினான். நீயும் சம்மதம்னு சொல் லிட்டேன்னு சொல்றான். அங்கு வந்து பாத்தா நீ உடம்பு பூராத் தங்கத்துல இழைச்ச மாதிரி டிரஸ் பண்ணிகிட்டு.. ஜொலிக்கறே! கலகலன்னு சிரிச்சுகிட்டு இருக்கே! என்னை என்னதான் செய்யச் சொல்றே?''

''அட ஆண்டவா! உங்களைப் பிரிஞ்சு போனதுக்கப் புறம்.. அன்னைக்குத்தான் நான் கொஞ்சம் கலகலப்பா இருந்தேன்.. எல்லாம்.. விதி.. ஆனா.. பத்திரிகையைப் பார்த்துட்டு நீங்க வேற கல்யாணம்..''

''வேண்டாம்.. சொல்லாதே! நான் எங்கடி உன்னை மறந்தேன்! எப்பவும் உன் நினைப்புதான். பஸ் கம்பெனிக் குக் கூட சி.எல்.கே. டிராவல்ஸ்ன்னு பேர் வச்சேன். செழியன்கிற பேர்ல உள்ள லெட்டரையும், கருணாகரன்ங் கிற பேர்ல உள்ள லெட்டரையும்தான் அது குறிக்கு துன்னு நிறைய பேர் சொன்னாங்க. ஆனா.. சித்ரலே காங்கற பேர்ல இருக்கிற மூணு லெட்டர்ஸ்தான் அது..'' என்றான்.

சித்ரலேகா கண்களில் நீர் திரள புரண்டு அவன் மடியில் முகம் புதைத்தாள். குலுங்கி அழுதாள்.

''ஹேய்! என்னடா.. எதுக்கு இப்படி அழறே!'' என்று பதறினான்.

அவள் நிமிர்த்தாமலே சொன்னாள்.

''விடுங்க! இது சந்தோஷக் கண்ணீர்! உங்களுக்கு என்ன தெரியும். இதுவரை நான் சுமந்த பாரம்! எதிர்காலம்.. என்ன வச்சிருக்குன்னு.. தெரியாம? வாழப் பிடிக்காம.. வாழறதுல ஒரு அர்த்தம்.. இல்லாம.. ஆனா.. வாழ்ந்தே தீர வேண்டிய கட்டாயத்துல..!''

அதற்கு மேல் அவன் அவளை சற்று நேரம் பேசவிட வில்லை.. பிறகு உணர்ச்சி மயமான குரலில் சொன் னான். ''அதான்! உன்னைப் பார்த்தவுடனேயே.. முடிவு பண்ணிட்டேன்.. உண்மையான நிலவரம் தெரிஞ்சே ஆகணும்னு. அதுக்குள்ளே நீ லீவு போட்டுட்டு.. ஓடப் பார்த்தியே'' என்று இழைந்தான்.

''ஆமா! ஒரு பக்கம் உங்களோட இருக்கணும்னு ஆசை! ஆனா.. இன்னொரு பக்கம் பயம்!'' என்றாள். அவளும் அவனுக்கு வாகாக இடம் கொடுத்தபடி.

''வேலுகிட்டே சொன்னேன்! வேலு! அந்த லேடி கிட்டே எனக்கு ஒரு பழைய கணக்கு.. இருக்கு.. தீர்க் கணும்.. அவங்களை எங்கயும் ஓடவிடாதேன்னு. அவன் உடனே.. உங்க மானேஜர் லீவுல போற மாதிரி செஞ் சுட்டான்'' என்றான்.

''ஓஹோ.. அது உங்க ஏற்பாடா?''

''ஆமா.. பின்னே? பஸ்ஸு பாட்டுக்கு.. நம்பர் இன்கிரீஸ் ஆயிட்டே போறது. ஆனா.. இன்னொரு பக்கம்.. வெறுமை.. ஒண்ணு நீ கிடைக்கணும்.. இல்லே நீ இல்லேன்னு முடிவாகணும்.. வெறியாயிட்டேன்'' என்றான்.

அவள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அதுக்கும் மேலே உன் மேல கோபம்.. என்னன்னா.. ஒரு வருத்தத்தையும் காட்டாம நடமாடறாளே.. அதுக் காகவாவது பிரச்சினை பண்ணனும். கல்யாணத்தை உடைக்கணும்னு.''



லேகா கிளுகிளுவெனச் சிரித்தாள்.

''ஆமா.. .அதை நான் ரொம்ப ரசிச்சேன்!''

''பயங்கரமான ஆள்றி! பூங்குழலி போட்டோவெல் லாம்.. கொண்டு வந்து.. பில்டப்.. பண்ணி!''

''அது என் பிரண்டோட குழந்தை.. போட்டோ! எனக் கென்னவோ.. நம்ம கற்பனைக் குழந்தை மாதிரி இருந்தது'' என்றாள்.

''அப்புறம்.. என்னவோ.. உன் ஹஸ்பெண்ட் நல்லவரு! அவரு அனுமதிச்சுத்தான் வந்தேன்னு.. கதையெல்லாம் விட்டே!''

''ஆமா.. அது உண்மைதானே! அது நீங்கதானே. உங்க அனுமதியில்லாமே உங்களோட இருக்க முடியுமா? எனக்காக எட்டு வருஷம் காத்திருந்தவராச்சே!''

அவன் எழுந்தான்! தன் மனைவியை தூக்கி ஒரு ஐந்தாறு சுற்று சுற்றி இறக்கினான். கன்னம் இழையக் கட்டிக் கொண்டான். பிறகு உள்ளடங்கியக் குரலில் சொன்னான்.

''ஊருக்கு வரும்போது சொன்னயே! அப்பவே எனக்கு ஒரு நெருடல் ஆச்சு! ஆனா, என் ஹஸ்பெண்ட்டுக்கும் உங்களுக்கும் உள்ள இடைவெளி மலைக்கும், மடுவுக் கும் உள்ளதுன்னு சொன்னியே!''

''ஆமா! நான் உண்மைதானே சொன்னேன்! அந்த இளஞ்செழியன்.. இன்னொஸன்ட்.. உலகம் தெரியாதவர் ஆனா, இந்த இளஞ்செழியன் முதலாளி!''

அவன் சிரித்தான்.

''ராஜினாமா.. செஞ்சுட்டுப் போயிட்டேன்னவுடனே.. ரொம்ப வெக்ஸ்.. ஆயிட்டேன்! இரண்டாம் முறையும் ஒரு விஷயமும் முடிவாகாமல் போயிட்டாளேன்னு..''

சித்ரலேகா.. அன்புடன் அவன் காலிலும், கையிலும் காயம்பட்ட இடத்தைத் தடவிக் கொடுத்தாள்.

''நான் வேலையை விட்டுட்டு.. நேரடியா உங்க கிட்டே வர்லாம்.. பேசி முடிச்சர்லாம்னு.. இருந்தேன்.''

''அதை மறுபடியும் ஆஸ்பத்திரிக்கு நீ வந்தப்போ.. சொல்லியிருக்கலாம்.. இல்லே!''

அவள் குறும்பாகச் சிரித்தாள்.

''கையும், காலும் உடைஞ்சு போய் இருந்தீங்க.. இந்த மாதிரி ஒரு விஷயம் சொன்னா.. உங்க ரியாக்ஷன் என்னவா இருக்கும்னு.. தெரியும்? அதுக்கும் கூட வழியில்லேன்னா..! அதான் சொல்லலே!''

''அதுக்கும்.. கூடன்னா..? எதுக்கும் கூட?'' என்று சற்று நேரம் சீண்டினான். பிறகு விடுவித்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''எத்தனை தடவை நீங்க தூங்கும்போது.. உங்க கையையும், காலையும் தடவிக் கொடுத்துகிட்டு அழுதுகிட்டிருப்பேன் தெரியுமா?''

''பரவாயில்லே.. விடு.. என் வாழ்க்கையை விட்டே போயாச்சுன்னு நெனைச்ச சொத்து கிடைச்சுதில்லே! அதுக்கு மேல என்ன வேணும்?''

''நான்தான் பக்கத்துலயே இருந்தேனே?''

''ஆமா... என்னத்தை இருந்தே? பக்கத்துல இருந்தா பழகிப் போயிடும்! ஏக்கம் மாறிடும். உண்மை புரியும்னு.. மஹா.. லொள்ளுடி உனக்கு ஆனாலும் நீ பக்கத்துல இருந்ததே.. நிம்மதி.. தெரியுமா?''

''இதுல இன்னொன்று நடந்தது தெரியுமா? நீங்க ஆஸ்பிட்டல்ல இருந்தப்ப மாமா.. வந்தாங்க இல்லே! எனக்கு ஒரே உதறல் என்ன சொல்வாங்களோன்னு.. அவரு அலட்டிக்காம போனவுடனே எனக்கே ஆச்சரியம்.''

''ஆமா! அப்பாகிட்டே நான் ஏற்கனவே பேசியிருந்தேன்'' என்றான்.



அவள் மறுபடியும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். சிந்தனையின் ஆழத்தில் சென்றபடியே அவன் மார்பை நீவிக் கொடுத்தாள்.

''எங்கப்பா... கூட பிரசாத்கிட்டே கண்டிப்பா சொல்லிட்டாராம். அண்ணன்ங்கறதுக்காக உனக்கு சில உரிமைகள் குடுத்தேன். ஆனா.. நீ அதை மிஸ்யூஸ் பண்ணி அவ வாழ்க்கையையே கெடுத்துட்டே. இந்த முறை.. நீ தலையிட்டு எதுவும் செய்யாதே! அவர்களே முடிவு எடுக்கட்டும்.. அது நல்லபடியா.. இருக்கட்டும்.. அப்படீன்னாராம்..''

''கரெக்ட்.. இதை அப்பவே செஞ்சிருக்கலாம்..''

''ஆனா.. இந்தத் தடவை அப்பா சொன்னது தெரியாம பிரசாத் வேலு கூட சேர்ந்து டிராமா செய்யப் போய் ரொம்பப் பயந்து போனேன். அதான்.. அவசரமா.. வந்து ஆஸ்பத்திரில்ல உட்கார்ந்துட்டேன்.. ஆஸ்பிட்டல்ல இருக்கறப்ப.. ஒரு நாள் சொன்னீங்களே.. ஒண்ணு உன் புருஷன் கோழையாயிருக்கணும். இல்லே.. தெய்வமாயிருக்கணும்னு.. எனக்கு ஒரே சிரிப்பு'' என்றாள்.

அவனும் புன்னகைத்தான்!

''ஆமா! எந்த மடையனாவது இப்படித் தன்னைத் தானே திட்டிக்குவானான்னா?''

''என் ஹஸ்பெண்ட் உண்மையிலேயே தெய்வம்தான்'' என்றாள் ஆத்மார்த்தமாக.

''ம்.. அப்படியா?'' என்று நெருங்க இழைத்தான். ''ஆனா.. மனுஷன்தான்.. இனிமே புரிஞ்சுக்குவே'' என்று சற்று நேரம் அன்பு மலர்ச் சரம் தொடுத்து அவளைத் திணறடித்தான்.

குரலே எழும்பாத குரலில் தொடர்ந்து பேசினான். ''வேலுவைப் பத்திப் பரபரப்பா என்கிட்டே சொன்னயே! அப்பவே எனக்கு சந்தோஷம். ஆஹா.. நம்மைப் பத்திக் கவலைப்பட ஆரம்பிச்சுட்டான்னு..''

அவள் சற்றே கோபத்துடன் அவனைத் தள்ளி விட்டாள்.

"ஆனாலும் பயங்கரமான ஆள் நீங்க! பிரசாத்தை சந்திச்சுட்டு.. வந்தப்ப.. ரொம்பவே முகத்தை இறுக்கமா.. வச்சுகிட்டு.. வந்தீங்களே!" என்றாள் புகார் சொல்லும் விதமாக.

"பின்னே? அன்னைக்கு இருந்த சந்தோஷத்துல.. உன்னை அங்கேயே.. காருக்குள்ளேயே.." என்று சிரித்தான்.

"அப்புறம்.. ஒரு எண்ணம்! அவ மட்டும் ஏதோ ஒரு கதையை பில்டப் பண்ணி அப்படியே மெயின்டென் பண்றாளே! பாக்கலாம். எவ்வளவு தூரம்.. போறான்னு.. ஆனா.. அதுக்கப்புறம்.. எப்பவும் நீ என் கூடவே வேணும்னு ஒரு தீவிரம். அதுக்காகவே வேலுவுக்கு லீவு குடுத்து அனுப்பிட்டேன்."

அவள் வெட்கத்துடன் சொன்னாள்.

"ஆனா.. உங்க பார்வை மாறிடுச்சு."

அவன் அதைக் காதில் வாங்காதவன் போல் தொடர்ந்தான்.

"அதோடு நிறுத்தினியா? திருச்சியில குழந்தை ஹஸ்பெண்ட் வெளிநாட்ல. எப்படிக் கதை பண்ணி..!"

அவள் குபுக்கென்று சிரித்தாள். பிறகு தீவிரமான குரலில் சொன்னாள்.

"உங்களைப் பார்த்தவுடனேயே.. உங்களுக்கு வேற கல்யாணம் ஆகலேன்னவுடனே.. என்னோட எல்லா ஈகோவும் தொலைஞ்சு போச்சு. எந்த நிமிஷம்.. வேண்ணாலும்.. நானே.. உங்களை.. நெருங்கி..!" என்று முகம் சிவக்க நிறுத்தினாள்.

அவன் தொடர்ந்து விழுங்கினாற் போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதனால.. என்னைக் காப்பாத்திக்கக் கூட அந்த மாதிரிப் பொய்கள் சொல்ல வேண்டியது அவசியமாப் போனது" என்றாள்.



"ஐ'ம் சாரிடா! நானே உன்னைத் தேடி வந்து பாத்திருக்கணும். ஆனா, விரும்பியோ.. விரும்பாமலோ.. உனக்கு வேற வாழ்க்கை அமைந்திருந்தா.. அதை நான் கெடுத்தரக் கூடாதில்லே! சும்மாவா சொன்னாங்க! கண்ணால் காண்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்..! தீர விசாரிப்பதே மெய்ன்னு."

"நானும் பிரசாத்தை நம்பியிருக்கக் கூடாது.. ரெண்டு பக்கமும் நடிச்சே காரியத்தைக் கெடுத்தான்."

இப்போது அவன் அணைத்து தலையைக் கோதிக் கொடுத்தபடி சொன்னான். "போதும்டா சரி விடு. பிரசாத்தும் நீ காட்டின வெறுப்பில நொறுங்கிப் போயிட்டான். அவ மனசால உங்களோடதான் வாழறான்னு வந்து கெஞ்சினாப்ல. அதுவும் நான் அவமானப்படுத்தி அனுப்பிச்சப்புறமும் கூட. தொடர்ந்து முயற்சியெடுத்தான்."

"ஆமா! மனசாலே நான் உங்களோடதான் வாழ்ந்தேன். தமிழிலக்கியத்துல பெரிய புராணத்துல படிச்சிருக்கேன். பூசலார் நாயனார்ன்னு ஒருத்தர் மனசாலயே சாமிக்குக் கோயில் கட்டினாராம். கும்பாபிஷேகத்துக்கு சாமியையே அழைச்சாராம். சாமி ராஜா கட்டின கோயிலுக்கு வர முடியாது நாளை மாத்திவைன்னு சொன்னாராம். பாத்தீங்களா? என் மனசுல கோயில் கட்டி வச்சிருந்த தெய்வம் கிடைச்சுதா இல்லியா?"

"என் தேவியைத் தேடி தேவன் வந்தாச்சு. என்ன மரியாதை செய்யப் போறே?"

"மரியாதை." அவள் சிரித்தாள். எப்பவும் என்னோட அன்பை மலர்ச் சரமாத் தொடுத்து மாலையாக்கி அணிவிப்பேன். அந்த வெயிட்டைத் தூக்கிக்கிட்டே அலைய வேண்டியதுதான்."

"அது வெயிட் இல்லை. என் அன்பு மலரே! சுகம். நான் இப்ப எவ்வளவு வெயிட்டான ஆளா இருந்தாலும்" என்னும் போதே அவள் குறுக்கிட்டாள்.

"வெயிட்டான ஆள்ன்னு சொன்னவுடனே எனக்கு ஞாபகம் வருது. இத்தனை பெரிய கம்பெனி ஓனரானதுக்கப் புறமும் கூட வெளியில எந்தப் பத்திரிகையிலயும் உங்க போட்டோ வரலையே. ஏன்?"

"எஸ். மை டியர்! ஏதோ வெற்றியைத் தேடி ஓடிகிட் டிருந்தேன். எதுவுமே உன் இழப்பை ஈடாக்கவே இல்லை. இப்பத்தான் நான் முழு மனுஷனா உணர்றேன்" என்று மறுபடியும் அருகில் இழுத்துக் கொண்டான்.

"ஹேய்! எவ்வளவு நேரம் இப்படியே பேசிகிட்டிருப்பே!"

"அத்தான். பேசறதெல்லாம் பேசித் தீர்ப்போம். இனிமே அதுக்கு நேரம் ஒதுக்க வேண்டியிருக்காதில்லே."

"ஓஹோ நீ அப்படி வரயா? நாளைக்குச் சாயங்காலத் துல இருந்து.. உறவுக்காரங்க வர ஆரம்பிச்சுடுவாங்க. எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம். நம்ம கதை சினிமாக் கதை மாதிரி இருக்காம்."

"நம்ம கதை அதுக்கும் மேலே! காவியம் மாதிரி..." என்றாள் சித்ரலேகா.

"ஆமா! இனிமே என் தலைவி.. இந்தத் தலைவனைத் தன் கண் பார்வையில் மனதில் சுமக்கத்தான் போகிறாள். சீக்கிரமே பூங்குழலி.. ஒரு இனியன்.. அப்புறம் சுப்புணி கூட ஓ.கே.தான்" என்று சிரித்தான்.

"ஆசைதான்" என்று தோளில் முகம் புதைத்து சிரித்தாள்.

அவனும் அவள் தோளில் முகம் புதைத்துக் கொண்டான். கைகளால் வளைத்துக் கொண்டான்.

இடையில் கழிந்த அந்த ஆண்டுகளில் விடுபட்டுப் போன உறவும் நெருக்கமும் மீண்டும் உயிர்த்தெழுந்தது போல் அங்கே அவர்கள் சங்கமிக்க அந்தக் கிராமத்து அமைதி அவர்கள் உணர்வுகளை ஆட்கொண்டது.

பூங்குழலியின் படம் அவர்களைப் பார்த்துச் சிரித்தது.